# வெ.எஸ். ஆறுமுகம்

# நக்கு ஒரு பொன்மான்





அன்பு
பதிப்பகம்

# சீதைக்கு
# ஒரு
# பொன்மான்

பூவை
எஸ்
ஆறுமுகம்

அன்பு பதிப்பகம்

13, உஸ்மான்ரோடு
சென்னை—600 017

முதற்பதிப்பு: ஜனவரி 1978
உரிமை: ஆசிரியருக்கு
(C) பூவை எஸ். ஆறுமுகம்
ஏலக்காய் வாரியம்,
சென்னை-600017

விலை: ரூ. 5-75

அச்சிட்டோர் :
அன்னை அஞ்சுகம் அச்சகம்,
சென்னை-600014.

# பொன்மலர்

மிதிலைச் செல்வி சீதாப்பிராட்டிக்கு ஒரு பொய்மான் விதியாக மட்டுமல்லாமல், வினையாகவும் அமைந்தது; நமக்கு இராமகாதை கிடைத்தது.

இங்கே, பொய்மானே அல்லது, பொன்மானே வரவில்லைதான்!—ஆனாலும், அதன் உருவகச் சிதறலாகவும் உருவெளிச் சுடராகவும் வேடிக்கையான விதி விந்தையான ஆடுகளம் ஒன்றை அமைத்து விளையாடுகிறது; அதன் ஏகபோக ஆதிக்கச் சூழ்நிலையிலே, நிலை உணர்ந்தும் நிலை மறந்தும், புத்தம் புதிய கதை ஒன்று விளையாடுகிறது; விளையாட்டுக் காட்டுகிறது. நமக்கு ஒரு சுமதி கிடைக்கிருள்!—இந்தச் சுமதிக்குப் பொன்மான் கிடைத்ததோ, என்னவோ?-ஆனல், ஒன்று மட்டும் நிச்சயம்!—சுமதியே பொய்மான் ஆகிவிடுகிருள்!—உண்மைதான்; பிரச்சினை இங்கேதான் கருவறை அமைத்துக் கொள்கிறது!

சமுதாயம், பண்பாட்டின் இதயமெனில், இலக்கியத்தின் ஆன்மாவாக நவீனம் அமையும். சுவையான புரட்சியும் ஆரோக்கியமான

புதுமையும் நிரம்பிய இந் நவீனத்தின் ஆன்மா இசைக்கின்ற இன்பச் சோகத்தை நான் அனுபவித்த மாதிரி நீங்களும் அனுபவித்தால், அவ்வுணர்வையே எனக்குக் கிட்டக் கூடிய இலக்கியப் பெரும் பாக்கியமாகக் கருதுவேன். எழுதுங்கள்; எழுதுகிறேன்!

இப்புதிய புதினத்தைச் சீரிய முறையில் வெளியிட்டிருக்கும் அன்பு பதிப்பகத்தினருக்கும், நிர்வாகி திரு. கே. ஆர். சுப்ரமணியன், ஓவியச் சிற்சிபி சீனிசோமு, அன்னை அஞ்சுகம் அச்சகத்தார் ஆகியோருக்கும் என் அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்! வணக்கம்.

**பூவை எஸ். ஆறுமுகம்**

சீதைக்கு
ஒரு
பொன்மான்!

ஒன்று

# ஆயிரம் முத்தங்கள்

ஆஹா!—சுந்தருக்குத்தான் எத்துணை ஆனந்தம்! வாய் கொள்ளாமல் சிரித்தான்; மனம் கொள்ளாமல் மகிழ்ந்தான். மகிழ்ச்சியும் சிரிப்பும் ஆனந்தக் கனவுகளாக ஆனந்த நடனம் புரிந்தன!

ஆஸ்பத்திரிச் சூழலின் நெடியைப் பொருட்படுத்தும் நேரம் அது அல்லதான்!

“உங்களை அப்படியே உரிச்சு வச்ச மாதிரி, குழந்தை பிறந்திருக்குதுங்க, அத்தான்; நான் சொல்றது சரிதானே?”

பெருமையும் பெருமிதமும் போட்டியிட்டன.

‘பச்சை மண்’ மீது பதித்திருந்த பார்வையைத் திருப்பினான் அவன்; கண்கள் சலனம் அடைந்தன; நலிவுற்றிருந்த பச்சை உடம்போடு, தலையணையில் சாய்திருந்த சுசீலாவை ஆறுதலாகப் பார்த்தான். “வாஸ்தவம்தான், சுசீ! ஆண் குழந்தைன்னா, அது என்னைத்தானே கொண்டிருக்கும்?” என்றான். இன்னுயிர்த் துணையின் பேசும் விழிகளைப் பேசாமல் ரசித்து அனுபவித்து எத்தனை யுகங்கள் ஆகிவிட்டன! அவன் பெருமூச்செறிந்தான்.

கணவனின் பேச்சு அவளுக்கு இதம் தந்தது. "ஆமாங்க," என்று தலையை ஆட்டினாள். வெளுத்த உதடுகள் தான்; ஆனால், புன்சிரிப்பில் களை இருந்தது; ஜீவன் இருந்தது. சாவி கொடுத்தாற்போல, ஒரு கை தொட்டிலை ஆட்டி விட்டது. சிக்குப் பிடித்துப் பறந்த சுருட்டை முடிகளை நீவி கோதிவிட்டாள். இடுப்பு வலி கண்டதும் வடக்கு மூன்றாம் வீதியிலிருந்து ஜட்காவில் இங்கே ராணி ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' ஆனவளுக்கு வள்ளிசாக ஒருவாரம் கழித்துத் தான் பிரசவம் ஆயிற்று; ஆயுத கேஸ்!

'அவசரநிலை'ப் பிரகடனத்தின் கெடுபிடி இங்கே புதுக் கோட்டையிலே, இந்த ராணி ஆஸ்பத்திரியிலும் கூடுதல் தான்!

குழந்தை திடுதிப்பென்று வீரிட்டது.

பதறிப்போனான் சுந்தர், "சுசீ, குழந்தைக்குப் பசிக்குது போல; எடுக்கிப் பால் கொடு," என்றான்: "சீக்கிரம் கொடேன்!"

வெட்கமும் சிரிப்பும் போட்டியிட, பல்லைக் கடித்துக் கொண்டே இடுப்பை நகர்த்தி, கால்களைக் கீழே தொங்க விட்டு, ஓர் அரைக்கணம் கழிந்ததும், கட்டிலைவிட்டு மெள்ள மெள்ள எழுந்தாள் சுசீலா. மாரகச் சேலைசரிதான்; 'ப்ளவுஸ்'தான் சீராகவில்லை. தன்னையே விழுங்கிவிடுகிற மாதிரி பார்த்திருந்த அத்தானைக் கள்ளவிழிப் பார்வையால் விழுங்கியவாறு, காலடி எடுத்து வைத்தாள். அப்போதுதான் பூத்திருந்த ரோஜாப்பூவைப் பட்டு மெத்தையில் கிடத்தினாற் போன்று கிடந்த பச்சைப் பாலகனை வெகு பதனமாகத் தூக்கிக் கருத்துடன் தோளில் சார்த்திக் கொண்டாள்; மறுபடி கட்டிலில் அமர்ந்து மடியில் குழந்தையைக் கிடத்திக் கொண்டாள். இரண்டே இரண்டு 'ட்ராப்' குளுகோஸ் தண்ணீரில் அதன் பசி அடங்கியிருக்கலாம்! சின்னப் பசியோ?—மேலும், சின்ன வயிறுதானே?—கண்களை மூடிக் கொண்டு 'அது' கண்வளர ஆரம்பித்ததில், தாய்க்குத் தனியான அமைதி ஏற்படவே ஏற்பட்டது.

# 7

தூங்கும் மழலையின் தூங்காத அழகை ரசித்துக் கொண்டிருந்தார் சுந்தர். பிரசவ வார்டில் இழைந்த இளங் காற்றிலே அவனுக்குத் தூக்கம் சொக்கியது. இரவு 'போட்' சென்றால் அவனுக்கு உட்கார இடமா கிடைத்தது? எழும்பூருக்கு வந்து சேர்ந்த போழ்தில் கிடைத்த வண்டி அதுதான்! இளம் வெய்யிலில் இரண்டே இரண்டு நரை மயிர்கள் இப்பொழுது பளிச்சென்று மின்னுகின்றனவே!

"அத்தான்!" சுசீலா விளித்ததுதான் தாமதம். நர்ஸ் தான் வந்தாள்; வந்தவள், நாடி பார்த்தாள்; 'டெம்பரேச்சர்' எடுத்தாள்; இரண்டு வெள்ளை மாத்திரைகளையும் ஒரு ரோஸ்' மாத்திரையையும் அவளிடம் நீட்டிவிட்டு, அடுத்த பெட்'டுக்குப் போய்விட்டாள். கடமையிலும் இயந்திர ரீதியான பண்பு! இந்த ஸ்டெல்லா நல்லவளாம்!

"என்ன, சுசீ?" என்று செல்லமாய் மனைவியைக் கேட்டான் அவன்.

"மாத்திரைங்க!" என்றாள் அவள்.

"ஓ, அப்படியா?"

அவள் சிரிப்பிலே அவன் சிரிப்புக் கரைந்தது!

"ஊஸ்...குழந்தை தூங்குது!"

"ராத்திரி பிறந்த குழந்தை பகலிலேதான் தூங்குமாம், அத்தான்!"

"அப்படியா?"

"ம்...அப்படித்தான்!"

எவ்வளவு அழகாக, நளினமாக, பாங்காகப் புன்னகை செய்கிறாள் சுசீ!

அந்தப் புன்முறுவல் அவனை மயக்கிய வேளைகள் ஒன்றா, இரண்டா?

அதே புன்னகையில் அவன் மயங்கிய தினங்கள் ஒன்றா, ண்டா?

மயங்கியும், மயக்கப்பட்டும் நின்ற நிலையிலே, காலம் புள்ளிமானாக எவ்வளவு தூரம் ஓடிவிட்டது! காலத்துக்குத் தொலைவு—தூரமெல்லாம் ஒரு பொருட்டா, என்ன?

ஆனால்—

அவன் வரை, ஓடிவிட்ட காலத்தில் இனிய பொழுதுகள்—அந்தப் பொழுதுகளுக்கு உயிரும் உயிர்ப்பும் நல்கிய மகத்தான நேரங்கள் அவன் மனத்தை விட்டு என்றும் ஓடி விடாது; எப்போதும் ஓடிவிடவும் முடியாதுதான்!—'சுசீ—என் சுசீ—என்னோட அன்புச் சுசீ அன்றும் சரி, இன்றும் சரி, ஏன் என்றென்றுமே என் நெஞ்சத்திலே தஞ்சமடைந்திருப்பாள்! அவள்தான் நான்!—நான்தான் அவள்!...சுசீ!... ஆமாம், உண்மைதான், டியர் சுசீலா!'

கொட்டாவி பிரிகிறது!

அந்த நாள் விரிகிறது!

சுசீலாவைப் பெண்பார்க்க வந்திருக்கின்றான் சுந்தர். மாப்பிள்ளைக் கோலம்; மகிழ்வான எண்ணங்கள்; மயக்கம் தரும் மோகக் கனாக்கள்; பூவும் பிஞ்சுமாகப் பூத்துக் குலுங்கிடும் மோகனக் காட்சி; ஆரம்பத்தை மட்டிலும் நினைத்துப் பார்க்கத் தூண்டும் பருவக் கிளர்ச்சி வேறு பெண் பார்க்க வந்தவன், பெண் கேட்கவும் வேண்டி கூடியது·

சுசீலாவுக்கு என்ன குறை?—குளிப்பாட்டி, உடுத்துப் பொட்டிட்டுப் பூச்சூடி, கருவறையிலே பிரதிஷ்டை செய்து வைக்கப்படும் அம்மன் சிலையெனக் காட்சி தந்தாள்; மாட்சி தந்தாள். பழகிவிட்ட வீட்டு நடையிலே, அப்போதுதான் நடை பழகிக் கொண்டவள்போன்று, அன்னநடை நடந்து வந்து, குனிந்திருந்த தலையைப் பான்மையுடன் நிமிர்த்த, கோலமலர் விழிகளை மட்டும் நிமிர்த்தி விடாமல், பூங்கரங்களைக் குவித்து 'வணக்கம்' தெரிவித்த அந்தப் பொன்னான நல்ல பொழுது, அவனுக்கு—சுசீலாவுக்கு எப்போதும் நினைவிலே சதிராடிக் கொண்டேயிருக்கும்!

சுந்தருக்கும் அப்படித்தான்! சிலையோடி நின்ற சுசீலாவின் மனங்கவரும் அந்தப் புன்னகையின் பின் புலத்திலே ஒயிலோடு வணக்கம் தெரிவித்த காட்சியை அவனாலும் மறக்க முடியாது; என்றுமே மறக்க முடியாது!

'வியாழதசை' கூடிவந்தது.

கூடினார்கள்!

'என் மருமகப் பெண்ணோட வயிற்றிலே ஒரு பூச்சி பொட்டைக் காட்டுடி, ஆத்தா!' என்று பிரார்த்தனை செய்யலானாள் சுந்தரின் தாய். காலம் ஓடிவிடவே, சுந்தரின் தாயும் விதி வழி ஓடிவிடவேண்டியவள் ஆனாள்!

நல்லகாலம், அந்த அன்னையின் பிரார்த்தனை மாத்திரம் ஓடிவிடவில்லை!

டபரா ஒன்று தவறிவிழுந்த ஓசை ஒலித்தது; எதிரொலித்தது.

சுந்தர் மாதிரியே சுசீலாவும் இப்போதுதான் சுயப் பிரக்ஞை அடைந்திருக்க வேண்டும்!

"அத்தான்!"

"சொல்லு, சுசீ!"

"சொல்ல வரல்லீங்க; கேட்க வந்தேனுங்க!"

"கேளேன்!"

"தந்தி கிடைச்சடியும் என்ன நினைச்சீங்க?"

"பிரஸ்ஸிலே மெர்ஸிடைஸ் மிஷின் ராட்சசத்தனமாய் ஓடிக்கிணு இருக்கையிலே தந்தி வந்திச்சு; தந்தியை வாங்கினதும், ஒரு ஸெகண்ட் என் மூச்சே நின்னிடும் போலிருந்திச்சு; தந்தியைப் படிச்சதும் அந்த மூச்சு என் மெஷின் மாதிரியே ஓடத் தலைப்பட்டிச்சு! தந்தி கிடைச்சதும் நான் என்ன நினைச்சேன்னு கேட்டாயே? — உன்னை நினைச்சேன்; உன்னையேதான் நினைச்சேன்! என்னுடைய

ஆசைக்கும், கனவுக்கும், தவத்துக்கும், வேண்டுதலைக்கும் ஒரு உயிர் வடிவத்தைப் பெற்றுத் தந்திட்ட உன்னையே உயிரும் உயிர்ப்புமாகி நினைச்சேன்; நினைச்சு நினைச்சு, ஆனந்தக் கண்ணீரும் விட்டேன்! இது சத்தியம், சுசீ, இது சத்தியம்!''

''நான் பாக்கியவதி, அத்தான்!''

''நானும் பாக்கியவான், சுசி!''

அவளுடைய மகிழ்வின் கண்ணீரை அவன் துடைத்தான்; மேனி புல்லரித்தது. தாலிச்சரட்டில் மங்கலம் பொலிந்தது; கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

அவனுடைய ஆனந்தத்தின் துளிகளை அவள் ஒற்றியெடுத்தாள்; பச்சை உடம்பு குலுங்கியது.

''நாம முன்னே குடியிருந்த மண்ணடி வீட்டுக்காரி உன்னைப்பற்றிச் சதா விசாரிச்சுக்கிட்டு இருந்தாங்க; அந்தப் புண்யவதி கொடுத்த நல்ல வாக்குப் பிரகாரம் நீ நல்லபடியாய்ப் பெற்று பிழைச்சிட்டே!...உன்னை டிஸ்சார்ஜ் செய்து ஊரிலே அழைத்துப்போய் விட்டுட்டு, ஒரு மூணு மாசம் கழிஞ்சதும், திரும்பவும் உன்னையும் பாப்பாவையும் பட்டணத்துக்கு அழைச்சுட்டுப்போய் நாம் முன்னே மண்ணடியிலே குடியிருந்த அதே வீட்டிலேதான் குடி வைக்கப் போறேனுக்கும்! ஆகிவந்த, கைராசியான வீடாக்கும் அது!'' என்று பெருமையும் பெருமிதமும் கூடியாடத் தெரிவித்தான் சுந்தர்.

''ஓஹோ! அப்படிங்களா ?'' என்று சலனக் குரலெடுத்துக் கேட்டுவிட்டு, 'டக்'கென்று மௌனம் காத்தாள் சுசீலா. பின்னர், என்னவோ ஓர் அமைதியைக் காத்துக்கொள்ள நினைத்தாள்; ''மூணு மாசம் நல்ல பொழுதாக விடிஞ்சு கழிஞ்சிட்டா, உங்களோடு வராமல் நான் எங்கே ஊர்ப்பயணம் போகப்போறேன்?... நம்ப ராஜாவை வளர்க்க மெட்ராஸ்தான் வசதியாக இருக்கும். சரிதானே, அத்தான்?'' என்று வினவினாள் திருமதி சுந்தர்

"பின்னே?"

யார் இப்படி நிர்த்தாட்சண்யமாகச் சிரிக்கிறார்களாம்? — சிரித்தது யாராம்?...

மௌனம் திரைவிரிக்கிறது!—

ஏதோ ஒரு சிந்தனை வசப்பட்டவன் மாதிரி, சுந்தர் எழுந்தான்; பிறகு, உட்காரலானான்; பத்தரை மணியோடு தான் பார்வையாளர் நேரம் முடியும்!— "சுசீ, எனக்கு ஒரு ஆசை இருந்திச்சு: உன்னை உரிச்சு வச்சாப்பிலே ஒரு பெண் குழந்தை பிறந்திருந்தால், என்னோட மனசுக்கு ஒரு ஆறுதலாக இருந்திருக்குமோன்னு இப்போது தோணுது!" என்று தெரிவித்தான், ஏக்கத்தோடு.

அந்த ஏக்கம் சுசீயின் பெண் உள்ளத்தைத் தொட்டிருக்குமோ? தொண்டையைக் கனைத்தபடி, "அப்படிங்களா, அத்தான்? அடுத்த தடவை உங்க இஷ்டப்படி உங்க கையிலே ஒரு பெண்ணையும் பெற்றுத் தந்திடறேனுங்க!" என்று சொன்னாள்; பெருமூச்சு வெளியேறியது; அந்தப் பெருமூச்சிலே, சுந்தர் – சுசீ தம்பதி, குழந்தைக்காக ஆறேழு வருஷங்கள் தவம் இருந்த தாபமும் தாகமும் நினைவோடி, நிழலாடியிருக்கும் போலும்!

சுசீயின் நிம்மதி நிறைந்த மலர்ச் சிரிப்பு அவன் வாயைக் கட்டிவிட்டது. "ஆல் ரைட்!"

துவைத்த துணிமணிகளுடன் அம்மா கீழ வாசற்படியில் ஒளிந்து நின்ற துப்பு, இப்பொழுதுதான் சுசீலாவுக்குப் புரிந்தது. அத்தான் எழுந்தால்தான் அம்மா உள்ளே வருவாள்! — 'பாவம் — அம்மா!' வின்சென்ட் ரோஸ்ட் எந்நேரமாகக் காத்திருக்கிறது! பேபி இனி விழித்துக் கொள்ளும்! இம்மாதிரிச் சமயங்களிலே சுமதி இருந்தால், எவ்வளவோ உபகாரமாக இருக்கும்!

கோடியில் குழந்தை ஒன்று 'குய்யோ முறையோ' என்று கதறியது. தொண்டு கிழம் பதறியடித்துக்கொண்டு அந்தப் பிள்ளையைத் தூக்கிக் கொண்டாள்.

## 12

"அத்தான், அந்தக் குழந்தையைப் பாருங்க. தாயில்லாப் பிள்ளை; பிறந்ததுமே அம்மாவை விழுங்கி ஏப்பம் விட்டுடுச்சாம். ஐயோ, பாவம்!"

சுந்தர் திடுக்கிட்டான்.

அட, கடவுளே!

"அக்கா!" என்று ஆனந்தப் பரவசத்துடன் கூப்பிட்டுக் கொண்டே சுமதி வந்து நின்றாள்—தங்க ரதம் மாதிரி! சுமதிக்குச் சர்வநிச்சயமாய் ஆயுசு நூறுதான்! — வந்ததும் வராததுமாக, குழந்தையை அப்படியே வாரியெடுத்தாள். தூங்கும் குழந்தையை உசுப்பிவிட்டால், அது அழாமல் சும்மாவா இருக்கும்? "சுமதி......பத்திரம்......பச்சை மண்... மெதுவா எடுக்கு!...கழுத்து சுளுக்கிடப் போகுது!" என்று அக்கா வாய் ஓயாமல் எச்சரிக்கை செய்துகொண்டிருந்தது தங்கையின் காதுகளில் விழுந்தால்தானே?—கச்சிதமாக எண்ணி ஆயிரம் முத்தங்கள் கொடுத்தாள் சுமதி!...

இரண்டு

# சுசீலாவின் சுமதி

கொடுத்த முத்தங்களைப் பற்றியோ, அல்லது, தொடுத்த எண்ணிக்கையைக் குறித்தோ, பச்சைக் குழந்தைக்கு என்ன கவலை?—அது, தன்பாட்டிலே தூங்கிப்போய் விட்டது. தன் போக்கிலே உறங்கிப் போய்விட்டது!—சித்தன்போக்கு, சிவன் போக்குத்தானே?

ஆனல்—

சுமதி, அந்தக் குழந்தையை வைத்த கண் வாங்காமல் இன்னமும் பார்த்துக் கொண்டிருக்கிறுள்; பார்வையில் அன்பும் பாசமும் துடித்தன; அந்தத் துடிப்புத்தான் தன் இருதயத்தின் துடிப்புக்கு ஆதார சுருதியாக இயங்குவது போலவும் உணரலானுள் அவள். அவ்வுணர்வு உடலெங்கும் படர்ந்து பரவியதும், அவளது கண்கள் கசியத் தொடங்கின; சூன்யப் பெரு வெளியிலே கைகள் குவிந்தன. எம்பித் தாழ்ந்த இளம் மார்பகத்தில் இரண்டு சொட்டுக் கண்ணீர் தெறித்தது. தென்னம்பாளைச் சங்கிலியில் ஒருதுளி நிவேதனம் ஆனது.

இக்காட்சியைக் காணக்காண, சுந்தரின் மனமும் தளும்பியது. 'குழந்தை பேரிலே சுமதிக்குத்தான் எத்தனை பாசம்!'

சுசீலா, "தங்கச்சி," என்று கூடப்பிட்டாள்; அள்ளக் குறையாத பாசம்; விள்ளக் குறையாத அன்பு. அவளும் விழிகளைத் துடைத்துக் கொண்டாள். கை நடுக்கம், போகப் போகச் சரியாகிப் போய்விடும். கோடியில் கிடந்த தாயில்லாப் பிள்ளை மறுபடி அழுத குரல் அவளை என்னவோ செய்தது. என்னென்னவோ நினைவுகள் ஓடின; ஆனல், பயம் மாத்திரம் ஓடவில்லை. அந்தக் குழந்தையின் அருகில் ஏழைத் தொழிலாளி ஒருவன் வந்து நின்றதையும் சுசீலா கவனித்தாள். அவன், பிள்ளையின் அப்பாவாகவே இருக்க வேண்டும்: 'பிறந்த குழந்தைக்குத் தாய்தான் முக்கியம்; பாவம்! விதி யாரை விட்டது?'

சுமதி தொட்டிலை ஆட்டிவிட்டுக் கொண்டிருக்கிருள். திருக்கோகர்ணம் ஜாதி முல்லைப் பூ தலையில் அம்பாரமாகக் குவிந்து கிடக்கிறது. சிவப்புக்கல் மூக்குத்தி மாநிற மேனிக்கு எடுப்புத்தான். சோளியில் பூத்திருந்த வெண்ணிற முல்லை மலர்களுக்கும், 'செருகு கொண்டை'யில் செருகப்பட்டிருந்த முல்லைச் சரத்துக்கும் வெகு எடுப்பு!

இப்பொழுது பாலும் ரொட்டியும் வேண்டும் சுசீலாவுக்கு. 'அத்தான் காலைப் பலகாரம் சாப்பிட்டாகளோ, என்னவோ? எங்கே சாப்பிட்டிருக்கப் போருங்க? ராத்திரி மூச்சூடும் ரயிலிலே அவதிப்பட்டிருப்பாங்க. பட்டணத்திலே நான் இல்லாமல், அத்தான் உடம்பு என்னமாய் மெலிஞ்சிட்டுது!...பட்டணத்துக்குத் திரும்பினடியும், அவரோட உடம்பைத் தேற்றியாகணும். என்கூடவே, சதா இருந்து பழகிட்டவங்க!—நான் இல்லாமல் பாவம், தவியாய்த் தவிச்சு உருகிப் போயிருப்பாங்க! நல்ல அத்தான்!'—ஆறுதல் தரும் பெருமை மீண்டும் ஏற்படவே செய்தது. கணவனைத் தேடினுள்; சுந்தர் குழந்தையின் மூத்திரத்துணியை மாற்றிக்கொண்டிருப்பது தெரிந்தது. ஓரேயடியாகச் சிந்தனை வசப்பட்டு நிற்கிருளே சுமதி?—குமாரை நினைத்துக்கொண்டிருப்பாளோ?—"சுமதி!"

"சுமதிக்கு என்ன அக்கா வச்சிருக்கே?" என்று செல்லமாகக் குழைந்துகொண்டே வந்து நின்ற சுமதியின்

அழகான கண்களிலே அப்பொழுதுதான் அத்தானின் அன்பான உருவம் தென்பட்டிருக்கவேண்டும். "அத்தான், முன்னாடியே நீங்க வந்திட்டீங்களா? நான் இப்பத்தான் பார்த்தேன்," என்றாள். உதடுகளின் நளினம் எடுப்பான மூக்கின் முனையிலே அழகு பார்த்தது.

"நல்லவேளை, குழந்தை தூங்கிப் போயிடுச்சு; இல்லாட்டி" இப்பக்கூட உன் கண்ணிலே என் உருவம் பட்டிருக்காது! என்று சிரித்தான் சுந்தர். மைத்துனியோடு 'நைச்சியம்' பேசுவதென்றால், வெகு இஷ்டம்.

சுமதிக்கு வெட்கம் வந்துவிட்டது, வெட்கம்!

கைஜாடை காட்டி, 'கப்போர்டி'லிருந்த பாலையும் ரொட்டித் துண்டையும் எடுக்கச் சொல்லிச் சாப்பிட்டதும் தான், சுசீலாவுக்கு ஓரளவு களைப்பு நீங்கியது. பச்சை உடம்பு; சிணுங்கல் இருமல் வெடித்தது. மூச்சு வாங்கியது. பிளாஸ்கை மூடிவிட்டுத் திரும்பிய தங்கையை நோக்கி, "சுமதிக்கு என்ன அக்கா வச்சிருக்கேன்னு கொஞ்சம் முந்தி கேட்டியே? உனக்கு என்னம்மா வேணும்? உன் அத்தான் கையிலே சொல்லி, பொம்மை பிஸ்கட் வாங்கியாரச் சொல்லட்டா?" என்று பாசம் பொங்கி வழிந்திட, உணர்ச்சி வசப்பட்ட நிலையில் கேட்டாள் சுசீ. அறியாப் பிராயத்தில் தங்கையோடு ஆடிப்பாடி மகிழ்ந்திட்ட நாட்களெல்லாம் கனவல்ல.

"சின்ன வயசிலே நீ எனக்கு அம்மாவுக்குத் தெரியாமல் வாங்கிக் கொடுத்த பொம்மை பிஸ்கட் பத்தாதா, அக்கா? அந்த அன்புக்கே நான் உனக்கு ஏழேழு ஜன்மத்துக்கும் நன்றிக்கடன் பட்டவளாச்சே? நான் ரொம்ப நாளாய் ஆசைப்பட்டுக்கிட்டிருந்த ஜீவனுள்ள விளையாட்டுப் பொம்மையையும் இப்போ நீ பெற்றுத் தந்திட்டே! அப்புறம் எனக்கு என்ன வேணும், அக்கா?" உணர்ச்சிகளின் சுழிப்பில் சொற்கள் சுழித்தன.

சுசீலா மெய்ம்மறந்தாள்.

சுந்தர் மெய்மகிழ்ந்தான்:

சுந்தரும் சுசீலாவும் பெருமையுடன் பார்த்துக் கொண்டனர்.

அம்மாவின் வெள்ளைப் புடவையைக் கண்ட சுமதி வெளிப்பக்கம் நடந்தாள்.

குழந்தை ஆடாமல் அசையாமல் உறங்கிக்கொண்டிருக்கிறது.

"அத்தான், காலம்பற பலகாரம் சாப்பிட்டீங்களா?"

"ஓ!"

"எங்கே, என்னைப் பார்த்துச் சொல்லுங்களேன், அத்தான்!"

"ஊஹும்; நான் சாப்பிடல்லே, சுசீலா! சென்னையில் ஏறி, தஞ்சாவூர் ஜங்கஷனில் இறங்கினதும், ஒரு கப் காப்பி சாப்பிட்டேன்; அங்கேயிருந்து இங்கே புதுக்கோட்டை வந்ததும் பஸ் ஸ்டாண்டிலே ஒரு கப் காப்பி குடிச்சேன், அவ்வளவுதான்!"

"ஏங்க, பசிக்கவே இல்லீங்களா?" வியப்புடன் குழந்தைத்தனமாகக் கேட்டாள் இனியபாதி.

"ஊம்!"—வாழ்வின் உயிர்ப்பங்காளியின் விடை இது.

"மகனைப் பார்த்த சந்தோஷத்திலே உங்களுக்குப் பசிகூட மறந்து போச்சுப் போலே!"

"ம்!"

"நல்ல அத்தான், போங்க!"

"உனக்கு நான் எப்பவுமே நல்ல அத்தானுகவே இருப்பேன். ஆனல், நீ சொல்லறமாதிரி, நான் இங்கே இருந்து போகமட்டும் மாட்டேன்! ஏன் தெரியுமா, சுசீ?"

"ஏனும்?"

# 17

“இன்னம் கொஞ்சநேரத்திலே மணி அடிச்சிடும்; அதுவரைக்கும் உன்னைப் பார்த்துக்கிட்டு, உன் பக்கத்திலேயே, இந்தக் கட்டிலின் ஓரமாய் உட்கார்ந்து கிட்டே இருக்கவேணும்னு மனசுக்குத் தோணுது!”

தாபமும் தாகமும் சூழ்ந்திட, ஏக்கத்தோடும் உருக்கத் தோடும் பேசிய அத்தானின் பேச்சு அவளைத் தொட்டது. தன்னை விழுங்கி விடுகிறமாதிரி பார்த்த ‘அந்தப் பார்வை’ அவள் நாணத்தைத் தூண்டிவிட்டது. இனம் புரியாத என்னவோ ஒரு சோகமும், இனம் புரிந்த ஆனந்தமும் பெருமூச்சை நெட்டிப் பிடித்துத் தள்ளின; கண்களைத் தாழ்த்தியபடி, சேலையைச் சரிசெய்து கொண்டு, கணவனை ஆழமாக நோக்கினாள் சுசீலா.

“உங்க இஷ்டப்படி செய்யுங்க, அத்தான். நீங்க என் பக்கத்திலே இருந்தால், எனக்கும் நிம்மதியாகவே இருக்கும். பசி பொறுக்கமாட்டீங்களேன்னுதான், சாப் பிட்டுட்டு வரச் சொன்னேன். மறுபடியும் சாயந்தரம் நாலரைமணிக்கு ‘விஸிட்டர்ஸ் டைம்’ ஆரம்பமாச்சுதானால், ஆறுமணிவரை நீடிக்கும். அப்பவும்கூட, நீங்க வந்து என் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்கலாம். இடைநடுவிலே ஒரு சின்னப் பிரிவு; அவ்வளவுதான்! இனி நாம் ரெண்டு பேரும் ஏன் பிரியப்போறோம்? உங்க பக்கத்திலே நானும், என் பக்கத்திலே நீங்களுமாகத்தானே இனிமேல் இருக்கப் போறோம்!......கவலைப்படாதீங்க அத்தான்!— கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போயிடாதுங்க!...”

தொடர்ந்த பேச்சைத் தொடரவிடாமல் தடுத்தது புகைச்சல் இருமல். கண்மூடிக் கண்திறப்பதற்குள், அவள் களைத்துச் சளைத்துப் போய் விட்டாளே?

“சுசீ...சுசீ!” என்று பதறினான் சுந்தர். வேர்வை கழுத் திலும் நெற்றியிலும் பெருகியதைத் துடைத்துவிட எண்ணினான்; ஆஸ்பத்திரி என்ற நினைவு எழுந்ததும், ‘கம்’ மென்று இருக்க வேண்டியதாயிற்று.

நெஞ்சைத் தடவி விட்டுக் கொண்ட சுசீலா, ‘‘ஒண்ணும் இல்லீங்க; பயப்பட்டிடாதீங்க; இருமினது நெஞ்சையெல்லாம் குடையுது. அவ்வளவுதான். டாக்டரைப் பார்க்கிறப்ப நல்ல டாணிக்கா எழுதி வாங்கிச் சாப்பிட்டால் எல்லாம் சரியாகப் போயிடுங்க!’’ என்று தாழ்குரலெடுத்துச் சமாதானம் கூறினாள். தாலிச் சரட்டை நெருடிக் கொண்டிருந்தவளுக்கு, கணவன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்த காட்சி தெரிந்தது. அன்பான சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, ‘‘சின்னப் பிள்ளையா நீங்க? எதுக்குக் கண்கலங்குறீங்க இப்போ? நீங்க ஒரு சின்னப்பிள்ளைக்கு அப்பாவாக்கும்! டெலிவரின்னு அதுக்கு முன்னேயும் பின்னேயும் இப்படிச் சின்னச் சின்னத் தொந்தரவுகளும் பலவீனங்களும் உபாதைகளும் அவ்வப்போது ஏற்படுகிறது சகஜம்தானும்!—டாக்டரம்மா சொன்னுங்க, அத்தான்!’’ என்றாள். வந்த இருமலை வரவொட்டாமல் அடக்கிவிட்டாள்.

‘‘சரி, சுசீ; நீ கொஞ்ச நாழி பேசாமல் இரு,’’ என்றான் சுந்தர்: ‘‘சற்று நேரம் ரெஸ்ட் எடுத்துக்கலாமே!’’

குழந்தை விழித்துக் கொண்டது; அத்துடன் நின்றால் தான் தேவலாமே!—அழுது வேறு வைத்தது.

துடிதுடித்தவளாக, எழுந்திருக்க முயற்சி செய்தாள் தாய்.

தந்தை முந்திக் கொண்டான்.

‘‘பத்திரம், அத்தான்! ம்...அப்படித்தான்...ரெண்டு கையையும் கொடுத்துத் தூக்கிக்கிடுங்க. மார்பிலேஅணைச்சுக் கணும், அத்தான்!...அடடே, பிள்ளையாண்டானுக்கு உங்களை அப்பான்னு புரிஞ்சிருச்சு; அதான், மூத்திரத்தைப் பீச்சிஅடிக்கிறான்!’’ தவப்புதல்வனை மடியில் கிடத்திக் கொண்டதும், சுந்தரின் உதடுகளைத் துடைத்து விட்டாள் சுசிலா. ‘‘ஏங்க, இனிச்சுதில்ல!...நீங்க அதிர்ஷ்டக்காரங்கதான்! எனக்கு இதுமட்டும் அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை!’’

# 19

சுந்தருக்கு இப்போது வெட்கம் வந்து விட்டது, வெட்கம்!

குழந்தை—கப்சிப்!

சுமதி திரும்பவும் குழந்தையை அழகு பார்க்கத் தொடங்கி விட்டாள். பேசும் பொற்சித்திரத்தைக் காணக் காண, அவள் பேசாத பொற் சித்திரமாகி விட்டிருக்கலாம்!

"தங்கச்சிப் பொண்ணே! குழந்தையை இனிமேல் நீயே வேணும்னாலும் வச்சுக்கிடலாம். மணி அடிச்சாச்சு; 'கேட்'டைப் பூட்டிடப் போறாங்க. அத்தானோடே போய், வேணுங்கிறதை வெட்கப்படாமல் சாப்பிட்டு வாம்மா. அத்தானையும் நல்லாச் சாப்பிடச் சொல்லு. சாயங்காலம் உன்கிட்டே ரொம்ப விஷயம் பேசவேணும், சுமதி!"

ஓரக்கண்ணால் அக்காவை அளந்த வண்ணம், "ஆகட்டும்," என்றாள் சுமதி. கவர்ச்சி கனிந்த செவ்வதரங்களிலே நயமான புன்னகை ஒன்று விநயமாக ஊர்ந்தது, பூநாகமென!

சுந்தர் மௌனப் புன்னகை சொரிந்த விவரத்தை சுமதி எங்ஙனம் அறிவாள்? "ஊம், புறப்படுங்க," என்று தூண்டினாள் சுமதிக்கன்னி.

"உத்தரவு!"

சுசீக்கு வாயெல்லாம் பல்!...

மூன்று

# கீழ ராஜ வீதி

கீழ ராஜவீதிதான் புதுக்கோட்டைக்கு ஜீவநாடி; அதாவது, ஜீவனும் அதுதான்; நாடியும் அதுவேதான்! அன்றும் சரி, இன்றும் சரி, அப்படியேதான்! ஆனால் சமஸ்தானமாக இருந்த காலத்தில் அதன் 'மவுஸே' அலாதிதான்; அந்தஸ்தும் தனிதான்!

சங்கராந்தி முடிந்து விட்டாலும், கொட்டு முழக்கும் கும்மாளமும் நிதிவசூலும் முடியவில்லை!

அவர்கள் இருவரும்—சுந்தரும் சுமதியும் வடக்கு இரண்டிலிருந்து திரும்பி நடந்து மடங்கிக் கீழ ராஜவீதியின் மையத்தில் நின்றபோது, சாந்தநாதர் சந்நிதி தரிசனம் தந்தது!

"ரொம்பப் பசிக்குதா, சுமதி?" என்று கேட்டான் சுந்தர்.

"இல்லீங்க," என்றாள் சுமதி.

"அப்படின்னா, கொஞ்சம்தான் பசிக்குதோ?"

"ஆமாங்க!"

வெடித்த சிரிப்போடு, மைத்துனியை நோக்கினுன் அவன். வரும் நேரத்தில் திலகர் திடலில் பேசவிருந்த அமைச்சர் ஒருவரின் கம்பீரமான சுவரொட்டிப் படம் ஒன்றும் அவனது பார்வையில் கலந்தது; சுமதியைத் திரும்பிப் பார்த்தான்.

அவள் மெய்ம்மறந்த நிலையிலே, கூப்பிய கரங்களுடன் இன்னமும் நின்று கொண்டிருக்கிருள்; கைக்கடிகாரத்தின் சதுர 'பார்டர்' மின்னுகின்றது.

அப்படியென்ருல், அவனுடைய சிரிப்புக்குக் காரணமாக இருந்த அவளது பேச்சின் போக்கை அவள் உண்மையாகவே அறியவில்லையோ? மனம் ஒன்றிய பிரார்த்தனையில் அவளையும் அறியாமலேயே 'இல்லீங்க', 'ஆமாங்க' என்ற சொற்கள் உதிர்ந்திருக்குமோ, என்னவோ?

"குமாருக்காகப் பிரார்த்தனை செய்தியா, சுமதி?"

"ஊஹூம்; என் பிள்ளைக்காக!"

"என்ன சொல்லுகிருய்?"

"ஓ!...உங்க பிள்ளைக்காக; அக்கா பிள்ளைக்காகத்தான் பிரார்த்தனை செஞ்சேன், அத்தான்!"

அரைக் கணத்தில் அவன் உள்ளம் குலுங்கியது; உடலும் குலுங்கியது. "குழந்தை பேரிலே நீ வச்சிருக்கிற பாசத்தையும் அன்பையும் பார்த்தால், உன் அக்கா கையிலேருந்து குழந்தையை எங்கே நீ பறிச்சுக்கினு ஓடிப் போயிடுவியோன்னுகூட பயமாயிருக்குது, சுமதி!" என்று சொல்லிப் புன்னகை செய்தான் அவன்.

"நல்ல அத்தான்!" கேலிப் பேச்சை கேலியான பேச்சாக எடுத்துக் கொண்ட சரளம் இழைந்தது.

"சபாஷ்! நல்ல அத்தான்னு உன் அக்கா ஆஸ்பத்திரியிலே சர்டிபிகேட் கொடுத்தா; இப்ப நீ நடுவழியிலே கொடுத்திட்டே. அப்புறம் எனக்கு என்ன கவலை வேண்டிக் கிடக்குது?"

சுமதிக்கும் பெருமைதான்!

ஹோட்டல் சொர்க்கமாம் அது. ஆனல் உள்ளே...?

செர்வர் 'ஃபாமிலி ரூம்' என்ற ஹைதர் காலத்திய அட்டைக் கிழிசல் ஒன்றைக் காண்பித்தான்.

"வெளியிலேயே அப்படி ஓரமாய் உட்கார்ந்திருக்கலாமா, சுமதி?"

"உள்ளேயே வேணும்னாலும் போகலாமே, அத்தான்!"

"நீ சொன்னால் சரிதான்!"

கதவுகள் கிறீச்சிட்டுச் சாத்திக் கொண்டன.

இரண்டு ஸ்பெஷல் மசாலாவுக்கு 'ஆர்டர்' கொடுக்கப் பட்டது.

"உன்னைப்பற்றி ஒண்ணுமே சொல்லக் காணுமே, சுமதி?"

"இதோ, சொல்கிறேன்: நான் சுமதி. என் அக்கா—ஊஹூம், என் தெய்வம் சுசீலாவின் தங்கை நான். சொந்த ஊர்..." என்று இழுக்க ஆரம்பித்தாள் சுமதி. அதற்குள் பூஜை வேளையில் கரடியாக மசாலா தோசை பிளேட்டுகள் குறுக்கிடவே, பெரிய மனசு வைத்துப் பேச்சைத் துண்டித்தாள். வெகுநாழி அவள் பசியைப் பொறுத்துக் கொண்டிருந்தாள் என்பது தெரிந்தது; தோசையைக் கிள்ளி வாயில் திணித்துக் கொண்டாள். உருளைக்கிழங்கு மசாலாவில் மிளகாய் இருந்திருக்கும்: தண்ணீர் தேவைப்பட்டது. புன்னகை இல்லாத முகத்துடன் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்த அத்தானைப் பார்த்ததும், விஷயம் விளங்கியது; "அத்தானுக்குக் கோபம் போலே. நீங்களும் சாப்பிட்டுங்க; என்னோட லவ் ஸ்டோரியை நீங்க எதிர்பார்த்திருப்பீங்க; சொல்லிட்றேனுங்க," என்று தெரிவித்தாள். டம்பப் பையிலும் அவளது கவனம் இழைந்திருந்தது.

சுமதியின் சுட்டித்தனமும் குறும்புப் போக்கும் சுந்தருக்கு எப்போதுமே இஷ்டம்தான். நன்றியறிவுப் பண்பை அவள் ஆராதனை செய்யும் விதம் அவனை வியப் படையச் செய்வது வழக்கம். அவனுடைய சிந்தனை இப்போது குமார் பேரில் நிலைத்தது. குமார் என்றால், சுமதிக்குக் கொள்ளை அன்பு!—அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவன் ஆயிற்றே?—தஞ்சாவூரிலே ஒரே பள்ளிக் கூடத்தில் பணி. ஒருவருக்கொருவர் சோதித்து, புடம் போட்டு, உரைத்துப் பார்த்துக் கொண்ட குணநலன்கள் காதலர்கள் இருவரின் அன்பையும் நேசத்தையும் மேலும் இறுக்கமடையச் செய்திருக்கலாம். போன திங்கட்கிழமை சுசீயை இங்கே 'அட்மிட்' செய்த செய்தி கிடைத்துச் சென்னையிலிருந்து பறந்துவந்த போதுதான், அவன் குமாரைச் சந்தித்தான், மைத்துனி வாயிலாக. சுசீலாவின் ஒப்புதலுக்காகத் தவம் இருக்கும் துப்பையும் இவன் அறிவான். தங்கை என்றால் பிராணன் ஆயிற்றே அக்காள் காரிக்கு!—'ஓ. கே' சொல்லாமலா இருக்கப் போகிறாள்?—காதலுக்குத்தான் ஜாதி, மதமெல்லாம் கிடையாதே, ரொம்பக் காலத்திலிருந்தே!...

சுமதிக்குக் காப்பி உள்ளே போனவுடன், ஏப்பம் வெளியே வரலாயிற்று. "அத்தான், எங்க காதலும் கலியாணமும் அக்கா சொல்லப் போகிற தீர்ப்பிலேதான் விதியாக ஊசலாடிக்கிட்டு இருக்குதுங்க," என்று கூறினாள். சலனமும் சலனம் தாண்டிய சாந்தியும் அவளது கவர்ச்சி யான விழிக்கணைகளிலே கணைதொடுத்தன. "எங்க சுசீ நல்ல அக்காளாக்கும்; நல்ல வாக்கையேதான் கொடுக்கும்; ஆனால் கூட, உள்ளுக்குள்ளே என்னமோ ஒரு பயம் துளைச்சுக் கிட்டே இருக்குதுங்க, அத்தான்! எல்லாம் நல்லபடியாய் அமைஞ்சிட்டா, இந்தத் தை முடியறதுக்குள்ளாறவே கல்யாணத்தையும் முடிச்சிடலாம். அம்மாவுக்கும் அதுதான் ஆசை. மனுஷக்காயம் என்ன நிச்சயமுங்க?" கைளின் அபிநயத்தில் கைவளையல்கள் குலுங்கின. தானும் குமாரும்

இதுமாதிரி காப்பி பலகாரம் சாப்பிட்ட இனிய பொழுதுகள் நெஞ்சரங்கில் 'சதிர்' ஆடின.

'ஊம்' கொட்டிக் கேட்டுக்கொண்டான் சுந்தர் அவன் 'பில்லே' எடுக்க, அவள் 'பர்ஸை' எடுக்க, கடைசியில், அவன் விழித்துப் பார்த்த பார்வையில், அவள் பெட்டிப் பாம்பாக அடங்கிவிட்டாள்.

வீதிக்கு வந்தால்தான் வெய்யிலின் அருமை தெரிகிறது.

"இனி நாலரை மணிக்குத்தான் என் ராஜாக் கண்ணை நான் பார்க்க முடியும்!" என்றுள் சுமதி. சிவப்புக்கல் மூக்குத்தி எடுப்பான நாசிக்கு எடுப்புத்தான்!

"வாஸ்தவந்தான்; அதுவரைக்கும் எப்படிப் பொழுதைக் கொல்றதாம்?"

"நேரே வடக்கு மூணு வீட்டுக்குப் போகலாம். நீங்க கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுங்க; அதுக்குள்ளாற நான் குளியலை முடிச்சுக்கிறேன்; அப்புறம் நான் ஓய்வு கொள்றேன்; நீங்க குளிச்சிடுங்க. மச்சினிப்பொண்ணுக்கும் அக்கா புருஷனுக்கும் மத்தியிலே பேச்சுக்குத்தாஞ பஞ்சம் வந்திடப்போகுது?—மத்தியானம் பசிச்சா, சாப்பிடலாம். இல்லாட்டி, காசு மிச்சம். நேரே ஆஸ்பத்திரிக்குப் பறந்திடலாமே!"

"பேஷ், பேஷ்!" பாராட்டுத் தெரிவித்தான் சுந்தர். 'மிஸ்டர் குமார் கொடுத்துவச்சவர்தான்; அதனுல்தான் எங்க சுமதியை எடுத்துக் கொள்ளப் போகிருர்!' குமாரைப் பற்றின நல்ல அபிப்பிராயம், புதிய உறவு முறையால் பளிச்சிட்டது; மின்னியது!

இருவரும் திரும்பினுர்கள்.

தம்பதியர் தென்படலாயினர்.

சுந்தருக்கு அப்பொழுதே சுசீலாவையும் பேபியையும் பார்க்கவேண்டுபோல இருந்தது.

காதலர்கள் எதிர்ப்பட்டனர்.

அக்கா தன் காதலுக்குப் பச்சைக்கொடி காட்டிவிட வேண்டுமேயென்று தவித்தது சுமதியின் கன்னிப்பூமனம். 'கடைசியிலேதான் அந்தக் கடிதத்தை அக்காவிடம் காண்பிக்க வேணும்! அதுதான் நல்ல சஸ்பென்சுக்கு நல்ல சகுனமாக்கும்!'—அவள் தன் லயத்தில் சிரிப்பில் ஆழ்ந்தாள்.

"நீ மட்டும் சிரிச்சுக்கிறியே, சுமதி?"

"இது என் சொந்தச் சிரிப்புங்க!"

"உன் சொந்தச் சிரிப்பிலே நான் பங்கு கொள்ள வேணுமா?"

"நல்லா வேணும்; மேளதாளத்தோடவும் வேணுமுங்க, அத்தான்! என் வாழ்க்கைக் கட்டத்திலே ஒரு சஸ்பென்ஸ் தோணுச்சுது. நினைச்சேன்; சிரிச்சேன்! அவ்வளவுதான் கதை!"

"ஓஹோ! உன் காதலர் மிஸ்டர் குமார் விஷயமோ?"

"அதுதான் சிதம்பர ரகசியமாயிடுச்சே, அத்தான்! வேறொரு சமாச்சாரம்; அதைப்பற்றி உங்ககிட்டே வெளியிட ஒரு காலம் வரும்; அது வரைப் பொறுத்திருங்க, அத்தான்!"

"சரி; வேகமாக நட, சுமதி!"

அவள் வேகமாக நடந்தாள்; ஆனால், நல்ல காலம், வேதனை ஏதும் நடந்துவிடவில்லை: கீழ நாலாம் வீதி மடக்கத்திலிருந்து அசுரவேகத்தில் பறந்து வந்த சவுக்குக் கட்டை லாரி ஒன்றுக்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள் அவள்; என்றாலும், விதி யாரையும் விடாது என்பதற்கு அடையாளம் காட்டிய காவலரின் 'நெருக்கடி நிலை'யின் விதிக்கும் அந்த லாரி தப்பி விடவில்லையென்ற உண்மை நிலையையும் அவள் நிதர்சனமாகக் காணவும் நேர்ந்தது.

"சுமதி, உனக்கு ஆயுள் கெட்டி!"

"இல்லாட்டா, மிஸ்டர் எமதர்மராஜன் என் அக்கா கிட்டேயிருந்து லேசிலே தப்பிச்சுக்க முடியுங்களா அத்தான்?"

சுந்தர் உணர்ச்சிவசப்பட்டவனாகப் புன்னகை சிந்தினான்; "சத்தம் போட்டுப் பேசாதே; நீங்க அக்காவும் தங்கச்சியும் இப்படி ஒருயிரும் ரெண்டு உடலுமாய் இருக்கிற ரகசியம் அந்த யமதர்மனுக்குத் தெரிஞ்சிடப்போகுது!" என்றான்.

அத்தானைக் காட்டிலும் பலமாகச் சிரித்தாள் சுமதி; இப்போது அவள் குரலில் ஒரு தன்னம்பிக்கை விதியாகக் குரல் கொடுத்ததோ?— "எங்க ரெண்டு பேரையும் எந்த எமனாலுமோ அல்லது தர்மனாலுமோ அல்லது ராஜனாலுமோ இந்தப் பிறப்பிலே பிரிக்கவே முடியாதுங்க! என்னை நம்புங்க, அத்தான்!" என்று உச்சாடனக் குரலில் கூறினாள்: நம்பிக்கை ஏலக்காய் மணமாகச் சிந்தியது!

"நீங்க இரண்டு பேரும் இன்று போல் என்றும் வாழ வேணும் என்கிறதுதானே என்னோட பிரார்த்தனையும்!"

"ரொம்ப நன்றிங்க, அத்தான். என் சுசீ அக்காவோட தங்கமனசு யாருக்கு வரும்? எனக்கு என் அக்காதான் கண் கண்ட தெய்வம்!...சுசீ வாய் திறந்து சொல்ல வேணும் என்கிறது இல்லே; வெறுமனே கை ஜாடை காட்டினால்கூட, அந்த அர்த்தத்தைப் புரிஞ்சுக்கிட்டு, அதையே வேதவாக்காக மதிச்சு, அக்கா கட்டளைப்படி நடப்பேன்! ஆமாங்க, அத்தான்!"

சாந்தநாதர் ஆலயம் கொடுத்து வைத்ததுதான்—அதனால்தான், இரண்டாவது ஜோடிக் கும்பிடும் கிடைத்தது!...

நான்கு

# குழந்தை வீரிட்டது

விதி அந்தரங்கமாகவும், அதே வேளையில் பகிரங்கமாகவும் விளையாடிக் கொண்டும்; விளையாட்டு காட்டிக் கொண்டும் இருக்கும் அதிசயமான இடம் ஆஸ்பத்திரி அல்லவா?

அந்திக்கன்னி சூடாற இளைப்பாறி, ஒப்பனை சேர்த்துப் பவனி புறப்படத் தயாராகிக் கொண்டிருக்கிறாள்.

உள்ளே இருந்தவர்களின் உற்றாரும் உறவினரும் வெளியே தவம் இருந்தார்கள்; அவர்களின் ஊர்பேர் தெரியாத பட்டியலிலே, ஊரும் பேரும் தெரிந்த சுந்தரும் சுமதியும் சேர்த்தி!—புதிதான களையோடும், நூதனமான தெளிவோடும் பிற்பகல் இரண்டு நாற்பதுக் கெல்லாம் வந்தவர்களாக்கும்!

''ஒங்க சம்சாரத்துக்குக் கதம்பம் வாங்கிக் கொடுங்க, ஸார்!'' என்று உபதேசம் நல்கிய பொடியன் ஒருவன் பூத்தட்டை சுமதியின் முதுகுக்கு நேர்வசமாக நீட்டினான்.

சுந்தர் நிமிர்ந்து, ஒரு தவிப்புடன் சுமதியை நிர்மலமாகப் பார்வையிட்டான். சுமதியின் நாணம் அவனுக்குக் குறும்புச் சிரிப்பை உண்டாக்கிற்று. மூச்சுக் காட்டாமல், ஐம்பது காசை நீட்டினான். சுமதியின் பின் அழகை ரசித்து

அனுபவிக்க இங்கே இப்போது குமார் இல்லையே என்றும் வருந்தினுன். சுமதிக்காக அனுதாபப்பட்டான்!...

இயந்திரத்தோடு இயந்திரமாகப் பழகியவன்—பழக்கப் பட்டவன் சுந்தர்!—அடிக்கடி காப்பி வேண்டும்; 'நேவிப்ளூ' சிகரெட்டும் வேண்டும்!

கதவுகள் தட்டாமலே திறக்கப்பட்டன!

முதலிலே பாய்ந்தவன் சுந்தர்தான்!

அடுத்த சீட்டு சுமதிக்கு.

குழந்தைக்கு நல்ல தூக்கம்.

சுசீ ஏன் அப்படிச் சோர்வுடன், களைத்துச் சளைத்துக் காணப்படுகிருள்?

சுந்தருக்குச் 'சுரீர்' என்றது. "சுசீ, என்னவோ போல் இருக்கியே, ஏன்?" என்று கேட்டான்; இனம் விளங்காத பயம் ஆட்கொண்டது; இடது கண் ஏன் இப்படித் துடிக் கிறது?

நெஞ்சைத் தடவி விட்டுக் கொண்டிருந்தாள் சுசீலா. அத்தானை ஏற இறங்கப் பார்த்தாள். அவள் பார்வையில் ஓர் ஏக்கம், ஒரு தவிப்பு; ஒரு சோகம். "நெஞ்சை வலிச்சுக்கிட்டு இருக்குதுங்க; அவ்வளவுதான்," என்ருள். உடலின் உபாதை சொற்களிலே பாதை காண்பித்து விடக்கூடாதே என்று கவலைப்பட்ட மாதிரி, வெகு நிதானமாக இருந்தது அவளது பதில்.

சுசீயைத் தெரியாதா சுந்தருக்கு? பதட்டத்தோடு எழுந்தான்; "லேடி டாக்டரைக் கூட்டிக்கிட்டு வந்திடறேன்; சுசீ," என்று சொல்லியபடி சுமதியின் பக்கம் திரும்பி, "சுசீயைப் பார்த்துக்க சுமதி," என்று கூறிவிட்டு நகரத் தொடங்கினுன்.

"அப்படி ஒண்ணும் சீரியஸ் இல்லீங்க, அத்தான். இன்னம் பத்து நிமிஷத்திலே டாக்டரம்மா 'ரவுண்ட்' வந்திடுவாக!...அப்போது பார்த்துக்கலாம். நெஞ்சுவலிக்கு

உபசாந்தியாய்ச் சாப்பிடச் சொல்லி மாத்திரை தந்திருக் காங்க அம்மா. இதோ, பாருங்களேன்!'' சிவப்பு மாத்திரை வெளுத்திருந்த அவள் கையில் பளிச்சிடுகிறது! இப்படி ஒரு சிவப்பில் இப்படி ஒரு மாத்திரையா?

மறுபடி அவன் ஆதங்கத்தோடு வாழ்க்கைத் துணைவி யைப் பார்வையிட்டான். கண்கள் தளும்பிட, சுமதி தன் அக்காவை ஊடுருவிக் கொண்டிருந்ததையும் அவன் கவனிக்கத் தவறவில்லை. 'சுமதிக்கு என் சுசீன்னு ஒரு தனிப் பிரியம்—பாசம்!'

என்னவோ கேட்கத் துடிக்கிருள் சுசீலா!—

என்னவோ சொல்லத் தவிக்கிருள் சுமதி?—

இதற்கிடையிலே:

குழந்தை அழுதது.

சுமதி தொட்டிலுக்குத் தாவினுள்.

"பத்திரம்...ம்...பீச்சங் கையைக் குழந்தையோட தோளிலே கொடுத்துப் பதமா அணைச்சுக்கடி, ஆத்தா! நாளைக்கே நீயும் ஒரு பாப்பாவுக்கு அம்மாவாக ஆகப் போறவளாச்சே?—இப்பவே பழகிக்கிட்டால்தான் நல்லது. ஒரு ஆத்திரம் அவசரமென்றுல், என்னுேட குழந்தைக்கும் நல்லதுதானே? சரி, எங்கையிலே கொடுத்திடு, தங்கச்சி. எனக்கு ஒண்ணும் இல்லை; முதலிலே நீ மூஞ்சியைத் துடைச் சுக்கிடு! உஸ்...உன் அன்பு அத்தான் உன்னை நையாண்டி பண்ணக் கூடாது அல்லவா?''

எவ்வளவு வக்கணையாகவும் வாஞ்சையாகவும் பேசி விட்டாள் அக்காக்காரி! மஞ்சள் வெய்யிலில் அவளுடைய வெளிறிய வதனம் பரிதாபமாக விளங்கியது, பாவம்!

சுமதி நாசூக்காக, மூக்கை உறிஞ்சிக் கொண்டாள். அந்தக் கடிதம் 'ப்ளவுஸை' உறுத்திக் கொண்டிருக்கிறது!— 'குமார் விஷயமாய் அக்கா 'ஓ.கே! சொல்லிட்டா, இந்தத் தை கடைசிலே கூட எங்க கலியாணம் ஜாம், ஜாம்னு நடந்து

முடிஞ்சிடுமே!' ...மாவின் வெள்ளைப்புடவை தன் நினைவுகளைப் பசுமையாக்கிப் போர்த்துக் கொண்டு எங்கெல்லாமோ இட்டுச் சென்ற அதிசயக் கூத்தையும் அவள் உணராமல் இல்லைதான்.

சுந்தரின் சிந்தனைகள் எங்கோ அலைகின்றன!

"சுமதி!..."

பார்வையாளர்களின் நெரிசலிலும் சந்தடியிலும் சுசீலா மறுபடி கூப்பிட வேண்டியதாயிற்று. தொண்டை வறண்டதால், குரல் கிறீச்சிட்டது. வந்த தங்கையிடம் தூங்கும் குழந்தையைத் தூக்கிக் கொண்டுபோய்க் கிடத்துமாறு கை அடையாளம் செய்தாள். சுமை கழிந்தபின், ஓர் ஆயாசப் பெருமூச்சு.

அதோ, லேடி டாக்டர்!...

சுந்தருக்குக் காணாததைக் கண்ட குதூகலம்; தெம்பு; ஆறுதல், "அம்மா வர்றாங்க," என்று தெரிவித்தான், கண்களைத் துடைத்துக் கொண்டு.

தாயை நினைத்தவள், டாக்டரம்மாவைக் கண்டாள்; பரிசோதனைக்குப் பின்னே, மூச்சுக் காட்டாமல் அவள் நடந்து சென்றதிலிருந்து சுசீக்கு ஆறுதல் கனிந்தது. உடம்பில் குற்றம் குறை இருந்தால்தான், அவள் வாயைத் திறப்பது வழக்கம் என்ற அந்தரங்கம் கூட சுசீக்கு அத்துபடி.

சுந்தர் டாக்டரம்மாவைப் பின்தொடர்ந்தான். "சுசீக்குக் கொஞ்சம் முன்னே 'செஸ்ட்பெயின்' வந்திடுச்சுங்கம்மா," என்று கூறினான்; ஸி. எம். ஓ. சொன்ன தகவலைச் சொல்லத் திரும்பினான்: "கைவசம் வச்சிருக்கிற சிவப்பு மாத்திரையைச் சாப்பிடச் சொன்னாங்க," என்றான்.

தை பிறந்துங்கூட, கூதல் இன்னமும் மாறவில்லையே?

சுசீலாவின் வலது கையில் ஊசலாடிக் கொண்டேயிருந்த அந்தச் சிவப்பு மாத்திரை திரும்பவும் 'டேஞ்சர் சிக்னல்'

மாதிரி பயங்காட்டிப் பயமுறுத்தத் தொடங்கிவிட்டது போலும்!...

"மாத்திரையை விழுங்கிடு, சுசீ!"

"ஊஹூம்; இப்ப நான் இந்த மாத்திரையை விழுங்கினல், அது என்னை இப்பவே விழுங்கிடுமுங்க, அத்தான்!"

"என்ன சொல்லுறே, சுசீ?"

உயிர்க்கழுவில் ஊசலாடினன் அவன்.

"திரும்பவும் நெஞ்சை வலிக்குதுங்க; வலி ஓய்ஞ்சடியும், மாத்திரையைச் சாப்பிடலாம்," என்ருள். இடதுபுற விலாக்குடையை மூர்த்தண்யமாக அழுத்தி அழுத்தித் தேய்த்து விட்டுக் கொண்டாள் சுசீலா; மூச்சு இரைத்தது; மூக்கின் முனையிலும் தாழ்வாயிலும் வேர்வை முத்தம் பதித்திருந்தது. முகம் விகாரமாகச் சுளித்ததும் உபாதையை எதிர்கொள்ளவோ அல்லது, சமாளிக்கவோ அவள் எத்தனம் செய்து கொண்டிருக்க வேண்டும்.

கொண்டவளின் வலியைப்போக்கிட அவன் துடியாய்த் துடித்தான். ஆனல், சூழல் சரியில்லையே! 'சுசீயின் நெஞ்சை நான் தடவிக் கொடுத்தால், அவளுக்கு ஆறுதலாக இருக்கும்!'

சந்தடி கூடுவதும் குறைவதுமாக இருந்தது.

சுசீயின் வதனத்திலே மெள்ள மெள்ளச் சலனம் தாண்டிய சாந்தி பரவத் தொடங்குகிறது.

"இனியாச்சும் மாத்திரையைச் சாப்பிடேன், சுசீ!"

"ஆமா, அக்கா!"

ஆகாயத்தில் கருமேகங்கள் படைதிரண்ட காட்சியைக் கண்டு ஏனே கலவரம் அடைந்தாள் சுசீலா. "ஆகட்டுங்க, அத்தான்! முதல் காரியமாக, சென்னைக்கு உங்க அச்சாபீசுக்கு லீவை நீடிக்கச் சொல்லி ஒரு தந்தி கொடுத்திடுங்க!" என்று பதட்டமாகத் தெரிவித்தாள்.

சுந்தருக்குத் 'திகீ'ரென்றது. 'ஏன் இப்படி தந்தி கிந்தின்னு சுசீ பேத்துருள்? சாதாரண லெட்டர் போட்டால் போதாதாக்கும்?' ஏஞே அவனது உள்மனம் கலவரம் அடைய ஆரம்பித்து விட்டது. "உன்னேயும் குழந்தையையும் உங்க வீட்டிலே கொண்டு போய்ச் சேர்த்திட்டுத்தான் நான் சென்னேக்குத் திரும்பப் போறதாகச் சொல்லலேயா, சுசீ?" என்று நினேவு படுத்தலாஞன்.

"ஓ, மறந்து போயிட்டேன். இன்ஞெரு சங்கதியையும் கேட்டுக்கிடுங்க!"

"ஊம்!"

"நீங்க என்னே விட்டுட்டு அங்கிட்டு இங்கிட்டு நகர்ந்திடாதீங்க, அத்தான்; உங்களேக் கண் கொட்டாமல் இன்னும் கொஞ்ச நாழிக்காச்சும் அப்படியே பார்த்துக்கிட்டே இருக்கவேணும்போலே ஒரு ஆசை அரிக்குதுங்க. காலம்பற இப்படி ஒரு ஆசை உங்களுக்குத் தோணலீங்களா? இப்ப எனக்குத் தோணுது. துளியத்தனே மனசுக்கு கடலத்தனே நப்பாசையான்னு சிந்திக்கிறீங்களா?"

சுந்தரின் இடது கண் மீண்டும் துடிக்கிறது. நீவி விட்டான்; மறுபடி, துடிப்புத் தொடர்கிறது. பன்னீர்ச் சிதறலாகச் சுடுநீர்ச் சரம்வேறு! "எனக்குப் பயமா இருக்குது, சுசீ!" என்று தழுதழுக்கக் கூறியவன், விம்மத் தொடங்கிஞன்.

"அக்கா," என்று பதற்றத்தோடு கூப்பிட்டாள் சுமதி. சுசீயை விழுங்கிவிடுவதுபோலப் பார்த்தாள்.

"நெஞ்சை ஒளிச்சு ஒரு வஞ்சகமா, அத்தான்?... உள்ளதைச் சொன்ஞல், எதுக்குப் பயப்படணும்? எனக்குப் பயம் கியம் ஒண்ணுமே இல்லேயாக்கும். பிரசவ சமயத்திலே நான் பயப்பட்டது மெய்தான்; அத்தானே மறுபடியும் இந்த ஜன்மத்திலே காண முடியுமோ, என்னமோன்னு கதறி அழுது துடிச்சது பொய் இல்லேதான்!... சுமிக்குட்டி, நீ

முதலிலே கண்ணைத் துடைச்சுக்கடி! உங்கிட்டே நான் ரொம்பப் பேசவேணும். இப்ப முடியாது. தங்கச்சிப் பொண்ணே! உன்னோட அன்பு அத்தானோட கண்ணீரைத் துடைக்க வேண்டியது உன் கடமை என்கிற விஷயம் கூடவா உனக்கு மறந்து போச்சு?...''

சுசீலாவுக்கு ஆற்றுமை மேலிட்டது.

மௌனம் ஒரு பாஷை என்றால், அதற்குப் பேசத் தெரிய வேண்டாமோ?

இருந்திருந்தாற்போல சுசீலா மெய்ம்மறந்து சிரித்தாள்; விதியின் எழுத்தைத் துப்புக் கண்டுபிடிக்கத் தவித்தவள் மாதிரி அவள் சிரித்த அந்தச் சிரிப்பின் அட்டகாசத் தொனி அமைந்தது. பிறகு, கையிலே விதியாக மௌனம் சாதித்த சிவப்பு மாத்திரையை நோக்கினாள். அப்பால், பக்கவாட்டில் திரும்பி, குழந்தையை ஊடுருவினாள்; பின்னர், எதிர் வசத்தில், வெண்ணிறஆடை அசைந்தாட, மறைந்திருந்து தன்னையே பார்த்துக் கொண்டிருந்த அன்னையைப் பார்வையிட்டாள். அதே விழிவிரிப்பிலே, சுந்தரும் சுமதியும் நிழலாடத் தவறிவிடவில்லையே?

மணி ஐந்தரை.

பாப்பா விழித்தது.

சுமதி ஓடினாள்.

"அத்தான், நீங்க போய்க் குழந்தையை எடுத்திட்டு வாங்க,'' என்றாள் சுசீலா. "சுமதி ஏற்கனவே பிள்ளை பெற்றவள் மாதிரி கச்சிதமாய்க் குழந்தையை எடுக்கப் பழகிக்கிட்டா; நீங்களும் நம்ப ராஜாப்பயலை எடுக்கிவச்சுச் சமாதானப்படுத்தக் கத்துக்க வேண்டாமா? நான் எங்கானும் போயிட்டா, அப்புறம் குழந்தை அழுது அழுது தவிச்சுப் போயிடதா? ம்...அப்படித்தான்!... அவ்வளவே தான், பலே! சபாஷ், முதல்தரம்தான் கை நடுங்கிச்சு; இப்ப தேவலாமே, அத்தான்!'' என்று கை கொட்டினாள்; உருண்ட மாத்திரையை மீண்டும் உள்ளங்கைக்குள் மூடிக்

கொண்டாள்; பூஞ்சிரிப்பு, பூந்தேறலாகச் சுவைத்திருக் கலாம்; வெளுத்த உதடுகளின் கரையிலே ஈரம் கரை காட்டிக் கரை சேர்ந்திருந்தது.

குழந்தையைப் பதனமாக ஏந்தி, முத்தம் பதித்துவிட்டு மடியில் கிடத்திக் கொண்டாள் சுசீ.

இப்போதுதான் சுந்தருக்கு நல்ல மூச்சு வந்தது. அழகான—கவர்ச்சியான—நேசம் மிகுந்த புன்சிரிப்பு அவனுக்குக் கண்ணுமூச்சி காட்டிக் கொண்டேயிருந்தது. இனியாகிலும் சுசீ மாத்திரையை வாயில் போட்டுக் கொண்டால் என்னவாம்?

"வேளை வந்தாச்சு; இதோ, நொடியிலே மாத்திரையை விழுங்கிடறேன், அத்தான்!"

"ம்!" சுந்தர் தீச்சுட்ட மெழுகாகக் கரைகிறான்! சுமதி பெண் குழந்தையைப் பெற்றுத் தந்திருக்கலாகாதா?...

"இப்பத்தான் இன்னொரு ஆசை நினைபபு வருது!"

"சொல்லம்மா!"

'அம்மா' என்ற பதச் சேர்க்கையில், சுசீயின் கண்கள் கலங்கிவிட்டன. "அத்தான், உங்க கையாலே எனக்குப் பூ வாங்கித் தந்து எத்தனை நாளாயிடுச்சு?" என்று அத்தானைக் கள்ளவிழிப் பார்வையால் அளந்தாள்.

"வாங்கிட்டு வாரேன்!" என்று சொல்லிவிட்டு, நகரத் தொடங்கினான் சுந்தர்.

"அத்தான், நீங்க ஆஸ்பத்திரி வாசலிலே எனக்கு வாங்கித் தந்த கதம்பத்திலே பாதியை அக்காளுக்கோசரம் 'ரிசர்வ்' செஞ்சு வச்திருக்கேன்," என்று தெரிவித்து, கட்டிலுக்கருகில் இருந்த டம்பப் பையைக் குனிந்து எடுத்த போது, சோளியின் உட்புறம் ஒளிந்திருந்த அந்தக் கடிதம் கீழே விழுந்தது. கடிதத்தையும் பூவையும் எடுத்துக் கொண்டு நிமிர்ந்தாள். பூவை அக்காளிடம் கொடுக்க

நகர்ந்தவள், மறுபடியும் அத்தான் பக்கம் நடந்து கதம்பத்தை நீட்டினுள்.

"பொருத்தம் பலே ஜோர்தான்!" எடுப்பான குரலெடுத்துச் செப்பினுள் சுசீ.

சுமதியும் சுந்தரும் ஜோடி கலந்து, பதட்டத்தோடு திசை திரும்பினார்கள். என்னவோ, ஓர் 'அசரீர்' மாதிரி அந்த விமர்சன ஒலி எழுந்து, அடங்கிக் கொண்ட மாதிரியே அவர்கள் எண்ணியிருப்பார்களோ?

சுசீலாவுக்கு வாயெல்லாம் பல் ஆகிவிட்டது. "பூப்பாரம் சுமந்தால்தான், நமது அருமைத் தமிழ்ச் சமுதாயத்திலே, மரபு வழி வந்த சுமங்கலிப் பெண்ணுக்குப் பூரணத்வம் கிடைக்கும்! நான் பாக்கியவதி; கொடுத்து வைத்தவள்!" காலையில் இட்டுக்கொண்ட 'அரியணுச்சி அம்மன்' குங்குமத்தைச் சரிபார்த்துக்கொண்டாள்.

"அத்தான், சீக்கிரம் கொஞ்சம் தண்ணீர் கொண்டாங்க; மாத்திரையை விழுங்கிப்பிடுறேன்!" என்ருள் சுசீலா. தண்ணீர்த் தம்ளரைக் கையில் வாங்கிக் கொண்டு, அந்த 'டேஞ்சர் சிக்னல்' மாத்திரையை வாயிலே போட்டுக் கொண்டாள்; பிறகு, தண்ணீரை 'மடக்'கென்று வாயில் ஊற்றிக் கொண்டாள்!

மறுகணம், கண்மூடிக் கண் திறக்கும் நேரத்தில்—

சுசீலாவின் கையிலிருந்த தம்ளர் நழுவியது; கைகால்கள் உதறின; கட்டிலில் அமர்ந்திருந்தவள், மடியில் அமைதியுடன் கிடந்த தவப்புதல்வனேடு அப்படியே மல்லாந்து சாய்ந்து விட்டாள் சுசீலா!—நெஞ்சடைப்பு!...

"ஐயையோ, சுசீ!" என்று அலறினன் சுந்தர்; சுந்தர் கதறினன்!

பரதவிப்புடன் குழந்தையை வாரியெடுத்த சுமதி, "அக்கா...அக்கா!" என்று ஓலம் பரப்பிக் கூவினுள்.

அம்மா ஓடோடி வந்தாள்.

## 36

சுசீலா கண்களை உருட்டி உருட்டி விழித்தாள். சுமதியையும் சுந்தரையும் ஜோடி மாருமல், ஜோடி கலைக்காமல் மாறி மாறி—மாற்றி மாற்றிப் பார்த்தாள். பிறகு சித்தியின் அன்பான அரவணைப்பில் சுகம் கண்டிருந்த செல்வமகன் ராஜாவையும் பார்வையிட்டாள். சடுதியிலே, சுந்தரின் கைகளைப் பற்றி இழுத்துச் சுமதியின் பூங்கரங்களிலே ஒப்படைத்தாள்!—'பொருத்தம் பலே ஜோர்தான்!'—அடுத்த இமைப்பொழுதில், சுசீலாவின் அழகான கண் இமைகள் மூடிக் கொண்டன!...

செல்லக் குழந்தை வீரிடுகிறது!...

ஐந்து

# 'ஆ! சுமதியா?'

குழந்தை வீரிடுகிறது—இன்னமும்!

புதுக்கோட்டையில் பிடித்த அழுகை சென்னை வந்து சேர்ந்தும்கூட ஓயவில்லை!—பாவம்!

பாவத்தையும் புண்ணியத்தையும் கூட்டிக் கழித்து 'ஐந்தொகை' போட்டுப் பார்க்கக் கூடிய நேரம் இதுவா?—வேளை இதுவா, என்ன?

எல்லாம் முடிந்துவிட்டது!

பின், குழந்தை—அந்தப் பச்சைப் பாலகன் ஏன் இன்னமும் அலறுகிறான்?—கதறுகிறான்?

எல்லாம் முடியவில்லை; எல்லாமே இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது என்பதைப் பிரகடனம் செய்து அறிவுறுத்துவது போன்று, பிறைமதி கண் சிமிட்டிக் கண் பொத்தி விளையாடிக் கொண்டேயிருக்கிறது; விளையாட்டுக் காட்டிக் கொண்டேயிருக்கிறது!

வெள்ளைப் புடவையின் முந்தானை தெப்பமாகி விட்டது.

'ஆர்கன்ஸா' சேலையின் கரைக் கட்டில் ஈரம் சேர்ந்து கொண்டிருந்தது. "அக்கா!..." என்று வாய்விட்டு விம்மினாள்; மனம் விட்டுக் கூவினாள். "நீ இப்படி எங்களை யெல்லாம் தவிக்கவிட்டுட்டுப் பேசாமல் கொள்ளாமல் கண்ணை மூடிக்கிடுவாயென்று நான் சொப்பனத்தில் கூட நினைக்கவேயில்லையே, தாயே? ஐயையோ, எங்களையெல்லாம் எத்தனை பயங்கரமாய்ச் சோதிச்சுப்பிட்டே, சுசீ?" தொண்டை வலித்துக்'கம்' மென்று மடியில் கிடக்கும் பிஞ்சுக் குழவியின் மேனியைத் தடவிவிட்டவாறு, ஓலம் பரப்பினாள் சுமதி. அவள் பார்வை இரண்டாம் கட்டை ஊடுருவிப் பாய்ந்தது. அத்தான் எங்கே?

அடித்து வைத்த சிலையாக, ஆடாமல் அசையாமல், அப்படியே சாய்ந்து கிடக்கின்றான் சுந்தர்! ஆடிப்புனலாக ஓடிக் கொண்டேயிருந்த கண்ணீர் வெள்ளத்தோடு ஓடிப் பிடித்து ஆடிஓடிக் கொண்டிருக்கிறானோ?...

சின்னக் கடிகாரம் படுகெட்டி; சாவி தீர்ந்ததும், அடம் பிடிக்காமல் அடங்கி விட்டது.

'இன்னமும் கூட மணி ஏழு பத்திலேயே நிற்குதே?'— வியப்பு, வேதனையைச் சட்டை உரித்தது. குழந்தையை இதம்பதமாகக் கையிலே எடுக்கவும், எடுத்த பிள்ளையைத் தூளியில் அலுங்காமல் குலுங்காமல் கிடத்தவும் நன்றாகப் பழகிவிட்டாள் சுமதி.

பாவம், 'டைம்ஸ்டார்!'— அதற்கும் சோதனைக் காலம் தான். சாவி தீரும் முன்னரே, மீண்டும் சாவி கொடுக்கப் படவும் ஓர் அதிர்ஷ்டம் வேண்டும் அல்லவா?

அம்மா நேற்று முன்தினம் சாவி கொடுத்தாள்.

நேற்றைக்குச் சுமதியின் பங்கு. இன்று அந்தப் பங்கிலும் மண் விழுந்தது. அவளுக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. 'என் சுசீ அக்காவும் எங்க சுந்தர் அத்தானும் சைனா பஜாருக்கு ஒரு ஞாயிற்றுக்கிழமை போனாங்க. விருந்தாடி

வந்திருந்த நானும் அவங்களோடே புறப்பட்டேன். எல்லாரும் நடந்தே போனோம். அக்கா எனக்கு ஜரிகை ரிப்பன் இரண்டு ஜோடி வாங்கித் தந்திச்சு; நான் வாங்கிக் கொடுத்த நைலான் ரிப்பன் ஒரு ஜோடியை அக்கா மறுதளிக்காமல் வாங்கிக்கிட்டது எனக்குப் புதையல் எடுத்த மாதிரி சந்தோஷமாய் இருந்திச்சு. ரட்டன் பஜாரிலேதான் இந்த டைம்பீஸ் வாங்கினோம். எந்தப் பொருளை வாங்க வேணும்னு முடிவு செஞ்சாலும், வாங்குகிற அந்தப் பொருளை உயர்ந்த ரகமாகப் பார்த்து வாங்க வேணும் என்கிறது தான் சுசீ அக்காவோட சித்தாந்தம். சின்ன வயசிலிருந்தே இப்படித்தானும்; அம்மா அடிக்கடி சிலாகிச்சு சொல்லுவாங்க! அந்தக் கடிகாரம் அதோ, இருக்குது; ஆனு...ஆனு...என் அன்பு அக்காவை மாத்திரம்தான் காணவே முடியவில்லை!...அட, பாழும் தெய்வமே!...' சுடுநீர் சுடாமல் தப்புமா?

சுசீலா பூவும் பொட்டுமாக—புன்னகையும் புதுநிலவுமாகத் 'தரிசனம்' தருகிறாள்!—படத்திலே!...

அம்மா வந்தாள்.

அம்மாவுக்குத் தெய்வநாயகி என்று பெயர்.

தெய்வநாயகி இப்படித்தானா வெள்ளை உடுத்து இருப்பாள்?

அதனால்தானோ, அந்நாட்களிலே, பெரியவர் சசிவர்ணம் "நாயகி! நாயகி!" என்று அடிக்கொரு தடவை பெயரைச் சுருக்கிக் குறுக்கி அலட்டி வந்தாரோ?

அம்மாவுக்குப் பூவும் பொட்டும், மஞ்சளும் குங்குமமும் பற்றுவிட்டுப் போயின; 'பற்று' ஆகியும் போய்விட்டன. அவளுடைய இடுக்கு விழுந்த கண்கள் வீங்கிக் கிடந்தன. இமைகள் விலகினால் போதும்; அருவியாகக் கண்ணீர் சிதறிவிடும். "சுசீ!...மகளே, சுசீ!"—சுசீலாவின் ஜபம்தான்!—ஜபம் செய்து, தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த

சுசீலாதான் இப்போது பொய்யாய்—கனவாய்—பழங்கதை யாகி விட்டாளே?—பாசம் பொல்லாதது!...

மண்ணடிச் சந்தடி குறைகிறது.

ராமசாமித் தெருவுக்கு இயல்பிலேயே ஓர் அமைதி.

அரவம் கேட்டதுதான் தாமதம்; அரவம் கண்ட பாவனையில் திடுக்கிட்டாள்; திரும்பினாள்; அவள்—சுமதி. கண்ணீர் பார்வையை மறைத்தது; கையில் படபடத்த அந்தக் கடிதத்தை மீளவும் சோளிக்குள் திணித்துக் கொண்டாள்; நெஞ்சின் அத்து மீறிய துடிப்பை அவளது வலதுகைத் தொட்டுணர்வு தொட்டுக் காட்டியிருக்கக் கூடும். "நீ சாப்பிடம்மா", என்று வேதனையுடன் அழுத்த மாகக் கூறினாள். இரண்டு நாழிகைப் பொழுதுக்கு முந்தி, பெற்றவள் உற்ற பரிவுடன் தன்னை உண்ண அழைத்த பாசம் அவளுக்கு மனப்பாடம்.

தெய்வநாயகி அம்மாள் பதில் ஏதும் சொல்லாமல், இரண்டாவது மகளை ஏக்கமும் சோகமும் சூழ்ந்திட நோக்கினாள்; "வயசுப் பொண்ணு நீயே சாப்பிடல்லே; வயசான எனக்கு மாத்திரம் சோறு ஒரு கேடாக்கும்?" என்றாள். மனக் கண்ணில், இளைய புத்திரியிடம் மாப்பிள்ளையை சுசீலா ஒப்புவித்த ஆஸ்பத்திரிக் காட்சி மறுபடியும் நிழலாடியது.

வீசுந் தென்றலின் கைவீச்சில், நரைமுடிக் கொத்துக்கள் பிறை ஒளியில் பளபளத்த பரிதாபக் காட்சியைத் தவிர்க்க மாட்டாதவளாகி, "வயசான காலத்திலே கடைசிப்பட்சம் ராச்சோறு கொஞ்சமாச்சும் உண்ணு அம்மா", என்று கெஞ்சினாள் இளையவள்.

அவள் தலையை ஆட்டிவிட்டாள், எதிர்மறைக் குறிப்பில். "அரிமளத்திலே சுசீயோட பதினாறும் நாள் காரியம் முடிஞ்சு, இப்ப இங்கிட்டு பட்டணத்துக்கு வந்தும் மூணு நாலு நாள் ஆயிடுச்சு. இன்னமும் உன் அத்தான் பச்சைத் தண்ணி

பல்லிலே படாமல் வைராக்கியத்தோட பேயடிச்சாப்பிலே இருந்த இடத்திலேயே இருந்துக்கிட்டு இருக்கிற சங்கதி பத்தி உன்கிட்டே கலந்து பேசத்தான் இப்ப நான் வந்தேன்,” என்று விளக்கினாள் அம்மா.

மணி எட்டரை.

சுமதி என்ன செய்வாள், பாவம்?—வேளைக்கு நூறு முறையாவது அத்தானைச் சாப்பிடச் சொல்லிக் கெஞ்சிக் கூத்தாடுவாள். சுந்தர் அசைந்தால்தானே?—அசைந்து கொடுத்தால்தானே? அவனுடைய அந்தப் பயங்கர மௌனத்தைக் கண்டு, அவள் புழக்கடைப்பக்கம் போய் ஒவ்வொரு தரமும் அழுது புலம்பிவிட்டுத்தான் வருவது வழக்கம். அத்தகைய சோதனைப் பொழுதுகளிலெல்லாம் அவள் இதயத்தில் அந்த ஒரு காட்சியும் தோன்றவே செய்யும். தன்னுடைய கைகளிலே தன் அத்தான் சுந்தரை அக்கா சுசீலா ஒப்படைத்துவிட்டுக் கண்ணை மூடிக்கொண்ட சம்பவத்தை அவள் மறக்கவில்லை; மறக்கமாட்டாள்; மறக்கவும் முடியாது. ‘வாஸ்தவந்தான்!’—அவளது உள் மனம் உள் வட்டம் சுழித்து இவ்வாறு சொல்லிக்கொண்டது. ஏதோவொரு புதிய யோசனை தோன்றவே, தனக்குத்தானே தலையை உலுக்கிக் கொண்டாள். தளும்பிய கண்களைச் சுங்கடி முன்றானை கொண்டு துடைத்தாள்; நல்லது—கெட்டது எதைப்பற்றியுமே அக்கறைப்படாமல், ஆயாசப் படாமல் இருக்கும் உண்மைத் துறவி மாதிரி தொட்டிலில் குழந்தை கண் வளர்ந்து கொண்டிருந்த அழகை அப்போதும் ரசித்தவளாக, இரண்டாம் கட்டுக்கு நடந்தாள். சோளியில் உறுத்திய வண்ணம் இருந்த அந்தக் கடிதம் அந்தக்கைந் நொடிப்போதில் குமாரையும் நினைவுறுத்தத் தவறிவிடவில்லைதான்! விரக்தியான முறுவல் கீற்று இதழ்க்கரைதனில் இழைந்திட, அந்தக் கடிதத்தை அவள் கையில் எடுக்க முனைந்தாள்.

அப்போது:

சுந்தர் எட்டு ஊருக்குக் கேட்கும்படி பயங்கரமாக இருமினான்.

அம்மாவைச் சாந்திபெறச் செய்ய நேரம் கிடையாது.

சுமதி, "அத்தான்!" என்று பாய்ந்தோடினாள்.

சுந்தர் வேர்க்க விறுவிறுக்க, தூண்டில் புழுவாகத் துடி துடித்துக் கொண்டிருந்தான். கண்கள் இரண்டும் சிவந்தும் வீங்கியும் போயிருந்தன. நெஞ்சு கூடெடுத்துக் காணப் பட்டது. முகமெங்கும் ரோமங்கள் சிலிர்த்து நின்றன. அப்பொழுது ராட்சத இருமலின் கொடுமை சற்றே தணிந்திருந்த நேரம்.

"அத்தான்!"

"..............."

"அத்தான்! அத்தான்!" என்று அழைத்தாள் சுமதி; கலவரமும் கலக்கமும் பின்னிப் பிணைந்தன.

மூச்!—

"அத்தான்", என்று விளித்தவளாக, அவனுடைய தோளைத் தொட்டு உலுக்கினாள் சுமதி.

"நான் இங்கேயேதான் இருக்கேன், சுசீ!...உன்னைத்தான் காணோம்!—அதுதான் தேடிக்கினு இருக்கேன்!" யதார்த்த மான தொனியில் சொன்னான் சுந்தர்.

"அக்கா!" என்று வெடித்தாள் சுமதி.

"சுசீ திரும்பிவிட்டாளா? பேஷ்!" என்று மகிழ்வுடன் கேட்டுக் கொண்டே, கண்களை ஆவலும் ஆதுரமும் ஆரத் தழுவ, அகலத் திறந்து பார்த்தான் சுந்தர். விரிந்த கண்கள் விரிந்த நிலையில் ஓர் அரைக்கணம் ஊசலாடின; மறுவினாடி, அவன் கண்கள் மூடின; இதுதான் சமயமென்று, இருமல் வேறு புறப்பட்டுத் தொலைத்தது.

அவசரம் அவசரமாகக் கூஜாவைக் கவிழ்த்து, தம்ளரில் நீரை நிரப்பினுள் சுமதி. சிவப்பு மாத்திரையை விழுங்கத் தண்ணீர்த் தம்ளரைக் கையிலேந்தினுளே சுசீலா, அக் காட்சி படமெடுத்துப் படம் காட்டியது போலிருக்கிறது!—'சுசீ அக்கா!' என்று வீரிட்டவாறு, தண்ணீர் நிரம்பிய தம்ளருடன் அத்தானை நாடி ஓடிஞள். சாய்வு நாற்காலியில் பேச்சு மூச்சின்றிக் கிடந்த சுந்தரின் காலடியில் குனிந்து அமர்ந்தாள். தமிழ் மண்ணிலே ஜனுதிபதி ஆட்சி அமல் நடத்தப்பட்ட செய்தியைத் தாங்கிய பத்திரிகை அடங்கிக் கிடந்தது!

அப்போது:

சுழன்ற மின்விசிறிக் காற்றலைகளிலே, என்னவோ படபடத்த சத்தம் கேட்டது.

சுமதி கூர்த்தமதி பதித்துப் பார்வையை ஓடவிட்டாள்.

நடுங்கிக் கொண்டிருந்த சுந்தரின் கைகளில் கடிதம் ஒன்று படபடத்து, ஊசலாடிக் கொண்டேயிருந்தது.

குழல் விளக்கு எரிகிறது.

"சுசீ! நீ எனக்கு அக்காமட்டும் இல்லை!—எனக்கு நீ தெய்வமும் கூட!"

மனம் விட்டும் வாய் விட்டும் கதறியழுதாள் சுமதி.

சுந்தர் 'சடக்'கென்று விழித்துக் கொண்டான்: "ஆ! சுமதியா?" என்ருன்!...

ஆறு

# ஆணை-சாட்சி

சுமதிக்கு இருப்புக் கொள்ளவில்லை. சோகச் சுமை கண்ணீராக, ரத்தக் கண்ணீராக உருகி வழிய, குழந்தைத் தனமான பார்வையைப் பரிவுடன் அத்தான் பேரில் பதித்த வாறு, "ஆமாங்க, அத்தான்! சுமதிதான்!" என்று விடை மொழிந்தாள். அக்காலை ஆசையோடு எதிர்பார்த்திருப்பார் அத்தான்!—ஐயையோ, பாழாய்ப்போன விதியே!

சுந்தர் தொடுத்த கண் எடுக்காமல்—வைத்த விழி வாங்காமல் சுமதியை இன்னமும் பார்த்துக் கொண்டே யிருந்தான். பிறகு, பார்வையைத் திசைமாற்றி, குடியிருப்பு மனையின் நான்கு சுவர்ப்பகுதிகளையும் துழாவினான்; அப்பால், சூன்யத்தைச் சாடியவனாக, சுற்றுமுற்றும் நோக்கினான். கடைசியிலே, அவன் கண்கள் அண்ணாந்து வான் வெளிக்குத் தாவின. அங்கேதான் அவன் தன்னுடைய இன்னுயிர்த் துணைவி சுசீலாவைத் தரிசித்திருக்க வேண்டும். அரைப் புன்னகை பாதி உயிர்கொண்டு அவனது காய்ந் திருந்த உதடுகளில் ஊரத் தொடங்கிற்று. "சுசீ!...அன்புக் கண்ணே சுசீ!...ஐயோ, சுசீலா!" மண்டையில் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டு அலறினான்; தலைமுடியை மூர்த்தண்ய

மாகப் பிய்த்துக் கொண்டு கதறினன். திடுதிப்பென்று பெருங்குரலில் பிசிறு தட்டி அழ ஆரம்பித்த அருமைப் பிள்ளையின் திக்குக்கு அவன் திரும்பினால்தானே? குழந்தை என்ற ஒரு பொருள்—ஒரு ஜீவன் தனக்கென உண்டு என்கிற சத்தியம்—தருமம்—பிரக்ஞை இல்லாதவன் போலவே, அவன் அழுகையைத் தொடர்ந்தான்; அழுகை அவனைத் தொடர்ந்தது. இத்தனை ஆர்ப்பாட்டத்திற்கும் இருமல் சும்மா இருக்குமா? குடைந்தது. 'விலாக்குடை' எலும்புகள் பளிச்சிட்டுத் தெரியும் வகையில், கேவிக் கேவி இருமினன்.

தயாராகவே கொணர்ந்து வைத்திருந்த குவளைத் தண்ணீரை நீட்டினள் மைத்துனி சுமதி; அவளது குவளை மலர்க் கண்களில் கண்ணீர் நிற்கவும் நிலைக்கவும் இடம் இருந்தால்தானே? அத்தானின் மார்பைத் தடவிக் கொடுக்கக் கொடுக்க, இருமலின் நரகவேதனை லேசாகக் குறைய ஆரம்பிக்கவே, அத்தானின் விழிகள் ஆற்றாமையுடன் இறுகி விட்டதைக் கவனித்த சுமதியின் மனம்—கன்னி மனம் ஆறுதலடையவே செய்தது. குழந்தை வீரிட்டது ஞாபகம் வரவே, பின்புறம் திரும்பினள்; தன் அன்னை பேரனை அமைதிப்படுத்திக் கொண்டிருந்ததைக் கண்டாள். குழந்தைக்கு 'க்ளாக்ஸோ' கரைத்துப் புகட்ட வேண்டும். அந்திப் பொழுதில் வழக்கம் போலவே வீட்டின் உடைமைக்காரி உமையாள் வந்து குழந்தையை உச்சி மோந்து விடைபெறும் சமயத்தில், சமய சஞ்சீவியென ஓர் ஆறுதல் வாக்கை வீசிவிட்டுச் சென்ற நிகழ்ச்சியையும் அவளால் மறக்க இயலாதுதான்: 'பெத்த ஆத்தாளைச் சாகடிச்ச பிள்ளைக்கு ஆயுசை எழுதிப்போடுவான் ஆண்டவன் அப்படின்னு எங்க செட்டி நாட்டுப் பக்கத்திலே சொல்லிக்கிடுவாக; சுமதிப் பொண்ணே, நீயும் உன் சுந்தர் அத்தானும் குழந்தை சகிதம் தீர்க்காயுசுடன் ரொம்பக் காலம் நல்லபடியாய் வாழ்வீங்க. சுமங்கிலி ஆச்சி செப்புறதை மனசாலே நம்புடி, ஆத்தா!'—முந்தித் தவம் இருந்து, ஈரைந்து மாதம் சுமந்தும் காத்தும் பெற்ற தாயை என் கண்மணி ராஜாக்குட்டியா சாகடித்தான்? சே! அநியாயப்

பழி இது!...குழந்தைக்கு ஆசை கொண்ட மட்டும் அன்பு முத்தங்கள் ஈந்ததும்தான், ஆத்திரம் வடிகால் கண்டது. மீண்டாள். மீண்டதும், ஆச்சியின் நல்வாக்கு கொடிமின்னலாய்க் கிறுக்கியது. அக்கா தன்னிடம் விதியெனப் பொறுப்பு ஒன்றை ஒப்படைத்துவிட்டுத் தெய்வமாகிவிட்ட விதியை அவள் நினைவு கூர்ந்தாள். 'பாவம் குமார்!'—இன்ப நினைவுகளின் அழுத்தத்தில், துன்பக் கண்ணீர் அழுந்தியது. சுயநினைவு அவளை ஆட்கொண்டது. "அத்தான்!" என்று குரல் கொடுத்தாள். பசிக் கிறக்கமும் மனச் சோர்வும் குரல் ஒலியில் தடம் கட்டியிருக்கலாம்.

இப்பொழுதுதான் திரும்பவும் கண்களை மலரத் திறந்து திரும்பினான் சுந்தர். மறுபடி சுமதியை விழுங்கி விடுகிற மாதிரி பார்வை பரப்பலானான். தன் மார்பைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்த சுமதியின் பண்புக் கடமையை உணர்ந்தானோ இல்லையோ, ஒரே எட்டில் அந்தப் பூங்கரங்களை விலக்கி விட்டான்! "சுமதி, என்னை மன்னிச்சிடு; இந்தப் பாவியாலே உனக்குத்தான் ராப்பகலாக எத்தனை கஷ்ட நஷ்டம்?...போதும் போதாதற்கு அந்தக் குழந்தை வேறே!" என்று செருமத் தொடங்கினான்.

விழிகளின் 'நிவேதனத் தீர்த்தம்' நிறைந்தோட, "அத்தான், அப்படியெல்லாம் தயவுசெஞ்சு நினைக்காதீங்க; சொல்லாதீங்க; கையெடுத்துக் கும்பிடுறேனுங்க; உங்களையோ இல்லே,குழந்தையையோ ஒருசுமை என்பதாக நான் இந்த ஜன்மத்திலே நினைச்சேன்னா, என்னை மாதிரி ஒரு பெரும் பாவி-மன்னிக்கக்கூடாத மகாபாவி இந்தப் பூலோகத்திலே என்னைத் தவிர வேறே ஒருத்தி இருக்கவே முடியாதே?... நீங்க நினைக்கிற மாதிரி நானும் நினைத்தால், அப்புறம், நான் என் அக்கா சுசீ பேரிலே வச்சிருக்கக் கூடிய அந்தப் புனிதமான பக்திக்கு—பாசத்துக்கு—அன்புக்கு என்னுங்க அர்த்தம்?...மறுபடியும் சொல்றேன்; அப்படியெல்லாம் நினைக்கக்கூடாதுங்க. சரி, சரி; முதலிலே ஒரு வாய் தண்ணீர் குடிங்க; அப்புறம், அரை டபரா பசும்பால் குடியுங்க. தூத்

துக்குடிப் பனங்கற்கண்டு போட்டிருக்கேனுங்க; உங்களுக்கு புகைச்சல் இருமல் ஒரு சமயம் தொல்லே கொடுத்தபோது, இதே மாதிரியான கைவாகனத்தோடுதானே அக்காளும் பாலைத் தயாரிச்சுத் தந்திச்சுதுங்க? அதே கணக்கிலே இப்பவும் ருசி தப்பாதுங்க!'' என்று வியாக்யானம் செய்தாள் சுமதி. லேசாகச் சரிந்திருந்த மாரகச் சேலையைப் பதட்டத்துடன் சரி செய்து, சரி பார்த்துக் கொள்ளவும் தவறிவிடவில்லையே!

மனத்தின் கஷ்டநஷ்டங்களை வாய் விட்டுப் பேசத் தெரியாத பாப்பா வெறும் மௌனப் பார்வையின் வாயிலாகத் தாயை ஏக்கத்தோடு பார்ப்பது உண்டே!—அவ்வாறு தான் இப்போது சுமதியைப் பார்த்தான் சுந்தர். அவனது பார்வையின் ஒரு கோணம், என்னென்னவோ பேசத் துடித்தது; மறுகோணத்தில், என்னவெல்லாமோ கேட்கத் தவிப்பதும் தெரிந்தது; ''சுசீ!'! என்றான் அவன்.

''நான் சுசீயோட தங்கை, அத்தான்!''

''ஊம்!''

''இந்தப் பாலிலே ரெண்டு வாய் குடியுங்க. இருபது நாளைக்கு மேலாக ஒண்ணுமே சாப்பிடாமல் இருந்தால், உடம்பு என்னத்துக்கு ஆகும், அத்தான்?''

''இந்த உடம்பு இனி என்னத்துக்கு ஆகவேணும்?''

அவள் தேம்பலானாள்.

''நீ ஏம்மா அழறே? நான் ஒருத்தன் அழறது போதாதா?''

''நீங்க என்னென்னமோ பேசறீங்களே, அத்தான்?—அதையெல்லாம் என்னாலே ஜீரணிக்கக்கூட முடியலீங்க, அத்தான்!''

அவனுக்கு உதடுகள் துடித்தன. நீட்டிய பாலைக் கை நீட்டி வாங்கினான். இயந்திர ரீதியான போக்கு; ஒரு வாய்

குடித்தான்; ஒரே வாய்தான்! திருப்பிக் கொடுத்து விட்டான்.

பாட்டி கலக்கிப் புகட்டிய நீர்க் கரைசலில் நிம்மதி பெற்று, பசி அடங்கி, உறங்கி விட்டான் ராஜா.

சுமதிக்குத் தன் பசி அடங்கின மாதிரி தோன்றியது. 'ராஜா!'—ராஜா, ராஜா என்று சுமதிக்குப் பழகிப் போய் விட்டது. அக்காவும் கூட இப்படியேதான் அழைத்தாக நினைவு. இவன் ராஜாவேதான்! அக்காளும் இந்தப் பெயரையே சூட்டி நிலைக்க வைக்க எண்ணியிருக்கக் கூடும். ஆனால், அத்தான்காரரர் இஷ்டம் எப்படியோ? தலைச்சன் குழந்தைக்குத் தாய்வழிச் சொந்தத்தில்—அதாவது, தாய் வீட்டுப் பாட்டன்—பாட்டி பெயரைத்தான் வைப்பது நடைமுறையாம்! அம்மா சொன்னார்கள்!

சுந்தரின் முகத்திரையில் புயல் அடங்கின அமைதி காணப்பட்டது.

அப்படித்தான் சுமதிக்குத் தோன்றியது. "அத்தான்!" என்று கூப்பிட்டாள்; சுந்தர் 'ஊம்' கொட்டியதும், அவள் பேச்சைத் தொடர்ந்தாள்: "உங்க குழந்தைக்காகவேனும் நீங்க உங்க உடம்பைக் காப்பாற்றிக்கிட வேணுங்களா?... நடக் கூடாதது நடந்து போச்சு; ஆனா, நடக்க வேண்டியது இனி நடந்தாக வேணுங்களே? நான் சின்னஞ்சிறுசு; கோவிச்சுக்காதீங்க; தப்பு இருந்தா, நீங்கதானே என்னை மன்னிக்க வேணும்?—அக்காளா இருக்குது?"

கன்னத்தில் கை வைத்துக் கொண்ட சுந்தர், நெற்றிப் பொட்டு இரண்டையும் அழுத்திய போது, கையிலிருந்த கடிதம் விடுதலை அடைந்து சிதறிப் பறக்க ஆரம்பித்தது-அதை எடுக்க முயன்றான்.

"நான் இல்லையா? நொடியிலே எடுத்துத் தரேன். நீங்க இருங்க!"

"நானே எடுத்துக்கிறேன்!"

''வேண்டாங்க, அத்தான். வேண்டாம்! நான் அதை ஒண்ணும் படிச்சிடமாட்டேன்; எடுத்த கையோடு உங்க கையிலே கொடுத்திடுறேன்!''

''ம்!''

சுந்தர் திகில் அடைந்தான். சுமதி அந்தக் கடிதத்தை வாசித்திருப்பாளோ? சுசீலாவின் சடலத்தை அரிமளத்துக்கு டாக்ஸியில் கொண்டு போக ஏற்பாடு செய்த நேரத்தில் கிடைத்த அந்தக் கடிதக் குறிப்பு பெட்டிக்குள்ளேயிருந்து எப்படி அம்பலத்துக்கு வந்தது?— 'நானேதான் எடுத்திருப்பேன்; பின்னே, யார் எடுப்பாங்க! யாருக்குத் தெரியும் அந்த உளவு? மாரியம்மா!...என்னை ஏன் உயிரோடே சித்திரவதை செய்கிறாய்? மூச்சுக்காட்டாமல், என் மூச்சை எடுத்துக்கிடேன்; பிரச்னைகளாவது தீர்ந்திடட்டும்!...'

கடிதத்தைச் சுமதியின் கையிலிருந்து நிதானமாக வாங்கிக் கொண்டான் சுந்தர்; அதை ஆரம்பம் முதல் கடைசிவரை மீண்டும் வாசித்தான்; பிறகு, ''இந்த லெட்டரை நீயும் படிச்சுப் பார்க்கிறியா, சுமதி?'' என்று வினவினான்.

தயக்கத்துடன், ''உங்களுக்குள்ள லெட்டரை நான் படிக்கலாமா. அத்தான்?'' என்று எதிர்வினாத் தொடுத்தாள் மைத்துனி.

அப்படியென்றால் தான் கண்மூடிக் கிடந்த வேளைகெட்ட வேளையிலே அக்கடிதத்தைச் சுமதி பார்க்கவில்லை, படிக்கவில்லை என்னும் நிலவரம் அவனுக்குப் புரிந்தது. புரிந்ததுடன் சரிதான்; மற்றப்படி, விளைவு—எதிர்விளைவு பின்விளைவு பற்றியெல்லாம் அவனுக்கு என்ன தெரியும்?— ஆனால், ஒன்றே ஒன்று மட்டிலும் அவனுக்குத் தெரியும்; துல்லிதமாகவும் தெரியும்!—எண்ணிய எண்ணத்தில் உணர்ச்சிகள் விம்மின; புடைத்தன; சுழித்தன; 'சுசீ!... சு...ம...தி!'

கடிதத்தின் உள்ளடக்கம் சுமதிக்குத் தெரிந்த விஷயந் தானே? அத்தான் உண்மையை மூடி மறைக்கவேமாட்டார். அத்தானைத் தெரியாதா, என்ன?—அத்தானைப் பற்றிய உயர்ந்த எண்ணமே அவளுக்கு அப்போதைய மனச் சங்கடமான நிலையில் அருமருந்தாகவும் அமைந்ததில் வியப்பு இல்லை.

''சுசீ!...ஸாரி...சு...ம...தி!''

அவள் ஏறிட்டு, அமைதி கனிய நிமிர்ந்தாள். ''என் தெய்வம் சுசீயை—எங்க சுசீ அக்காவை இந்தப் பிறப்பிலே மட்டுமில்லே, இனி எடுக்கப் போகிற ஏழேழு பிறப்பிலும் கூட உங்களாலே மறக்க முடியாதுங்க, அத்தான்!... உங்களுக்கு ஆசையும் விருப்பமும் அதுவேயானால், என்னை நீங்கள் சுசீ என்றே தாராளமாக அழைக்கலாம்!—அது எனக்கும் பெருமையளிக்கும்; அந்தப் பெருமை எனக்கு மற்றொரு பாக்கியமாகவும் அமைந்துவிடும்!'' உணர்ச்சிகளின் சங்கமத்தில் கண்கள் வழிதிறந்தன.

அவன் பதில் சொல்லவில்லை; பெருமூச்சை மட்டுமே வெளியிட்டான். கடிதத்தைப் பிரித்து வைத்தபடி, ''சுமதி, இந்தத் தபால் எனக்கு மாத்திரம் இல்லை, உனக்கும் சம்பந்தப்பட்டதுதான்! நம்ம குடும்பத்திலே உனக்குத் தெரியாத அந்தரங்கம் என்ன இருக்க முடியும்? சரி, சரி. உனக்கே படிக்கணும்னு தோணுகிறபோது, நீயே எடுத்துப் படிக்கலாம்; உன் அக்காளோட பூஜைப் படத்துக்கு அடியிலேதான் வைக்கப்போறேன்,'' என்றான் சுந்தர்.

மறுபடியும் நழுவியோடிய அக்கடிதத்தை விரைவுடன் எடுக்கக் குனிந்தபோது, அவளுடைய சோளிக்குள் அஞ்ஞாத வாசம் செய்த கடிதமும் குழல் ஒளிச் சிதறலில் சிதறி வீழ்ந்தது. அத்தான் வைத்திருந்த கடிதத்தை சரிபார்த்துக் கொடுத்துவிட்டு, தன்னுடைய கடிதத்தை உள்ளங்கையில் மடித்து வைத்துக் கொண்டாள் சுமதி.

''நீயும் ஒரு கடிதம் வச்சிருக்கியே, சுமதி?''

அவள் மிடறு விழுங்கியவளாக, "இதுக்கு இப்போது வேலையே இல்லாமற் போயிடுச்சுங்க; ஒரு காலத்திலே இந்தக் கடிதத்தை—நான் எழுதி வச்ச இந்தக் கடிதத்தைப் பெரிசாக நம்பியிருந்ததென்னவோ பொய் இல்லீங்க. இதைப் படிக்க உங்களுக்கு மனம் செல்லாதுங்க", என்று விவரம் கூறினாள்.

"உன் அத்தானை உனக்குத் தெரியாமலா?...ஒரு காலத்திலே நீ எனக்கு எழுதியிருந்த கடிதத்தைத்தான் நான் காபந்து பண்ணி வச்சிருக்கேனே?...உன் கடிதத்தை உன் லெதர் பெட்டியிலே போட்டுவை; இந்தா, இந்தக் கடிதத்தை நான் சொன்ன இடத்திலே வச்சிடும்மா!"

நெஞ்சடியிலிருந்து சொற்கள் வெளிவருதன் விளைவாகத் தான், நெஞ்சடியில் குமைந்துகொண்டிருக்கும் துன்பச் சுமையும் பேசப் பேசக் குறைந்து வருகிறதோ?—திடீரென்று அவனுக்கு இப்பூலகின் நினைவு பிடரி பிடித்துத் தள்ளவே, தன்னைப்பற்றிய நிலையும் நினைவும் அப்போதுதான் அவனுக்கு எழுந்தனபோலும்!—தன்னை நினைத்ததும், சுசீயை நினைத் தான். வேதாளம் மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டுவிட்டதோ? அடித்து வைத்த சிலையானான்!

மணி பத்தாகப் போகிறதே!

குழந்தைக்குப் பசி வந்துவிடும்!

அக்காவின் கணவர் தந்த கடிதத்தைச் சுசீலாவின் படத்தடியில் வைத்தாள் சுமதி: "அக்கா! நீ இட்ட ஆணைக்கு நீயே இப்போது சாட்சியும் ஆகிவிட்டாயே." அன்னையின் அணைப்பு சுமதிக்கு ஆறுதலாகவே அமைந்தது.

ஏழு

## மிஸ்டர் குமார்

உதயசூரியன் உதயராகம் புனைந்து மகிழவும், மகிழ்விக்கவும் தொடங்கிய நேரம் அது!

சொட்டு மருந்தைச் 'சப்பி'ச் சுவைத்து 'நப்பு'க் கொட்டிய குழந்தையின் முதற் புன்னகையில் சொக்கிப் போனாள் சுமதி. அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண் கொண்டமட்டும் அனுபவித்த அவள், தாய்க்கும் பங்குதர அழைத்தாள். தெய்வநாயகி அம்மாள் மாப்பிள்ளை இல்லாமல் இருக்க வேண்டுமேயென்ற தயக்கத்துடன் மெல்ல மெல்ல—மெள்ள மெள்ள ஆடி அசைந்து வந்து சேர்வதற்குள், ராஜாவின் புன்னகை மாறிவிட்டது கண்டு அவளுக்கு ஏற்பட்ட மனச்சோர்வு கொஞ்சநஞ்சமல்லதான். குழந்தையின் முதற் சிரிப்பைத் தரிசனம் செய்தபோதுதான் சுமதிக்கும் சிரிக்கத் தோன்றியது; ஆனால் அந்தச் சிரிப்புக்கும் சோதிப்பு ஏற்பட்டுவிட்டது. பச்சைமண்ணின் மனம்மாதிரி தான் அதன் சிரிப்பும் கணப்பித்தம்—கணச்சித்தம் என்னும் விதிக்கு உட்பட்டது போலும்!

"என்னம்மா இது?—நம்ம ராஜா இன்னம் மறுபடியும் சிரிக்கக் காணேமே?" என்று கவலையுடன் சந்தேகம் கேட்டாள் மகள்.

தெய்வநாயகி செம்பாதி மலர்ச்சிரிப்புடன் சொன்னுள்: "ராஜா பிறந்து மூணு மாசம் ஆயிட்டுதில்லே—அதான் சிரிக்க ஆரம்பிச்சிட்டான். எப்போதாச்சும்தான் சிரிப்பான்! நம்ப அவசரத்துக்குப் பெரியவங்களான நம்மாலேதானே சிரிக்க முடியும்?...இன்னெருவாட்டி புன்னகை செய்கிறப்போ, மறந்திடாமல் உன் அத்தான்கிட்டே கொண்டு போய்க் காட்டிப்பிடு, சுமதி. நம்பளைமாதிரி அவங்களும் அத்திபூத்தாப்பிலே சிரிக்கட்டும்!"

"உன் இஷ்டப்படி செய்வேன், அம்மா; முன்னைப்போலே அத்தான் சிரிச்சுப் பேசி மகிழ்ந்து கலகலப்பாக இருக்க வேணுமென்கிறதுதானே என்னுடைய ஆசையும் கவலையும்!" என்ருள் சுமதி. மஞ்சள் பூச்சு முகப்பருக்களைத் தூக்கலாகச் சுட்டின. சுட்டும் விழிச்சுடரில் பழைய தெளிவின் தடம் தெரிந்தது. குழந்தையைக் கிடத்தின துணிக் கிழிசல்களைத் துவைத்து அலசிப் புளிந்து கொல்லைக்கேணி அடியில் வைத்து விட்டு வந்தது ஞாபகம் வரவே, விசையாக மடங்க எத்தனம் செய்தாள். ஆனுல், அவளுக்கு நடை மிச்சமாகிவிட்டது. அம்மா என்ருல் அம்மாதான். எல்லாவற்றையும் எடுத்துக் காயப் போட்டிருக்கிருளாம்!

"காலைப் பலகாரம் சாப்பிட மாப்பிள்ளையை எழுப்பேன், சுமதி!"

"அத்தான் தூங்கிளுல்தானே அம்மா எழுப்புறதுக்கு?"

"ஐயையோ! இப்படி ராத்தூக்கம் பகல் தூக்கம் இல்லாமலும் தண்ணி கஞ்சி பல்லிலே படாமலும் இருந்தால் இன்னும் மோசமாகி விடாதா அவங்களோட உடம்பு?"

"வாஸ்தவம்தான், அம்மா!"

"அதுசரி; நீ எடுத்துச் சொல்றதுதானே?"

"சொல்றதைக் கேட்டால்தானே?"

"இப்படியே விட்டுட்டா, அப்புறம் மாப்பிள்ளை கதி என்னுவது?"

"அதுதான் அம்மா எனக்கும் மட்டுப்படவில்லை; விளங்கவும் இல்லை!" என்று வருந்தினுள் சுமதி. மறுகணம், அவள் பேசிய பேச்சே அவளை வருத்தியதாக உணர்ந்தவுடன், அத்துயரஉணர்வு பிறந்த இடத்தை நுணுக்கமுடன் ஆராய்ந்தாள்; மனச்சாட்சி சிரிக்கத் தொடங்கிய சிரிப்பில், விதியின் நாதத்தையும் அவளால் கேட்க முடிந்தது. அன்ெருரு தினம் தன் சகோதரி ஆஸ்பத்திரியில் தனக்கு வழிகாட்டிவிட்டுச் சென்ற புதிய விதியின் பாதை மின் வெட்டியது. பொழுது விடிந்து பொழுது போனுல், எத்தனை எத்தனையோ தரம் ஞாபகப்படுத்திக் கொண்ட முடிவும் புனர்ஜன்மம் எடுக்கத் தலைப்பட்டது. 'சுசீ, நீ எனக்கு இட்ட ஆணைதான், நம்ப அத்தானைக் காப்பாற்றுகிறதுக்கு உண்டான ஒரே வழியா? ஐயையோ, கையிலே வெண்ணெயை வச்சிக்கிணு நெய்க்கு அலைஞ்சேனே? அம்மாவுக்கு இந்த வழி புரிஞ்சுதான், சுற்றி வளைச்சு என் வாயைக் கிண்டிக்கிட்டு இந்நேரம் இருந்தாங்களா? அத்தானுக்கு உண்டான வழியைப் பற்றி நானே என் வாயினுலே சொல்லி விடமாட்டேனு என்றுதான் அம்மா தவிச்சுக்கிட்டு இருந்திருக்குமோ!' அந்தரங்க சுத்தியுடன் சுயப் பரிசோதனை நடத்தி முடிந்தவுடன் அவள் சிலிர்ப்படைந்தாள்; ரோமச் சிலிர்ப்பு விளைந்தது. விளைந்த முத்துக்கள் கண்களில் உருளத் தொடங்கிவிட்டன. பெற்றவளைக் குற்ற உணர்வின் நச்சரிப்புடன் ஏறிட்டாள்: குனிந்திருந்த தலை இப்போது நிமிர்ந்தது; அப்பார்வையில் மன்னிப்புக் கோரும் பாவனை விளங்கத் தவறவில்லை. "அம்மா!" என்று கூப்பிட்டாள்.

கலந்த சிந்தனையுடன், "என்னடி பெண்ணே?" என்ருள் தெய்வநாயகி.

"அத்தானை என் கையிலே ஒப்படைச்சிட்டுப் போயிருக்குது அக்கா; அக்கா கட்டளைப்படி அத்தானை நான் கல்யாணம் கட்டிக் கொண்டால், அத்தான் புதுப் பிறவி எடுத்திடுவாங்கதானே?"— 'நாலும் நாலும் எட்டுத் தானே அம்மா?' என்று வீட்டுக் கணக்கைத் தாயிடம் சரி பார்த்துக் கொள்ளும் சின்னஞ்சிறு சிறுமியின் அப்பாவித் தனமான வெகுளிப் பண்புடன் வினவினாள் சுமதி.

"பின்னே, சந்தேகமென்ன?... மாப்பிள்ளையின் உடம்பு மட்டுமில்லே, மனசும்கூட கடைத்தேறி விடாதாம்மா?"

"தெய்வமே!" என்று கைகூப்பினாள் சுசீலாவின் சகோதரி.

கூப்பிய பூங்கரங்களிலே சுசீ தெய்வமாகப் புன்னகை சொரிகிறாள்!

விதிக்கு இத்தனை நாணயமான பண்புடன் சிரிக்கத் தெரிவில்லையே?

"அக்காளோட ஈடுகட்ட முடியாத நஷ்டத்தின் பிரிவினாலே, தினம் தினம் செத்துச் செத்துப் பிழைக்கும் அத்தானைக் காப்பாற்றும் பாக்கியமும் புண்ணியமும் எனக்குக் கிடைச்சிட்டா, அதையே என்னோட பிறவிப் பயனாக நினைச்சு நினைச்சு ஆனந்தக் கண்ணீர் விடமாட்டேனா? தயங்கியோ, மலைச்சோ, வெட்கப்பட்டோ இனி பிரயோ சனம் கிடையாது! என் அன்பான அத்தான்கிட்டே சமயம் பார்த்துச் சங்கதியை நினைவூட்டி ஒரு நல்ல முடிவுக்கு ஒரு நல்ல ஆரம்பத்தைத் தேடிக்கிடுறேன், அம்மா!" என்று உத்தாரம் கொடுத்தாள் கன்னி இளமான்.

பிள்ளை மூத்திரத்தில் சொட்டச் சொட்ட நனைந்து சல்லாபமாகக் கிடக்கிறது!

இந்நேரம் மாமூல் பிரகாரம் அழுது வைத்திருக்கக் கூடாதோ?

'க்ளாக்ஸோ' டப்பா, 'குளுகோஸ்' டின், மாவு அடிக்கும் கிளாஸ், கரண்டி சகிதம் அம்மா தயாரானாள்; வெந்நீர் 'ஃபிளாஸ்க்' வந்துவிட்டால், குழந்தை உணவு தயார்!

செங்கதிர்ச் செல்வன் ஏறுமுகம் காட்டினான்.

ராஜாப்பயல் இன்முகம் காட்டினான்.

அத்தான் கண் திறக்கவில்லை!

சுமதி காத்திருந்தாள்; காத்து இருந்தாள்!—

தஞ்சாவூரில் மானம்புச் சாவடிப் பள்ளியில் பணி புரிந்த காலை, திட்டங்கள் வகுத்து அவற்றிற்கு ஏற்றவாறு அவற்றை அனுசரித்தும் நடந்து வந்தவள் சுமதி. 'சுமதியா? அவள் ரொம்பக் கண்டிப்பு; ஸ்ட்ரிக்ட்!' என்று அவளுடைய சக ஆசிரியைத் தோழி நூர் உன்னிஸா பேகம் பாராட்டிப் புகழ மாட்டாளா? ஏன், குமார்கூட இந்தப் புகழாரத்தை எத்தனை தரம் அவளுக்குச் சூட்டி, தானும் மகிழ்ந்து அவளையும் மகிழ்வுறச் செய்திருக்கின்றான்!—சுசீலாவின் அகால மரணம் அவளை மட்டும்தானா நிலைகுலைய வைத்தது? கனவுகளைப் பற்றிய ஸ்மரணைகூட தடம் காட்டாத வண்ணம், அவள் மாறிவிட்டாள்; மாற்றிக் கொண்டு விட்டாள்; மாற்றப் பட்டும்விட்டாள்; வாழ்க்கை முள் ரோஜாவா?—இல்லை, ரோஜா முள்ளா?

மணி ஒன்பதை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

காலத்தின் பயன் கருதாப் பணியை எண்ணிப் பார்க்கையில், சுமதியின் மனிதாபிமானம் நன்றியறிவு மேலிட மேலும் விழிப்பும் சுறுசுறுப்பும் அடையத் தொடங்கியிருந்தது. எதிர்வசத்தில், வசம் இழக்காத மனநிலைப்புடன் பார்வையைச் செலுத்திய தருணத்திலே, சுந்தர் கட்டிலில் புரண்டு படுத்தது தெரிய வந்தது. அநேகமாக, இனிமேல் விழித்துக் கொள்வார். ஊம், தூங்கினால்தானே விழித்துக் கொள்ள?— அக்கா இருந்த காலத்தில், எத்தனை சீக்கிரம்

துயில் கலைந்து, நீராடி, அச்சகத்துக்குப் புறப்பட்டுவிடுவார்! அக்கா சீதேவி—மகாலட்சுமி!—அவள் காலடி நிழல் படர்ந் தால் போதும்; நல்ல உள்ளமும் நயமான பண்புடைமையும் பரிபக்குவம் அடைந்து விடுமே!—'சுசீ அக்கா! உன் அருமைத் தங்கச்சிப் பொண்ணைப் பார்க்க எப்போ திரும்பப் போறே?' அழுதது போதும் என்றுதான் இருந்தாள்; ஆனால், ஆசைக்கு உள்ளது போன்று, அழுகைக்கும் அளவே கிடையாதோ, என்னவோ?......ஆண்டவன் அழுகையைத்தான் முதன் முதலில் கவனிப்பாராமே!—மகாத்மா சொல்லவில்லையா?...

பாப்பா மௌனப் பிண்டமாகக் கிடந்தது. புதிய மெத்தை; சின்ன மெத்தை; சின்னப் பாப்பாதானே? போதும், போதும்!

மண்ணடிக் கடைத் தெருவில் வாங்கினாள் சுமதி. இது கூட அத்தான்காரருக்குத் தெரிய நியாயமில்லை; சுசீலா இல்லாத இந்த மண்ணிலே நடந்த எதுதான் அத்தானுக்குத் தெரியும்? இல்வாழ்வுக்கு மங்கலம் தந்த மாண்புமிகு தெய்வம் மறைந்துவிட்டாளே?—சகோதரியின் இனியநினைவு அவளுக்குச் சிலிர்ப்பினை உண்டாக்கியது; தன் முடிவே தானாக ஆகி, தானே அம்முடிவில் இரண்டறக் கலந்த நிலையில், அந்தம்மிக்க சூழலில் சுந்தரே உயிரும் உயிர்ப்புமாகி விளங்கி, தானும் இயங்கி, தன்னையும் இயக்கி நின்ற மகோன்னதமான ஒரு மனநிலையில் அவள் எவ்வளவு வினாடிகள் மெய்ம்மறந்திருந்தாளோ?

'அத்தானுக்குப் புதுப்பிறவி ஏற்படுத்த வேணும்; புதிய உள்ளம், புதிய வாழ்வு; புதிய உலகம்!—ஆம்; என் கனவு பலித்தால், என் அன்பு அத்தானின் வாழ்வும் மறுமலர்ச்சி அடைந்துவிடும்!'—

சுசீயின் நிழற்படத்தின் அடியில் தியாகத்தின் சுடர் தெறித்து எரிந்து கொண்டிருந்த அந்த 'நல்ல விளக்கு', அவளுக்கு—சுமதிக்குத் தெம்பையும் நம்பிக்கையையும் புதிய உருவிலே சுரக்கச் செய்திருக்கலாம்! சூன்யத்தின் சூத்திர

தாரிக்குச் சுபீட்சமாகவும் சுமுகமுடனும் கும்பிடு கொடுத்தாள். 'எங்க குடும்பத்திலே நல்ல பொழுதை விடியப் பண்ணு, முருகா!'

பேபி எப்போது சிரிக்கும்?...

இளங்காலை வேலையில் அரைலோட்டா காப்பி குடித்தது; அவ்வளவுதான். சுந்தர் மாதிரி சுமதிக்கும் காப்பி என்றால் ஒரு 'மாகை'—மயக்கம்! அத்தானுக்கு உண்டான 'ஸ்பெஷல் காப்பி' இன்னொரு 'ஃபிளாஸ்கில்' காத்துத் தவம் இருக்கிறது. பிள்ளையாண்டான் சிரித்து வைக்கும் நேரம் பார்த்து 'அவர்' எழுந்து விட்டால், பருத்தி புடவையாகக் காய்த்த கதைதான்! ஆகட்டும், பார்க்கலாம். நமட்டுச் சிரிப்பு நிலா வதனத்திடை விளைந்து முத்தெடுத்த விந்தையை வட்டக் கண்ணாடி எட்டி நின்று காட்டியது.

சமயங்களில், காலம் ஆமை அவதாரமும் எடுக்கும் போலும்!

அம்மா இப்போது தெளிவுடன் விளங்கினாள்; தவம் இயற்றிப் பெற்ற தலைமகள், தவத்தைப் பொய்யாக்கிவிட்டு, விதிவழி ஏகிவிட்ட ஆறாத வடு, ஆற்றொணாத அவ்வடு தாய்நெஞ்சில் கட்டை வேகும் பரியந்தம் நிலைத்தே இருக்கும். ஆனால், முதற் சொந்தத்தில் பந்தம் ஏற்படுத்திக் கொண்ட உறையூர் மாப்பிள்ளை, சொந்தம் விட்டுப் போகாமல், பந்தத்துக்குப் புத்துயிர் அளிக்கச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து விடலாமென்ற நம்பிக்கையில் ஏற்பட்ட தெளிவு அது. இந்த உறவு நீடித்தால்தானே, பிறந்த குழந்தையின் எதிர்காலத்திற்கும் ஒரு நல்ல வழி பிறக்க முடியும்?

சுமதிக்குச் சும்மா இருக்கப் பிடிக்காது; சுறுசுறுப்பாக எதையாவது செய்வாள்;படிப்பாள்; பிளாஸ்டிக் நூலிழைகளை வர்ணம் பிரித்து, வர்ணம் சேர்த்துக் கூடைபின்னுவாள்; "டீச்சர், டீச்சர்!" என்று வாய் ஓயாமல் விளித்துச் சுற்றிச்

சுற்றிவரும் சிறுவர்—சிறுமியர்க்கு மத்தியில் வம்பளக்கவும் மறக்கமாட்டாள். இங்கே, சோகத்தின் சுற்றுச் சார்பில், அம்மாவோடு வம்பளக்க வாய்ப்பு ஏது? அதற்குகந்த மனநிலைதான் ஏது?—அத்தானுக்குப் பயங்கரமான இந்த இழப்பு உண்டாகாமல் இருந்திருக்கும் பட்சத்தில், "சுமதி! சுமதி!" என்று கூப்பிட்டு வாயைக் கிண்டிக் கிளறிக் கொண்டுதான் இருப்பார். தெய்வத்துக்கும் மனசாட்சிக்கும் சமுதாயத்துக்கும் பயந்து பயந்து நடப்பதும் பேசுவதுமே அவருக்கு வாழ்வின் நடைமுறையாகவே அமைந்துவிட்டது. அத்தான் முன் போலப் பேச ஆரம்பிப்பாரா?...

சுந்தரேசனின் முதுகுப்புறத்தில் சலனம் எதுவும் தெரியவில்லை.

சோளியில் ஏதோ ஓர் உறுத்தலை உணரவே, நெஞ்சகப் பகுதியில் தளிர் விரல்களால் தடவிப் பார்த்தாள் சுமதி. இன்பக் கிளுகிளுப்பின் உறுத்தல்தான் கண்ட பலன்; அவளுடைய அந்தக் கடிதம் சுசீலாவின் பார்வைக்காகவே காத்திருந்தது; ஆனால், சுசீலாவோ காத்திருக்காமல், மறைய நேர்ந்தது. ஆபத்துச் சமயத்தில் அதை டம்பப்பைக்குள் திணித்தவள், அன்றொரு நாள் அதை எடுத்து, பெட்டிக் கடியில் போட்டுவிடவேண்டுமென்ற சிந்தனையுடன்தான் 'ப்ளவுஸி'ன் உள்ளே போட்டு வைத்தாள். நேரம் தப்பிய நேரத்தில், 'அது' அத்தானின் கவனத்திற்கும் இலக்காகி விட்டது. அக்கா உயிரோடிருக்கும் காலத்தில் அவள் அதைப் படித்திருந்தால், அத்தானுக்கும் அதைப் பார்க்கச் சந்தர்ப்பம் கொட்டு முழக்கோடு கிட்டியிருக்கும்!—இனி அந்தக் கடிதம் இதே பழைய தோல்பெட்டிக்கு அடியில் பொய்யாய் கனவாய் பழங்கதையாகக் கிடக்க வேண்டியது தான்; அதுவே அதன் தலைவிதி!—அன்பு அத்தான் அதைப் பார்க்காமலும் படிக்காமலும் இருப்பதே சிலாக்கியம்!...

வாசல் வெளியில் மண்ணெண்ணெய் வண்டி கூவிக் கொண்டிருந்தது. கிருஷ்ணபரமாத்மா மன்னிப்பாராக!—பாஷை புரிந்தால்!

பசி எடுக்காமலே பழங் கணக்கைப் பார்க்கிற பாங்கில், அவள் தோல்பெட்டியைத் துழாவினாள். ஏதாகிலும் வேறு மாற்று ரவிக்கை கிடைக்காதா என்கிற நப்பாசை. தஞ்சாவூருக்குப் போய் எல்லாவற்றையும் 'செட்டில்' செய்து முடித்துக் கொண்டு வந்துவிட்டால்தான் தேவலாம். இரண்டொரு நாளில் புறப்படவேண்டியதுதான். துணி மணிக்கு அப்பால் பஞ்சம் இருக்காது. தேடாதே பொருள் கிடைத்த மாதிரி, மீளவும் அவள் விரல்களில் அக்கடிதம் தான் சிக்கியது. "மிஸ்டர் குமார், உங்களுக்காக நான் ரொம்பவும் வருந்துகிறேன்!..."

நல்லகாலம், சுந்தரேசன் எழுந்து உட்கார்ந்து விட்டான்!

எட்டு

# வெறும் சுமதி இல்லை

விசைப் பொத்தானை அழுத்தினதும், இயந்திரம் விசையுடன் ஓடும்; அந்தக் கணக்கின்படி, அங்கேயும் காரியங்கள் விரைவுடன் நடக்க ஆரம்பித்தன.

தெய்வநாயகி அம்மாள் ஓடிவந்தாள்!

சுமதி பெட்டியை மூடிவிட்டாள்.

"மாப்பிள்ளை அபூர்வமாக எழுந்து உட்கார்ந்திருக்காங்க; இந்தா, காப்பி, ஒரே நினைப்போடு கொண்டுபோய் ஆற்றிக்கொடு. சர்க்கரை குறைச்சலாகத்தான் போட்டிருக்கேன். நம்ம சுசீ ராசத்தி போடுற அளவுதான்! சமய சந்தர்ப்பம் அறிஞ்சு, உன் அக்கா உன் பேரிலே சுமத்திட்டுப் போயிருக்கிற பொறுப்பைப் பற்றிப் பேச்சை எடு. சசியோட கடைசி ஆசையை அவர் தட்டிக்கழிக்க மாட்டார்; ஆனாலும், அவராலே சுசீயை இந்த ஜன்மத்திலே மறக்கவே முடியாது. அது எனக்குத் துலாம்பாரமாய்த் தெரிஞ்ச சேதிதான், அதுக்காக, பஞ்சவர்ணக் கிளியான உன்னை உதாசீனப் படுத்தவும் துணியமாட்டார் மாப்பிள்ளை. அவர் நாலையும்

எண்ணிச் சீர்தூக்கிப் பார்க்கிற புள்ளிதான்; ஒண்ணேமட்டும் திரும்பவும் ஞாபகப் படுத்துகிறேன். சுசீ உனக்கு வெறும் அக்கா என்கிற சொந்தத்துக்கும் மேலே, அவள் உனக்குத் தெய்வமாகவும் ஆகி, ஒரு புதிய உத்தரவையும் போட்டுப் புட்டுப் போயிட்டா!...

"இப்ப நீ புதுச் சுமதியாக்கும்!......ஆனபடியினுலே, உன்னுேட சுயநலத்துக்கோ அல்லது உன்னுடைய சொந்த ஆசாபாசங்களுக்கோ இந்தக் கடமையைப் பொறுத்த மட்டிலே இடமே கிடையாது; கிடையவே கிடையாது!—நீ நாலும் தெரிஞ்ச பொண்ணு. நான் பெற்ற மகள் நீ என்கிறதை, அன்னிக்குச் சாவுக்கு வந்த குமார்கிட்டே—உன் மாஜி காதலர் குமார்கிட்டே நீ ஒட்டி உறவாடாமல், வெட்டி விலகி நடந்துகிட்டதிலிருந்தே நான் புரிஞ்சுகிட்டேன். என் வயிற்றிலே பால் வார்த்திடுவாய் நீ என்கிற நம்பிக்கையும் சத்திய ஜோதியாய் எனக்குள்ளே ஒளிகாட்டிகிட்டே இருக்குது; என் மாப்பிள்ளே என்னுடைய மாப்பிள்ளே யாகவே இருந்தாகணும். அந்தப் புண்ணியத்தை நீ கட்டிக் கிட்டு மகராஜியாக இருக்கவேணும் என்பதுதான் என்னுேட நியாயமான ஆசை!...ஊம், துருசுபண்ணிப் புறப்படு! எல் லாம் சரிதான்!...கிளம்படி அம்மா சுமதிப் பெண்ணே!"...

அம்மாவின் பேச்சுமட்டுமே நின்றது.

டபரா—தம்ளர் காப்பியை அமைதியாக வாங்கிக் கொண்டாள் சுமதி. தூங்கிக்கொண்டிருந்த செல்வனேத் திரும்பிப் பார்த்தாள். "குழந்தை முழிச்சுட்டு அழுதால், நீ மாவைக் கலக்கிக்கொடு; சிரிச்சான்ன, எனக்குக் குரல் கொடு; நான் பறந்துவந்து எடுத்துகிட்டுப்போய் அத்தான் கையிலே கொடுக்கிறேன். அப்பத்தான், தாயைக் கொன்ன சேய் என்கிற தப்பான—பாவமான எண்ணத்தை அத்தான் மாற்றிக்கிட்டு, ராஜாமேலே ஒரு புதிய பாசத்தை வைக்கிறதுக்கும் ஒரு நல்ல, அயனுன சந்தர்ப்பம் கூடிவரும்; கைகூடியும் வரும்!" என்று குறிப்பிட்டாள்.

“அதுவும் சரிதான்,” என்ருள் அம்மா.

சுமதி நடந்தாள்; அக்கா தனக்குத் தாலி கொடுத்த மகாராஜனைத் தத்திக் குதித்த ஆனந்தப் பரவசத்தின் ஆரவாரத்துடன் அறிமுகம் செய்துவைத்த நிகழ்ச்சியும் அவளுடன் நடந்தது. “நான் சொல்லலீங்களா? — அந்தச் சுமதிக் குட்டி இந்த ராசாத்திதான்! சின்னக் குழந்தையிலிருந்தே படுசுட்டி; இப்போது சமைஞ்சதிலேயிருந்து வெகு அடக்கம்; எங்க சுமதி வாத்தியாரம்மா. மறந்திடாதீங்க, அத்தான்!” என்ற பெருமையின் பெருமிதத்துடன் சுமதிப் புராணம் படித்த சொற்களை அவள் மனம் பதிவு செய்து வைத்திருந்தது.

டக்—டக்—டக்!...

சுமதிக்கிச் ‘சுரீர்’ என்றது! கடிகாரம் மாதிரி இதயத்தின் இதயமும் அடித்துக் கொண்டது! தேடிய அத்தான், தனது ஆருயிர்ச் சுசீயின் அன்புச் சந்நிதானத்திலே அனல்பட்ட மெழுகாக உருகிக் கரைந்து கொண்டிருந்த காட்சியில் அவளும் அமிழ்ந்து அழுந்திப் போனுள்; வழிந்த விழி வெள்ளத்தை வடித்துவிடக்கூட சிந்தை இழந்தவளாக, அப்படியே உயிர்ச் சிலையாகி நின்று, மோகினிச்சிலையாக நிலைத்துவிட்டாள், தன்னுணர்வு பெற்றதும், சுந்தரின் முதுகுப்புறம் நகர்ந்து, எதிர்ப்புறம் திரும்பினுள். ஒளியாகி நின்ற அக்காவையும் ஒளியின் நிழலாக நிற்கும் அக்காளின் புருஷனையும் மாறி மாறிப் பார்வையிட்டாள். சொக்கட்டான் ஆட்டத்திலே மாற்றப்பட்ட சோழிகள் போல ஆகி நின்ற சகோதரியையும் சகோதரியின் கணவரையும் ஜோடி கலந்து பார்க்கப் பார்க்க, அவள் நெஞ்சம் வெடித்துச் சிதறி விடும்போலிருந்தது. படத்தின் அடியிலிருந்த ‘அந்தக் கடிதம்’ அவளுக்குப் புதிய ரத்ததானம் செய்திருக்க வேண்டும், “அத்தான்!” அழைத்தாள், அழைத்திடும் கடன் பூண்டவள்!

திரும்பினுன் சுந்தர். திரும்பும் உறவுக்கு அவன் உரிமை கொண்டவன்தானே? “நீ வந்து ரொம்ப நாழி ஆகுதா, சுமதி?” என்று சகஜமாகக் கேட்டான். வெய்யிலில் விழிகள் பளபளத்தன!

“இப்பத்தான் வந்தேனுங்க, அத்தான்!”

காப்பியைச் சுவைத்தான் அவன். “இப்பத்தான் உன்னை நினைச்சேன்; நீயே வந்திட்டே!” என்றான். “அதாவது, உன்னை அழைக்க வேணும்னு நினைச்சிருந்தேன்!” மறு திருத்தப்பேச்சில் இங்கிதம் தொனித்தது.

சுமதிக்கு ஏனோ பயம் கவ்வத் தொடங்கி விட்டது. காலி டபரா தம்ளரை ஏந்திக்கொண்டாள் ஏந்திழை. ‘என்னங்க அத்தான் விஷயம்?’ என்று நினைப்பூட்ட நினைத்த சமயத்தில், அம்மாவின் குரல் கேட்கவே, திரும்பிச்சென்றாள். போனசுவடு, வந்தசுவடு தெரியாமல் திரும்பி வந்தவள், சிரிக்கும் குழந்தையை அத்தானிடம் காண்பித்தாள்.

குழந்தையின் மோகனப் புன்னகை தந்தையைச் சொக்க வைத்ததில் வியப்பு இல்லை!...

“குழந்தையை நான் கொஞ்சநேரம் வச்சுக்கிறேன், சுமதி!”

“ஓ!” என்றாள் சுமதி. அவளுக்கு உண்டான அமைதிக்கும் அகமகிழ்வுக்கும் அளவில்லை.

கணங்கள் தவழ்ந்தன.

குழந்தைக்கு அப்பாவின் மடி சுகம் அளித்திருக்கும். அழவேண்டுமே? ஊகூம்!

“குழந்தைக்குத் தான் வந்து சேரவேண்டிய இடம் இதுதான் என்கிற துப்புத் தெரிஞ்சிடுச்சுது போல!—அது தான் கம்மென்று கிடக்குது. இல்லையா, சுமதி?”

“ஆமாங்க; வாஸ்தவம்தான்!”

"குழந்தை என்கிட்டே ஒட்டுறது நல்லதுதான்! சரிதானே, சுமதி?"

"பின்னே?"

"குழந்தைக்கு உன்னை இனம் தெரிஞ்சிருக்குமோ?"

"நான் என்னத்தைங்க கண்டேன்?"

"குழந்தைக்குத் தன்னைப் பெற்றவளைத் தேடி வராதோ?"

அவ்வளவுதான்! — "ஐயோ, அக்கா!" — விரிட்டாள் சுமதி.

அவ்வளவுதான்! — குழந்தையும் வீரிட்டது.

அவன், "சுமதி, குழந்தை உன்னை இனம் கண்டிடுச்சு! ஆமா, சுமதி, ஆமாம்!" என்று விம்மினான்.

"இனியும் நீங்க அழக்கூடாதுங்க, அத்தான்!"

"அழாமல், பின்னே நான் என்ன செய்வேன்?"

"ஐயையோ! அப்படியெல்லாம் மனசு ஒடிஞ்சு பேசாதீங்க; என்னாலே தாளவே முடியல்லீங்க!"

"என்னை மன்னிச்சிடு, சுமதி!"

"என்னென்னமோ பெரிய பெரிய வார்த்தையாய்ப் போட்டு இந்தச் சின்னப் பொண்ணுகிட்டே பேசுறீங்களே, அத்தான்?"

"என்னோட அன்புச் சுசீலா—அருமைச் சுசீலா—ஆருயிர்ச் சுசீலா எனக்குத் திரும்பக் கிடைச்சால்தான், என்னோட உயிர் உடம்பிலே நிலைக்கும், சுமதி!"

"சுசீலா அக்கா உங்களை விட்டுவிட்டு எங்கேயும் போயிடலீங்க, அத்தான்! அதோ, பாருங்க!—புன்னகையும்

புதுநிலவுமாய்—தேடிவந்த சீதேவியாய் காட்சி தந்துக்கிட்டு இருக்காளே உங்க சுசி? கண்ணைத் துடைச்சிட்டு, மனசை ஒருநிலைப்படுத்திக்கிணு நல்லாப் பாருங்களேன்; நல்லாய்ப் புரியுமே!''

சுந்தர் அவ்வாறே செய்தான்; ''உண்மைதான் சுமதிப் பெண்ணே!...என் சுசீ என்னைப் பிரிஞ்சு—என்னைப் பிரிச்சு எங்கேயும் போய்விட வில்லே! — வாஸ்தவம்தான், சுமதி, வாஸ்தவமேதான்!'' இளைய ராஜாவுக்கு முதல் முறையாக முத்தம் கொடுத்தான் சுந்தர். பின்பு, மைத்துனியை ஊடுருவியவாறு, ''சுமதி, நம்ப குமாருக்கு ஒரு தந்தி கொடுக்கிறியா, நான் கொடுத்ததாக!'' என்று கூறினான்.

சுமதிக்கு உயிர்க்குலையில் கல்லடி பட்டாற் போன்றிருந்தது. ''அக்காவோட சாவுக்கு ஏற்கனவே குமார் வந்தாச்சுங்களே?'' என்றாள்.

''அது தெரியும். நீதான் அப்போ தந்தி கொடுத்தியா?''

''நான் எங்கே ஸ்கூல் 'ஹெட்மிஸ்ட்ரசு'க்குதான் தந்தி கொடுத்தேன்; சேதியைக் கேள்விப்பட்டு குமார் வந்தார்!''

''நீ ஏன் மிஸ்டர் குமாருக்குத் தந்தி கொடுக்க வில்லே?''

சுமதி மௌனம் காத்தாள்.

''அது போகட்டும்; குமாரை உடனே புறப்பட்டு வரும்படி இப்போது நீ தந்தி சொல்லிட்டு வா, சுமதி!''

''ஐயோ, அத்தான்! என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறீங்க?... மிஸ்டர் குமாரை நான் மறந்து எத்தனையோ யுகங்கள் ஆகிடுச்சுங்களே, அத்தான்?''

பரபரப்பும் பதற்றமும் மேலோங்கிச் சுழித்திட, ''நீ என்ன சொல்கிறாய், சுமதி?'' என்று விஞச்சரம் தொடுத்தான் சுந்தர்—நெஞ்சைப் பற்றிக் கொண்டே!

''நான் உங்களுக்காக் காத்துத் தவம் கிடக்கும் சுமதி என்று சொல்கிறேன், அத்தான்!''

''சுமதி!...'' என்று ஓங்காரக் குரலெடுத்துக் கதறினன் சுந்தர்.

''ஆமாங்க, நான் சுமதிதான்...சுமதியேதான்! வெறும் சுமதி இல்லே!—நான் என் சுசீலா அக்காளின் தங்கை சுமதி!—என் ராஜாப்பயலின் தாய் சுமதி!—நான் இப்போது மிஸஸ் சுமதி சுந்தர்!''

சுந்தரின் கண்கள் மாலே தொடுத்தன.

ஆஹா!...

குழந்தை எவ்வளவு அழகாகவும் சாந்தியுடனும் சிரிக்கிறது!

விதிக்கு இவ்வளவு அழகாக—அமைதியாகச் சிரிக்கத் தெரியவில்லேயே?—தெரிவதில்லேயே?...

ஒன்பது

# தந்தி - ஒரு புதிர்

கணங்கள் பேய்க்கணங்களாக உருண்டு கொண்டிருக்கின்றன!

பொம்மலாட்டத்தில் சூத்திரக் கயிறு அறுந்ததும், பொம்மை திரிசங்கு சொர்க்கத்தில் நிலைதடுமாறிச் சுழல்வது இயல்பு. அந்த விதிக்கு ஆட்பட்டான் சுந்தர். வேர்வை முகத்தில் ஆறுகப் பெருகியது; கண்ணீர் கண்களில் வெள்ளமாக வழிந்தது; நெஞ்சத்து அலைகளின் ஆரவாரமும் ஆர்ப்பாட்டமும் கூடினவே தவிர, குறைந்தபாடில்லை. அதிசயத்தைத் தரிசிப்பதுபோல, அதிசயமாகச் சுமதியைப் பார்த்தான்; பார்வையிட்டான். சுமதியைப் பார்த்த பார்வையிலே, சுசீலா ஆடும் தீபம் ஆனுள்; சுடர்ச் சிதறல்களுக்கு நாயகியாக சுமதி நிழலாடினுள். சுசீலாவும் சுமதியும் இரண்டறக் கலந்தும், சுசீலாவில் சுமதியும் சுமதியில் சுசீலாவுமாக இரண்டறக் கலந்து சிரிக்கவும் தொடங்கிவிட்டனர். அந்தச் சிரிப்பு ஒருவேளை, விதிக்குச் சொந்தமாகப் பந்தம் கொண்டாடியிருக்கலாமோ?

குழந்தை சிணுங்கத் தொடங்கியது.

சுமதி குழந்தையைச் சுந்தரிடமிருந்து ஏந்திக் கொண்டாள். ஆகாரம் கொடுக்க அன்னையிடம் கொண்டு சென்றாள்.

சுந்தர் இப்போது நல்ல நினைவு எய்தினான். சுமதியைத் தேடினான்; அவளைக் காணாமல் பரபரப்படைந்தான்; பதட்டமும் அடைந்தான். சுமதி எங்கே?—''சுமதி...சுமதி!'' என்று பவ்யமான—பான்மைமிக்க குரல் எடுத்துக் கூப்பிட்டான். தவிப்பும் குழப்பமும் மிகுந்தன; தாபமும் தாகமும் மிஞ்சின; கண்களிலே கண்ணீர் மிச்சம் இல்லை. சுமதிதான் அப்படிப் பேசினாளா?—'ஆமாங்க, நான் சுமதி தான்...சுமதியேதான்! வெறும் சுமதி இல்லை!—நான் என் சுசீலா அக்காளின் தங்கை சுமதி!—என் ராஜாப்பயலின் தாய் சுமதி!—நான் இப்போது மிஸஸ் சுமதி சுந்தர்!...' சுமதியேதான் பேசியிருப்பாளோ?—ஓ! இருக்கும்! தன்னுடைய உயிர்க்கூட்டிலே பாசக் கயிறு வளைந்து சுருண்ட நேரத்தில் சுசீலா விதியின் தீர்ப்பை நிர்ணயித்த காட்சியை—தன்னை சுமதியின் அன்புக் கரங்களிலே ஒப்படைத்த அந்தக் காட்சியின் விதியை அவன் எப்போதுதான் மறந்தான்? அந்த ஒரு மனக்கனவில் அவன் உயிர்க் கழுவில் நின்று ஊசலாடிய வேளைகளுக்குக் கணக்கு ஏது? வழக்கு ஏது?

சுசீலாவின் படத்தினின்றும் ஜாதிமல்லிப்பூ ஒன்று சிதறி விழுகிறது!

'என்ன வாழ்க்கை இது?...வாழ்க்கை வாழ்வதற்காம்!—எங்கே வாழ்வது?...எப்படி வாழ்வது? ஏன் வாழ்வதாம்?'—சுந்தரின் மனம் உயிர்க்கழுவில் துடிக்கிறது!

குழந்தை பின் கட்டில் 'முகாரி' பாடுகிறது. 'கிரைப் மிக்சர்' அருந்த இத்தனை 'ஹாட்டி!'

அவனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. சுசீலாவின் ஆணைக்குச் சாட்சியமாகவும் விளங்கிய கடிதம், ஜன்னல் கம்பிகளின் வழியே கேள்வி முறையில்லாமல் உள்ளே நுழைந்த காற்றில் அல்லாடியது—அவன் உள்ளத்தைப்

போலே! என்னவோ ஒரு வேகம் அரித்தது; நடந்தான்; அக் கடிதத்தை 'விசுக்'கென்று எடுத்தான்; மீண்டான்.

சுசீலாவின் குறிப்புக் கடிதம் இப்படிப் பேசும்:

**''அன்பான அத்தான்!**

பிரசவம் என்கிற கண்டத்திலிருந்து தப்பிவிட்ட எனக்கு—தப்பிப் பிழைத்து விட்ட எனக்கு, என்னவோ சதாநேரமும் மரணப் பயம் தோன்றிக் கொண்டேயிருக்கின்றது. எனக்கு அசம்பாவிதம் ஏதானும் ஏற்படும் பட்சத்தில், குழந்தையைக் காப்பாற்றுவது உங்கள் பொறுப்புதான்! எந்தக் காரணத்தைக் கொண்டும் பிள்ளையை வெறுக்கவோ, உதாசீனம் படுத்தவோ கூடாது! உங்களுக்கு எனக்குப் பின் துணை ஒன்று வேண்டாமா?

**அருமை சுமதி!**

எனக்கு எதுவும் நேராது; நேரவும் வேண்டாம். என் ஆசை அத்தானையும் அன்பு மகனையும் நான் சோதிக்க மாட்டேன். ஆனால், ஒருவேளை, விதி என்னைச் சோதிக்க, எனக்கு 'ஏதாகிலும் ஆகிவிட்டால்' அப் போது நீதான் என் அத்தானுக்குத் துணையாக அமைய வேணும்; மறந்து விடக் கூடாது!—நீயேதான் என் அத்தானுக்கு—உன் அத்தானுக்கு இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட வேண்டும். அப்போதுதான் என் னுடைய செல்லப்பிள்ளைக்கு உண்மை மிகுந்த ஒரு உண்மை அம்மா கிடைத்ததாக அமையும்.

விதியின் எழுத்தைக் கிழிக்கிறேனா? இல்லை, கிழிக்கப் போகிறேனோ?

**ஆசிகள்.**

இங்ஙனம்,<br>
**சுசீலா சுந்தர்.'**

காலடியோசை கனிந்துவர, மெட்டியொலி இனித்து வந்தது.

மந்திரத்தால் கட்டுண்டவன் மாதிரி, சுந்தர் திசை மறுகித் திரும்பினான். 'ஓ, சுமதி!'

"அத்தான்!" என்று உரிமை காட்டி, உறவு கூட்டிக் கூப்பிட்டு வந்தவள், அவனை நெருங்கி, அவனுடைய கண்ணீரைப் புடவை முன்றானையால் துடைத்தாள். "ரொம்ப டைம் ஆயிடுச்சு; ராஜாக்கண்ணு தூங்கிட்டான்; வம்புக்காரப்பிள்ளைபோல. சரி, சரி. வாங்க, பல் விளக்கலாம். பல் விளக்கிட்டுக் குளிச்சிட்டுத்தான் டிபன் சாப்பிடணும்", என்று நிகழ்ச்சிக் குறிப்புக்களைக் குறித்தாள் சுமதி. பின்னல் ஜடையைப் பின்னுக்கு நெட்டித் தள்ளிவிட்டாள். ஒற்றைக்கல் மூக்குத்தியும் 'ஸெட்' தோடும் வெள்ளை வண்ணப் போட்டோ போட்டியில் மின்னின.

மகுடிக்கு நல்ல பாம்பு கட்டுப்பட்டு விடும்.

சுமதிக்குச் சுந்தர் கட்டுப்பட்டான்.

"இந்தாங்க திருநீறு," என்று விபூதிமடலை நீட்டினாள் அவள்.

"ஊஹூம், இன்னம் கொஞ்சம் அழுத்தமாய்ப் பூசிக்கிட்டா, என்னவாம்?" பிசிறு தட்டாமலே பூசிவிட்டாள் பூவை. முன் நெற்றியில் அடம் பிடித்து வம்பு பண்ணின வெள்ளி முடிகளின் ஜம்பம் அவளிடமா பலிக்கும்?—சுமதியா, இல்லே, கொக்கா?

அம்மா என்னவோ சொல்கிறாள்!

"அத்தான்!"

"ஊம்!"

"பேசுங்களேன், வாய் திறந்து!"

"என்னத்தை இனி நான் பேச? என் வாயைத்தான் அடைச்சிட்டியே நீ?"

"நோ...நோ! சும்மா என் மேலே பழி போடாதீங்க! இதோ, உங்க வாய் சீரங்கத்துச் சொர்க்க வாசல் கதவு

கணக்கிலே திறந்து கிடக்குதுங்களே, அத்தான்?'' என்று உரைத்து, அதற்கு நிரூபணமாக, திறந்திருந்த அவனது உலர்ந்த உதடுகளைத் தொட்டும் காட்டினாள் சின்னவள்.

தொட்டுணர்வு அவனை எங்கேயோ இட்டுச் சென்றது. சுமதியை விழுங்கி விடுகிற மாதிரி ஆழமாக உற்று நோக்கினான். கொஞ்சப் பொழுதாக நெஞ்சிலும் நினைவிலுமாக நிழலாடி, ஒளியாடத் தொடங்கியிருந்த சுமதியை—புதுமைச் சுமதியை—புரட்சிச் சுமதியைப் பார்த்தான்; பார்த்தான்; பார்த்துக் கொண்டேயிருந்தான்.

ஒரு பாட்டுப் போட்டால் என்னவாம்?

அவள் சிரிப்பே அவனைப் புதிராக்கியது; மயக்கியது. மயக்கியது சரி; மயங்கினாலும் சரியே! ஆனால், ஒன்று: அவள் சிரிப்பு அவனைப் புதிராக்கினால் என்னவாம்? புதிரை விடுவிக்கத் தெரியாதா சுமதிக்கு?

பாட்டு ஒன்று இட்டுக்கட்ட வேண்டும் அல்லவா?

பேசாத கண்கள் பேசவைக்கின்றன!

சிரிக்கும் உதடுகள் சிந்திக்கச் செய்கின்றன!

மதுமலர் அவள்!

மதிமலரும் அவளே!

பெண் எனில் புதிரா?

இல்லை, இல்லவே இல்லை!

அவள் அன்பின் உரு!

பாசத்திற்கு இலக்கணம்!

நேசத்திற்குக் கற்பகத்தரு!

...... ...... ...... ...... ......

பச்சை நரம்புகள் புடைத்தன.

“அத்தான், சாப்பிடுங்க இட்டிலியை. கத்திரிக்காய்க் கோசுமல்லி பிடிக்குமில்லையா? அம்மா தாளிச்சுக்கிட்டு இருக்காங்க. அக்கா மாதிரியே உப்பை அளவாய்ப் போடத் தெரியும் எனக்கும். ஆனு, ஒரு விஷயம்!”

“சொல்லேன், சுமதி!”

“நீங்க அளவோட மட்டும் சாப்பிட வேணும்!”

“அளவுக்கு மீறினல்?...”

“அமிர்தம் தேவாமிர்தம் ஆகிவிடும்!”

“ஓஹோ! உன் அக்கா ஒரு தக்கம் என்கையிலே தமாஷ் பண்ணின அந்தப் பேச்சையே இப்ப நீ என்கிட்டேத் திருப்பி விடுகிருயாக்கும்?”

வாயைப் பொத்திக் கொண்டாள்.

கப்சிப்!—

கள்ளச்சிரிப்பு கள்ளவிழிப் பார்வையிலே இன்னமும் அங்கீகாரம் பெற்றிருந்தது.

“இட்டிலி ஆறிடப்போகுதுங்க,” நினைவூட்டல் தொடர்ந்தது.

இட்டிலியைப் பிட்டு நுனிநாக்கில் வைத்தான் சுந்தர். பத்தியம் சாப்பிடுகிற பாவனையில் அவன் செய்கை இருந்தது.

வேடிக்கை காட்டியவனை வேடிக்கை பார்த்தாள் உரிமைக்காரி. “ம்...மூசுமூசுன்னு விழுங்குங்க...வேணும்... சாப்பிடுங்க!” என்ருள். ‘விழுங்குங்க’ என்று விழுந்த பதப் பிரயோகத்தில் விளைந்த ஆருத்துயர் கண்மூடிக் கண் திறப்பதற்குள் அவனை என்னமயாய்ப் படுத்திவிட்டது? ஒவ்வொரு துண்டாக எடுத்து, துகையலில் தொட்டு, அத்தான் வாயில் மெதுவாகவும் ‘நைஸாக’வும் போட்டாள்.

இட்டிலி இனித்தது.

கனுக் கண்டு விழிப்பதை ஒத்து, விழிகளை விரித்து வீசி, சுற்றுமுற்றும் திருஷ்டியை ஓட்டினுன் அவன். மறுபடியும் காணுமற் போய்விட்டவள், இப்போது சட்டினிக் கிண்ண மும் கையுமாக வந்துவிட்டதில் அவனுக்குக் கொள்ளையான குதூகலமே! மின்னுமல் முழங்காமல், இடிக்காமல் வெடிக் காமல், கோடை மழை பொழிகின்றதே?—'சுசீத் தெய்வமே, உனக்கு ஒரு விதி உண்டென்று தப்புக் கணக்குப் போட்டிருந்தேன்; ஆனு, நீயேதான் விதி என்கிற சத்திய நடப்பை இப்பத்தான் என்னுலே புரிஞ்சுக்கிட வாய்ச் சிருக்குது!...நீ தெய்வம் இல்லையா?—அதனுலேதான், நீ மீள வந்து—என்னை மீட்கவும் வந்து, சுமதி உருவிலே விளையாடவும் விளையாட்டுக் காட்டவும் தொடங்கியிருக் கிருயா, தாயே?...சுசீ!...மை டியர் சுசீலா!'

சட்டினியை ஊற்றினுள் சுமதி. வசம் கணித்துக் குனிந்து ஊற்றினுள். பச்சைக் கொத்தமல்லியும் கறிவேப் பிலைக் கொழுந்தும் 'கமகம'வென்று வாசித்தன; மணத்தை எழுத்துச் சேர்த்து வாசித்தனவோ?

பசி பொறுக்கமாட்டாமல் அவன் இட்டிலியையும் சட்டினியையும் கூட்டிப் பிசைந்து சாப்பிடலானுன்.

அவளுக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. எட்டத்தில் அம்மாவின் சன்னச் சிரிப்பும் பின்னமடையாமல் கேட்கவே செய்தது. பயலும் இந்நேரத்தில் சிரித்து வைத்தால், பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாக அக்காவும் சிரித்துக் கொள்வாள்!...

தம்ளர் நீண்டது.

"காப்பி ரெடியாகலையாக்கும்?"

"இட்டிலி சாப்பிட்டவங்களுக்குத் தண்ணீர் குடிக் காட்டி, விக்கல் வந்திடுங்க. நிதானமாய் தண்ணீரைக் குடிங்க, அத்தான்!"

இறந்த காலத்தின் சோகத்தோடு அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான்; நீர் குடிக்கும் பாவனையில், தேடிவந்த

பருவ எழிலையும் குடிக்கத்தான் எண்ணியிருந்தான்! வெய்துயிர்ப்பு மலைப் பாம்பென நெளிகிறது.

“நாளைக்கு நீங்க ட்யூட்டி பார்க்கப் போறீங்க!” என்று தெரியப்படுத்தினாள் சுமதி. அவள் பேசி வாய் மூடவில்லை. அச்சகப்பகுதியின் தலைவர் வந்து அவனை வேலைக்கு அழைத்த விவரம் அவளை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது; தாழ்வாய்ப் புறத்தில் துளிர்த்துத் தெறித்திருந்த காப்பித் துளிகளைத் துடைத்துவிட்டாள். “பேப்பர் படிச்சுக்கிட்டிருங்க, அத்தான். பேப்பரிலே அதிசயச் சேதிகள் நிரம்ப இருக்காக்கும்! சமுதாய நீதிக்கு ஒரு புதிய பாடம் கிடைச்சிருக்கிற நேரமாச்சுங்களே? எனக்குப் பசிக்குதுங்க! போகட்டுங்களா?” என்று விடை கோரினாள், செல்லக் குழைவுடன்.

“போயிட்டு வா,” என்றான் சுந்தர்.

கணநேரப் பிரிவுதான்!—என்றாலும் அப்பிரிவைக் கூடப் பொறுத்துக் கொள்ள மனம் இல்லாதவளாக, மறுகி மறுகி நின்றாள் சுமதி. பின்னர், காலடி எடுத்து வைத்தாள். “அத்தான், மிஸ்டர் குமாருக்குத் தஞ்சாவூருக்குத் தந்தி கொடுக்கச் சொன்னீங்க இல்லீங்களா?......இன்னிக்கே கொடுத்திடுறேனுங்க!” என்றாள். கணத்தில் அறிவித்து விட்டு, கணத்தில் மறைந்துவிட்டாள்! சுசீலா மாதிரி அந்தம் சேர்த்து, சந்தம் சேர்த்துச் சிரித்த அந்தச் சிரிப்பு மட்டும் மறையவில்லை!

‘சுமதி, உன் முடிவுதான் என்ன?’—சுந்தருக்கு இருப்புக் கொண்டால்தானே?...

பாவம்!...

பத்து

# ஊதுவத்திச் சாம்பல்

தெய்வநாயகி அம்மாள் பின்கட்டிலிருந்து நடைவழியாக அடுப்படிக்கு வந்து சேருவதற்கும், சுமதி இரண்டாம் கட்டிலிருந்து அடுப்புக்கூடம் வழியே நடையைத் தாண்டிப் புழக்கடைப் பக்கம் போவதற்கும் சரியாக இருந்தது.

சாம்பல் வண்ண நாட்டுக் கோழி ஒன்று, நீறுபூத்திருந்த அடுப்புச் சாம்பலை அலகால் கொத்திக் கிளறப்போக, அது சுட்டுத் தொலைக்கவே, 'கொய்' என்று கூவிக்கொண்டு சிறகடித்து ஓடியது.

சுமதியின் அன்னை கைகளில் ஒட்டியிருந்த 'ஒட்டடை'த் தூசுகளை ஊதி எட்டித் தள்ளினாள் நீள்மூச்சு நீளமாகவே வெளியேறிற்று. 'எல்லாத்தையும் பொசுக்குன்னு பொசுக்கிப் பிடத்தான் யோசிச்சேன். பின்னாலே, அப்படிச் செய்ய வேண்டாமே, அதுகளை ஒளிச்சு வச்சு ரகசியமாய் மறைச் சிட்டால் போதுமேன்னு தோணுச்சு!' பசி வயிற்றைக் கிள்ளியது. இனி பசிக்கக் கேட்பானேன்? மூத்த பெண்ணின் ஆணைப்பிரகாரம், இளைய பெண் தன் அத்தானுக்குப் புதிதான வாழ்வு தரப்போகிறாள் அல்லவா? பாவம்!—பசிக்

கட்டும், பசிக்கட்டும்! பாரதத்தின் சரித்திர லட்சணங்களுள் ஒன்ருக இந்தப் பசிப் பிரச்சினையையும் சேர்த்து, வருத்தத்துடன் குறிப்புத் தந்து எழுதவில்லையா நேருஜீ?

மகளை எதிர்பார்த்திருந்த தாய், "பலகாரம் சாப்பிடலாமா, சுமதி?" என்று பரிவு சூழக் கேட்டாள்.

"இன்னிக்கிணு ரொம்ப ரொம்பப் பசிக்குது, அம்மா!"— சுமதி 'அப்டெக்—வைடாலின்—எம்' சொட்டு மருந்துச் சீசாக்களை ஓர் ஓரமாக நகர்த்திஞள்.

"எனக்கும்தான்!" என்ருள் அன்னை.

இருமுனைகளிலும் அர்த்த புஷ்டியான புன்னகை முனைப் படைந்தது. என்னவோ ஒரு சிறு ஓசை. திரும்பிஞள்; குழந்தை புரண்டு படுக்க முயற்சி செய்தது புரிந்தது. ஆறுதல்.

தட்டுக்கள் 'கிறீச்'சிட்டன.

"கத்திரிக்காய்க் கோசுமல்லி நிஜமாகவே வாய்க்கு ரொம்ப ருசியாய் இருக்குது, அம்மா! அத்தான் சொன்னது நூற்றுக்கு நூறு சரிதான்!"

"அதுசரி; நீ என்ன கடைசிலே இப்படிச் செஞ்சிட்டே?"

"என்னம்மா செஞ்சேன்? மனசறிஞ்சு நான் தப்புத் தண்டா ஒண்ணும் செய்ய மாட்டேனே, அம்மா?"

"உன் தமக்கை உனக்கு இட்ட:கட்டளைக்குப் பணிஞ்சு, நீ உன் அத்தானுக்கு இரண்டாவது வாழ்வு தரப்போறே! இங்கிதமாகவும் சமர்த்தாகவும் நீ அந்தப் பெரிய காரியத்தைச் சாதிச்சிட்டே; சாதிச்சுக்கிட்டே! அந்த நிமிஷத்திலேயே குமார் பிரச்னை முடிஞ்சு போச்சு; பின்னே, எதுக்கு குமாருக்குத் தந்தி பேசுறதாய் நீயே வலிய ஞாபகப் படுத்திஞய், சுமதி?"

இரண்டு நிமிடம் சுமதி சிந்தனை வசப்படலாஞள். தர்க்கரீதியாய் அம்மா கேட்பது நியாயம்தான்! ஆனாலும்,

மனிதாபிமானத்தின் அடிப்படையிலே, தர்க்கரீதியான அந்த நியாயத்தையும் கடந்ததான நேர்மை, உலகியல் வாழ்க்கையில் இருக்கிறதே? குமாரை வரச் சொல்லித் தந்தி சொல்லும்படி அத்தான் உத்தரவு போடக்கண்டுதான் சிக்கல் பலூனைக ஊதி வெடித்து, ஒரு நல்ல முடிவு ஏற்பட்டது. குமார்—சுமதி காதல் சம்பந்தமாக, குமாரது மனப்போக்கைத் துருவி அறிந்துகொள்ள வேண்டுமென்பது அத்தானுடைய உள்நோக்கமாக இருந்திருக்கலாம். ஆனால், எல்லாம் முடிந்த பிற்பாடு, இப்போது சுமதி வலியப்போய்க் குமாருக்குத் தந்தி கொடுக்க விரும்புவது ஏன்? காரணம் இதுதான்: மாற்றி விதிக்கப்பட்ட விதியின் சூழலால், பழைய காதல் ஒப்பந்தம் மாற்றப்பட்டுத் தடைப்பட்டுவிட நேர்ந்த காரணத்தை விளக்கி மன்னிப்புக் கோரவேண்டு மென்பது சுமதியின் திரிகரண சுத்தியான—நேர்மை மிக்க ஆசையாகும். ஒருவரிக் கடிதம் எழுதி, வெறும் இருபத் தைந்து காசுச் செலவுடன் பிரச்னையை முடிவுகட்டிவிடுவ தென்பது நாகரிகமாகாதே?

சுமதி எடுத்துக் காட்டினாள்.

"ஓஹோ! அப்படியா?" என்று சொல்லி, தம்ளரை எடுத்து வாய்வைத்துத் தண்ணீரைக் குடிக்கலானாள் அம்மா.

தான் எடுத்துச் சொன்ன காரணங்களை அம்மா ஆமோதித்தாளா அல்லது நிராகரித்தாளா என்பதைச் சுமதியால் புரிந்து கொள்ள முடியவில்லை. தண்ணீரை வாயில் ஊற்றிக்கொண்டு, எச்சில் பிளேட்டும் கையுமாக எழுந்தாள். தானும் குமாரும் சந்தித்ததையும் காதலித்த தையும் மனம் உறவாடிப் பழகி முடிவாகத் திருமணம் செய்து கொள்ளவேண்டுமென்ற முடிவிற்கு வந்ததையும் பின்னர் இந்த விஷயத்தைச் சுசீலாவிடம் சமயம் பார்த்துச்சந்தர்ப்பம் கணித்து ஓர் அந்திப் பொழுதில் தயங்கியும் பயந்தும் தெரியப்படுத்தியதையும், அதற்குச் சுசீலா தன்னுடைய முடிவை விரைவாகத் தெரியப்படுத்துவதாகத் தெரிவித்த தையும், இறுதியில் சுசீலாவின் தீர்ப்பு வேறுவிதமாக அமைய

நேர்ந்ததையும் அவள் மனம் உள்வட்டமாக நினைத்து நினைத்து அசைபோடத் தவறவில்லை. எண்ணங்களிலே மனோரஞ்சிதம் இன்னமும் மணக்கின்றதுதான்! பண்பின் வடிவமைந்த குமாரின் நினைவுமுகம் நெஞ்சிலே அழகுகூட்டி, அழகு காட்டிக் கொண்டுதான் இருக்கின்றது!—பழங் கணக்குப் பார்த்தது போதும், போதும்! முகத்தைத் துடைத்துக் கொண்டே எழுந்தாள். பெருமூச்சும் எழுந்தது. அத்தான் சல்லாபமாகச் சாய்ந்து கிடந்த கோலத்தைக் கண்டவள், குழந்தையின் அயர்ந்த உறக்கத்தையும் எடை போட்டாள்—நடந்தாள்—அவள் சுமதி...!

மணி பதினொன்று நாற்பத்தைந்து.

பக்கத்து வீட்டிலிருந்து 'ட்ரான்ஸிஸ்டர்' அலறிய சத்தம் வழக்கம்போல அவளுக்கு எரிச்சல் ஊட்டியது. இங்கேகூட ஒன்று உண்டு. அத்தானிடம் கேட்க வேண்டும். 'துட்டு' எடுத்துக்கொண்டு வெளி வாசலுக்கு வந்ததும், வெளி உலகம் புதிய காற்றை வாரி வீசிக் கொண்டிருப்பதை உணர்ந்து, அவ்வுணர்வில் ஒரு சுகம்—தியாகம் மேலோடிய சுகம் ஊடாடிய உண்மையை அனுபவித்தவளாகவே, மண்ணடி அஞ்சல் நிலையத்தைக் குறி வைத்து நடந்தாள். குமாருக்குத் தந்தி அனுப்பவேண்டும்!

மண்ணடிச் சந்தடி அலாதி.

சில்லறை நாணயங்கள் நாணயமாகவே உள்ளங்கைக் குள்ளே அடங்கி முடங்கிக் கிடக்கின்றன; புத்தம் புதிய உலகம் ஒன்றில் கால்பாவி நடக்க ஆரம்பித்திருப்பதாகவே சுமதிக்குப் பட்டது. பட்டமரம் தளிர்ந்தாற்போன்ற அதிசயம் ஆறுதலாகத் தோன்றியது. உடன்பிறந்தாளின் கடைசி ஆசைக்கு—இறுதி ஆணைக்கு ஓர் ஆதரிச வடிவம் அத்தான் மூலம் புயல் வீசாமல், எரிமலை வெடிக்காமல். பூகம்பம் ஏற்படாமல், லகுவில் கிடைக்க நேர்ந்த அதிர்ஷ்டம் கூட விதியின் விளையாட்டாகத்தான் இருக்குமோ என்றும்

அவள் எண்ணத் துணிந்தாள். மரணத் தருவாயில் சுசீ இட்ட அன்பின் கட்டளையைப் பற்றி அத்தானே என்ருவ தொரு நாளில் பிரஸ்தாபிக்க மாட்டாரா என்பதாகத் தான் அவள் கனவு கண்டாள். ஆனால், அவன்தான் வாய் மூடி மௌனி ஆகிவிட்டானே? ஆகவே, அதுபற்றித் தானே தான் அத்தானிடம் பேச்செடுக்க வேண்டுமென்று திட்ட மிட்டாள், அந்தப் பேச்சை எப்படி ஆரம்பிப்பது, எவ்வாறு கொண்டு செலுத்துவது என்பதெல்லாம் குழப்பமாகவே இருந்தது. எல்லாம் நடந்தாலும், அத்தான் என்ன முடிவு சொல்லுவார் என்ற விஷயம் புதிராகவே கண் பொத்தி ஆடிக் கொண்டிருந்தது. பயம் கலந்த கலவரத்தோடு அவள் கழித்த நாட்கள் எத்தனையோ? ஆஹா!—அத்தான் ஒரு நல்ல முடிவுக்கு வந்து விட்டார்! பிரச்சினை வெகு சுலபமாக முடிந்தது!...

வெறி நாய் ஒன்று நலியாமல் அவளைப் பின் தொடர்ந்து கடிக்க எத்தனித்தது.

சத்தம் கேட்டதோ, இல்லையோ, "ஆ!" என்று சத்தம் போட்டாள் சுமதி.

அக்கம் பக்கத்தில் சிரிப்பொலி.

நாய் சேலை முன்றானையைக் கவ்வத் தாவியது.

அவள் கொத்தாய் மணலை அள்ளி நாயின் கண்களை வசம் கணித்துத் தூவி வீசினுள்.

நாய் ஓடியது.

சிரித்த அநாகரிகப் பிராணிகளை ஆத்திரம் தூள் பறக்க முறைத்துப் பார்த்துவிட்டு அவள் மடங்கினுள்; பகுத்தறி வற்ற நாய்க்கும் பகுத்தறிவு உள்ளதாகப் பெருமையடித்துக் கொள்ளும் மனிதர்களுக்கும் அதிகம் வித்தியாசம் இருப்பதாக அவளால் தீர்மானிக்க முடியவில்லை. 'மிஸ்டர் குமாருக்குத் தந்தி சாயங்காலம் கிடைச்சிடும். அத்தான் அனுப்பினதாகக் கொடுத்த தந்தியைக் கண்டடியும், என்ன

நினைப்பாரோ?' பல்வேறு தருணங்களில் நெருஞ்சிமுள்ளாகத் தைத்துக் கொண்டிருந்த சந்தேகம் ஒன்று இப்போது விசுவரூபம் எடுத்தது. 'கேதத்துக்கு—சாவுக்கு வந்த குமார் ஏன் எனக்கு ஒரு தபால்கூட எழுதவில்லை? கதை திசைமாறி விட்ட கதைதான் அவருக்கு தெரியாதே? ஒருவேளை, அவர் கடிதம் போட்டு, அது என் கைக்குக் கிடைக்காமல், கைமாறிப் போயிருக்குமோ? எப்படியாவது போகட்டும்; நான்தான் வைராக்கியமாக அவருக்கு லெட்டரே போடாமல் இருந்திட்டேனே!...'

வீடு.

உள்ளே அமைதி நூதனமாக இருந்தது.

குழவி அழவில்லை.

அம்மா கணக்கவில்லை.

அத்தான் இருமக் காணோம்.

சுமதி முகப்பு நிலைப்படியில் கால் பதித்தாள்; கருவண்டுக் கண்கள் சுந்தரை மொய்க்கத் தொடங்கிவிட்டன—உரிமையுடன்.

"வந்திட்டியா, சுமதி?"

ஆவலாக வரவேற்புச் சொன்னவன் சுந்தர்.

"குமாருக்குத் தந்தி கொடுத்திட்டு வந்திட்டேனுங்க," என்றாள் கன்னி இளமான்.

அவன் முகம் ஏன் அப்படிக் குழப்பத்தால் மாறத் தலைப்படுகிறது?

மாறுதலுக்குரிய தத்துவரீதியான காரணத்தை அவளால் ஓரளவுக்கு ஊகம் செய்து கொள்ள முடியும் போலிருந்தது. எதையும் ஆறப்போட்டு வைக்க மாட்டார் அத்தான்; சூட்டோடு சூடாகக் கேட்டு விடுவார்.

"அப்படி உட்காரேன், சுமதி," என்று கூடை நாற்காலியைச் சுட்டிக் காட்டினான் அவன். சுசீக்கு அதில்

உட்காருவதென்றால் ஒரு நிம்மதி கிடைத்து வந்ததே? வாயும் வயிறுமாக ஆனதற்கப்புறம்தான் அவளுக்கு இந்தக் கட்டில் சதம் ஆயிற்று.

கால் விரல்களில் பின்னியிருந்த 'ஷீபான்' கரையை விலக்கி விடுவித்துக் கொண்டபடி, "கொஞ்ச நேரம் ரெஸ்ட எடுத்துக்கிடுறதுதானே? அதற்குள் மத்தியானச் சாப்பாடு ரெடி ஆயிடும். முட்டை வாங்கி வந்தேன். ஆம்லெட் போடுகிறேன்; வெங்காயம் கம்மி பண்ணணும்; தெரியும்!" என்றாள் சுமதி.

தேவதையைத் தரிசிக்கும் மனச் சிலிர்ப்பில் அவன் கட்டுண்டிருந்தான். நல்லபெண்! அசல் சுசீதான்! கேள்வி கேட்கவோ, கருத்தை அறியவோ வேலை இருக்காது; அவளே முடிவை அறிவித்துவிடுவாள்!—சுசீலாவின் தங்கச்சிதானே?

"அத்தான், ட்ரான்ஸிஸ்டர் எங்கே வச்சிருக்கீங்க?"

"நான் வைக்கல்லே'—சுசீதான் வச்சிருந்தாள். எங்கே போய் அவள் கிட்டே கேட்க முடியும்?"

சுமதியின் கவர்ச்சி கனிந்த கனி இதழ்கள் உணர்வுகளின் சங்கமத்தில் விளைந்த கொந்தளிப்பில் துடிக்கின்றன. அத்தானின் முகத்தில் சோகத்தின் சலனம் எதுவும் காணப் படவில்லை. அவளுக்கு வியப்புத்தான்!

"ஒருவேளை சின்ன 'கப்போர்டி'லே பத்திரப்படுத்தி வச்சிருப்பாள்; சாவிக் கொத்து படத்துக்குப்பக்கமாயிருக்கிற ஆணியிலே மாட்டியிருக்கும்," என்றான் சுந்தர். "சுமதி, ட்ரான்ஸிஸ்டர்னு உனக்கு அத்தனை ஈடுபாடா?"

அவள் பதிலிறுத்தாள்; "அப்படியெல்லாம் ஒண்ணுமே கிடையாது; உங்களுக்கு ஒரு 'சேஞ்ச்' வேணும்; அதுக்காகத் தானுங்க, அத்தான்!"

"ஓஹோ!" என்றான் சுமதியின் அத்தான். "அதுசரி, சுமதி; உன்னோடு சம்பந்தப்பட்ட குமார் விஷயமாகப் பேசத்தான் அவரை உடனே புறப்பட்டு வரும்படி தந்தி

கொடுக்கச் சொன்னேன்; அந்தச் சங்கதியைத்தான் நீயே கொஞ்ச முந்தி 'செட்டில்' செஞ்சிட்டியே?—பின்னே நீயே முந்திக் கொண்டு இப்போ எதற்கு அவருக்குத் தஞ்சா ஆருக்குத் தந்தி அடிக்கவேணும் என்கிற காரணம்தான் எனக்கு விளங்காமல் இருக்குது, சுமதி!'' தொடர்ந்தான் சுந்தர்.

சுமதி நெற்றியைத் தடவினாள்: "நானே விவரத்தைச் சொல்லியிருக்கணும்; உங்க சந்தேகம் அல்லது கேள்வி நியாயமானது; என் சம்பந்தப்பட்ட மிஸ்டர் குமார் விஷயத்தை நானே ஒரு முடிவுக்குக் கொண்டாந்திட்டேன்; வாஸ்தவம்தான். ஆனாலும், என்னோட இந்த முடிவை அவர் கையிலேயும் தெரியப்படுத்திவிட வேண்டியதுதானுங்களே தரும நியாயம், அத்தான்! அதற்காகத்தான், நானே முந்திக்கினு, வலிய தந்தியைக் கொடுத்திட்டுத் திரும்பினேன்!'' என்று காரண காரியத்தை விரிவாக எடுத்துக் காட்டினாள்.

'ஊம்' கொட்டினான் சுந்தர்; பெருமூச்சையும் கொட்டினான்.

"ஆல்ரைட்! நீங்க கொஞ்ச நேரம் ஓய்வு கொள்ளுங்க, அத்தான். மனசை நிம்மதியோடே ஒருநிலைப்படுத்திக்கிட்டு உறங்க முயற்சி செஞ்சால்தான் உங்க உடம்பு ஆரோக்கியத்தோடு தேறிவர முடியுமாக்கும்!''

சுமதியை உருக்கம் மேலிட ஊடுருவினான் சுந்தர். "நீ லகுவாக எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்திட்டே; ஆனால், அதெல்லாம் என் வரை அத்தனை சுலுவா, என்ன? சுமதி, தஞ்சாவூரிலே உனக்கும் மிஸ்டர் குமாருக்கும் இடையிலே இருந்து வந்த காதற்பிணைப்புக்கு உன்னோட அன்புத் தெய்வம் சுசீ மூலம் அனுமதியும் அங்கீகாரமும் பெறணும்னு ஆவலோடும் ஆசையோடும் நீ அன்றைக்குப் புதுக்கோட்டையிலே நினைச்சுக்கிட்டு இருந்திருப்பாய்; ஆனால், சுசீ தன்னோட கடைசி ஆசையாய் ஒரு புது ஆணையை

விதியாக உன்கிட்டே ஒப்படைச்சிட்டுக் கண்ணை மூடிக்கிட்டா! என் கண்ணையும் கட்டிக் காட்டிலே விட்டுட்டுப் போயிட்டா என் சுசீ—என்னுேட அருமைச் சுசீ தெய்வம்!... உங்க ரெண்டு பேருடைய காதற் கனவுக்குக் குறுக்கே விதி என்னை அரங்கேற்றிவிட்டதே என்பதை நினைச்சு நினைச்சுத் தான் என் மனசு மறுகி மறுகித் தவியாய்த் தவிச்சிட்டு இருக்குது!...தயவு பண்ணி என்னை நீ மன்னிச்சிட மாட்டியா, சுமதி?'' இமை 'விளிம்புகளிலே முத்துச் சரம் ஊசலாடியது.

சுமதி பேச வாயெடுத்தாள்; தொண்டையை அடைத்தது; இருமலின் பிசிறு சிதறிவிட்டது. ''அத்தான், நான் சின்னப்பெண்; உங்ககிட்டே பாடம் கற்றுக்கிடக் காத்துக்கிணு இருக்கிற சின்னஞ்சிறுசு நான்! இந்த ஒரு சத்தியத்தை மட்டிலும் நீங்க எப்போதுமே மறந்திடப் படாதுங்க. எனக்கும் குமாருக்கும் நடுவிலே இருந்து வந்த காதல் விஷயம் சுசீலா அக்காவுக்கு நல்லாய்த் தெரியும். ஆனாலும், அதைப்பற்றிய தன் முடிவை அன்றுவரை அக்கா என்கிட்டே எதுவும் சொல்லவே இல்லை! அக்காளுடைய தீர்ப்பைக் கேட்டுத் தெரிஞ்சுக்கிட நான் துடிச்சுக்கிட்டு இருந்ததும் பொய்யில்லைதான்! இப்படிப்பட்ட இரண்டுங்கெட்ட நிலையிலே, விதி என் அக்காவைச் சோதிச்சுது, இருந்திருந்தாற்போலே!...அக்காளோட ஒரு அன்பு ஆணைக்கு—அதிகாரபூர்வமான ஒரு உத்தரவுக்குக் காத்துத் தவம் கிடந்த என்னிடம் என் தெய்வச் சகோதரி தன்னுடைய ஆணையை—ஆசையைக் கடைசி முத்திரையாக என் வசம் ஒப்படைத்துவிட்டு, விடை வாங்கிக் கொண்டு போய்விட்டாள்!...அந்த ஆணையேதான் எனக்குச் சகலமும், அத்தான்!'' நெஞ்சுணர்ந்த அமைதியான புன்னகை அவள் இதழ்க் கடையில் ஊர்ந்து தெளிந்தது.

''தெய்வமே, சுசீலா!'' கண்ணீர் சுரந்தது. ''ராஜாப் பயல் கெட்டிக்காரனுக ஆகிட்டான்போலிருக்கே; தானும் தொல்லை கொடுப்பது தவறு அப்படியென்று நினைச்சுச் சமர்த்தாகத் தூங்கிக்கிட்டிருக்கானே?'' என்றான் சுந்தர்.

“ராஜா கெட்டிதான்; ஆனால், இப்போது அவன் பாட்டி கையிலே என்னமோ ரகசியம் பேசிக்கிட்டு இருக்கான்!...அத்தான், ராஜாவோட அன்புத் தொல்லை தானே என்னுடைய வாழ்க்கை; அதுதானே எனக்கு வாழ்க்கை!...மனசை வீணாய் அலட்டிக்கப்படாதுங்க!...” படத்தின் கீழிருந்த ஊதுவத்திச் சாம்பல்களைத் தட்டிவிட்டுத் திரும்பினாள் சுமதி.

“சுமதி, சுமதி! உன் தங்கக் கையை இப்படிக் கொடேன்,” என்று வேண்டினான் சுந்தர்.

அவள் காரணம் புரியாமல், வெட்கம் சூழ்ந்திட, கையை அத்தான் வசம் நீட்டினாள்.

அந்தக் கையை ஆதரவுடன் பற்றிய சுந்தர், ஊதுவத்திச் சாம்பல் படிந்திருந்த விரலை எடுத்துத் தன் நெற்றிமேட்டில் தேய்த்துக்கொண்டான்; ரோமங்கள் குத்திட்டு நின்றன. சுசீலா தன் கட்டளையைத் தன் கைப்பட எழுதி வைத்திருந்த கடிதத்தை படத்தடியிலிருந்து எடுத்து வந்து காண்பித்தான்!

சுமதி சிலிர்த்தாள். “அ...த்தா...ன்! இன்னொரு முக்கியமான சமாசாரம். நம் கல்யாணத்துக்குப் பங்குனி எடுப்பிலேயே ஒரு சுபமுகூர்த்த நாளைக் குறிச்சித் தரும்படி அடுத்த தெரு ஜோஸ்யர் ஐயாகிட்டே விவரம் சொல்லி யிருக்கேன்,” என்று செய்தி அறிவித்தாள்.

“உன் இஷ்டம்போலச் செய், சுமதி!”

சுமதி மெய்ம்மறந்தவளாக, “ரொம்ப நன்றிங்க அத்தான்!” என்றாள்.

பதினொன்று

# அந்தக் கடிதம்!

ஞாயிற்றுக்கிழமை!

சுந்தருக்கு விடுமுறை. இயந்திரத்திற்கு ஓய்வு; அவனுக்கும் கிடைத்தது. எட்டுமணிநேர அலுவல் என்பது வேடிக்கையான இந்த மனத்துக்கு மாத்திரம் விலக்கு விதியோ? ஐந்து தினங்களாகத்தான் அவன் அச்சகத்திற்குப் போய் வருகிறுன். மாறுதலானதொரு சூழ்நிலை அமைந்தால், கொஞ்சத்துக்குக் கொஞ்சம் மனம் துன்பத்தின் தடத்தைவிட்டுப் புது வழியில் திரும்பி ஓரளவு அமைதி யடைய நேரிடலாமென்று சுமதி சொன்னதன் பேரிலேயே இவ்வேற்பாடு. மினர்வா தியேட்டர்பக்கம் அச்சகம்; நடந்தே போய்த் திரும்பிவிடலாம். முதலாளி உமாமகேஸ்வரன் இதயபூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்த பான்மை அவனுக்கு ஆறுதலாகவே இருந்தது. எல்லாம் ஒரு தற்காலிகமான விளைவு என்பதும் அவனுக்குப் புரியாமல் இல்லை. சுசீலா தன் கதையை முடித்துக் கொண்டு போய் விட்ட போதிலும், அவனுடைய கதையை அவள் தொடர் கதையாக ஆக்கிவிட்டிருக்கும் அதிசயத்துக்கு என்ன பெயர் என்பதுதான் புரியாத புதிராக இருந்தது. தவிர்க்க முடியாததும் தப்பிக்க முடியாததுமாக உருவாகிவிட்ட இச் சூழலுக்குப் பேர்தான் விதியா?...

இளம் வெய்யிலும் இளங்காற்றும் இணைந்தும்பிணைந்தும் 'சரசசல்லாபம்' செய்து கொண்டிருந்த ஆனந்த வேளை அது.

"அத்தான், டிஃபன் ரெடி!"

மகாலட்சுமி மாதிரி தோன்றினாள் சுமதி. மஞ்சளும் மருக்கொழுந்தும் பொலிந்தன. குழற்கற்றையில் ஈரம் சொட்டியது. மனிதாபிமானத்தின் ஈரம்தான் அவ்வாறு தளும்பி வழிகிறது போலும்!

சுந்தருக்குத் தெரியும்!—எட்டுமணி என்றால், காலைப பலகாரம் வந்துவிடும். அப்புறம், கொஞ்சநாழி ராஜாவை எடுத்து வைத்துக்கொண்டு—அதாவது, சுசீலா பிறப்பித்த ஆணையின் படியும், இப்போது, சுசீயின் தங்கை சுமதியின் அன்பான வேண்டுகோளின் பிரகாரமும், ராஜாவை அலுங்காமல் குலுங்காமல் மடியில் கிடத்தி,அவன் புன்னகை புரியும் தேவதரிசனத்திற்கு வட்டியும் முதலுமாக முத்தங்களை வாரி வழங்க வேண்டும்; சுசீலா தன்னைப் பற்றின அமர நினைவுக்கு உயிர்ப்புள்ள முத்திரையாகப் பெண் குழந்தையைப் பெற்றுத் தந்திருந்தால், இப்போது எவ்வளவோ ஆறுதலாக இருந்திருக்குமேயென்று தவிப்பது; பின், சிறுபொழுது ஓய்வு அல்லது படித்தல்; தேவைப் பட்டால், 'ட்ரான்ஸிஸ்டர்! வந்து சேரும்; அப்பால், மதிய உணவு; அது முடிந்து, கோழித் தூக்கம்; காப்பி; இரவுச் சாப்பாடு; வெளிக்கூடத்தில் காற்றோட்டமாகத் தனியான உறக்கம்!—லீவு நாள் என்றால், சுமதியின் கண்டிப்பு இவ்வாறு அமையுமென்று எச்சரிகை செய்திருந்தாளே!

"சாப்பிடுங்க; உங்களுக்குப் பிடிச்ச ஆப்பம்; தேங்காய்ப் பாலை அளவாய் ஊத்திக்கணும், அதிலே போட்டிருக்கிற சர்க்கரை போதும்", என்று கூறி, தேங்காய்ப்பாலை அளவுடன் ஊற்றினாள் சுமதி.

அப்பத்தைச் சுவைத்து உண்டான் சுந்தர்; 'நப்பு'க் கொட்டினான். "சுசீ சுடுற ஆப்பத்தைப் பார்க்கிலும் இது ரொம்ப ரொம்ப 'நைஸ்'!" என்றான்.

''அதெப்படிங்க, அத்தான்? இதெல்லாம் சுசீ கத்துத் தந்த பாடம்தானுங்களே?''

''ஓஹோ! அப்படியா' அப்படியானல், சரி!''

இருதரப்பிலிருந்தும் பொருள் பொதிந்த முறுவல் நயமாகவும் விநயமாகவும் பரிவர்த்தனை ஆயின.

காப்பி அருந்துகையில், ''குமாருக்குத் தந்தி கொடுத்து வாரம்ஒண்ணு ஆகப்போகுது;விவரத்துக்கு ஒரு கார்டாச்சும் போடமாட்டாரோ? நம்மோட முடிவு அவருக்குத் தெரிஞ்சிருக்க வழி இருந்தாலாவது, ஏமாற்றத்தின் ஆத்திரத்திலே பதில் போடாமலோ அல்லது புறப்பட்டு வராமலோ இருக்கலாம்னு நாம் நினைக்கிறதுக்கு முகாந்தரம் உண்டு. ஆமா, இதுவரை உனக்குக்கூட குமார் லெட்டர் போடவில்லைதானே?'' என்று வினவினன் அவன்.

''நான் போட்டிருந்தால், அவர் கட்டாயம் பதில் போட்டிருப்பார். என்கிட்டேயிருந்து ஆவலோடு லெட்டரை எதிர்பார்த்து ஏங்கிப்போயிருப்பார். இனிமேல் அவருக்கு நான் ஏன் கடிதம் எழுதவேணும்?'' பேச்சில் இழைபின்னி யிருந்த நிர்த்தாட்சண்யம் குரலிலும் முறுக்கேறியிருந்தது. குமாரிடமிருந்து அவளுக்குக் கடிதம் ஏதும் வரவில்லை யென்று அன்னை சொல்லி விட்டாள்!— ''ஒண்ணு தோணு துங்க!'' என்று பேச்சுக்கு 'சஸ்பென்ஸ்' வைத்தாள் சுமதி. ''தஞ்சாவூரிலே பள்ளி அக்ரகாரத்திலே குமார் டீச்சருக்கு ஒரு சாமியார் சிநேகிதர் உண்டு; சித்த வைத்தியத்திலே பழம் தின்று கொட்டை போட்டவராம். அந்தக் கொட்டையிலேருந்து மாம்பழம் உண்டாக்கவும் செய் வாராம்; ஹிப்னடிஸம்; மந்திர தந்திரம்கூட அத்துபடியாம்! என்னவோ, அந்தச் சாமியார்கிட்ட இவருக்கு ஒரு ஈடுபாடு; மாதத்திலே பாதிராத்திரி ஆசிரமத்திலேதான் கழிப்பாராம்! என்னைக்கூட ரெண்டொரு வாட்டி அங்கே கூப்பிட்டார் குமார். ஆண்களுக்கு அந்த மாதிரியான அதீதமான சித்து விளையாட்டு எப்போதாகிலும் கைகொடுத்தாலும் கை

கொடுக்கும்; பெண்ணுகப் பிறந்துவிட்ட எனக்கு அந்த வம்பெல்லாம் என்னதுக்கு?—மறுத்திட்டேன்! நானும் இல்லையல்லவா?—'சாமியே சரணம்' என்று அடங்கியும் ஒடுங்கியும் போயிருக்கலாம்!''

சாமியாரைக் குறித்துச் சுமதி குறிப்பிட்ட பேச்சைக் கேட்ட மாத்திரத்தில், சுந்தரின் உள் நெஞ்சில் பயம் குறுகுறுத்தது; இப்படிப்பட்ட வேண்டாத பழக்க வழக்க கங்களில் குமார் வீணுக ஏன் மனசை அலையவிட வேண்டுமோ?—எது எப்படி இருந்தாலும், குமார் மீது சுந்தருக்கு ஓர் உயர்ந்த மதிப்பு என்றுமே உண்டு. முதற் சந்திப்பிலேயே குமார் தன் அன்பைக் கவர்ந்து விட்ட உண்மையையும் அவன் மறப்பதற்கில்லை! அவன் புறப்பட்டு வந்துவிட்டால், அவனிடம் அவன் சந்தித்தாக வேண்டிய எதிர்பாராத ஏமாற்றம் பற்றி எப்படி சொல்வதாம்? கண்ணு மூச்சி விளையாட்டு மறுபடி ஆரம்பமாகி விடுமோ, என்னவோ? முருகா!...ஆறுமுகப் பெருமானே!...

குழந்தை 'வீல்' என்று கத்துகிறது.

சுமதி விழுந்தடித்துக் கொண்டு ஓடினுள்.

காய்கறிப் பையுடன் தெய்வநாயகியும் திரும்பினுள்.

பயம் உடும்பாக நெஞ்சைக் கவ்வ, பின் கூடத்துக்கு விரைந்தான் ராஜாவின் தந்தை; மகன் சித்தியின் அரவணைப்பில் அடங்கிவிட்ட பழகிப்போன அதிசயத்தை இப்பொழுதும் வியந்து திரும்பினுன். முன்னறிவிப்பு எதுவு மின்றிப் புயல் அடிக்கிறது; தென்றலும் வீசுகிறது. இருந் தாலும், புயலின்போது ஏற்படும் அதிர்ச்சி, தென்றல் கட்டத்திலும் மாறுவதில்லைதான். சே! வாழ்க்கையில் இப்படி யொரு ஜீவமரணப் போராட்டமா? குழந்தையின் எதிர் காலத்தை பற்றிச் சிந்தித்தான் சுந்தர். அங்கே சுசீலாவும் சுமதியும் ரங்கராட்டினம் சுற்றிக் கொண்டிருந்தனர். கண் மணியின் கொள்ளைச் சிரிப்பை இந்நேரம் சுசீ கண்டால் உள்ளம் கொள்ளை போயிருப்பாள்!—ஆனுல், இப்போது.....

இப்போது அவளே கொள்ளை போய் விட்டாளே? வடுவில் கூட சீழ் வடியுமா, என்ன?

வைதேகி காத்திருந்த கதையுடன் சுமதி தோன்றினாள். பாட்டு அவளை நெகிழச் செய்திருக்கும். அதனால்தான், மூத்திரம் பெய்த டவல் தோளில் துலங்கிட, வந்துவிட்டாள் 'ட்ரான்ஸிஸ்டரு'டன்!

சுமதியை நினைக்க நினைக்க, அவனுக்கு அதிசயமும் ஆச்சரியமும் பொழுதுக்குப் பொழுது வளர்ந்து கொண்டிருக்கின்றன!—'இத்தனை லகுவிலே தன்னை மாற்றிக்கிட இந்தச் சுமதிப் பெண்ணால் எப்படி முடிஞ்சுது?' கண்கள் பொடித்தன; உதடுகள் துடித்தன.

"அத்தான்!" என்று கலவரம் சூழ அழைத்தாள் சுமதி. "அக்காவை நினைச்சுக்கிட்டீங்களா?" விசாரிப்பு நடத்தினாள்.

"உன்னை நினைச்சுக்கிட்டேன்!"

பூஞ்சிட்டு, சிட்டாய் பறந்தது.

மறுமுறை ஒரு தனிமை; சூன்யத் தனிமை. தலையணையை வசம் பார்த்துப் போட்டுக் கொண்டு, கட்டிலில் சாய்ந்தான் அவன். சாசுவதமான புன்னகைக் கோலத்துடன் காட்சியளித்துக் கொண்டிருந்த சுசீலாவை மீண்டும் நெஞ்சோடு நெஞ்சாகப் பார்த்துவிட்டு, அங்கே சிதறிய விழிநீரை அங்கேயே வழித்து வீசிவிட்டுத் திரும்பி வந்தான்; சாய்ந்து விட்டான். மூடின கண்களுக்குள்ளே எப்படி நுழைந்தாள் சுசீ?—சுசீ கெட்டிக்காரி!—கூடு விட்டுக் கூடுபாய அவளுக்கா தெரியாது!

அம்மா இப்போதெல்லாம் அடிக்கடி காணாமற்போய் விடுகிறாள்!

அலட்டினாள் சுமதி.

தெய்வநாயகி அம்மாள் கையில் கடிதம் ஒன்று இருந்தது. "சுமதி, முன்னே நீ எழுதிவச்சிருந்த இந்த லெட்டரை உன்

பெட்டியிலே கண்டேன். இதை இன்னம் ஏன் ஊறுகாய் போட்டு வச்சிருக்கே? கிழிச்சுப் போடுறதுதானே?'' என்று ஆலோசனை வழங்கினுள்; ''உன் அத்தான் கையிலே தப்பித் தவறிச் சிக்கிடப் போகுது!'' என்றும் எச்சரித்தாள்.

அந்தக் கடிதத்தை அவள் 'இனம்' அறிந்தவள்தான். வாங்கினுள்; புரட்டினுள்; புலன் அடக்கம் சித்திக்கப் பெற்றவள் மாதிரி, அவள் சலனம் கடந்த நிலையில் காணப் பட்டாள்; சஞ்சலம் தாண்டிய கதியில் அவள் முகம் துல்லிதமாக விளங்கியது. திரும்பவும் ஒரு தரம்—ஒரேயொரு தரம் அதைத் திருப்பிப் படிக்க வேண்டும்போலிருந்தது; செய்தாள்.

''அன்புத் தெய்வமாம் சுசீ அக்காவுக்கு,

சுமதி எழுதிக் கொண்டது:

நானுக உன்னிடம் நேரில் சொல்ல எனக்குத் தைரியம் வரவில்லை; ஒருநாள் நீயாக என் வாயைக் கிண்டிக் கிளறி விட்டதால்தானே நான் என்னுடைய காதல் அந்தரங்கத்தை உன்னிடமே வெளியிட்டேன்! என்னுடன் பணிபுரியும் திருமிகு குமாரும் நானும் பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, காதலித்து வருகிறோம்; அந்தக் காதலுக்கு ஒரு வடிவமும் வனப்பும் நல்க, நாங்கள் இருவரும் கலியாணம் செய்து கொள்ளவும் முடிவு செய்திருக்கிறோம். இந்தக் காதலுக்கு அவர் தரப்பில் சோதிக்கவோ, சோதனை செய்யவோ அல்லது, தடை போடவோ யாருமில்லை. ஏன், தெரியுமா? அவர் நாதியில்லாத அனுதையாம்!

அக்கா! என் தரப்பிலே, நீ இந்தத் திருமணத்திற்கு ஓ. கே. சொல்லிவிட்டால், அதுதான் அம்மாவின் உதார மான முடிவும் ஆகும். தமிழ்ப் பண்புடன் கூடியது எங்கள் நேசம்; மனமும் மனமும் கலந்திட்ட காதல் எங்களுடையது. எனவே, இந்தப் புனிதமான—புதியதான—புரட்சியான காதல் கலியாணத்திற்கு நீ நல்ல வாக்கும் நல்ல தீர்ப்பும் வழங்கி விடுவாய் என்பதை நான் மனப்பூர்வமாக அறிவேன்.

ஏனென்ருல், நான் ஆசைப்பட்டதை நீ இதுகாறும் தட்டியதே இல்லையே!

நீ பெற்றுப் பிழைக்க வேண்டுமென்று மாரியம்மன் கோயில் மாரியையும் எல்லையம்மன் கோயில் பிள்ளையாரையும் பெரியகோயில் பிரகதீஸ்வரரையும் 'நேந்து' கொண்டேன்; என் பிரார்த்தனை பலித்து விட்டது. என்னுடைய இன்ஞெரு பிரார்த்தனையை என் கண் காணும் தெய்வமான நீ பலிக்கச்செய்து விட்டால், நான் ஆனந்தக் கடலாடுவேன்; நாங்கள் பெருமகிழ்ச்சி கொள்வோம்.

அக்கா, என் அன்பின் தெய்வமே!
நல்வாக்குக் கொடுப்பாயா?

உன் அன்புச் சகோதரி,
எஸ். சுமதி.''

சுமதி அந்தக் கடிதத்தை நான்கு மடிப்பாக மடித்தாள். அக்கா, என் அன்பின் தெய்வமே! என் எதிர்காலம் உனக்குத் தெள்ளத் தெளியத் தெரிஞ்சிருக்கும். அதஞலேதான். கடைசிவரைக்கும் இந்த லெட்டரை உன்ஞேட பார்வைக்குக் கொண்டுவர முடியாமலே போயிடுச்சு! நீ இட்ட புது ஆணை எனக்குப் புது விதியாகி, புது உள்ளத்தையும் பக்குவப் படுத்தித் தந்திடுச்சு. நான் கொடுத்து வச்சவள்! என் அன்பான அத்தானை எடுத்துக்கப் போறேன்!' நெஞ்சில் ஓடிய நினைவுகளே அவளது நெஞ்சத்தையும் தொட்டிருக்க வேண்டும்! நிர்மலமான நீள் விழிகளைப் பாண்மையுடன் நிமிர்த்திஞள். பெற்றவளிடம் உற்ற மரியாதையோடு கடிதத்தை நீட்டிஞள். ''அம்மா, இந்தக் கடிதத்துக்கும் எனக்கும் இருந்த சொந்தபந்தம்—உறவு உரிமையெல்லாம் காலாவதி ஆகி எத்தனையோ தினங்கள்—இல்லை, யுகங்கள் கழிஞ்சாச்சு! இந்த ஒரு முடிவை யூகிச்சோ, அல்லது உணர்ந்தோதான், நீ தெரிவிச்ச மாதிரி, மிஸ்டர் குமார்

எனக்கு இத்தனை நாளாக ஒரு கடிதம் கூடப் போடாமல் இருந்திட்டார்! ஆகச்சே, இந்த லெட்டரை இனி நீ விரும்பும் பட்சத்தில் கிழிச்சுக்கூட தூர வீசி எறிஞ்சிடலாம்!'' என்று நிதானமாகத் தெரிவித்தாள் சுமதி.

தெய்வநாயகி விநயமானதொரு மௌனத்தோடு தலையைத் தாழ்த்தி விட்டிருந்தாள்!

வெய்யில் பளிச்சிட்டது.

தெய்வநாயகி அந்தக் கடிதத்தை அலட்சியமாக வாங்கிச் சுக்கல் நூறுகக் கிழித்து வீசி விட்டாள்!...

கடிதத்தின் துண்டங்கள் காற்றில் பறந்து கொண்டிருக்கின்றன!

பன்னிரண்டு

## 'டார்லிங் சுமதி!...'

பொன் அந்தி மாலைப் பொழுது.

சற்றே தெளிவான முகத்தோடு விளங்கினன் சுந்தர். தேவி கருமாரி அம்மன் விபூதியும் குங்குமமும் பளிச்சென்று தெரிந்தன; 'டெரிகாட்' சட்டையின் பொத்தான்களைப் போட்டுக் கொண்டான்; ஸ்டூலில் கிடந்த சினிமா இதழைப் புரட்ட ஆரம்பித்தான்; சுகமாக வீசின பூந்தென்றல் சுகமாகவே இருந்தது.

"அத்தான், நீங்க ரெடியா?"

சுமதி சிங்காரப் பதுமையாக வந்து நின்ருள். பரந்த நெற்றியில் எடுப்பாகத் தெரிந்த திலகமும் கொண்டையில் அலங்கரித்திருந்த கனகாம்பரச் சரமும் அழகுக்கு அழகு சேர்த்தன.

சுமதியைப் புத்தம் புதிய பார்வையால் அளந்தவன் இமைப்பொழுது நெஞ்சம் பறிபோய் நின்ருன். உள்ளத்தின் கிளர்ச்சி கண்களில் சிதறியது. சுயப் பிரக்ஞை அமைந்ததும், "ஓ, நான் ரெடிதான், சுமதி," என்று கூறினன். சொற்கள் பிரேமபாசத்துடன் வெளிப்பட்டன. இதுவரை உணர்ந் திராத புதிய அமைதியும், இதுவரை அனுபவித்திராத

நூதனமான சுகமும் இதயத்தின் இதயத்தில் ஊடாடிக் கொண்டிருந்த விசித்திரத்தையும் அவன் எண்ணி வியக்கத் தவறிவிடவில்லை. நேர்ந்துவிட்ட இழப்பை ஈடுகட்டிச் சரிக்கட்டவே, காலம் இவ்வாறு அருமருந்தாக அமைந்திருக் கிறதோ?

சுமதியின் மைஇட்ட நேத்திரங்கள் நாணத்தால் தாழ்ந்தன. புதிய நம்பிக்கை மேலும் வலுவடைந்தது; தாமரைப் பூக்கள் கண் சிமிட்டிய 'வாயல்' சேலையின் முகதலைவுப் பகுதியை இழுத்துவிட்டுக் கொண்டாள். "அத்தான், மெரினுவுக்குக் குழந்தையையும் எடுத்திட்டுப் போவோம்; டாக்ஸியிலே போயிட்டு டாக்ஸியிலேயே திரும்பப்போருேம். அம்மா வீட்டைப் பார்த்துக்கட்டும்; இல்லே, காளிகாம்பிகை கோயிலுக்குப் போயிட்டுத் திரும்பட்டும்", என்று ஆலோசனை சொன்னாள். இடது கன்னத்தில் அரும்பியிருந்த முகப்பருக்களில் அவளது தளிர்விரல் படர்ந்தது.

"அப்படியே செஞ்சிட்டால் போகுது; நீ ஒரு முடிவுக்கு வந்தால், அது சரியாகத்தான் இருக்கும். இருட்டுக்குள் திரும்பிடவேணும். காலம்பற பேதிக்குக் கொடுத்ததாகச் சொன்னயே? அதனுலே ஒண்ணும் பாதகமில்லையே? போற இடத்திலே உனக்குச் சிரமம் அதிகமாகாதே?" என்று விசாரித்தான் சுந்தர்.

"அதெல்லாம் ஒண்ணும் கிடையாதுங்க, அத்தான்! எல்லாத்தையும் எனக்குச் சமாளிக்கத் தெரியும்; குழந்தை யினுலே ஏற்படுகிற சிரமம் ஒவ்வொண்ணும்தான் என்னுேட நிம்மதியைப் பலப்படுத்த முடியும். சரி, புறப்படுங்க; பாப்பாவை எடுக்கிக்கிணு ஓடியாரேன்", என்ருள் சுமதி.

"ஓடியார வேண்டாம்; மெதுவா நடந்துவா, போதும்!"

வெட்கம் மணம் கூட்டிற்று.

சுமதியின்பின் அழகை ரசித்த வண்ணம் இருந்த சுந்தர், "வணக்கம்!" என்ற குரல் கேட்டுத் திரும்பினான். ஆச்சர்யமும் திகைப்பும் ஏற்பட்டன; குழப்பமும் கூடத்தான்!

அங்கே, அப்போது கம்பீர ஆகிருதியுடன் குமார் நின்று கொண்டிருந்தான், கையில் சிவப்புநிறக் கைப்பெட்டியுடன்! விதிக்கு நிறம் என்ன?—சிவப்போ?

"வணக்கம், வணக்கம்; உட்காருங்க, குமார்!" உபசாரம் செய்தான் சுந்தர். பின்புறம் திரும்பிப் பார்த்தான்; சுமதி இன்னமும் குழந்தையுடன் அல்லாடிக் கொண்டிருந்தாள். குமாரிடம் எப்படி விஷயத்தைத் தெரியப்படுத்துவதென் பதையும் நினைத்துப் பார்த்துக்கொள்ள வேண்டியவன் ஆனான்.

குமார் பிரம்பு நாற்கலியில் அமர்ந்தான்; அவன் திருஷ்டி பரபரத்தது; முகம் சோர்வுற்றிருந்து. பிரயாண அசதிதான் காரணமாக இருக்கலாம். "குழந்தை நல்லா இருக்குங்களா? அன்றைக்குச் சாவுக்கு வந்திருந்தேன்; அப்போதிருந்த நிலவரத்திலே, உங்களோட பேசுறதுக்கும்கூட எனக்குப் பயமாயிருந்திச்சுதுங்க", என்றான் குமார். அவன் கண்கள் இரண்டும் சுமதியைத் தேடினவோ?

துக்கம் விசாரிப்பதில் பயம் என்ன வேண்டிக்கிடக்கிறது, பயம்?..."குழந்தை நல்லபடியா இருக்குங்க, குமார்!"

'சுமதி' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தான் குமார்.

சொல்லிவைத்தமாதிரி, அப்போது குழந்தையும் தானுமாக அங்கே வந்தாள் சுமதி. குமாரைக் கண்டதும், தீயை மிதித்தாற்போன்று தவித்துத் தடுமாறினாள். சமாளித்துக்கொண்டு, "வாங்க, மிஸ்டர் குமார்", என்று முகமன் மொழிந்தாள். நேரம் கெட்ட நேரத்தில், எதிர்பாராத சமயத்தில் குமாரைச் சந்தித்ததில் உண்டான சலனத்தைச் சமர்த்தாய்ச் சமாளித்தாள். பழைய குப்பையைக் கிளறிக் கொண்டிருந்தது மனம். கடந்த கால

நினைவுகள் ஆட்கொண்டன; இப்போது குமாரிடம் எப்படிப் பேச்சைத் தொடங்குவது? ஏற்கனவே,சிந்தித்துவைத்திருந்த பேச்சை அவள் நினைவுகூர்ந்தாள். குமார் புன்சிரிப்புத் தவழ, பதில் வணக்கம் கூறிக் கும்பிட்டதையும் எண்ணமிட்டாள்.

'குமாரைப் பார்த்தால், நடப்பு ஒண்ணுமே தெரியாதுபோலத் தோணுது; ம், பார்க்கலாம்!'—"இதோ. வந்திடுறேன்," என்று சொல்லி உட்புறம் விரைந்தாள் சுமதி,

"உங்க தந்தி கிடைச்சது; ஆனு, நான் ஒரு அவசர காரியமாக பள்ளி அக்கிரகாரத்திலே தங்க நேர்ந்திடுச்சு." குமார் தொடர்ந்து பேச நினைத்தபோது, சுமதி ஏந்திய காப்பியை ஏந்திக்கொண்டான். சுமதியை விழுங்கப் போகிருனு குமார்?

டபரா தம்ளரை வாங்கித் தரையில் வைத்தாள் சுமதி. "அத்தான், அடுத்த வாரம் நாம் பீச்சுக்குக் கிளம்புவோம்," என்ருள். குமாரை நோக்கி, "வேறு விசேஷம் ஏதானும் உண்டுங்களா?" என்று கேட்டாள்.

"விசேஷத்தை நீதான் சுமதி சொல்லணும்!" என்ருன் குமார்.

சுமதிக்குச் 'சுருக்'கென்றது. அப்படியென்ருல், குமாருக்குத் தன் முடிவைப் பற்றிய சேதி ஒன்றும் தெரியாதென்றும் திடப்படுத்திக் கொண்டாள். பிறகு, ஒருமுறை அத்தானைக் கூர்ந்த மதி பதித்து நோக்கினுள். மறுபடி குமார் பக்கம் கண்களைத் திசை திருப்பினுள்.

அப்போது, வேறு யாரோ ஓர் இளைஞன் வந்து சேர்ந்தான். "சுந்தர், இப்போது எப்படி இருக்கே?" என்று கேட்டான்.

சுமதி ஒதுங்கினுள்!

"ஊம்...இருக்கேன், பிரபு!"

"நீ தந்தி கொடுத்து, நான் கேதத்துக்கு வந்திருந்தப்போ, உனக்கு எப்படிச் சமாதானம் சொல்கிறதென்றே புரியல்லே. அப்புறம், எர்ணுகுளத்திலேயிருந்து திரும்பி வர முடியல்லே; பட்டணத்திலே ஒரு சோலி உண்டு. வழியிலே அச்சாபீஸிலே விசாரிச்சேன். விலாசம் வாங்கிக்கிட்டு வந்தேன். குழந்தை எப்படி இருக்கான்?"

"இருக்கான்; என்னவோ ஒரு தினுசா காலம் ஓடிக்கிட்டு இருக்குதப்பா!"

"சுமதி கையிலே ஒட்டிக்கிட்டாணு பயல்?"

"ஓ!" என்று பதிலிறுத்தான் சுந்தர். "பிரபு, உனக்குச் சுமதியைத் தெரிந்திருக்கும். இவர் மிஸ்டர் குமார். எங்க குடும்ப நண்பர்", என்று பிரபுவிடம் குமாரை அறிமுகப் படுத்தினுன். "மிஸ்டர் குமார், இவர் என்னுடைய பால்ய காலத் தோழர். கேரளத்திலே எர்ணுகுளத்தில் தொழில் பண்ணுகிருர்; இடுக்கி பகுதியில் ஒரு சின்ன ஏலக்காய்த் தோட்டம் வச்சிருக்கார். என் மேலே அன்பையும் பாசத்தையும் மட்டும் வைத்திருக்கவில்லே; உயிரையே வைத்திருக்கிறவராக்கும்!" என்று குமாரிடம் பிரபுவைப் பற்றி விவரித்தான் சுந்தர்.

பிரபுவுக்கு ஹார்லிக்ஸ் கிடைத்தது; "வேறு விசேஷம் உண்டா?" என்று வினவினுன்.

"இப்போதைக்கு ஒரு விசேஷமும் இல்லே, பிரபு!"

"நான் புறப்படுறேன்; ஒருதரம் நீ, குழந்தை, சுமதி எல்லோருமாக மலேயாளத்துக்கு வந்து திரும்புறதுதானே? மாறுபட்ட சூழ்நிலே உனக்கு—உங்களுக்கு ஒரு மாறுதலாக இருக்குமே?"

"பார்க்கலாம்!"

விடைபெற்றுக் கொண்டான் பிரபு.

''குமார், காலம் இருக்கிற இருப்பிலே, ஆட்களை யார் நல்லவன், யார் கெட்டவன் என்று தரம் பிரிச்சுப் பார்க்கிறதே பகீரதப் பிரயத்தனமாயிருக்குது. ஆனா, பிரபு ஒரு தனிப் பிறவி!'' என்றான் சுந்தர்.

''சரிதான்'', என்று சொல்லி, ''சுமதி, உட்காருவது தானே?'' என்று வேண்டிக்கொண்டான் குமார். காதற் காண்டத்தின் தேனமுத நிகழ்ச்சிகள் நிழலாடி யிருக்கலாம்.

சுந்தர் கேட்டுக் கொண்டதற்கு அப்புறம்தான் சுமதி உட்காரலானாள்.

குமாரின் சலனம் அடைந்திருந்த முக விலாசம் சிறுத்தது. ''மிஸ்டர் சுந்தர், உங்களுக்காக அற்புதமான பச்சை இலைத்தூள் சூரணம் ஒன்று கொண்டாந்திருக்கேன்; ரொம்ப ரொம்ப உயர்வான மருந்து. ஒரு மண்டலம் தேனிலே குழைச்சுச் சாப்பிட்டால், உங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்திலேலே—இழப்பிலேலே ஏற்பட்டிருக்கிற மனக் கஷ்டம், குழப்பம், சலனம், சோர்வு எல்லாம் இருந்த இடமும் தடமும் தெரியாத வகையிலே பஞ்சாய்ப் பறந்து போயிடும். நீங்க புதுப் பிறப்பு எடுத்தமாதிரி ஆயிடுவீங்க. என்னை நம்புங்க, சுந்தர்,'' என்று நெகிழ்ச்சியோடு உரைத்தான்.

சுந்தரின் சலனம் அடைந்த மனம் நொடியில்தன் நிலைக்கு வந்தது; ''குமார், நீங்க என் பேரிலே கொண்டிருக்கிற உண்மையான அன்பைத் தலைவணங்கி ஏற்றுக்கிறேன். உங்களை எப்பவும் நம்ப வேண்டியவன். ஆனால், நான் என் சுசீலாவின் பேரிழப்பிலேலே என்னுள்ளே தோன்றித் தோன்றி மறைகிற அந்த மனக் கஷ்டத்தையோ, மனச்சோர்வையோ, குழப்பத்தையோ மருந்தைத் தின்னு போக்கிக்கிட நான் விரும்பமாட்டேன். ஏன், தெரியுங்களா? என் மனைவி சுசீலா என் மட்டுக்கும் இறந்து விட்டதாய் நான் எப்போதுமே நம்பவில்லையாக்கும்!'' என்றான். சோகத்தின் சுருதி தூக்கலாக இருந்தது.

குமார் மேலும் கலங்கினன். "உங்க இஷ்டம்; அது போகட்டும். என்னை உடனே புறப்பட்டு வரும்படி தந்தி அடிச்சீங்களே?—ஏதானும் விசேஷம் உண்டா?" என்று ஆர்வத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் கேட்டான்; அவன் கண்கள் பாதாதிகேசமாகச் சுமதியை ரசித்துக் கொண்டிருந்தன.

சுந்தர் மௌனப் பிண்டமாக இருந்தான்,

சுமதி தலையை உயர்த்தி நிமிர்த்தினுள். "மிஸ்டர் குமார், எனக்கு என்னுேட சுசீலா அக்காதான் அசல் தெய்வம் என்கிற உண்மை உங்களுக்கு நல்லாத் தெரியும். அக்கா கண்ணை மூடுறதுக்குமுந்தி, என் கையிலே என்னுேட அன்பான அத்தானை ஒப்படைச்சிட்டுது; அதனுலே, நம் காதல் கனவு இனி செல்லாக்காசுதான். நான் உங்களை மறந்து வெகுநாள் ஆயிடுச்சு; அதுமாதிரி நீங்களும் என்னை மறப்பதும் மறக்க வேண்டியதும்தான் தர்மநியாயம். இந்தச் சேதியைச் சொல்லத்தான் உங்களை அழைச்சோம்! என்னைத் தயவுசெஞ்சு மன்னிச்சிடுங்க, குமார்!"—தீர்ப்பு வழங்கி விட்டாள் சுமதி.

"சுமதி!" மண்முட்டி, விண்முட்ட அலறிவிட்ட குமார் அப்படியே வெறும் சிலையெனச் சமைந்து போனுன்!—'சுமதி! டார்லிங் சுமதி!'—கண்கள் தளும்பின.

"என்னையும் நீங்க மன்னிக்கணும், குமார்!"

நல்ல பூமியில் நிலவும் அமைதி அங்கு சில கணங்கள் நிலவியது;—அமைதி ஏன் இப்படிப் பயமுறுத்துகிறது?

கைமுறுக்கைப் பறிகொடுத்த கைக்குழந்தை ஊமைத் தனமாக, உள்வட்டம் கிழித்துச் செருமுமே, அப்படி ஆனுன் குமார். கம்பீரமாக நிமிர்ந்திருந்த முகம் ஏமாற்றத்தின் அதிர்ச்சியால் தாழ்ந்தது. 'அன்புச் சுமதி! நீ உன்னைக் கொம்புத்தேனுக ஆக்கிக்கொண்டு விட்டாயே? என் பாக்கி யத்திற்குப் பொருள் கிட்டாமல் செய்து விட்டாயே?.... நீ

இல்லாமல் நான் எப்படி இனி இந்த உயிரைச் சுமப்பேன்? நீ இன்றி நான் இந்த மண்ணிலே எப்படி உயிர் தரிப்பேன்?... விதியாம், விதி!—' சுமதியை—தன் மாஜி காதலி சுமதியை நேருக்குநேர் பார்க்கக்கூடிய உறவு அல்லது உரிமை இனிமேல் தனக்குக் கிடையாது என்று முடிவிட்டவன் மாதிரி, கண்களை இறக்கிக்கொண்டு, "சுமதி, நான் புறப்படுகிறேன்," என்று சொன்னான். பிறகு சுந்தரிடமும் கூறினான் குமார்.

நெருப்பின்மீது நின்றுகொண்டிருந்தாள் சுமதி.

சுந்தர் திடுக்கிட்டான். "குமார், வந்தகாலோடு புறப்படுறீங்களா? நல்லாச் சொன்னீங்க, போங்க, ஊஹூம், போகக்கூடாது; நான் ஒப்பமாட்டேன்; அனுமதிக்கவும் முடியாது. ஏன்னு, நீங்க என்னோட—எங்களோட குடும்ப நண்பர்; பண்புள்ள நல்ல சினேகிதர். சுமதி உங்களை என்கிட்டே அறிமுகப்படுத்தின அன்னிக்கு உங்களைப்பற்றி என் மனசிலே உருவான உயர்ந்த அபிப்பிராயம் பசுமரத்து ஆணியாய் என் நெஞ்சிலே எப்பவும் பதிஞ்சிருக்கும். அன்பு ஒருநாளும் கேட்பதில்லைன்னு மகாத்மா சொன்னது ஞாபகத்திலே ஓடுது! குமார், நீங்க ரெண்டொரு நாளாச்சும் எங்க வீட்டு விருந்தாளியாகத் தங்கிட்டுப் போனால்தான் எனக்கு—எங்களுக்கு ஆறுதலாக இருக்குங்க; அதே ஆறுதல் உங்களுக்கும் வேண்டாங்களா?" என்று கெஞ்சும் குரலெடுத்துப் பேசிமுடித்தான் அவன்.

சுமதி மூச்சுக்காட்டவில்லை; மூச்சுத்தான் நின்றுவிடும் போலிருக்கிறதே?

எழுந்த குமார் உட்கார்ந்தான்; ஏமாற்றம் ஏக்கமாக மாற, சுமதியைப் பார்வையிட்டான். அவன் எதிர்பார்த்ததுபோல, சுமதியும் தன்சார்பிலே அவனை விருந்தினனாக இருந்து செல்லும்படி கேட்டுக் கொள்ளவில்லை. ஏக்கம் இப்போது ஆத்திரமாக உருக்கொண்டதுபோலும்! தீவிரச் சிந்தனையில் சிலபல நிமிஷங்களைச் சேதப்படுத்திய பிறகு

தன் லயத்தில்—தன் லயிப்பில் ஏதோ ஒரு வெறியுடன் தலையை உலுக்கிக்கொண்டே, "ஆகட்டுங்க, சுந்தர்!" என்று இணக்கம் கொடுத்தான். கவர்ச்சியான முகத்தில் சலனத்தைக் காணோம்!

குமார் இங்கே தங்கச் சம்மதித்தைக் கேட்டதும், சுமதிக்கு 'திகீ'ரென்றது. திகிலைச் சாடும் வைராக்கியத்தோடு எழுந்தாள். குழந்தையின் அழுகுரல் கேட்கவே, பதறிக்கொண்டு பின்கட்டுக்கு விரைந்தாள்.

விடுவிக்கமுடியாததொரு விடுகதையாகவா சுமதி தோன்றுவாள்?—குமார் உருகிக் கரைந்தான். ஒருவேளை, சுமதி நின்ற நெருப்பு குமாருக்குத் தாவியதோ?

வெளியிலே இருள் நன்றாகச் சூழ்ந்தது!...

பதின்மூன்று

## கலாப மயில்

குமார் இப்பொழுது சுந்தரின் விருந்தாளி; சுந்தரின் குடும்ப நண்பன் ஆயிற்றே அவன்?

உச்சிவேளை.

உள்ளே போன சுமதி என்ன ஆனாள்?—இன்னமும் திரும்பினபாடில்லை! — குமாருக்குக் கொட்டாவி வந்தது. அசதிவேறு. நேற்று ராத்திரி சிவராத்திரி! விடிகாலையில் பஸ் ஏறினான். உட்கார, எழுந்திருக்க இயலாமற்போயிற்று; நெரிசல் அப்படி. இங்கே வந்தால், மனக்கனவை மண்ணோடு மண்ணாக ஆக்க ஒரு பேரதிர்ச்சி விதியாக் காத்திருந்தது! இந்நிலையில், தூக்கம் எப்படி வரும்? துக்கம்தான் வந்தது. இரவு பூராவும் 'சுமதி பஜனை'தான்! ஆனாலும், மேனியின் ஒரு முனையில் 'மதமதர்ப்பு' அடிக்கடி தோன்றிக்கொண்டிருந்தது! 'சுமதி!' என்று விளித்தான்; நொடியில் தோன்றினாள் அவள்; மதுக்குடம் ஏந்திய மணமலராகத் தரிசனம் தந்தாள் சுமதி!—'எப்படிப்பட்ட பயங்கர முடிவு ஏற்பட்டிருக்கிறது? சுமதி இனி எனக்கு இல்லையா? நினைச்சுப் பார்க்கவே முடியலையே? கனவில்கூட எண்ணிப் பார்த்திராத முடிவல்லவா இது? காதலை வளர்த்து, அதே பண்போடு கனவுகளையும் வளர்த்து வந்த ஒரு வருஷத்தின் மனக்

கோட்டை தகர்ந்து பொடிப் பொடியாகிடுச்சே? சுமதி, நீ இல்லாத இந்த மண்ணிலே நான் எப்படி உயிர் வாழ்வேன்?...ஊஹூம், முடியாது; முடியவே முடியாது! இனி நான் நடைப்பிணம்தான்!...'

தெருவிலே கோழி கூவிக்கொண்டிருக்கின்றது.

மணி பன்னிரண்டைத் தாண்டிவிட்டது.

பட்டணத்து நாகரிகக் கோழிக்கு இப்போதுதான் பொழுது விடிந்திருக்கிறது போலும்!

இளம்மீசையில் பட்டுத் தெறித்தன சுடுநீர்ச் சரங்கள். நெடுமூச்சுப் பிரிந்தது. குமாருக்கு இருப்புக்கொள்ளவில்லை. சுந்தர் வேலைக்குப் போகாமல் இருந்திருந்தாலாவது, பேசுவதற்கேனும் துணை கிடைத்திருக்கும். அத்திபூத்த மாதிரி சுமதிவந்து 'சாப்பாடு தயார்!' என்பதாக அறிவித்துப் போனாள். போனவள் போனவள்தான். இன்னமும் திரும்பவில்லை! காதல் பொய்யாய் — கனவாய் — பழங்கதையாகிவிட்டதும், அவளும் பொய்யாய்—கனவாய்—பழங்கதையாகிவிட்டாளே?—பட்டணத்தில் சுமதியின் இல்லத்திலே இருந்துகொண்டு சுமதியை நினைத்த நெஞ்சத்தில் பள்ளி அக்கிரகாரத்திலிருந்த 'பச்சை இலைச் சாமியார்' தோன்றினார். அதே வேளையில், சுந்தரும் தோற்றம் தந்தான். 'கொண்டவளை இழந்தவன் துர்ப்பாக்கியவான்தான்!ம்..சுந்தருக்காக நான் அனுதாபப்படுகிறேன்; ஆனால், எனக்காக அனுதாபப்பட யார் இருக்காங்க?—கடைசிப்பட்சம், சுமதி என் நிமித்தம் அனுதாபப்படக்கூடத் தயாராக இல்லையே?... வெறும் சோதிப்புக்கள் மட்டுந்தான் வாழ்க்கையா?'

முகப்புத் தாழ்வாரத்தில் நாயொன்று மோப்பம் பிடிக்கிறது.

கதவுகள் திறந்து கிடந்தால் நாய்தான் வரும்!

சாத்தக் கூடாதோ?

'சுமதி!' என்று நெஞ்சால் விளித்தான் குமார்—சுமதியின் முன்னாள் காதலன்!

சுமதி நேரில் வந்தாள்.

நினைவில் வந்தவள் நேரிலும் வந்துவிட்டாளே?

அம்மாக்காரி 'சுமதி, சுமதி' என்று கூப்பிட்டுக் கொண்டிருக்கிறாள்!

"சாப்பாடு ரெடி; நீங்க கைகழுவிக்கினு வாங்க; சாப்பிடலாம். அம்மா கூப்பிடுறாக; இதோ வந்திடுறேன்!"

மறுபடி, சூன்யம்!

குழந்தை அடங்கிவிட்டது.

சுமதி திரும்பினாள்.

'டேஞ்சர் சிக்னல்' கைப்பெட்டியைப் பிரித்துக் கொண்டிருந்த குமார், சிறிய சீசா ஒன்றை மாத்திரம் எடுத்துக்கொண்டு எழுந்தான். சுமதியை நேர்கொண்ட பார்வையால் ரசித்து எத்தனை நாட்கள் — நாட்களா?—யுகங்கள் ஆகிவிட்டன!—அவ்வாறே நேர்கொண்ட பார்வையால் பார்த்தான்; பார்த்தான்; பார்த்துக்கொண்டேயிருந்தான்!...

சுமதிக்கு 'லஜ்ஜை' மேலிடவே, அச்சமும் மேலிட்டது. 'ஏன் இப்படிப் பார்க்கிறார் குமார்?'—அத்தான் அச்சகத்துக்குப் புறப்பட்டபோது, "குமார், உங்க சொந்த வாழ்க்கையிலே ஒரு எதிர்பாராத திசைமாற்றம் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும், எல்லாத்திற்கும் மேலே, உங்களுக்கும் எங்க குடும்பத்துக்கும் நடுவிலே இருக்கக்கூடிய அந்தத் தூய்மையான அன்பும் பாசமும் எப்பவுமே திசை திரும்ப முடியாது. உங்களை நான் அறிஞ்சவன்; எங்களையும் நீங்க அறிஞ்சவர்தான்! நமக்கு இடையிலே எந்த ஒரு கெட்ட நோக்கத்துக்குமே இடம் இருக்காதுதான்!...எனக்கோசரம் அனுதாபப்பட நீங்களும் உங்களுக்காக அனுதாபம் கொள்ள

நானும் நிதர்சனமாக—பிரத்யட்சமாக இருக்கோம்! ஆகச்சே,நீங்க புது குமாராக மாறவேணும்; உங்களுக்கென்று ஒரு புது இல்லற வாழ்க்கையை உண்டாக்கிட வேணும்!... டைம் ஆச்சு. நான் புறப்படுறேன். இது உங்க சொந்த வீடுமாதிரி;சுமதி உங்களுக்கு எப்பவும் சிநேகிதியாளுக்கும்!... வரட்டுமா?'' என்று தேறுதல் சொல்லி விடை பெற்ற விவரத்தை எண்ணினுள்; முகத்தின் கலவரமும் குழம்பமும் ஓடிவிட்டன.

''சுமதி!'' என்று அழைத்தவண்ணம், குமார் நெருங்கி வந்தான்.

உஷ்ணக் காற்றுப் படவே, சுமதி தன்னுணர்வைப் பெற்ருள்; விழித்தாள்; எதிரும்புதிருமாக நிற்கும் குமாரை ஊடுருவிப் பார்வையிட்டாள். கைகால்கள் நடுங்க ஆரம்பித்தன. குமார் மிருகமாகிக் கொண்டிருக்கிருஞ?

''சுமதி!''

ஆத்திரமாகப் பார்த்தாள் சுமதி.

''சுமதி!''

மூன்ரும் தடவையும் அழைத்தான் குமார். அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை; பேசாமல் கொள்ளாமல் மாலை மாலையாகக் கண்ணீரை வடித்துக் கொண்டேயிருந்தான்.

பெண் என்ருல் பேயும் இரங்கும் போது, பேய் என்ருல், பெண்ணும் இரங்க வேண்டாமா?

''குமார், நீங்க நல்ல மனிதர்; அழக்கூடாது. வாங்க. சாப்பிடலாம்'', என்று கெஞ்சுதலுடன் பேசினுள் சுமதி.

மந்திரத்துக்குக் கட்டுவிரியன் கட்டுப்படும்.

குமார் கட்டுப்படமாட்டாஞ?—சாப்பிட அமர்ந்தான்; 'முட்டை ஆம்லெட்' என்ருல் அவனுக்குப் பிரியம் அதிகம். தெற்கு அலங்கத்தில், பிரகதீஸ்வரர் ஆலயத்தின் கோபுரக் கலசம் பளிச்சென்று தெரியும் இலக்கில் அமைந்திருந்த

ஸ்ரீமுனியாண்டி விலாஸ் பிரியாணி ஹோட்டலில் அவனும் அவளும் முட்டை ஆம்லெட் சாப்பிட்டிருக்கிறார்கள். அர்த்தம் தெரியாத நண்பர்களாகி, அர்த்தம் தெரிந்த—அர்த்தமுள்ள காதலர்களாக மாறிய பிறகுதான், இத்தகைய ஒட்டுறவும் ஒட்டுதலும் கனிந்தன. பிரியப்பட்டு ஆம்லெட் தயாரித்திருக்கிறாள். விரால்மீன் வறுவல் செய்திருக்கிறாள். இதுவும் அவனுக்கு இஷ்டமான கறிதான். குமாரைத் தெரியாதா சுமதிக் கன்னிக்கு?

"சாப்பிடுங்க, குமார்."

"சாப்பிடுகிறேன், சுமதி," என்றவன், "உனக்கு ஆம்லெட், வறுவல் எல்லாம் இருக்குதில்லையா?" என்று கேட்டான்.

"ஓ!"

மகுடியின் நாதம் நல்லபாம்பைக் கவருவது இயல்பு.

முட்களைத் தவிர, வேறு எதையும் மிச்சம் வைக்காமல் கச்சிதமாகச் சாப்பிட்டான் குமார். எழுந்தான்; கை அலம்பினான். அபாய அறிவிப்புக் கைப்பெட்டியின் மீதிருந்த பச்சிலைச் செந்தூரச் சீசாவை எடுத்தான். "இன்னம் கொஞ்சம் தண்ணீர் கொடேன், சுமதி", என்று உருக்கமாக வேண்டினான்; நீட்டிய தண்ணீரைக் கைநீட்டி வாங்கினான்; இடது உள்ளங்கையில் கொட்டியிருந்த பச்சை இலைத் தூளை வாயில் கொட்டிக் கொண்டு 'மடக்'கென்று தண்ணீரை ஊற்றினான். சாப்பாட்டுக்கும், மருந்துக்கும் சேர்த்து, பெரிய ஏப்பமாகப் பரிந்தது. மறுபடியும் சுமதியைப் பார்க்க ஆரம்பித்தான். "நீயும் சாப்பிட்டுவாயேன்; கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருக்கலாம்", என்றான்.

கேட்ட கேள்விக்குப் பதில் எதையும் சொல்லாமல், "என்னவோ மருந்து சாப்பிட்டீங்களே? உடம்புக்கு என்ன?" என்று வினாக்கணை தொடுத்தாள் சுமதி.

அவன் விரக்தியுடன் சிரித்தான். இந்த மண் வாழ்க்கையில் இந்தச் சிரிப்பு ஒன்றுதான் பாக்கி என்ற

உண்மை நிலையை உணர்ந்தவன் மாதிரி சிரித்தான். "உடம்புக்கு என்ன கேடு?...என்னுடைய மனசின் கஷ்ட நஷ்டங்களை சிறுபொழுதேனும் மறந்திருக்கத்தான் மருந்து சாப்பிட்டேன்!'' என்றான் குமார். தண்ணீர்ச் செம்பை எட்டத்தில் நகர்த்திவிட்டான்.

சுமதி என்ன பதில் மொழிவாள்? குமாரின் இப்போதைய மனத்தின் கஷ்ட நஷ்டங்களுக்கெல்லாம் மூலகாரணமே அவள்தானே? அவளுடைய பெண் உள்ளம் பாகாய் இளகி உருகியது. நெஞ்சம் நெகிழ, நயனங்கள் நெகிழ்ந்தன. "அமைதியாக இருங்க'', என்று கெஞ்சினாள் அவள்.

"அமைதியா? எனக்கா?'' தேம்பினான் குமார்.

குமாரை எவ்வாறு சமாதானப்படுத்துவதென்றே புரியவில்லை; தவித்தாள் சுமதி. குமாருக்குப் புதியதொரு தாம்பத்தியப்பந்தம் ஏற்பட்டுவிட்டால், மனம் மறுமலர்ச்சி பெறாதா?—கட்டாயம் மறுமலர்ச்சி பெறும்! ஆனால், எப்படி இந்த வழியை எடுத்தியம்ப இயலும்? என்னவோ எடுத்துரைக்க விரும்பினாள் அவள். அவள் வாயைத் திறந்த நேரத்தில், சிசுவும் வாயைத் திறந்துவிடவே ஓட்டமாக ஓடினாள். 'ஃபாரெக்ஸ் கொடுக்கணும் பாப்பாவுக்கு!'

குமார் மலைத்தான்; சிலையாக மலைத்தான். குழந்தையின் பேரில்தான் சுமதிக்கு எவ்வளவு அக்கறை? தெய்வமாகவே வழிபட்டு வந்த அக்கா பெற்ற செல்வன் ஆயிற்றே?—ஏன் அக்கறை இருக்கமாட்டாது? உலக வாழ்வில் எட்டாப்பழம் இனிப்பது கிடையாது. ஆனால் அவன் நேரெதிர்!—'சுமதி, இந்த ஜன்மத்தில் உன்னை என்னாலே மறக்கவே முடியாது!' கண்கள் வீங்கி வலித்தன; நெஞ்சும் கூடத்தான். 'திரும்பி வருவாளா சுமதி? வந்தால்தான் நான் பிழைப்பேன்!'— இருதயப் பகுதியைத் தடவிக் கொடுத்தான். உள்ளேயிருந்து 'ட்ரான்ஸிஸ்டரி'ல் பாட்டுக் கேட்டது. பாரதி பாடல். ஆஹா! நின்றன் காதலை எண்ணிக் களிக்கிறேன்...' அவன்

தன் பாட்டில், தன் போக்கில், தன் நிலையில் முணுமுணுத்தான். கண்ணீர் முட்டியது; 'அமுதூற்றினை யொத்த இதழ்களும், நிலவூறித் ததும்பும் விழிகளுமாக' அவனது உள்ளக்கிழியில் சுமதி காட்சியளித்தாள்; புனையா ஓவியமெனத் தரிசனம் தந்தாள். பாடல் தொடர்ந்தது. "நீ என் இன்னுயிர் சுமதி!"...குமார் மேனி சிலிர்த்தான். கண்களை இறுக மூடித் தீவிரமாகவும் தீரமுடனும் சிந்தனை செய்தான்; பிறகு, கண்களைத் திறந்தான்; வேர்வை ஆடிப்புனலாய் ஓடியது. எழும்பினான்; கைப்பெட்டியைத் திறந்தான்; இன்னொரு சின்னக்குப்பியைத் தேடினான்; தேடினால் கிடைக்கும்தானே?...

ஈஸ்வரா!—

தேடிக் கிட்டியதைச் சிக்கெனப் பிடித்தான் குமார். மூடியைப் பிரித்தான்; நடுக்கூடத்திற்கு மீண்டும் மீண்டான்; எட்டத்தில் நகர்த்தி வைத்த செம்பை எடுத்தான்; கால்மாட்டில் உருண்டு கிடந்த தம்ளர் வந்தது; நீரை ஊற்றி நிரப்பினான். வெளுத்திருந்த அந்தச் சின்னக் குப்பியில் அஞ்ஞாத வாதம் செய்த பச்சை இலைத் தூள் மருந்தைத் தம்ளர் தண்ணீரில் தூவிக் கலக்கினான். பாதுகாப்பாக ஒரு முடுக்கில் மறைத்தும் வைத்தான். பள்ளி அக்கிராகாரச் சாமியாரை ஒருதரம் நினைத்தான்; இருதரம் தோன்றினார் சாமியார். அவனுக்குப் பரபரப்பும் படபடப்பும் கூடின 'சுமதி—என்னோட ஆருயிர்ச் சுமதி திரும்பி விடுவாளல்லவா?' இருப்புக்கொள்ளவில்லை அவனுக்கு. அவனுடைய காதல் இதயத்தின் வரவு செலவுக் கணக்கைப் பொறுத்தமட்டில் சுமதி என்றுமே இருப்புப் புள்ளிதானே?

நேரம் கெட்ட நேரம்.

தெருவில் நடமாட்டத்தைக் காணவில்லை.

வறட்டுக் கௌரவத்தில் வெய்யில் காய்ந்தது.

வெளிவாசல் கதவுகள் சொர்க்க வாசலின் கதவுகளா?

மூடினன் குமார்; உள்வசமாகத் தாழிட்டான். அன்புக்குத்தான் அடைக்குந்தாழ் இல்லையாம்!—வெறுங் கதவுகளுக்குக் கேடு என்ன வந்தது?

நடுக்கூடம் அப்போது அவனுக்குச் சொப்பன மாளிகை யாகத் தோன்றியிருக்கக் கூடும். உள்கூடத்தில் வந்து அமர்ந் தான்; மூடியிருந்த கதவின் பின்னே தலையணையை நகர்த்திச் சுவரோடு சாய்ந்தான்; வெளி உலகம் அவனுக்குத் தெரியவே இல்லை! 'பேஷ்!'—பின்கட்டுக்கு ஓடித் திரும்பிய பார்வை சுமதியின் மேலான நல்வரவுக்குக் கட்டியம் கூறியது.

ஜாதிமல்லி மணக்கிறது.

அப்படியென்றால், சுமதி வருகிறாள் என்று அர்த்தம்!

"வா, சுமதி!"

"வந்திட்டேனுங்க!"

அம்மாடி!—இப்போது தான் பழைய சுமதியாகத் தெரி கிறாள்! குமாருக்குக் களி பிடிபட மறுத்தது. பிடி இடைச் சுமதி சகஜமாகப் பேசத் தொடங்கி விட்டாள்!

"உட்காரேன்!"

"ம்...அது சரி, நீங்க தூங்கிப் போயிருப்பீங்கண்ணு நினைச்சிருந்தேன். உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டே?"

"ஊஹும்; நான் தொண்டனல்ல; நான் ஒரு துரதிர் ஷ்டசாலி!"

"அப்படியெல்லாம் மனசொடிஞ்சு போயிடாதீங்க. வாழ்க்கை அமைகிறதுக்கும் வாழ்க்கையை அமைக்கிற துக்கும் வழியா இல்லை! என்னைத் தவறாக நினைக்கலேன்னா, நான் சொல்வதெல்லாம் இதுதான்; நாம் ரெண்டு பேரும் காதலிச்சது எவ்வளவு நிஜமோ. அத்தனை அளவுக்கு நிஜமே தான் நம்மோட காதல் கனவாக ஆனதும்! நான் என் அக்காளோட ஆணைப்படி நாளைக்கு என் அன்பான அத்தா

னுக்கு வாழ்க்கைப்படப் போறேன். நீங்களும் உங்க மனச் சாட்சியின் ஆணைப்படி நல்ல பெண்ணைத் தேர்ந்து கலியாணம் செஞ்சுக்கிடுங்க!...நாம இரண்டு பேரும் இப் போது காதலர்களல்ல!—மறந்திடாதீங்க; நீங்களும் நானும் சிநேகிதர்கள். நான் உங்களுக்குச் சிநேகிதி—அத்தான் சொன்னமாதிரி; நீங்க எனக்குச் சிநேகிதர்—முன்பு நான் அடிக்கடி சொல்வேனே, அதுமாதிரி! அவ்வளவுதான்!— வாழ்க்கைகூட அவ்வளவுதான்! இதுக்காகப் போய், மருந்து மாயம்னு நம்பி, உங்களை நீங்களே அழிச்சு நாசம் செஞ்சுக் கிடுறதை நான் விரும்பவே மாட்டேன்!''

சுமதியா இப்படிப் பேசுகிறாள்?—வாழ்க்கையை எடை போடக் கிடைத்த படிக்கற்கள் அவள்வரை இவ்வளவுதானா? குமாருக்குச் சுமதி மேலும் ஒரு புதிர்க் கோளமாகத் தோன்றினாள். புதிர்களின் முழுவடிவமா சுமதி?— ''சாப்பிட் டாயா சுமதி?'' என்று பரிவுசூழக் கேட்டான் குமார்.

''எங்க சாப்பாடு இன்னிக்கு நாலு நாலரைக்குத்தான். காலம்பற லேட்டாய்த்தான் இடியாப்பம் தின்னேன். குழந்தையோடே போராட எங்களுக்கு ராத்திரி போதுவ தில்லை. அம்மாவுக்கு தள்ளாமை வந்தாச்சு; அசந்து படுத்துத் தூங்குறாங்க. நான் அத்தானுக்குச் சாப்பாடு அனுப்பிச்சிட்டு உங்களுக்குச் சாதம் போட்டேன். ராஜாக் கண்ணுக்கு மாவு கலந்து புகட்டினேன்; அவனும் நல்லபிள்ளையாய்த் தூங்கிட்டான். கொஞ்சமுந்தி ஒரு வாய் ஹார்லிக்ஸ் குடிச்சேன்: பத்து நிமிஷமாச்சும் அசதிதீரப் படுத்து எழுந் தால்தான், உடம்பு கலகலப்பாக இருக்கும். பேசிக்கிட்டிருக் கலாம்னு என்னமோ நீங்க சொன்னது நினைப்பு வந்திச்சு; ஓடியாந்தேன்!''

ஒரே மூச்சாக எல்லாவற்றையும் அளந்து கொட்டித் தீர்த்தாள் சுமதி. இவ்வளவு நாழி இருமல் மூச்சுக் காட் டாமல் தாக்குப் பிடித்ததற்கே குன்றக்குடிக்குக் காவடி எடுக்க வேண்டும். இனி, தாளாது. சிணுங்கல் இருமல் சிணுங்கும் மழையாக வெடித்துத் தொலைத்தது.

குமாருக்குச் சுமதியைத் தெரியாதா? சுமதிக்கு இரண்டு நிமிஷம் சேர்ந்தாற் போலப் பேசிவிட்டால் இருமல் வந்து விடுமென்று தெரிந்துதானே அவளுக்கென்று பிரத்தியேகமாகத் தண்ணீரைத் தயாரித்துத் தயாராக வைத்திருக்கிறான்! "சுமதி, முதலிலே தண்ணீரைக்குடி; இந்தா," என்று சொல்லி, 'அந்தத் தண்ணீர்த் தம்ளரை' உடலில் பீறிட்ட கிளர்ச்சியுடன் நீட்டினான் அவன்.

குழந்தை மருந்தைக் குடிக்கிற பாவனையில், சுமதி 'அந்தத் தண்ணீரை' ஒரே வேட்கையுடன் குடித்து முடித்தாள். "ரொம்ப நன்றிங்க, மிஸ்டர் குமரர்!" என்று நன்றியறிவு பாராட்டினாள்.

"சுமதி!"

மூச்!...

"சுமதி!"

ஊகூம்!...

மறுகணம்—

நினைவிழந்து, மயங்கித் தரையிலே சாய்ந்து விட்டாள் கன்னிப்பூ!

"சுமதி!..."

"......"

குமார் மண்ணிலே கால்பாவி, விண்ணிலே பறக்கிறான்!

கோலக் கலாபமயில் அலங்கோலமாகக் கிடக்கிறது!...

"சுமதி!...சுமதி..."

"......"

குமார் அழுகிறான்; அழுது கொண்டேயிருக்கிறான்!— இருட்டிலே!...

விதிக்கு அழக்கூடத் தெரியுமோ?

பதினூன்கு

## ஜீவ வீணை

வேளை : மாலை.

நேரம் : ஐந்து, பத்து.

வெளித் தாழ்வாரத்தின் நிலைப்படியில் வந்து நின்றான் சுந்தர். வெளிக் கதவு தாழிடப்பட்டிருந்ததைக் கண்டதும் 'சுரீர்' என்றது. தாழை விலக்கிக் கொண்டு, இனம் விளங்காத தவிப்புடன் உள்ளே அடியெடுத்து வைத்தான். தனிக் குடித்தனம் என்றால் இம்மாதிரிச் சமயங்களிலே தவிப்பு ஏற்படுவது சகஜம் தானே?...

நடுக்கூடம் வந்தது.

அடித்துப் போட்டாற் போன்று அயர்ந்த நித்திரையில் அமிழ்ந்து கிடந்தாள் சுமதி.

வெளிச்சம் பரவியது.

நான்கு சுவர்களின் இரண்டு பக்கத்துக் கதவுகளும் திறந்தே கிடக்கின்றன.

"சுமதி!"

"......"

அழகான நாதவீணை நறுவிசாகக் கிடக்குமே, அந்த உதாரணத்திற்கு உத்தாரம் கொடுக்கிற மாதிரி, அலுங்காமல் குலுங்காமல், ஜீவ வீணையெனக் கிடக்கின்றாள் சுமதி.

"சுமதி! சுமதி!"

"........."

உள்ளம் தொட்டவளின் உடலைத் தொட்டு எழுப்பக் கருதி உரிமையின் உறவுடன் கைகளை விரித்தான் அவன்; கைகள் நடுங்கின; பின் வாங்கின. ஜாதிமல்லிகைப் பூவுக்கென்று இதயத்தைக் கிறங்க வைக்கின்ற அப்படியொரு நெடியா? தங்கக் கழுத்தின் தங்கச் சங்கிலியின் வெண் பதக்கம் எவ்வளவு கவர்ச்சியுடன் மையம் கணித்துப் பதிந்து கிடக்கிறது! தொடுத்த கண் எடுக்காமல் சுமதியையே வெறித்துப் பார்த்தான் சுந்தர். மோகக் கிறக்கத்தின் நாடகம் முதற் காட்சியோடு சரி! தூங்கிய சுமதியின் தூங்காத எழிலைக் காணக் காண—ரசிக்க ரசிக்க, அவனுக்கு வியப்பு மிகுந்தது. இவ்வளவு நெருக்கமாக—இவ்வளவு தத்ரூபமாக அவளை அவன் பார்த்ததே கிடையாதே! அழகுக்கு அழகாக அமைந்திட்ட விநோதத்தை உணர, உணர, அவளைக் கையெடுத்துக் கும்பிட வேண்டும் போல் இருந்தது. கைகள் நடுங்கின. 'என் சுமதி தேவலோகத்துப் பாரிஜாதப் பூவா? கேவலம், அற்பமான எனக்கு இப்படியொரு அதீதமான பாக்கியம் காத்திருக்கிறதே! ஆஹா! நான் கொடுத்து வைத்தவன்; சுமதியை எடுத்துக் கொள்ளப் போகிறேன்! ஒரு கன்னிப்பூ எனக்கு மாலை ஆகப் போகிறது!' தன்னுணர்வு விழிப்புப் பெற்றது.

டக்—டிக்—டக்!

"சுமதி! சுமதி!"

மைத்துனி சுமதி இன்னமும்கூட துயில் கலையக் காணோம்!

சுந்தரின் மனம் நெகிழ்ந்தது; கண்கள் கசிந்தன; 'பாவம், சுமதி!...ராத்திரி—பகல் எந்நேரம் பார்த்தாலும் ராஜா

வோடு போராடத்தான் பொழுது காண்கிறது; தூங்க எங்கே நேரம் கிடைக்குது? அபூர்வமாய்க் கிடைச்சிருக்கிற இந்தச் சின்னஞ்சிறு பொழுதுக் காச்சும் அசதி தீர நல்லாத் தூங்கட்டும்!' காலடியில் இருந்த வெண்கலச் செம்பில் எஞ்சியிருந்த தண்ணீரைக் கவிழ்த்து முகத்தில் தெளித்துக் கொண்டு திரும்பிய சமயத்தில் செம்பு கை தவறிக் கீழே விழ்ந்தது. கொட்டின நீரைக் கூட்டி அள்ளவா இயலும்? தண்ணீர்தானே?—ஓடித் தொலையட்டும்!

ஆனால்...

அதிர்ந்தெழுந்த அரவம் கேட்டு, அரவம் கண்டவளாக வாரிச் சுருட்டிக்கொண்டு, உறக்கம் கலைந்து எழுந்தாள் சுமதி; கண்களைப் பதட்டத்துடன் துடைத்துக் கொண்டு, கனவு கண்டு விழிப்பவள் போலச் சுற்றுமுற்றும் பார்வையைத் திசை மாற்றித் திசை விலக்கியவாறு விழித்து விழித்துப் பார்த்தாள். இனம் புரியாத ஏதோ ஒரு பயம் அவளைக் கூண்டுப் புழுவாக அரித்தது. உடல் நடுங்கத் தலைப்பட்டது. திருடன் வந்துபோனால் அதிர்ச்சி ஏற்படாதா? அப்படிப்பட்ட அதிர்ச்சியின் உணர்வுதான் பயமாக உருக் கொண்டு, உருகாட்டுகிறதோ? பயமென்றால், என்ன பயம்?...தன்னைத் தானே—தனக்குத்தானே தலை குனிந்து நோக்கிக் கொண்டபோது, கொட்டாவி பிரிந்தது; தூங்கி எழுந்தவளுக்கு அசதி குறைவதற்குப் பதிலாக, அசதி கூடி விட்டது போலவும் தோன்றியது; திரும்பவும் கொட்டாவி திரும்பிற்று. முகத்தை நிமிர்த்தினாள். அன்போடும் அக்கறையோடும், ஏக்கத்துடனும் அனுதாபத்துடனும் இமைபாவாமல் கவனித்துக் கொண்டிருந்த சுந்தர், அக்கணம்தான் அவள் விழி விரிப்பிலே விழுந்திருக்க வேண்டும்!—''ஓ! அத்தான்!...'' என்று ஆவலோடு அழைத்து நிறுத்தினாள். ''நீங்க வந்து நேரமாச்சா?'' சோளிப் பொத்தான்களைச் சரி பார்த்துக் கொண்டாள்.

சுந்தர்: ''பத்து நிமிஷம் ஆச்சு!''

''ஓஹோ!...குமார் எங்கே? ஆளையே காணலீங்களே?'' என்று கேட்டாள் சுமதி.

தெருநாய் ஊளையிடுகிறது!

“அதைத்தான் நான் கேட்கணும்னு துடிக்கிறேன்!”

சுமதி: “நானும் குமாரும் இப்பத்தானே பேசிக்கிணு இங்கே இருந்தோம்? அதோ, அவருடைய டேஞ்சர் சிக்னல் சிவப்புப் பெட்டிகூட நறுத்குத் தெறித்தமாதிரி இருக்குதுங்களே?—ஒரு வேளை, நான் அசதியிலே, இருந்தது இருந்தாப்பிலே தூங்கிப் போயிருப்பேனே, என்னமோ? அவர் கூச்சப்பட்டுக்கிட்டுக் கடை வீதிப்பக்கம் நாடிப் போயிருக்கலாம்!”

‘ஊம்’ கொட்டினன் சுந்தர். “கொல்லைப்புறம் அடைச்சிருக்குது. உன் தாயார் எங்கே, சுமதி?” என்று கேட்டான்.

“அம்மா தூங்குறுங்க!”

“பிள்ளை?”

“அவனும்தான்!”

சுந்தரின் மனம் ஏனே கலவரம் அடைந்தது. நாகரிகமாகச் சமாளித்தான். “பாவம் குமார்! மனத்துக்கு நிம்மதி இல்லாத நிலையிலே இங்கேயே ‘கம்’மென்று உட்கார்ந்திருந்தால், என்னவாம்?” என்றுன்.

“அதுதானே நானும் யோசிக்கிறேன், அத்தான்!” பூங்காற்றையும் திமிறிக்கொண்டு வேர்வை சுரக்கிறது. பெருமூச்சு வெடிக்க, “மிஸ்டர் குமார் நம்ப குடும்பத்தை விட்டுட்டு எங்கே போயிட போகிறுர்?—பாவம்!” என்றுள் சுமதி.

“உங்களையெல்லாம் விட்டுப்புட்டு நான் எங்கே போவேன்? எப்படிப் போவேன்?” இயற்கையான சிரிப்புடன் கூறிக் கொண்டே குமார் வந்து நின்றுன். தாழ்ந்த தலை உயரவில்லை; “சுமதிக்குத் தூக்கம் கண்ணைச் சொருகுச்சு; நிம்மதியாகத் தூங்கட்டுமேன்னுதான், நான் வெளியே தாழிட்டுக் கடைத் தெருவுக்குப் போயிட்டு வந்தேன்,” என்று தெரிவித்தான் குமார்.

இப்போது சுமதியின் உள்மனத்தில் இனம் விளங்காத அமைதி கனியத் தொடங்கிவிட்டது. செவ்வதரங்களில் இனிமையான மலர்ச் சிரிப்பு விரிந்தது. "ஆனாலும், உங்களுக்கு இத்தனை கூச்சம் கூடாதுங்க, மிஸ்டர் குமார்!" அவளே கூச்சத்தோடுதான் சொன்னாள்.

"நாலும் தெரிந்தவர் நம்ம குமார்; அத்தோடு, நம்ம குடும்பச் சிநேகிதர். வாங்க, உள்ளே போய்க் காப்பி சாப் பிட்டுட்டுப் பேச வேண்டிய குறையைப் பேசித் தீர்க்கலாம்," என்றான் சுந்தர்.

குமாரின் முகம் அப்போது பிரகாசம் அடைந்து வந்தது. சுமதியையும் சுந்தரையும் பரிதாபமாகப் பார்த்தான்; மறுபடி நெஞ்சைத் தடவி விட்டுக் கொண்டான். பிறகு, தயக்கத்துடன், "நான் இன்னிக்கு ராத்திரி ஊருக்குப் புறப் படலாம்னு நினைக்கிறேன்," என்று கூறினான்.

குமார் ஊருக்குப் புறப்படப் போவதாகத் தெரிவித்த தகவலைக் கேட்டதும், அவளையும் அறியாமல் ஏக்கத்தின் உணர்ச்சி ஊடாடத் தொடங்கியது. அவளையும் மீறிக் கொண்டு கண்கள் வேறு கலங்கிவிட்டன. சொப்பனத்தில் கண்டது போலே என்னென்னவோ காட்சிகள் ஆரம்பமும் முடிவும் இல்லாமல் தோன்றலாயின; அக்காட்சிகளை எண்ணிப் பார்த்துப் பகுத்தறிந்து இனம் கணிக்கவும் இயலாமல் இருந்தது. ஆனாலும், நடுக்கம் மட்டும் உள் வட்டமாகச் சுழித்து உறுத்திக் கொண்டிருக்கிறது, கொஞ்ச நேரமாக!—'நான் எப்படித் தூங்கிப் போனேன்?' விட்ட குறையின் தொட்ட குறையாக முளைத்தெழுந்த இந்த ஒரு கேள்விக்கு மட்டும் அவளுக்குப் பதில் காணத் தெரியவில்லை: 'தாயே, அங்காளம்மை!' உள்ளுணர்வு அவளை என்னவோ பண்ணிக் கொண்டேயிருக்கிறது!...

தெரு வழியே யாரோ ஒருவன் கும்மாளம் போட்டுக் கொண்டு, தட்டித் தடுமாறி நடந்து கொண்டிருக்கிறான். நம்பிக்கைக்குப் பாத்திரமான சட்டத்திற்கு நம்பிக்கைத்

துரோகம் செய்தவன் கதி இதுவாகத்தான் இருக்கும் போலும்!

சுமதி இரண்டு 'செட்' காப்பியுடன் திரும்பி வந்தாள். குமார் பெட்டியும் கையுமாகத் தயாராகிக் கொண்டிருப்பதைக் கண்டதும், அவளுக்குச் சஞ்சலம் ஏற்பட்டது. குமாரின் பயணத்துக்கு அத்தான் 'ஓ. கே' சொல்லி விட்டிருக்க வேண்டும். "இந்தாங்க, காஃபி!" என்று விளித்து, ஆளுக்கொன்றாய் நீட்டினாள்.

காப்பித் தம்ளரை வாங்குகையில், குமாரின் கைகள் இரண்டும் அத்துமீறி நடுங்கின!

"மிஸ்டர் குமார், உங்க கை இரண்டும் ஏன் இப்படிப் பயங்கரமாக நடுங்குது?" சுமதி வினவினாள். அவள் மனச் சாட்சி ஏன் அப்படி நடுங்க வேண்டுமோ?

"அதான் எனக்கும் புரியல்லே, சுமதி!"—குமார் தவித்தான். காப்பியைக் குடித்து முடித்தான்.

திடுதிப்பென்று சுந்தருக்கு அப்படி என்ன புதுச் சிந்தனை வந்து விட்டதாம்?

"காப்பி ஆறிடப் போகுதுங்க, அத்தான்!"

"காப்பிக்குச் சுளுவிலே ஆறிவிடத் தெரியுதே, சுமதி!"

குமார் திடுக்கிட்டான்!...

சுமதி துணுக்குற்றாள்; சோகமும் உருக்கமும் வழிய, "காப்பி ஆறினால்தான் உங்களுக்குப் பிடிக்காதே?" என்று கெஞ்சினாள்.

சுமதியை ஏக்கத்தோடு பார்த்தபடி, காப்பியை இயந்திர கதியில் குடித்து வைத்தான் சுந்தர். பெட்டியுடன் நின்ற குமாரை நோக்கினான். "குமார், மனசு குழப்பிக் கிடக்கிற எனக்கு நீங்க கூடமாட இருந்தாலாச்சும், கொஞ்சத்துக்குக் கொஞ்சம் ஆறுதலாகவும் தேறுதலாகவும் இருக்கலாம். உங்க மனசும் நிம்மதியாக இருக்காது; சரி, புறப்படுங்க!—

விதியின் எழுத்தை கேவலம், மனிதர்களாகிய நாம் எப்படிக் கிழிக்க முடியும்? குமார், நீங்க எங்களே, அதாகப்பட்டது, என்னேயும் என் சுமதியையும் மறந்திடாதீங்க!—நீங்க எங்க குடும்ப நண்பர்!—இந்த உண்மையை—உரிமையை—உறவை உங்களாலே மறக்கவும் வாய்க்காதுங்க!...அநேகமாக பங்குனி பத்து, பதினேஞ்சு தேதி வாக்கிலே எங்க கல்யாணம் நடக்கலாம்; அழைப்பு அனுப்புவோம். ஒருவாரம் முந்தியே வந்திருந்து எங்க திருமணத்தை நீங்கதான் நல்லதனமாய் நடத்தி வைக்கவேணும், குமார்.'' என்று தாழ்குரலில் கேட்டுக் கொண்டான்.

''ஆகட்டும், சுந்தர்!''

சுந்தரின் நன்றியில் குமாரின் உடல் விம்மியது.

குமார் விடைபெற்றதும், சுந்தர் தன் அறைக்கு மடங்கினன். சுசீயின் படம் தென்பட்டது; இதயம் குலுங்கியது.

குமார் வெளிவாசலே நெருங்கியதும், சுமதியைத் திரும்பிப் பார்த்தான்; ''நான் போயிட்டு வாரேன், சுமதி'' என்று பயணம் சொல்லிக் கொண்டான்.

ஆனல், சுமதி வேறு ஏதோ சிந்தனேயில் ஆழ்ந்திருந்தாள்; குமார் தன்னிடம் பயணம் சொல்லிக் கொண்டதை அவள் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லே.

சுமதியின் நிலே குமாருக்குத் தவிப்பை உண்டாக்கியிருக்க வேண்டும். திடீரென்று எதையோ மறந்துவிட்டு, பின்னர் மறந்ததை திடீரென்று நினேவுபடுத்திக்கொண்டவன்போல் சட்டைப்பையைத் தடவிப் பார்த்தான்; வேர்வை வழிந்து கொண்டிருந்தது. ''சுமதி, உனக்கு உடம்புக்குச் சரியில்லேயென்ருல், இந்தப் பொட்டணத்திலுள்ள மருந்தைச் சாப்பிடு. உடம்பு மட்டுமில்லே, உள்ளமும் சாயாகிவிடும்,'' என்று கூறி, சிறிய பொட்டலம் ஒன்றை அவள் கையில் வைத்தான் குமார்.

சுமதி அந்தப் பொட்டணத்தை அருவருப்புடன் ஒரு முறை முறைத்துப் பார்த்துவிட்டு, "மிஸ்டர் குமார், இந்த மாதிரியான மருந்தின் பேரிலே இருக்கிற நம்பிக்கை உங்களோடேயே இருக்கட்டும்; என்னைவேறு கெடுத்து வச்சிடாதீங்க!" என்று எரிச்சலுடன் வேண்டிக்கொண்டு குமார் வசம் அதைத் திரும்பவும் ஒப்படைத்தாள்.

"சுமதி!" என்றான் குமார், அதிர்ச்சியோடு.

"புறப்படுவதானால், புறப்படுங்க, குமார்! கல்யாணத்துக்குக் கட்டாயம் வந்திடணும், மிஸ்டர் குமார்!"

"ஆகட்டுங்க, சுமதி!"

சுமதி 'டாடா' சொன்னாள்.

இருட்டில் பழக்கப்பட்டவன் போன்று, இருட்டோடு இருட்டாக மறைந்து விட்டான் குமார்!...

வெளிச்சத்தில் பழக்கப்பட்டவன் மாதிரி, வெளிச்சத்தோடு வெளிச்சமாகச் சிரித்துக்கொண்டிருந்தான் ராஜா!

குழந்தையின் பாலமுதச்சிரிப்பில் சுமதி மெய்ம்மறந்தாள்; பால்வழியும் முகத்தில் பூச்சொரியலாகப் பூத்திருந்த 'குடிகுரா' பவுடரின் நறுமணம் அவள் நாசியில் இன்னமும் மணம் பரப்பிக்கொண்டிருந்தது. கதுப்புக் கன்னங்களில் அழகு காட்டிய—அழகு கூட்டிய 'திருஷ்டிப்பொட்டு', சிரிக்கையில் ஏற்பட்ட கன்னக்குழிவுகளிலே பளிச்சிட்டது. 'ராஜா கன்னங்குழியச் சிரிக்கிறதைப் பார்க்க அக்கா இல்லாமல் போயிட்டாளே?' என்று நினைத்துக்கொண்டதும், அவளுக்கு மூச்சு நின்றுவிடும் போலிருந்தது.

கண்கள் 'பொலபொல'வென்று கண்ணீரை வடித்தன. நீர்ப்படலத்தில் சுசீயின் அன்பு உருவம் அழகழகான கோணங்களில் நிழலாடத் தொடங்கிவிட்டது. 'சுசீ, இனி எப்பிறப்பிலே நான் உன்னைக் காணப்போறேன்? என் கிட்டே நீ வாய்மூடி மௌனியாகி ஒருவரம் வாங்கிக்கிட்டே;

அதுபோல, உன்கிட்ட நான் ஒருவரம் கேட்கட்டுமா? என் வயிற்றிலே நீ வந்து பிறந்திடு, தாயே! உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு; எனக்கும் கோடிப் புண்ணியம் கிடைக்கும்!' கண்ணுக்குக் கண்ணாகக் கண்ட இஷ்ட தெய்வத்தை நினைத்துக் கைதொழுதாள் அவள்: அவள் கனவை சுசீ ஆசிர்வதிப்பது போலவும் உணர்ந்தாள். அழுதுகொண்டே அமைதியுடன் சிரித்தாள்; சாண் அளவு இருதயத்திலே அம்பாரமாகச் சுமந்துகிடந்த கவலைகள் அனைத்தும் அந்த ஒரு கணப்பொழுதிலே இருந்த இடம் தெரியாமல் மாயமாய் மறைந்து விட்டதாக ஒரு நிறைவு தோன்றியது; தன்னை மறந்தாள்; உலகத்தையும் மறந்தாள். சுட்டிப்பயல் ராஜா தன்னுடைய மாரகச் சேலையை விலக்கி விட்டு, பாலமுதம் பருகத் துடித்ததை உணர்ந்ததும்தான், அவள் தன்னை உணர்ந்தாள். "பசிக்குதாடா, கண்ணு? இரு, 'பூவா' தாரேன்!" என்று செல்லமாகக் குழைந்து கொண்டே ஒரு புதிய வெட்கத்தின் பாவிப்போடு குழந்தையும் கையுமாக நடைக்கு நடைபயின்றாள் சுமதி.

பேரனின் பசி பாட்டிக்குத் தலைகீழ்ப்பாடம். 'க்ளாக்ஸோ' கலக்கித் தயாராக வைத்திருந்தாள். சிசுவைச் சாமர்த்தியமாக வாங்கி, ஆகாரம் கொடுத்தாள். குழந்தையின் பசி அடங்கியதும், அவளுக்குத் தன் பசி அடங்கி விட்டதாகவும் தோன்றியது. "அம்மாடி, உன் அத்தான் எங்கே? பேச்சு மூச்சையே காணோமே?" என்று கேட்டாள் தெய்வநாயகி!

"அத்தான் பொழுதுபட்டதும் தன்னோட ரூமுக்குள்ளே நுழைஞ்சாக; இன்னமும் வெளியே தலைநீட்டக்காணோம்," என்று விவரம் குறிப்பிட்டாள் இளையமகள். 'க்ஷணப்பித்தம் —க்ஷணச்சித்தம் என்கிறது அத்தான் விஷயத்திலே ரொம்பப் பொருந்தும்!'

தூளியில் ராஜாவைக் கிடத்திவிட்டு, "அப்படி மெத்தனமாய் இருக்கப்படாதடி, ஆத்தா! போய்ப் பார்த்

திட்டுவா; தூங்கினுல் எழுப்பு; தூங்காட்டி, சாப்பிடக் கூப்பிடு,'' என்று உபதேசம் படித்தாள் அம்மா.

எதையோ பறிகொடுத்துவிட்டு விழிப்பவள்போல விழித்த சுமதி, "அம்மா, அத்தானை இன்னமும்கூட என்ஞலே சரிவரப் புரிஞ்சுக்க முடியல்லே; ஒருசமயம் நல்லபடியாய்ப் பேசுருங்க; மறுசமயம் எதையோ திருடிட்டது கணக்கிலே முழிக்கிருங்க; இன்னொருவாட்டி, என்னத்தையோ இழந் திட்டமாதிரி உருகிருங்க!'' என்று சன்னக்குரலில் பின்னிப் பின்னிப் பேசினுள்.

தெய்வநாயகி ஆற்ருமையுடன் லேசாகச் சிரிக்க முயற்சி செய்தாள். "சுமதி, உன் அத்தானைப் பற்றிக் கொஞ்சமுந்தி நீ வியாக்யானம் படிச்சதை நினைச்சுப்பார்த்தால், உண்மை விளங்கும்; திருடிக்கிட்டது உன்னை!...இழந்தது உன் அக்காளை!'' என்று எடுத்தியம்பினுள்.

பெற்றவளின் உற்ற பேச்சை அவளது கன்னிமனம் சிலாகித்தது. "ஆனலும், அத்தான் இந்தத் தோரணையிலே ஏடாகூடமாய் ஒண்ணுகிடக்க ஒண்ணை பேசப்படாதுதான், அம்மா!'' என்று வருந்திஞள் சுமதி. காப்பி ஆறிவிடப் பொகிறதென்று மாலையில் சொன்னதற்கு, என்னென் னவோ கூறவில்லையா சுந்தர்?

"சரி, சரி, போய்ச் சாப்பாடு போடு; உன் கழுத்திலே மூணுமுடிச்சுப் போட்டுப்பிட்டா, அப்புறம் உன் அத்தான் உன்கிட்டே தன்னுடை உடல், பொருள், ஆவி அத்தனை யையும் மூணுமுடிச்சுப் போட்டு ஒப்படைச்சுப்பிட மாட்டாங்களா?...ம், கிளம்பு. சுமதி'' என்று தூண்டி விட்டாள் அம்மா.

அறையை மிதித்தாளோ, இல்லையோ, தீயை மிதித்தவ ளாகத் தடுமாறிஞள் சுமதி.

சுந்தர் விம்மியவாறு தனக்குத்தானே பேசிக்கொண்டி ருந்தான்: "சுசீ, அப்பவே நான் ஒரு பேச்சுக்குச்

சொன்னேன்; அதோட உண்மை உனக்குப் புரியல்லே; எனக்கும் விளங்கல்லே. 'உன்னை உரிச்சு வச்சாப்பிலே ஒரு பெண் குழந்தை பிறந்திருந்தால், என்னோட மனசுக்கு ஒரு ஆறுதலாக இருந்திருக்குமோன்னு இப்போது தோணுது' அப்படின்னு சொன்னேனே · நான்?...என் ஆசைப்படி நடந் திருந்தால் உன்னைப்போல ஒரு பெண்ணை நீ பெற்று எனக்குத் தந்திருந்தால், நான் அந்தப் பெண்குழந்தையில் உன்னை அல்லும் பகலும் தரிசனம்.செஞ்சு இன்றைக்கு எத்தனையோ ஆறுதலை அடைஞ்சிருப்பேனே?...ஐயையோ, சுசீ!''

அத்தான் சுந்தரின் கண்ணீர்ப் பூக்களைப் பூ விரல்களால் கொய்து நுகர்ந்தாள் மைத்துனி சுமதி. முதுகுப் பக்கத்தி லிருந்து முன்பக்கம் வந்து நின்றாள். ''அத்தான், உங்களோட நேர்மையான ஆசையும் நியாயமான கனவும் பலிக்கிற காலம் நெருங்கிகினு இருக்குதுங்க; நான் உங்களுக்குப் பெண்ணைப் பெற்றுத் தந்திடறேனுங்க, அத்தான்! அக்கா வந்து என் வயிற்றிலே பிறக்கப் போகுதுங்க! அப்புறம் சதாசர்வ காலமும் நீங்க அக்காவையே பார்த்துகிட்டே இருக் கலாமுங்க, அத்தான்!'' என்று அழுத்தமாகக் கூறினாள்.

சுமதியை விழுங்கி விடுவதுபோன்று ஊடுருவிப் பார்த்தான். ''நிஜமாகவா சுமதி?...நான் என் சுசீயைத் திரும்பவும் தரிசிக்க முடியுமா? அப்படியானால் நான் பாவி யல்ல; அதிர்ஷ்டக் கட்டையும் அல்ல!'' என்று உருகிக் கரைந்தான். ''அப்படியானால், நம்ப கல்யாணத்துக்கு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாகத் தேதி வைக்க ஏற்பாடு பண்ணிப்பிடு, சுமதி,'' என்று வேண்டிக் கொண்டான் சுந்தர்.

சுமதிக்கு வெட்கமான வெட்கம்.

சொல்லிவைத்த விதமாக, அப்போது பிரம்மஸ்ரீ ஸோமாஸ்கந்த சாஸ்திரிகள் கம்பீர மிடுக்குடன் வந்து சேர்ந்தார்; ''உங்க கல்யாணத்துக்குப் பங்குனி பதினைந்து

ரொம்ப பேஷாய்ப் பொருந்தியிருக்கு; உங்க ரெண்டு பேருக்கும் ஆண்டவன் தீர்க்காயுசையும் சகல சௌபாக்கியங்களையும் கொடுப்பன்!'' என்று சுந்தர்—சுமதியை ஆசீர்வாதம் செய்தார்!

''நம்ப கல்யாணத்துக்கு வள்ளிசாக நாற்பதுநாள் இருக்கே?...'' என்று கண்ணைச் சிமிட்டினான் சுந்தர்.

சுமதி உணர்ச்சி வசப்பட்டுப் புன்னகை பூத்தாள்.

சுசீயின் அழகான வதனத்தில் ஆனந்தம் கொடிகட்டிப் பறக்கிறது!...

பதினைந்து

# சுஜாதாவும் குமாரும்

நாளைக்குத் திருமணம்!...

குழந்தைக்குக் கொண்டாட்டம்; பிஞ்சுக் கைகளையும் குஞ்சுக் கால்களையும் அலைவீசினாற்போன்று வீசியபடி கும்மாளம் போட்டது.

எதிரும் புதிருமாக ஆளுக்கொரு கூடைநாற்காலியில் அமர்ந்து குழந்தையை ரசித்துக் கொண்டிருந்த சுந்தருக்கும் சுமதிக்கும் உண்டான களிப்பு இவ்வளவு அவ்வளவு அல்ல!— இருக்காதா, பின்ன?

"ராஜாவுக்கென்ன, இன்னிக்கு இத்தனை குதூகலம் பீச்சியடிக்குது?" என்று சுமதியைக் கடைக்கண்ணால் அளந்த வண்ணம், வினவினான் சுந்தர்.

"நமக்குக் கலியாணம் ஆகப்போகுது இல்லீங்களா? நம்மோட சந்தோஷம் நம்ப பிள்ளைக்கும் இருக்காதுங்களா, அத்தான்?" என்று தத்துவார்த்தமாகப் பதில் அளித்தாள் சுமதி.

"அப்படின்னா...?" தொடர எண்ணிய பேச்சுக்குத் தொடர்சேர்க்க முடியாமல் திண்டாடினான் சுந்தர்.

சுமதி தவித்துப்போனுள். "என்னுங்க, அத்தான்?... அப்படினுன்னு சொல்லி, அத்தோடு நிறுத்திட்டீங்களே?" என்று துருவிக்கேட்டாள் சுமதிக்கன்னி.

"தன்னோட அம்மா செத்துப் போயிட்டதனுலே, அந்த இடத்துக்கு நீ வரப்போகிற துப்பு நம்ப ராஜாவுக்குத் தெரிஞ்சிருக்க நியாயமில்லேதானே, சுமதி?" பிசிறு தட்டிய தொனியில் சோகம் ஆதார சுருதியாக ஒலித்தது.

வீணே மீட்டினுற்போன்று, 'டங்' கென்று அவளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை; தெரியவும் இல்லேதான். ஆனுலும், தன்னுள் பொங்குவிரி காவிரியாக, நுங்கும் நுரையும் சுழிக்க ஓடிக் கொண்டேயிருந்த அசல் தாயன்பும் தாய்ப் பாசமும் அவளுக்கு விடை சொல்லிக் கொடுக்காமல் இருக்குமா? "அத்தான், என் அக்கா செத்துப் போனதால், அந்த இடத்துக்கு நான் உரிமையோடவும் உறவோடவும் வந்து சேர்ந்திருக்கிற விவரம் நம்ம ராஜாக்கண்ணுக்குத் தெரிஞ்சிருக்குமோ, என்னவோ?—அந்த உண்மை எனக்குத் தெரியாது. ஆனுல், என்னேத் தன்னோட அம்மா என்றுதான் நம்பராஜா நம்பி அங்கீகரிச்சிருக்கான்; அந்தத்தர்மத்தையும் நியாயத்தையும் சத்தியத்தையும் என்னுலே திரிகரண சுத்தியாக உணர முடியுதுங்க, அத்தான்! தன்னேப் பெற்ற அம்மாவை என்னோட உருவிலே அந்தக் குழந்தை கண்டு ஆறுதல் அடையாமல் இருந்திருந்தால், இந்நேரம் குழந்தை ஏங்கி ஏங்கி உருக்குலேஞ்சு போயிருக்காதுங்களா? பிறந்த அன்றிலிருந்து இன்று பரியந்தம் ராஜாவை என்னோட குழந்தையாகவே மதிச்சு வருகிறது எத்தனே உண்மையோ, அத்தனே உண்மைதான், குழந்தை என்னேத் தன் சொந்தத் தாயாகவே மதிச்சிருக்கும் என்பதும்!...இல்லீங்களா, அத்தான்?" பேச்சை நிறுத்தினுள் சுமதி.

"வாஸ்தவந்தான், சுமதி, வாஸ்தவந்தான்!" ஆமோதித்தான் சுந்தர். விம்மல் தொடர்ந்தது: "அதோ பார், சுமதிப் பெண்ணே!—உன் அன்புத் தெய்வம் சுசீ உன்னோட பேச்சை அங்கீகாரம் செஞ்ச புன்னகை செஞ்சுக்கிட்டு இருக்காளே!"

என்று நாத்தழுதழுக்கக் கூறியவாறு, சுசீலாவின் உருவத்தைச் சுட்டிக் காட்டினன் சுந்தர்.

சுந்தர் சொல்வது மெய்தான்.

அன்புத் தங்கையின் ஆத்மார்த்தமான சத்தியப் பேச்சைப் பூரணமாக அங்கீகரித்துத்தான் சுசீலா அத்துணை பான்மையுடன் புன்னகை புரிந்து கொடிருக்க வேண்டும்!

கூப்பிய கரங்களுடன் ஓடிப் பாய்ந்த சுமதி, "அக்கா!" என்று ஓலம் பரப்பியவளாகச் சுசீயின் திருவுருவப் படத்தின் திருச்சந்நிதானத்தில் அப்படியே நெடுஞ்சாண்கிடையாக விழுந்தாள்! "அக்கா, நம்ம ராஜாவுக்கு நீ எப்படி அம்மாவோ அதே கணக்கிலே, நானும் அம்மா என்கிற நல்ல எண்ணத்தை எந்தவிதமான பாகுபாடும் இல்லாது, எப்போதுமே உணரக் கூடிய ஒரு ஞானத்தை எப்போதுமே கொடுத்திடு!... "என்று நெஞ்சம் நெக்குருகப் பிரார்த்தித்தாள் சுமதி.

சுந்தரின் மெய்சிலிர்த்தது; கண்கள் குளமாயின; உள்ளம் புயல் அடங்கிய ஆழியென ஆர்ப்பரித்தது; இரண்டு தோள்களிலும் இரண்டு கைகளைக் கொடுத்து சுமதியை மென்மைப் பண்பு பொழிந்திட தூக்கி எடுத்து, நெஞ்சோடு நெஞ்சாக இறுக்கமாக அணைத்து ஆரத்தழுவிக் கொண்டான். "சுமதி, உன்னுடை பிரார்த்தனை நியாமானது; நேர்மையானது; நிச்சயம் பலிச்சிடும்! ராஜாவுக்குச் சுசீ மாதிரி நீயும் அம்மா தான்! ராஜா உன்னையே தன் அம்மான்னு இப்ப நினைச்சிருக்கிற மாதிரியே எப்பவும் நினைச்சிக்கிட்டு இருப்பான்! உண்மையும் அதுவேதானே?...இன்னொரு உண்மையையும் மனசைத் திறந்து இப்ப சொல்லிப்பிடறேன்; என் வரையிலும் சுசீயும் நீயும் ஒண்ணுதான்! இந்தச் சத்திய நெறியை நானும் ஒருபோதும் மறக்க மாட்டேன்...நம்ப தமிழ்ச் சமுதாயத்துப் பெண்களுக்கு மத்தியிலே நீ ஒரு அபூர்வப் பிறவி! என்னைக் காட்டிலும் ஊதுவத்திக்குத்தான் உன் அருமையும் பெருமையும் துலாம்பரமாகத் தெரியும். நான் வெறும்

மனிதன்; ஆனாலும், கொடுத்து வச்சவன்; உன்னை எடுத்துக்கப் போறேனே!'' தேம்பலானான் சுந்தர்.

சுந்தரின் அன்புப் பிடியினின்றும் மெல்ல மெல்ல—மெள்ள மெள்ள விடுதலை பெற்றாள் சுமதி. அன்பான அத்தானை இதயத்தால் பார்த்தாள். ஈரம் கசிந்திருந்த கைகளைத் தூக்கி, சுந்தரின் நனைந்திருந்த இமைகளைத் துடைத்தாள்; தோள்ப் பட்டையின் இடது புறத்தில் முந்தானையை நாணத்துடன் வளையோசை விளையாடப் போட்டுக் கொண்டாள்; சிவப்புக்கல் மூக்குத்தி கண்சிமிட்ட மறுபடி அத்தானை நோக்கினாள். சுந்தரின் பார்வை அவளை என்னவோ செய்தது; 'அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்' பாடல் அவளது பூவை மனத்தில் பூமணம் ஆயிற்று. இப்போது அவளுக்குப் புதுமையான; வெட்கம் வந்து விட்டது—புரட்சிக் கோலத்தில்! ''அத்தான், நானும் கொடுத்து வச்சவதான்; அதனாலேதான், நான் உங்களை எடுத்துக்கிடப் போறேனாக்கும்!'' உருக்கமாகப் பேசினாள் சுமதி. உதய சூரியனின் அழகொளியில் கண்ணீர் முத்தங்கள் மின்னிப் பொலிகின்றன.

அவர்கள் இருவருக்கும் நடுவில் தொட்டிலில் இதுவரை 'கம்' மென்று கிடந்த குழந்தை இருந்திருந்தாற்போல், சிரிக்கத் தலைப்பட்டது. கைகளை நீட்டி நீட்டி விளையாடியது; விளையாட்டுக் காட்டியது.

''உன் மகனுக்குத் தன் அம்மாவைத் தேடி வத்திடுச்சு,'' என்றான் சுந்தர்.

தாயின் அரவணைப்பில் ராஜா கட்டாயம் சொர்க்கத்தைக் கண்டிருப்பான்!

''சுமதி......சுமதி!''

''என்னங்க?''

''ஒரு ரகசியம், தெரியுமா?''

''சிதம்பர ரகசியமா, அத்தான்?''

''ஊஹூம்; இது ராஜா ரகசியம்!''

"சொல்லுங்க, சொல்லுங்க!"

"உன்னையும் என்னையும் போலவே நம்ப ராஜாப் பயலும் கொடுத்து வச்சவன்தான்! அதனுலேதான் அவன் நம்ப ரெண்டு பேரையுமே எடுத்துக்கிட்டான்!"

"ஆமாங்க, ஆமாங்க! நம்ப ராஜா வெறும் ராஜா இல்லே; இந்த நாட்டு ராஜாவாக்கும்! ராஜாவிலேயும் ராஜா இளைய ராஜா இல்லீங்களா? ராஜாக்கண்ணு அதிர்ஷ்டக் காரக் கண்ணுதான்!" இரண்டாவது தவணையாக இப் போதும் ஆயிரம் கட்டி முத்தங்களைக் கெட்டியாக எண்ணிக் கொடுத்துக் கொண்டிருந்தாள் சுமதி.

"சுமதி!......"

"சொல்லுங்களேன்!"

"ராஜா, ராஜான்னு கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பழகிப் போயிட்ட இந்தப் பெயரையே நம்ப ராஜாவுக்கு நிலைக்க வச்சிட்டா, என்னவாம்?"

"ஓ! தாராளமாக! நம்ப ராஜா எப்பவுமே நம்மளுக்கு ராஜாவே தானுங்களே?... அதுமட்டும் இல்லீங்க; சுசீ செல்வ மாக வச்சுச் செல்வமாகக் கூப்பிட்ட பேராச்சுங்களே ராஜா என்பது!..."

ராஜாவுக்கும் அந்தப் பெயர் இஷ்டம்தான் போலும்!— ராஜகம்பீரத்தோடு மறுபடியும் சிரிக்கின்றான்!...

நாற்பது நாட்கள் எப்படித்தான் அத்தனை வேகமாகப் பறந்தோடினவோ?

தெய்வநாயகிக்கு வேலை நெட்டி வாங்கியது. அன்றாடம் நடைபெற்றாக வேண்டிய வீட்டு அலுவல்களோடு கலியாண வேலைகளும் சேர்ந்து கெண்டன. கல்யாணம் அப்படியொன் றும் விசேஷமாகவோ, தடபுடலாகவோ ஏற்பாடு செய்யப் படவில்லைதான்; என்றாலும், சொந்த பந்தம், உறவு முறை என்று சுருக்கிப் பார்த்தாலும்கூட, இருபது—இருபத்தைந்

தென்று பெயர்ப் பட்டியல் விரிந்துவிட்டது. திருமணத்தைக் கடைசிப்பட்சமாகக் குடியிருக்கும் வீட்டிலாவது நடத்தினுல் தான் தேவலாம் என்பது தெய்வநாயகியின் ஆசை. ஆனுல் மாப்பிள்ளே, "இது எனக்கு இரண்டாம் கல்யாணம், சுமதிக்கு இது முதல் கல்யாணம் என்கிறதும் எனக்குத் தெரியும். என் அருமைச் சுசீ தெய்வமாக உத்தரவு போட்டு நடத்தி வைக்கப்போற இந்தக் கலியாண விசேஷம், ரொம்பவும் எளிமையாக நடந்தால் போதும் என்கிறதுதான் என் அபிப்பிராயம்; ஆகச்சே, திருவேற்காட்டில் கருமாரி அம்மன் கோயிலிலே கல்யாணத்தை நடத்துறதுதான் உசிதம்" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டபின், தெய்வநாயகி வாயைத் திறக்க முடியுமா?— பேசவும் சாப்பிடவும் மாத்திரமே அவள் வாயைத் திறந்தாள்.

சுமதியையும் சும்மா சொல்லிவிடக் கூடாது. குழந்தைக்கு நேராக ஆகிவிட்ட அத்தானுக்கு வேண்டிய பணிவிடைகளேச் செய்வதில் பாதிப் பொழுது கழிந்துவிடும்; மீதிப் பொழுதுக்குப் பதில் சொல்லத்தான் இருக்கவே இருக்கிருன் ராஜா! அவனுவது அப்பா மாதிரி வீம்பு பிடிக்காகமல், வம்பு பண்ணுமல் இருக்கிருனு? அதுவும் இல்லே.

மிச்சம் மீதியிருந்த அழைப்புகளில் ஒன்றை எடுத்தாள் சுமதி; மறுபடி படித்தாள் :

"......நிகழும் இராட்சச ஆண்டு பங்குனித் திங்கள் எட்டாம் நாள் (21-3-1976) ஞாயிற்றுக்கிழமை சுக்கில பட்சம், தசமி திதி, மகம் நட்சத்திரம் அமிர்த யோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் காலே மணி ஏழுக்கு மேல் ஒன்பதுக்குள் ரிஷப லக்னத்தில் எனக்கும் திருநிறைச் செல்வி சுமதிக்கும் திருவேற்காடு ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் சந்நிதியில் நடைபெறும் திருமணத்திற்குத் தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து எங்களே வாழ்த்தியருள வேண்டுகின்றேன்.

தங்கள் அன்புள்ள,
இராம. சுந்தர்."

அழைப்பை வைத்து விட்டுத் திரும்பினாள் சுமதி. புதிய புதிய உணர்வுகள் உள்ளத்தில் ஆர்ப்பரிக்கத் தொடங்கின. புதிதாய்ப் பிறந்திருப்பவளாயிற்றே?

கோடை வெய்யில் சோடை போகாமல் சுட்டெரிக்கிறது!

அம்மா ஆட்டுக்கால் 'சூப்' தயாரிப்பதில் முனைந்திருந்தாள்.

சுமதிக்கு அத்தி பூத்த பாவனையில் வந்திருந்த கடிதம் ஒன்று அவள் கையிலேயே கிடைத்ததென்பது அபூர்வம் தானே? சென்னை மாநகரம் அனுப்பிய அவளது பதவி விலகல் கடிதத்தைத் தஞ்சையம்பதி ஏற்றுக் கொண்டு விட்டது. அழகான பெருமூச்சு அழகாகவே வெளியேறியது. அத்தானைத் தேடி வந்தது; வந்த தகவலைச் சொல்லத் தேடி ஓடினாள்.

இப்போதெல்லாம் சுமதி இல்லாத நேரங்களில்—ராஜா ஓய்வு கொடுத்த வேளைகளில் சுந்தருக்குக் காந்தித் தாத்தாதான் துணை.

ஆர்வத்தோடும் அதிசயத்தோடும் எதையோ ரசித்துச் சீரணித்துக் கொள்ள முயன்று கொண்டிருந்தான் சுந்தர்.

எட்டிப் பார்த்தாள்.

படித்துக் காட்டினான்.

"...ஒரு பெண் தன்னை அறியாமலோ அல்லது தன்னை மீறியோ களங்கப்பட நேருமேயானால், அத்தகைய அபலைப் பெண்களுக்குப் பாரத சமுதாயம் அடைக்கலம் கொடுக்க வேண்டியதே முதல் கடமையாகும்!"

காந்தி மொழி அவளது கன்னி மனத்தில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. "சமூகத்திலே அபலைகளாக ஆக்கப்படும் நிரபராதிப் பெண்கள் பேரிலே மகாத்மாவுக்குத்தான் எத்தனை பச்சாத்தாபம்! பார்த்தீங்களா, அத்தான்?" என்றாள் சுமதி.

"அதனுலேதான், அவர் எல்லா மட்டத்திலேயும் மகாத்மா ஆகிவிட்டார்!...அன்பு யாரையுமே பழி வாங்காது அப்படின்னு சத்திய சோதனையிலே ஒரு இடத்திலே சொல்லி யிருந்ததை நேற்று நான் சொல்லிக் காட்டலையா, சுமதி?"

"ஓ. அப்படீங்களா?"

"நீயும் சத்திய சோதனையைப் படிக்கவேணும், சுமதி!" என்று வேண்டிக் கொண்டான் சுந்தர்.

அதற்குள், சுமதியின் கவனம் திசைமாறியது.

ஆட்டுக்கால் சூப் வாசனை உள்ளேயிருந்து வெளியே வந்தது.

அத்தானுக்காகத் தயாராகி விட்டது.

நெருங்கிய உறவினர்கள் சிலர் காலையிலேயே வந்து விட்டார்கள். சுமதிக்கு உறவு; அரிமளத்திலிருந்து வந்தவர்கள். சுந்தரின் சார்பில் உறையூரிலிருந்து சித்தப்பன்காரர் வந்திருந்தார்.

எல்லாம் சரி.

ஆனுல், சுமதி எதிர்பார்த்திருந்தவர்கள் இன்னமும் வரக் காணேம்!

ஒன்று : சுஜாதா—குமாரி.

இரண்டு : குமார்—மிஸ்டர்.

இவ்வாறு பத்திரிகைக் கதைகளில் வருவது மாதிரி இனம்பிரித்து, பருவம் பகுத்துத் தன்னுள்ளே சிந்தித்துச் சொல்லிப் பார்த்தபோது, வேடிக்கைச் சிரிப்பொன்று வெடிக்காமல் தப்பவில்லை. இவர்கள் இரண்டு பேரும் சேர்ந் தாற்போல வராமல் இருக்கிருர்களே இன்னும்?—சேர்ந்தாற் போல எவ்வாறு வரக்கூடும்? சுஜாதா திருச்சியிலிருந்தும், குமார் தஞ்சையிலிருந்தும் வரவேண்டும். எதிரெதிரான

திசைமுனைகள். இருமுனைப் போராட்டத்தில் ஈடு கொடுக்க முடியாமல் புழுங்கினாள் சுமதி. ஊம்! போட்ட லெட்டருக்குப் பதில் போடக்கூட மனம் இல்லாமற் போய்விட்டது, குமாருக்கு. இந்நிலையில், அக்காவின் சாவுக்கு தானாகவே வந்து போனவன், ஆறுதலுக்காகவேனும் ஒரு கடிதம் எழுதுவானென்று எதிர்பார்ப்பது நியாயமல்ல வென்பதையும் அவள் அறியாமல் இல்லைதான்; ஆனாலும், சிறு பிள்ளைத்தனமாக இந்த மனம் சபலப்பட்டுத் தொலைக்கிறதே?—என்ன செய்யட்டும்?—அது போகட்டும். இப்போது குமாருக்கு அவனுடைய திருமணம் சம்பந்தமாக ஓர் ஏற்பாட்டைச் செய்து வைத்துக் கொண்டு, கடிதம் போட்டால், அதற்காவது 'உண்டு, இல்லை' என்று ஒரு வரி—ஒரே வரி எழுதமாட்டானா?...முன்பெல்லாம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர் தெப்பத் திருவிழாவிற்கு அரிமளத்துக்கு ஒரு நாள் லீவில் போனால்கூட, அவள் அங்கு போய்ச் சேருவதற்குள் குமாரின் கடிதம் அங்கே அவள் வரவுக்காகக் காத்திருக்குமே?...காதலை இழக்க நேர்ந்தால், மனத்தையுமா இழந்து விடுவது?—'நல்ல மனிதர்!'

"சுமதி! சுமதி!"

பட்டணம் பறிபோன மாதிரி அலட்டுவது அம்மா தானோ?—அம்மாதான்! இப்படி நிர்த்தாட்சண்யமாகவும் மூர்த்தண்யத்தோடும் அழைப்பதற்கு அம்மாவுக்கு மட்டுந்தான் தெரியும். அத்தான் நான் அறிந்தவரை—அக்கா வாழ்க்கை நடத்திய அந்தக் காலத்திலும் சரி,—அக்கா தெய்வமாகி இப்போது எங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்ற இந்தக் காலத்திலும் சரி, ஒருநாளும் குரல் அதிரக் கூப்பிட்டதே கிடையாது. அத்தானுக்கென்று ஒரு பான்மை உண்டு; பாங்கும் உண்டு; பதமும் கூட உண்டுதான்! ஆனால், சாது மிரண்டால் காடு கொள்ளாது என்ற உச்சவரம்பும் அவருக்குச் சொந்தம்தான்! ஓடினாள் சுமதி; ராஜா நெஞ்சிலும் நினைவிலும் ஆடிவரும் தேனாக ஆடிக் கொண்டிருக்க, ஓடினாள். போன வாரம் திடீரென்று வாந்தி பண்ணினான்;

வயிற்றுப் போக்கும் கண்டது, பிள்ளை சோர்ந்து போய் விடவே, தம்புச் செட்டித் தெருவில் இருந்த டாக்டர் யசோதாவிடம் குழந்தையைக் காண்பித்தார்கள். டாக்டரிடம் உள்ள நாடிக்குழல் அற்ப சொற்பமானதல்ல; எமன் கையிலிருப்பதாக வர்ணிக்கப்படும் பாசக் கயிறு உயிர்களை வாங்குமாம்; இதுவும் ஒருவகையில் பாசத்தின் கயிறு போலத்தான். ஆனால், உயிர்களைத் திரும்பக் கொடுக்க வல்லது. ராஜா தப்பி விட்டான்! தாயே, அங்காள பரமேஸ்வரி!...

ராஜா பாலூட்டியிலிருந்து சப்பிய பாலை உள்ளே இறக்காமல் வாயில் பீச்சியடித்துக் கொண்டிருக்கிறான்!

சுமதிக்குக் கலவரம் நீங்கிய அமைதி ஏற்பட்டபோது, அவளால் சிரிப்பைத் தவிர்க்க முடியவில்லைதான். பிள்ளையை ஏந்தினாள் ஏந்திழை. ஆகாரம் புகட்ட ஆரம்பித்தாள்; ஒரு தரம் ரப்பரைக் குதப்பியவன், மறுமூச்சில் பாலைச் சுவைத்துப் பருகத் தொடங்கினான். அவளுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. 'அப்டின்னா ராஜாவுக்கு அம்மாவையும் என்னையும் வித்தியாசப் படுத்திப் பார்க்கப் புரிஞ்சிருக்குதுன்னு அர்த்தமா?...அதுசரி; ஆனால், எனக்கும் அக்காவுக்கும் அவனாலே வேறுபாடு காண முடியுமா? எப்படி அவனாலே அந்த உண்மையைப் புரிஞ்சுக்கினு தெளிய முடியும்? தன்னைப் பெற்ற அம்மா வேறே, நான் வேறே என்கிற நியாயத்தை அவன் அறிஞ்சுக்கிட ஆரம்பிச்சா...!—ஐயையோ, நினைக்கவே குலை நடுங்குது!...அக்கா, நீயும் நானும் ஒண்ணேதானே?—நீயும் நானும் ஒண்ணுதான்னு நம்ப ராஜாக்குட்டிக்குப் படிச்சுக் கொடுத்திடு, அக்கா!' நெஞ்சு ஏறி ஏறி இறங்கியது. குழந்தையைக் கனிவுடன் நோக்கினாள். அது கைகொட்டிச் சிரிக்கக் கண்டதும், தலை கால் புரியாத ஆனந்தம் ஏற்பட்டது. 'ஆஹா!...என்னையே தன் தாயாராக நினைச்சிருக்கக் கண்டுதான், என் தங்கம் ராஜாவாலே இவ்வளவு அமர்க்களமாகச் சிரிக்க முடியுது!' மார்பகத்தில் திடீரென்று ஓர் இன்ப ஸ்பரிசம் படர்வதை உணர்ந்ததும், திடுக்கிட்டாள் சுமதி. ராஜா விளையாடு

கிருன்!—'ராஜா என் கிட்டே பால் குடிக்கத் தவிச்சுத் தவம் கிடக்கிருன், பாவம்!'...அந்தப் பாக்கியம் அவனுக்கு எப்போது கிடைக்கப் போகுதோ?

அம்மா எதிரே நின்ருள். "என்னடி சுமதி, இன்னமுமா உன் கனவு கலேயல்லே?" என்று அதிகாரமாகக் கேட்டாள். மகள் முகம் மாறித் தன்னைத் திரும்பிப் பார்த்ததும், "தூங்குற பாப்பாவைக் கிடத்திட்டு, உன் புருஷனை—அத்தானை அழைச்சிட்டு வந்து சோற்றைப் போடுடி, சுமதி;" என்று கெஞ்சினுள் தெய்வநாயகி.

அவ்வாறே பணிந்தாள் சுமதி. 'இன்னமுமா உன் கனவு கலேயல்லே?'—அம்மா என்ன பொருளில் அப்படிப் பறைந் தாள்? சாதாரணமாகப் பேசினுளா? இல்லே, பொடி வைத்துப் பூடகமாகச் சொன்னுளா? நான் இனி ஏன் கனவு காணப்போகிறேன்? என் கனவுதான் பலித்து விட்டதே?... நாளேக்கு விடிந்ததும் விடியாததுமாகப் பலிக்கப் போகிறதே?...ஒருவேளே, பழைய பொய்க் கனவைக் குத்திக் காட்டியிருப்பாளோ?—ஊகூம், அம்மா நல்லமாதிரி. மின்னுமல் முழங்காமல் இடி இடிப்பது மாதிரி! சம்பூர்ண இராமாயணத்தில் பார்த்த ஒரு காட்சி அவள் மனத்திரை யில் படம் விரித்தது. 'பாவம், சீதை!...இருந்திருந்து கேவலம் ஒரு பொய் மானுக்காக அப்படி ஆசைப்பட்டிருக் கிருளே? அந்த ஆசைதான் அவளுக்கு வாய்த்த விதியாக அமைந்ததோ?'—தூசு விழவில்லே, கண்களில்! ஆனுல் கண்கள் எரிந்தன!—பெருமூச்சை நெட்டித் தள்ளினுள்; அடுப்படிக்கு அடிபெயர்ந்தாள்; அத்தானுக்குப் பசி தெரியாது; போய் ஞாபகப் படுத்தவேண்டும்.

சாப்பாடு தயார்.

சுந்தர் சாப்பிடத் தயார்.

"அத்தான், முதலிலே சூப்பைக் குடியுங்க; அப்பறம் ஆறிப்போயிடும்; ஆறினுல்தான் உங்களுக்குப் பிடிக்கா

துங்களே?'' என்று பாசத்தின் பரிவுடன் சொல்லிக் கொண்டே, சூப் நிரம்பிய மங்குக் கோப்பையை அன்பின் ஆதுரத்துடன் அவனுடைய வாயில் வைத்தாள் உரிமைக் காரி. அவள் பயந்ததுபோல் அவன் இடக்காக எதுவும் சொல்லாமலிருந்தது அவளுக்கு எவ்வளவோ ஆறுதலை வழங்கியது. பேச்சு மூச்சில்லாமல், ஆனால் மூச்சின் பேச்சு மட்டிலும் ஒலிக்க, எதிரொலிக்க அவன் மலர்ச்சியுடன் சூப்பை ஒரேவாயில் குடித்து முடித்த அதிசயம் அவளை ஆனந்தக் கடலாடச் செய்தது. ''சரி; சோற்றைப் பிசை யுங்க; கறிக் குழம்பைச் சேர்த்து வசமாகப் பிசையுங்க, அத்தான். அடடே, ஆட்டுக் கொழுப்பு ஆறிப்போனல் கெட்டிபாய்ஞ்சிடும். அதை முதலிலே வாயிலே போட்டுக் கங்க!'' என்று யோசனை சொன்னாள்.

யோசனை செய்யாமல் ஆட்டுக் கொழுப்பை ருசிபார்த்துச் சுவைத்தவனாக, ''சோறு வேறே சாப்பிட வேணுமா, சுமதி?'' என்று சவலைக் குழந்தையின் ஏக்கத்துடன் கெஞ்சினான் உடையவன்.

''சோறு சாப்பிட்டாத்தான் உடம்புக்கு பலம் வரும்!''

''அப்படியானா, இப்ப தின்னேனே கொழுப்பு, அதாலே ஒரு புண்ணியமும் இல்லையா?''

''இல்லாமல் என்ன? ஆனாலும், சோற்றுக்கென்று ஒரு தனிப் பலம் உண்டாக்கும்!''

''இருக்கிற பலம் போதுமே, சுமதி?''

''அப்படீங்களா?''

''பின்னே?...''

''ஐய்ய!...போதும், போதும்...விட்டுடுங்க!...ராஜாதான் தூங்குறான்; அம்மா தூங்கல்லே!''

அவன் வெட்கம் அவள் வெட்கத்தில் காற்று வாங்கியது.

‘‘இன்னும் ஒரு பிடி சோறுங்க?’’

‘‘அம்மாடியோவ்! வயிறு வெடிச்சிடும்.’’

‘‘ஐயையோ, வயிறு வெடிச்சிட்டால், அப்பறம் என் கதி என்னுவது? ராஜா கதி என்னுகும்?...’’

எதிர்த் தரப்பில் விளையாடிய அன்பு அவனைத் திக்குமுக்காடச் செய்திருக்கலாம். ‘‘சும்மா விளையாட்டுக் கோசரம் சொன்னுல், இப்படியா ஒரு மறத்தமிழச்சி பயந்து சாவாள்?...ஐயையோ, சாகவேணும்! இப்படியா பயப் படுவாள்?’’ என்று நையாண்டி செய்தான் சுந்தர்.

‘‘எனக்கென்னமோ,என் வாழ்க்கை ஒரு சொப்பனமாட் டம்தான் சதா சர்வகாலமும் தோணிக்கிட்டு இருக்குதுங்க, அத்தான்!’’

‘‘இருக்கட்டுமே! சொப்பனம் என்கிறது மனசோட நினைவின் பிரதிபலிப்புத்தானும்! காலம்பறப் படிச்சேன், சுமதி?’’

‘‘ஓஹோ!’’ அதிசயம் பாலேடாக இனித்தது. ‘‘இந்தாங்க, கடியுங்க!...’’ என்று பேச்சைப் பாதியில் நிறுத்திஞள் சுமதி.

அதற்குள், அவன் அவள் கையைக் கடிக்க முற்படுவதற்குள் அவள் சாகசத்தோடும் சாதுர்யத்துடனும் பிளேட்டில் ஆட்டுக்கால் எலும்புத் துண்டங்களைப் போட்டு விட்டாள்.

அளவுக்கு மீறினுல், அமிர்தமும் விஷமாகலாம்! ஆனுலும் அவனுக்கு அமுதத்தையும் நஞ்சையும் பதம் பார்த்தும் பழக்கம் இல்லை; அளவுக்கு மீறினுல் அன்பு அமிர்தமாகு மென்ற யதார்த்த அனுபவம் அவனுக்குப் பெருமையாக இருந்தது, ‘சுசீ, எல்லாம் நீ இட்ட பிச்சையம்மா!.. கண்ணீர், சிரிப்பிலே கரைசேர்கிறது; கரைகிறது. ‘‘இனி நாம நம்மோட மண்ணுக்குத் திரும்பலாம்; ஆமா, குமா இன்னும்கூட வரவில்லையே?—என்ன சங்கதியென்றே

புரியல்லேயே?'' என்று நினைவுபடுத்திக்கொண்டு நினைவூட்டியவன் சாட்சாத் சுந்தர்.

"அதுதாங்க எனக்கும் மட்டுப்படக் காணோம்; பாவம், குமார்!—உடம்புக்கு வந்திடுச்சோ, என்னமோ?''

சுந்தர் அவளை உன்னிப்பாக உறுத்துப் பார்த்தவாறு, "குமாருக்கு உடம்புக்கு என்ன கேடு? உள்ளத்துக்குத் தானே கேடுவந்திச்சு?...பாவம், குமார்!'' என்று வருந்தினான்.

அத்தானின் இரக்கச் சிந்தை அவளுக்குப் புரியாதா?

"சுமதி, உன்னை ஒன்று கேட்டாகணும். நீயும் குமாரும் அந்தரங்கமாகவும் அத்யந்தமாகவும் ஒருத்தரை ஒருத்தர் காதலிச்சீங்க; ஆனால், அந்தக் காதல் ஈடேறல்லே. குமார்—மிஸ்டர் குமார் மனசொடிஞ்சு போயிட்டார். தர்க்க நியாயப் பிரகாரம், அதே ஏக்கம், அதே மனநோய் உன் பங்குக்கும் ஏற்பட்டிருக்கும்தானே, சுமதி?''

அவள் இப்போது சுந்தரை ஊடுருவி உறுத்துப் பார்வையிட்டாள். பிறகு, பேசலானாள்: "அத்தான், நீங்க சொன்ன மாதிரி குமாருக்கு—மிஸ்டர் குமாருக்கு ஏற்பட்டிருக்கிறது தான் மனநோய். ஆனா, எனக்கு ஏற்பட்ட காதல் தோல்வியிலே என் மனசு ஏக்கம் அடையாமல் இல்லைதான். ஆனாலும் அந்த ஏக்கத்தைத் துச்சமாக மதிக்கும்படியாகச் செஞ்சிட்ட புண்ணியம் அக்கா எனக்கு இட்ட அந்த ஆணையையே சேருமுங்க, அத்தான்!...அந்த ஆணைதான் எனக்கு எல்லாமாகத் தெரிஞ்சுதுங்க; அந்தக் கட்டளைதான் எனக்குச் சகலமுமாகத் தோணுச்சு; தோணுது; என் லட்சியக் கனவு தேவி கருமாரியோட கருணையினாலே—என் அன்புத் தெய்வம் சுசீயோட மகிமையினாலே நாளைக்கு பலிச்சிட வேளை பார்த்துக்கினு இருக்குதுங்க!...''

சுந்தர் ஸ்தம்பித்தான்.

"அத்தான், அன்னிக்குக் குமாருக்கு எழுதின லெட்டரை உங்க கையிலே காட்டினேனே, நினைப்பு இருக்குதுங்களா?

நான் எழுதினதை, நான் உணர்ந்து எழுதினதைத் திரும்பச் சொல்றேன். காதல் என்கிறது பொன்மான்கூட இல்லே!—அது ஒரு பொய்மான்!...என் திட்டத்துக்கு மாத்திரம் மிஸ்டர் குமார் ஒ. கே. சொல்லிவிட்டால், அப்பால், குமார் கட்டாயம் புனர் ஜன்மம் எடுத்திடுவாருங்க!—என்னை நம்புங்க, அத்தான்! ஆனா, ஒண்ணு. அவர் உயிரும் உடம்புமாக, நல்லபடியாக இங்கே வந்து சேரவேணும்!''

சுமதிதான் இப்படியெல்லாம் பேசுகிறாளா?

''குமார்தான் இதுவரை வரல்லே, உன் உயிர்ச்சிநேகிதி மிஸ் சுஜாதாவையும் காணோமே, சுமதி?''

''நல்ல காரியத்துக்கு நானூறு தடங்கல்னு ஒரு பேச்சுப் பேசுவாங்க, ஊர் உலகத்திலே! ஆனால், எந்தச் சூரியன் எங்கே மறைய மறந்தாலும், என் சுஜா கிளி இங்கே வந்து குதிக்க ஒருநாளும் மறக்கவே மாட்டாள், அத்தான்!''

சுந்தர் தொண்டையைக் கனைத்துக் கொண்டான்: ''சுமதி, உன் அக்கா என்னை உன் கையிலே ஒப்படைச்சதாட்டம், நீ குமாரை சுஜாதாகிட்டே ஒப்படைச்சால் தான், எனக்குப் பூரணமான அமைதி ஏற்பட வாய்க்கும்!''

சுந்தர் இப்போதுதான் கை கழுவுகிறான்.

தாம்பூலம் மடித்துக் கொடுத்தாள் சுமதி.

வாசலில் டாக்ஸி சத்தம் கேட்டது.

பாய்ந்தாள் சுமதி.

வீதியில் இரண்டு வாடகைக்கார்கள் நின்றன.

''வாங்க குமார்!...வாடி, சுஜா!''

பதினாறு

# ஒரு திட்டம் உருவாகிறது

இன்பக் களி துலங்க, ஆர்வத்துடிப்புடன் வரவேற்புக் கூறினாள் சுமதி. 'கோலமதர் விழிகள்' குதூகலத்தோடு துடித்தன; செம்பவள இதழ்களில் சிந்தூரச் சிரிப்புத் தவழ்ந்தது. நித்திய மல்லிகைப் பூவின் நீங்காத புனிதமும், பிறை நெற்றியில் பொலிந்த திருநீற்றுக் கீற்றும் அழகுக்கு அழகு செய்தன; அழகுக்கு அழகாகவும் அமைந்தன. இருவரையும் உள்ளே அழைத்துப் போனாள் அவள்.

முகப்பு வெளிக் கூடத்தில் குமாரும் சுஜாதாவும் அருகருகில் அமர்ந்தனர்.

பூங்காற்று சுகமாகவே வீசுகிறது.

மௌனம் மோனத்தவம் இயற்றியது.

திருமணத்திற்கு வந்திருந்த விருந்தினர் இருவரையும் இன்னமும் அறிமுகம் செய்து வைக்கவில்லையென்னும் உண்மையை உணர்ந்ததும், சுமதிக்குத் தவிப்பு மேலிட்டது; சிலிர்த்திட்ட பரபரப்புடன், "மிஸ்டர் குமார், இவள்தான் சுஜாதா; என் தோழி; உங்கள் சிநேகிதியும் கூட", என்று சுஜாதாவைக் குமாருக்குப் பழக்கப்படுத்தி வைத்தாள் சுமதி. பிறகு சுஜாதாவை நோக்கி, "இவர் குமார். உன் தோழர்;

என் சிநேகிதரும் கூட!'' என்று சுஜாதாவுக்கு குமாரை அறிமுகம் செய்து வைத்தாள் அவள்.

சுந்தர் மாப்பிள்ளை முறுக்கோடு வந்தான்; முகக்ஷவரம் செய்திருந்த முகத்தில் நூதனப் பொலிவு மின்னியது. ''வாங்க'', என்று இருவரையும் வரவேற்றான். சுஜதாவை அவனுக்கு இப்போது தெரிந்துவிட்டது. நல்ல பெண்மணி தான்! முகத்தைப் பார்த்தால் தெரியாதா?

சுஜாதா ஓரக்கண்ணால் குமாரை அளந்தாள்; பெண்மையின் நாணம் நயனங்களிலும் உதடுகளிலும் பாகம் பிரிந்தது. 'நல்லவராகவே இருக்கவேணும்!' குண நலத்தின் கணிப்பில் ஆறுதல் கனிந்திருக்கத்தான்வேண்டும். எதையோ பறிகொடுத்த ஏக்கம் குமாரின் முகத்தில் நிழலாடுவது போலத் தெரிவில்லையா?—இப்போது, அமைதியில் குழப்பம் எட்டிப் பார்த்தது. ஒருவேளை, சுமதியைக் காதலித்துத் தோற்றதால் ஏற்பட்ட தற்காலிகமான 'மனச்சடவை'யாக இருக்கலாமோ? சுமதி செய்யும் முயற்சியின் முடிவு தெரியட்டும்!—குமார் சொல்லும் முடிவும் தெரியட்டும்!—சுஜாதா சுயநினைவை ஆட்கொண்ட நேரத்தில், குமார் தன்னைக் கள்ளவிழிப் பார்வையால் ஒருமுறை பார்க்க மாட்டாரா என்று நம்பியிருந்தாள். ஆனால், அவன்—குமார் எங்கோ சூன்யத்தையல்லவா வெறித்துப் பார்க்கிறான்! திரும்பினாள். சுமதியைக் காணோம்!

மஞ்சள் வெய்யிலில், மோகினிச் சிற்பமாக, அணிமணி துலங்க வந்தாள் சுமதி. கையில் காப்பி இருந்தது; காப்பியில் 'ஆவி' பிரிந்தது. ஆளுக்கு ஒன்றாக நீட்டினாள்.

குமார் மாத்திரம் காப்பித் தம்ளரைத் தவறவிட்டான். என்னவோ ஒரு சிந்தனையில், ஏதோ ஒரு மன நிலையில் காப்பியை வாங்கியவனின் கைவிரல் சுமதியின் சுட்டுவிரலைத் தொட்டு தீண்டிவிடவே, அந்தத் தொட்டுணர்வில் விளைந்த அதிர்ச்சியால் வந்த வினை. வினை யாரை விட்டது? அவன் ஆடு திருடிய கள்ளனாக விழித்தான்; பேந்தப் பேந்த

விழித்தான்; விழி பிதுங்கவும் விழித்தான்; தலையை அவமானத்தால் தாழ்த்திக் கொண்டவன் மறுபடியும் தலையை உயர்த்த இரண்டொரு விநாடிகளே தேவைப் பட்டன; அவமான உணர்வுகளைத் தற்போது அவன் கழுவிக் கொண்டிருக்கலாம், அல்லது, அவ்வுணர்வுகளை அசட்டை செய்திருக்கலாம். அவன் பார்வையில் சுமதியோ, இல்லை, சுந்தரோ தென்படவில்லை. அதற்குள்ளாக, மீண்டும் சிந்தனையின் வசப்படலானான். களைதப்பிக் கிடந்த முகத் திலே சலனமும் அமைதியும் சதுரங்கம் ஆடின. கண்கள் கசிகின்றன. அருகிலிருந்த 'டேஞ்சர் சிக்னல்' கைப் பெட்டியில் இருதுளிக் கண்ணீர் சிந்திச் சிதறுகிறது!

மற்றவர்கள் காப்பியைக் குடித்துவிட்டுத் தம்ளர்களை எச்சரிக்கையுடன் தரையில் வைத்தனர்.

குமாருக்கு வெறும் காப்பியில் கூட ஏமாற்றம். அந்த ஏமாற்றம் அவனுடைய சோர்ந்த வதனத்தில் அழகாக எழுதி ஒட்டப்பட்டிருந்தது. எவ்வளவு கம்பீர அழகுடனும் மிடுக்கான ஆண்மையுடனும் துடுக்கான பாவனையுடனும் தஞ்சாவூரில் காணப்பட்டான் குமார்!—சமுதாயத் துரோகி, 'மகாத்மா' வேஷம் போட்டு மேடையில் ஏறிக் கூத்து ஆடி முடித்து வேஷத்தைக் கலைத்துக் கொண்ட மாதிரி ஏனோ அவன் இப்போது தோன்றினான்!—ஏன் அப்படித் தோன் றினான்?—நெஞ்சைப் பிசைத்து கொண்டான். பாவம், மனச் சாட்சி என்னவாயிற்றாம்?

''குமார், இந்தாங்க காப்பி; ஜாக்கிரதையாய் வாங்கிக் கணும் இந்தத் தடவை,'' என்று அபாய அறிவிப்புக் கொடியைக் காட்டி, காப்பிக் குவளையை நீட்டினாள் சுமதி. அவள் அவனை ஆதரவோடு, அனுதாபத்தோடு நோக்கினாள். தெரியாமல் செய்த தவற்றை—ஊஹூம், தெரியாமல் ஏற்பட்டு விட்ட தடுமாற்றத்தை அவள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்பது அவளது நெகிழ்ந்த பார்வையில் பளிச்சிட்டது. அத்தான் எப்படி எடுத்துக் கொண்டிருப் பாரோ?—சுந்தரின் பக்கம் திருஷ்டியைத் திசை மடக்கினாள்.

அவன் இயல்பான மன நிலையுடன் இருந்ததை அறிந்தாள்; புயலுக்குச் சந்தர்ப்பம் கிடைக்காமற் போனவரை நல்லது. உப்புச் சப்பில்லாத ஒரு சின்னஞ்சிறிய தடுமாற்றத்தையா அத்தானின் நல்லமனம்—பொன்மனம் மன்னிக்காமல் இருந்துவிடப் போகிறது?

குமார் எச்சரிக்கையோடு காப்பியை வாங்கி, எச்சரிக்கையோடு குடித்துவிட்டு, அதே எச்சரிக்கையுடன் காலிக் குவளையைத் தரையில் வைத்தான்.

சுமதிக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. காலிக் குவளையை எடுத்தபோது, அடுத்த வீட்டுக் கறுப்புப் பூனை சிதறியிருந்த காப்பித் துளிகளை நக்கியதை வேடிக்கை பார்த்தாள்; வாலை ஆட்டிக் கொண்டே ஓடிவிட்டது. ஒரு சொட்டுக் காப்பிக் குக்கூட நன்றியா?—வாசற்புறம் யாரோ கூப்பிட்ட குரல் கேட்கவே விரைந்தாள். தொழு நோய்ப் பிச்சைக்கார ஜோடி ஒன்று தம்பதி சமேதராக வாசலில் எழுந்தருளியிருந்த 'பசிக்கோலம்' அவளுடைய இரக்கச் சிந்தையைத் தொட்டிருக்க வேண்டும். சாதப் பானையில் மிஞ்சியிருந்த பழைய சோறு பூராவையும் அள்ளிப் போய்ப் போட்டாள். அவளுக்கு நெஞ்சு நிறைந்தது. அவர்களுக்கும்தான்!—நெஞ்சு நிறைய வாழ்த்திச் சென்றார்கள்!—நேருஜி துயரத் தோடு குறிப்பிட்டாற் போன்று, இந்தப் பசிப் பிரச்னை மரபு வழிச் சொந்தம் கொண்டாடி விடுமோ?

நாட்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன அல்லவா?—ராஜா மார்பைத் தரையில் பதித்துக் குப்புறப் படுக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறான். எதிரே ரயில் வண்டித் தொடர் தண்டவாளம் இல்லாமலே 'ஜெட்' வேகத்தில் சிட்டாகப் பறந் தோடிக் கொண்டிருந்தது. பிள்ளையாண்டானுக்கும் ரசிகத் தன்மை இல்லாமல் இருக்கலாமா?—மிக நளினமாகப் புன்னகை செய்தான், இப்போது.

சுஜாதாவை விளித்த நேரத்தில், உள்ளே தக்காளிச் சாம்பாரின் நெடியை அனுபவித்தாள் சுமதி. "என்ன சுமதி?"

என்று சுஜாதா நினைவூட்டியதும் பேசத் தொடங்கினாள் சுமதி: "சுஜா, என்னுடைய ப்ளானுக்கு நீ பச்சைக் கொடி காட்டிய வரையிலே எனக்குக் கரைகடந்த சந்தோஷம்தான். ஆனால், உன்னுடைய நல்ல வாக்கும் என்னுடைய நல்லெண்ணமும் பலிதமடைவது தற்சமயம் குமார் சொல்லக் கூடிய தீர்ப்பிலே தான் இருக்கு. இப்போதைய நிலையிலே. குமாரை என்னாலே புரிஞ்சுக்கிடவே முடியல்லே!...அப்படிப்பட்டதொரு இக்கட்டுக்கு, நாங்க ரெண்டு பேரும் இரு துருவங்களாகப் பிரிய நேர்ந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆனாலும், குமார் பேரிலே நான் அன்று வச்சிருந்த நன்னம்பிக்கை இன்றுவரை குறையவே இல்லே. குமார் வெறும் பச்சிலே, சாமியார் என்கிற வகையிலே குறுக்கு வழியிலே போய்க்கிட்டு இருக்கிற தடத்தை மாற்றி நேர்வழியிலே அவரை நடக்க வச்சுப்பிட வேணும் என்பதுதான் என்னுடைய மனப்பூர்வமான ஆசை, கவலையெல்லாம். ஆண்டவன் தான்எனக்குத் துணை இருக்க வேணும். விதியோட 'ப்ளான்' எப்படியோ?..."

காது வளையங்களை நெருடிவிட்டவாறு, ஒய்யாரமாக நின்ற சுஜாதாவிடம் பேசிவிட்டு, குமாரை நாடிப் போய்க் கொண்டிருந்தாள் சுமதி. சுந்தர் வேறு ஞாபகப்படுத்தி வைத்தான். அவளுக்குத் தெம்பு அதிகமாயிற்று. "குமார், உங்க கையிலே கொஞ்ச நேரம் தனியாகப் பேசணும்; தயவு செஞ்சு வருவீங்களா?" என்று கேட்டதும், அவன் தட்டாமல் இணங்கியது அவளுக்கு ஆறுதலாகவே இருந்தது.

இரண்டாம் கட்டில் இப்போது ஒளி பரவியது.

"குமார், நீங்கே முதல் தடவை இங்கே வந்திட்டு ஊருக்குப் போனதற்கப்புறம் நான் உங்களுக்கு ஒரு தபால் போட்டேன். அது உங்களுக்குக் கிடைச்சிருக்கும்; ஆனால், உங்ககிட்டேயிருந்து ரொம்ப ரொம்ப ஆவலாகப் பதிலே எதிர்பார்த்தேன். வரவேயில்லே!"

குமார் கைகளைப் பிசைந்து கொண்டு, இதழ்களை விலக்கினான். "சுமதி, நீ.....மன்னிக்க வேணும்......நீங்க போட்ட

லெட்டர் கிடைச்சது; அதுசரி, நீங்க உங்க அக்காளோட காரியமாய் லீவிலே தஞ்சாவூரிலேயிருந்து புதுகோட்டைக்கும் அப்புறம் அரிமளத்துக்கும் போயிருந்தபோது, உங்களுக்கு நானுக வலிய ஒரு கடிதம் போட்டேனே, அதுக்கு நீங்க ஏன் பதிலே போடவில்லையாம்?'' என்று அவளை வசமாக மடக்கினுன்.

''அப்படீங்களா?'' அதிர்ந்தாள் சுமதி. ''உங்க கடிதம் எதுவும் நாளது தேதிவரை என்கைக்குக் கிடைக்கவே இல்லீங்களே?... அம்மாவைக் கூடக் கேட்டேன்; ஒண்ணுமே வரல்லேன்னு சொல்லிட்டாங்களே?'' என்று கவலை சூழத் தெரிவித்தபின் எழுந்து அம்மாவைத் தேடிப் போய்க் கேட்டாள்.

அம்மா—தெய்வநாயகி அம்மாள் குற்ற உணர்வை மறைக்க எத்தனம் செய்தவளாக, ''அந்த மனிதர் குமார் சொல்றது இந்த விசயத்திலே சுத்தம்தான், சுமதி. அந்த ஆளுக்கும் உனக்கும் உண்டான சொந்தம் முறிஞ்சு போக நேர்ந்திட்ட கட்டத்திலே, நீ அவரோட காதல் கடிதத்தைப் பார்ப்பது நல்லதில்லேன்னு எனக்குத் தோணினதாலே, அதை நான்தான் வீட்டுக் கொல்லைப் புறத்திலே ரகசியமாக ஒளிச்சு வச்சுப்பிட்டேன்; இரு. எடுத்தாரேன்,'' என்று தளர்ந்த குரலில் விளக்கம் கொடுத்துவிட்டு, அந்தக் கடிதத்தையும் தேடிப் பிடித்து எடுத்து வந்து கொடுத்து விட்டாள் முதியவள். ''சுமதி, நீ இந்தக் கடுதாசியைப் படிச்சுட்டு, இங்கேயே அடுப்பிலே போட்டுப் பொசுக்கிடு. இந்தக்குமார் இங்கே திரும்பவும் வராமலே இருந்திட்டால் தேவலாம்னு கூட நான் நினைச்சேன்; சாமியையும் வேண்டிக் கிட்டேன்!'' என்பதாக அவள் தன் மனத்தில் உள்ளதை வெளியே கொட்டி விடவும் தவறவில்லை.

அம்மா தன்னிடம் குமாரைக் குறித்து ஏன் இவ்வாறு 'உஷார்' செய்ய வேண்டும்?—சுமதிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. மீண்டும் குமாரைத் தேடி நடந்தாள். குமாரின் கடிதம் இப்போது அவள் கைவசம் கிடையாது. ''மிஸ்டர்

குமார், உங்க கடிதத்தை அம்மா ஞாபகமறதியிலுலே என்னிடம் கொடுக்க மறந்து போயிருக்காக; அதுசரி. நம்ப விஷயத்துக்கு — அதாவது, உங்க விஷயத்துக்கு இனி வருவோம். கலியாணவேலை ஏகமாய்க் கிடக்குதுங்களே?... சரி, சொல்லுங்க : உங்க முடிவு என்ன? அதாகப்பட்டது, உங்களை என் ஆருயிர்த்தோழி கையிலே ஒப்படைச்சு உங்க வாழ்க்கையிலே ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்க வேணும்னு நான் போட்டிருக்கிற என் திட்டத்தைப்பற்றின உங்கள் முடிவு என்ன?...ஊம், வாய்திறந்து பேசுங்க, குமார்; மனம் திறந்தும் பேசுங்க, குமார்! நீங்க மனநிம்மதியோடே, புதிய வாழ்க்கையை நேரான வழிமுறையிலே மேற்கொண்டால் தான், எனக்கும் மனநிம்மதி கிடைக்கும்! ம்...சொல்லுங்க குமார், உங்க முடிவை!...''

சுமதி உணர்ச்சிவசப்பட்டாள்.

குமார் அவளைப் 'பாதாதி கேசமாக' ஊடுருவிப் பார்த்தான்; பார்த்துக் கொண்டிருந்தான்; புது வெள்ள மெனக் கண்ணீர் சுழித்தது : "சுமதி, தயவு பண்ணி என்னை மன்னிச்சிடுங்க; நான் உங்க ஆருயிர்ச் சிநேகிதி சுஜாதாவை ஏற்கிற நிலையிலே இல்லை!...இதுக்குமேலே நீங்க என்னைச் சோதிச்சிடாதீங்க, சுமதி!''

குமாரின் முடிவு சுமதியை நெஞ்சுலரச் செய்தது. பூகம்பமாக உள்ளமும் உடலும் அல்லாடின; தள்ளாடின. "குமார்! நீங்க உங்க காதலை இழக்க நேர்ந்ததால், நீங்க உங்க வாழ்க்கையையும் இழந்திட வேணுமா?'' என்று விம்மினுள் கன்னிப்பூ. என்னென்னவோ நினைவுகள் எப்படி யெல்லாமோ பிரளயமாகக் கொந்தளித்தன.

குமார் விரக்தியோடு சிரித்தான். மெய்யாகவே அவன்தான் சிரித்தானு? அவனேதான் சிரித்தானு? "சுமதி, இப்போது இருக்கிற என்னுடைய மன நிலைமையிலே, நீங்க நடத்தக்கூடிய தத்துவ விசாரணைகளுக்கெல்லாம் எனக்கு விடை சொல்லத் தெரியாது. ஆனுல், ஒன்று மாத்திரம்

தெரியும்!...சுமதி, என் இதயத்திலே காதலுக்கு ஒரு உன்னதமான—புனிதமான — ஆத்மார்த்தமான — பவித்திரமான இடம் என்றென்றுமே உண்டு!—இந்த ஒரு உண்மைச் சத்தியத்தை மட்டிலும் நீங்கள் பெருமனம் வைத்து நம்பினுல் போதும், சுமதி!'' எழுதிவைத்துப்பாடம் ஒப்புவிப்பதுமாதிரி பேசினுன் குமார். இப்போது அவன் முகம் எத்துணை காந்தியுடன்—சாந்தியுடன் விளங்குகிறது!... கண்கள் பனிச்சென்று துலாம்பாரமாகத் திகழ்கின்றனவே!

புல்லரிப்பு இன்னமும்கூட அடங்கவில்லை, சுமதிக்கு. 'என்னுேட இந்த திட்டம் தெய்வாதீனமாக நல்லபடியாக நிறைவேறிடும்னு கோட்டை கட்டினேன்; தவிடுபொடி ஆக்கிட்டாரே, மிஸ்டர் குமார்!...ஐயோ, குமார்!...' வீசின கையும், வெறும் கையுமாகத் தோழியிடம் திரும்பினுள். 'சுஜா, என்னை மன்னிச்சிடம்மா; என்னுடைய அன்பான—பரிசுத்தமான கோரிக்கையை மிஸ்டர் குமார் நிராகரிச்சிட்டார்! விதி ஒரு திருப்பத்தோடே திருப்திப்பட்டு, தன்னுடைய விளையாட்டை நிறுத்திடும்னு நான் தப்புக் கணக்குப் போட்டுப்பிட்டேன். ஆனு, விதியைத் திருப்திப் படுத்த கேவலம் மனிதப் பிண்டங்களாலே சாத்தியப் படுமா?—விதியின் விளையாட்டு தொடர்ந்துகிணு இருக்கிற ரகசியம் எனக்கு இப்பத்தான் புரிஞ்சுது! ... சுஜாதா, உன்னுேட எதிர்காலம் பற்றி ஒரு நல்ல முடிவுக்கு கூடிய சீக்கிரமே வந்திடுவோம்; என்னுடைய இந்தத் திட்டம் தோற்றுப் போயிருக்கலாம். ஆனுலும், என் நல்ல முயற்சியை உணர்ந்து, எனக்கு உதவி செய்யத் துணிஞ்ச உன்னுடைய நல்லமனத்தை நான் எப்பவுமே மறக்க மாட்டேன்!'' கண்களைத் துடைத்துக்கொள்ள மறந்தாள் சுமதி.

பாரதத்தின் ஒற்றுமைச் சக்தியைக் குலைத்திட வேண்டி, அந்நியச் சக்திகள் ஆரவாரத்துடன் முயல்வதைக் கண்டித்துக் கண்டனம் தெரிவித்திருந்த பிரதமர் இந்திரா காந்தி பற்றிய பழைய செய்தியில் புதிதாகத் திளைத்திருந்த

சுந்தர், தன்னை அழைத்துச் சுமதி தெரிவித்த செய்தியைக் கேட்டதும் திடுக்கிட்டு மலைத்து விட்டான்! "அப்படீன்னு, இனி குமாரரோட எதிர்காலம் என்னுவதாம்? அவருடைய திட்டம்தான் என்னவாம்?" என்று கவலையோடு கேட்டான் அவன்.

அவள் வதனம் வெளுத்தது. 'எதுவுமே தெரியலீங்களே, அத்தான்?" என்று வேதனை தாளாமல் தெரிவித்தாள் சுமதி.

"அட, கடவுளே!"

"அந்தக் கடவுளுக்குக்கூட குமாரரோட திட்டத்தைப் பற்றித் தெரியாதுங்க!"

"பின்னே?..."

"ஆமாங்க, அத்தான்! குமாரைப்பற்றின இரகசியம் குமார் ஒருத்தருக்குத்தான் வெளிச்சம்! மிஸ்டர் குமார் புதிர் மனிதராகிவிட்டார், அத்தான்!" என்று ஆற்றுமை யோடு குமாரைப்பற்றித் தீர்ப்புக் கொடுத்துவிட்டு, கொல்லைப்புறத்துக்கு விரைந்தாள்; அங்கிருந்து மீண்ட போது, சுட்டிப்பயல் ராஜா சுதாரித்துக்கொண்டு சிரித்த வண்ணம் தன்னிடம் தாவுவதைக்கண்டதும், அம்மாவிட மிருந்து குழந்தையை வாங்கித் தோளில் அணைத்தவளாக, நடுக்கூடத்திற்கு நடை தொடர்ந்தாள். தெய்வமாக மாலை மரியாதை ஏற்றுத் திகழ்ந்த தன் அன்னையை இனம் கண்டு கொண்டாற்போன்று குழந்தை ராஜா அழகாகவும், அன்பாகவும், புன்னகை புரிந்து கைகொட்டிய அந்தக்கண் கொள்ளாக் காட்சியைத் தரிசிச்சதும், சுமதிக்கு மேனிச் சிலிர்ப்பு மிகுந்தது. 'அக்கா! என்னை இனம் கண்டுக்கிட்ட நம்ம ராஜா உன்னையும் இனம் கண்டுக்கிட்டான்!...அக்கா! உன்னை இனம் கண்ட நம்ம ராஜா என்னையும் இனம் கண்டுக் கிட்டான்!...' — தனக்குத்தானே அமைதியாகவும் ஆனந்த மாகவும் சிரித்துக்கொண்டாள்!

விடிந்தால், சுமதிக்கும் சுந்தருக்கும் திருமணம் அல்லவா?...

பதினேழு

# கெட்டிமேளம்

விடிந்தால் முகூர்த்தம்!—பொழுது விடியாமல் என்ன? இந்தக் கலியுகத்தில், பொழுது விடியக் கூடாதென்று சாபமிட அனசூயையா மீண்டும் அவதரிக்கப் போகிறாள்?— ஆகவே, பொழுது கட்டாயம் விடியும்; விடிந்ததும், முகூர்த்தம்!

வாடகைக் கார்கள் தெருவில் அணிவகுத்து நிற்கின்றன.

குடியரசு தினவிழாவின் அணி வகுப்பு மரியாதையை ஜனாதிபதி சமீபத்தில் ஏற்றுக் கொண்ட மாதிரி, கார்களின் அணிவகுப்பு மரியாதையை விடிவெள்ளி அதோ, ஏற்றுக் கொண்டிருக்கிறது!

இப்பொழுது மணி நாலு.

கலியாண வீடு திமிலோகப்பட்டது. திருமணத்தை நடத்தி வைத்து ஆசீர்வாதம் செய்யக் கூடிவிட்டவர்களின் எண்ணிக்கை இருபதுக்குத் தேறிவிட்டது. சுற்றமும் நட்பும் சூழ்ந்த பட்டியல் இவ்வளவுதான்!

சுந்தரும் சுமதியும் இரவு பூராவும் கண்ணோடு கண் பொருதவில்லை. எளிமையான கல்யாணம்தான் என்றாலும்,

விரலுக்குத் தக்க வீக்கமாக வேலைகள் இருந்தன. இடையிடையே, ராஜாப் பயலின் 'லூட்டி' வேறு. எப்படியோ, சமாளித்துவிட்டார்கள். இனி, புறப்பட வேண்டியது தான்!

சுமதி மணப்பெண் கோலம் தாங்கி பெட்டியும் கையுமாக அத்தானிடம் வந்தாள். "அத்தான், இந்தாங்க கைப் பெட்டி. முகூர்த்தப் பட்டு, வேட்டி எல்லாம் இருக்குதுங்க; பெட்டி பத்திரம்!" என்று நினைவூட்டியவளாகப் பெட்டியை ஒப்படைத்தாள். அவள் முகம் களைப்பின் மிகுதியால் சோம்பியிருந்தது. மன உளைச்சலும் காரணம்தான். 'மிஸ்டர் குமார் என் திட்டப்படி சுஜாதாவை மணம் புரிந்து கொள்ளச் சம்மதித்திருந்தால், நான் மட்டுமென்ன, என் அன்பு அத்தானும் ஆறுதலடைந்திருப்பாரே?'

சுமதியை ஒருநிலைப் படுத்தப்பட்ட உள்ளத்தோடு, கூர்த்த மதிபதித்துப் பார்த்த நேரத்தில், சுந்தருக்கு ஏற்பட்ட ஆனந்தத்துக்கும் அமைதிக்கும் அளவே இல்லை; இத்தகைய புதிய அனுபவம் சுசீலாவை மணவறையில் சந்தித்த சமயம் உண்டானதையும் இப்போது அவன் எண்ணினான்; எண்ணிய எண்ணம் கமழ்ந்தது; நினைத்த நினைவு நெக்குருகியது. சுசீலா நல்ல அழகி; ஆனால், சுமதி...? மனத்தராசில் இருவரையும் அழகு என்னும் படிக்கல் இட்டு எடை கட்டிப் பார்த்தபோது, சுமதியின் தட்டு உயர்ந்தது. உண்மைதான்!—சுமதி அழகின் லட்சணங்களிலே உயர்ந்தவள்தான்! இம் முடிவுடன் அவன் மீண்டும் சுமதியை நோக்கினான். புராணக்கால மோகினி இந்த இருபதாம் நூற்றாண்டிலே சுமதியாகப் பிறந்திருக்கிறாளோ என்று கூட அவன் அதிசயமடைந்தான். 'ஆஹா! சுமதி இத்தனை அழகி என்கிற ரகசியமும் உண்மையும் இப்போது தானே எனக்குப் புரிந்தது! நான்தான் அதிர்ஷ்டசாலி. எனக்குக் கூட இப்படியொரு பாக்கியமா? பொழுது விடிந்தால், சுமதி எனக்கு உயிர்த்துணை ஆகிவிடுவாள்; இனி அவள் எனது இனியபாதி!......' சுசீலாவைப்

பரிசுத்தமான நெஞ்சின் பகுதியில் இருக்க வைத்து, எண்ணமிட்ட வேளையிலே, அவனுடைய இதயமும் மேனியும் ஒரு விஞடி அதிர்ந்து குலுங்கவே செய்தன. 'சுசீ, எல்லாப் பாக்கியமும் நீ இட்ட பிச்சையிஞலேதான் எனக்குக் கிட்டக் காத்திருக்குது!... நான் இந்த நடப்பை மறந்திடமாட்டேன்!'—சுமதி இப்போது அவன் மைத்துனி; இதே சுமதி இன்னும் சிறுபொழுது கழிந்து விட்டால், அவன் இல்லாள் ஆகிவிடுவாள். அம்மன் சந்நிதானத்திலே சுமதிக்குத் திருப்பூட்டும் நிகழ்ச்சி அவன் கற்பனையில் ஏடு பிரிந்தபோது, மெய்யாகவே அவன் மெய்ம்மறந்துவிட்டான்! —வாழ்க்கை என்பதுகூட ஓர் உத்தியோகம்தானே?—அதன் பேரில்தான், இப்படிப்பட்ட 'உத்தியோக மாற்றல்'கள் சம்பவிக்கின்றன போலும்!

கோழி ராகம், தானம், பல்லவி போட்டுத் திருப்பள்ளி எழுச்சி பாடுகிறது: "கொக்கரக்கோ!"...

"அத்தான், டைம் ஆச்சுங்களே! புறபடலாமே?" என்று சுமதி பதற்றத்துடன் தூண்டிஞள்.

சுமதியின் அவசரத்தை அழகுணர்ச்சியுடன் அனுபவித்தான் சுந்தர். மலர விருக்கின்ற புதுத் தாம்பத்திய உறவின் பிணைப்பு மகிமை வாய்ந்ததே அல்லவா? "புறப்படுவோம், சுமதி," என்று தெரிவித்தான். அவன் பார்வை குமாரைத் தேடியது. தேடிய வேளையில், பழைய சிந்தனையொன்று முரண்பட்ட வக்கரிப்புடன் மின்வெட்டியது 'குமாருக்கென்று ரிசர்வ் செய்யப்பட்டிருந்த பாக்கியத்தை நான் அடையப் போகிறேன்!' தோன்றிய உணர்வுச் சுழிப்பிலே தோன்றிய குற்றவுணர்வின்பாற்பட்ட அனுதாபம் அவனை என்னவோ செய்தது. 'பாவம், குமார்!'—மனித மனத்தின் பலம் அதன் வெற்றியிலும், மனித மனத்தின் பலவீனம் அதன் தோல்வியிலும் நீதியென விளைவதுதான்—விளைய வேண்டுமென்பதுதான் வாழ்க்கையின் நியதியா?—சிருஷ்டியின் விதியா?—விதியின் சட்டமா?—ஆண்டவனின் தீர்ப்பா?

குமாரைக் காணேம்!...

சுந்தர் அலட்டினுன்.

சுமதி பதட்டமடைந்தாள்; “சுஜா, குமார் எங்கே?” என்று கவலை மூளக் கேட்டாள்.

“தாழ்வாரத்திலே தன்னந்தனியாக எதையோ இழந்தாப்பிலே சிலையாக நின்னுக்கிட்டிருக்கார், சுமதி,” என்று குறிப்பிட்டாள் சுஜாதா.

‘பாவம், குமார்!’—சுமதி பாய்ந்தாள்; “குமார், கோயிலுக்குப் புறப்படுகிறோம்; வாங்க,” என்முள்.

“நான்தான் ரொம்ப நேரமாகத் தயாராகக் காத்திருக் கேனே, சுமதி?”

“ஓ, அப்படிங்களா? சந்தோஷம். சரி, புறப்படுங்க. காப்பி சாப்பிட்டீங்களா?”

“நீ...நீங்கதானே கொடுத்தீங்க?”

“மறந்து போச்சு.”

“பரவாயில்லே, சுமதி.”

“ஒரு சின்ன விண்ணப்பம், குமார்!”

“பேஷாகச் சொல்லுங்களேன்!”

“குமார், முன்பெல்லாம் நீங்க என்னை ஏக வசனத்திலே ‘நீ—நீ’ என்றுதான் நொடிக்கு நூறு வாட்டி அழைப்பீங்க; அந்த மாதிரியே இனியும் நீங்க அழைச்சால், எனக்கு நிம்மதியாக இருக்கலாம்; ஏன், தெரியுங்களா?—நீங்க எங்க குடும்ப நண்பர்; என் நண்பர்; நான் உங்க குடும்பச் சிநேகிதி; உங்க சிநேகிதி!...உண்மையான அன்பிலே பிறக்கிற நட்புக்குப் போலித்தனமான மரியாதை தேவை யில்லீங்களே?...அந்தரங்க சுத்தியான பண்பு இருந்தாலே போதுமுங்களே!”

ஆவேசமாகவே பேசிவிட்டாள் சுமதி. பெட்டியும் கையுமாகத் தன் முதுகுப்புறம் தெளிவான நிலையுடன்

நின்று கொண்டிருந்த அத்தானைக் கண்டதும் ஒரு முறை ஆழமாகப் பார்த்தாள்; பிறகு, அவன் கையிலிருந்த பெட்டியை வாங்கித் திறந்தாள். முகூர்த்தப் பட்டையும் ஜரிகை வேட்டியையும் எடுத்தாள். "குமார், எங்க கல்யாணத்துக்காக அத்தான் எனக்கு எடுத்திருக்கிற முகூர்த்தப்பட்டு இதுதான்; நல்லாயிருக்குங்களா?" என்று குமாரிடம் கருத்துக் கோரினாள்.

"நன்றாகவே இருக்குது, சுமதி; உனக்கு ரொம்பவும் பொருத்தமாகவே இருக்கும்!" குமாரின் உதடுகளில் முரல் ஊறியது. சுத்தமான புன்னகைதான்!

"ஆல்ரைட்! என்னோட வேட்டி எப்படி?"

"அதுவும் சிறப்பாக அமைஞ்சிட்டுதுங்க, சுந்தர்!"

"பேஷ், பேஷ்!" என்று கைகொட்டிச் சிரித்தாள் சுமதி—பாலகி மாதிரி.

"எனக்குள்ள முகூர்த்த உடைகளின் செலவு என் சுமதியுடையதாக்கும்!" என்று குறுக்கிட்டான் சுந்தர்,

"சொந்த பந்தக் காரியங்களிலே வரவு செலவுக்கு ஏதுங்க இடம், சுந்தர்?"

குமாரின் சித்தாந்தத்தைச் சுமதி ஆமோதித்தாள்; ஆதரித்தாள்.

குமாரும் சுமதியும் அர்த்தச் செறிவுடன் பார்வைகளைப் பரிவர்த்தனை செய்து கொண்டனர்.

"நீங்க ரெண்டு பேரும் ஒரே கட்சி ஆகிட்டீங்க போலே!" என்று அட்டகாசமாகச் சிரித்தான் சுந்தர். "சரி, புறப்படலாம்; மணி நாலு ஐம்பது ஆயிடுச்சு; அங்கே எங்க சித்தப்பா, சாஸ்திரிகள் சகிதம் நமக்காகக் காத்துக் கிட்டு இருப்பார்," என்று துரிதம் செய்தான் அவன்.

சுமதி தன் அத்தானை மெல்ல அண்டினாள். "அத்தான், ஒரு நிமிஷம் உள்ளே வர்றீங்களா?" என்று வேண்டி,

சுந்தரை உள்ளே இட்டுச் சென்ருள். சுந்தர் தொடர்ந்து வருவதற்குள், உள்ளே புள்ளிமாளுக ஓடி, கைக் குழந்தையும் கையுமாகக் கலாபமயிலெனத் திரும்பிளுள். "என் கல்யாணத்துக்கு என் தெய்வத்தின் முதல் ஆசீர்வாதத்தை நான் வாங்கிக்கப் போறேனுங்க, அத்தான்!" என்று உணர்ச்சிகள் ஆரவாரம் செய்யச் சொல்லிக் கொண்டே குழந்தையை அத்தானிடம் சேர்ப்பித்தபின், சுசீலாவின் திருவுருவத்திற்கு நேரே மார்பு பூமியில் பதிய விழுந்து வணங்கிளுள். கூப்பிய கரங்களுடன் எழுந்தவள், தன் உயிர்ச் சகோதரியை ஏக்கத்தோடும் உருக்கத்துடனும் ஊடுருவி நோக்கி, "அக்கா! எங்களைக் காப்பாற்று, தெய்வமே!" என்று பிரார்த்தித்தாள்; ஆடிப்புனலுக்கு அணை ஏது? பிணைதான் ஏது? அப்பால், ராஜாவை எடுக்கிக் கொண்டு, "ராஜாக்குட்டி, அம்மாவை—உன் அம்மாவைக் கும்பிடு," என்று விம்மியவாறு, பிள்ளையின் பிஞ்சுக் கரங்களைக் குவித்து வைத்தாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டவளுக்கு வயிற்றை என்னவோ செய்யவே, முகச் சுளிப்புடன் வயிற்றைத் தடவித் தடவிக் கொடுத்துக் கொண்டே ஒரு விளுடி நின்ருள்; தியான நிலை அடுத்த விளுடியும் தொடர்ந்தது; பிறகு, ஒரு தெளிவு பெற்றவளாக, அத்தானை ஆதரவாகப் பார்த்தாள்.

சுந்தர் கூப்பிய கைகளோடு நின்ருன்.

சுசீலாவுக்கென்று அப்படியொரு நிர்மலமான சிரிப்பு எப்படித்தான் அமைந்ததோ?...

பம்மல் பொழுது.

விடிந்தும், விடியாத வேளை.

வாடகைக் கார்கள் பூப்பாரம் சுமந்த கோலத்தில் புறப்பட்டு விட்டன.

சென்னைமாநகரம் இத்துணை ரம்யமான பட்டணமா?

மணமக்கள் இருவரும் பொருள் பதியவும் பொருள் விளங்கவும் பார்த்துக் கொண்டார்கள். அவர்களுக்கு மட்டும் தனிக்கார்; சுற்றமும் நட்பும் சொன்ன ஏற்பாடு.

"சுமதி!"

"என்னங்க?"

"ஒண்ணுமில்லே!"

"கூப்பிட்டீங்களே?"

சுந்தர் பதில் ஏதும் கூறாமல், தன்னுடன் நெருங்கி அமரும்படி ஜாடை காட்டினான்.

சுமதிக்கு வெட்கமான வெட்கம். கழுத்தில் தாலி ஏறாமல், எப்படி நெருங்கிச் சுருங்கி உட்காருவதாம்? 'ஊஹூம்!'

சுமதியை இழுத்துத் தன்னோடு ஒட்டி உறவாட இறுக்கமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் துடித்தான் சுந்தர். ஆனால், மூன்றாம் மனிதன் ஒருவன் காரை ஓட்டிக் கொண்டிருக்கிறானே?

குழந்தை வீரிட்டகுரல் கேட்கிறது.

பின்னால் வந்த வண்டியில் பாட்டியின் பொறுப்பில் இருக்கிறான் பயல்!

"அத்தான், குழந்தை அழறான்!"

"டிரைவர், கொஞ்சம் வண்டியை நிப்பாட்டுங்க."

ராஜா இவ்வளவு நேரம் சுமதியைத் தேடித் தேடித் தான் முகாரி பாடியிருக்க வேண்டும். இப்போது, வந்து சேரவேண்டிய இடத்துக்கு வந்து சேர்ந்ததும், 'கப்சிப்' என்று ஆகிவிட்டான்! பேஷ், சமர்த்துப் பிள்ளைதான்!

அதோ, கோயில் கோபுரம் தெரிகிறது!

"அத்தான், கருமாரிக் கோயில் வந்திடுச்சுங்க!"

"ஊம்!"

"தாயே!...லோகநாயகியே!...கருமாரித் தெய்வமே!"

"கண்கண்ட தெய்வம் கருமாரி, சுமதி!"

"சந்தேகம் என்னங்க, அத்தான்?"

உதயகாலப் பூஜைக்கான ஆலயமணி ஒலித்து, ஒலி பரப்பத் தொடங்குகிறது.

முதலிலே இறங்கியவன் சுந்தர்தான். 'சுசீ, என்னை இரண்டாந் தடவையாகவும் மாப்பிள்ளை வேஷம் போடும்படி செய்து விட்டாயே?'

சுமதியும் இறங்குகிறுள்!

செங்கதிர்ச் செல்வன் துயில் கலைந்து, கண் விழித்துக் கண் திறக்கும் பொன்வண்ண வேளை அது.

தெய்வத்துள் தெய்வமாம் தேவி கருமாரி அம்மன் அறக்கோலம் தாங்கி, அன்பே வடிவமாகவும் புன்னகையே பிம்பமாகவும் கொலு வீற்றிருக்கின்றுள்!...

அம்பிகையின் அருள்மிகு திருச்சந்நிதியின் முன்னிலையில் அமைக்கப்பட்டிருந்த கல்யாண மண்டபம் மணவிழாக் கோலம் ஏந்தித் திகழ்ந்தது.

நாதஸ்வரம் பண்கூட்டிப் பண் இசைக்க ஆரம்பிக்கிறது.

கொட்டு மேளம் கொட்டுகிறது.

மாப்பிள்ளைக் கோலத்தில் கம்பீரமாக வீற்றிருக்கிறுன் சுந்தர். புதிய இளமீசை வெகு எடுப்பாகவும் வெகு ஆண்மையோடும் விளங்கியது; கல்யாணக்களை, அவன் முகத்திலும் கண்களிலும் இதழ்களிலும் சொல்லிச் சொல்லி வழிந்தது.

"பெண்ணைக் கூப்பிடுங்க; முகூர்த்த நேரம் நெருங்கிண்டிருக்கு!" துருசுப் படுத்துகிறுர் சாஸ்திரி.

தோழி சுஜாதா நிழலாய்த் தொடர, நாணிக் குனிந்த தலையுடன், நயம் சொட்டும் நல்ல கவிதை போல அன்ன நடை பயின்று வந்தாள் சுமதி. வளைகள் குலுங்கின; மெட்டிகள் இசைகூட்டின; பட்டுப்புடவை சரசரத்தது. அவளுடைய பொன்னூர்மேனிக்குப் பொருத்தமாக அமைந்து விட்டது ரோஜா நிற ஆரணிப்பட்டு. பொன்மலர்கள் அங்கங்கே பளிச்சிடுகின்றன.

சாஸ்திரிகளை முந்திக் கொண்டு, “உட்கார், சுமதி”, என்றான் சுந்தர்.

சுமதி மணமகளாக மணமேடையில் அமர்ந்தாள். குழந்தை ராஜா கண்ணிற்குள் நிற்கிறான்!—சற்றுமுன் தன் பாட்டியின் பிடிக்குக் கட்டுப்படாமல் வீம்பு பிடித்துச் செருமிக் கொண்டிருந்த ராஜாவின் தவிப்பு அவளுடைய கன்னிப் பூமனத்தில் கீறிக் கொண்டிருந்தது.

சுந்தரின் திருஷ்டியில் குமார் சுழன்று கொண்டேயிருந் தான். மாப்பிள்ளைத் தோழன் ஆயிற்றே குமார்?...

மந்திரங்கள் ஒலித்தன.

ஹோமத் தீ ஒளிர்ந்தது.

திடீரென்று ஒரு சலசலப்பு எழுந்தது—எதிர்ப்புறத்திலே!

தொண்டை வறள வீம்புபற்றி அழுததால், குழந்தை ராஜாவுக்குப் பேச்சுமூச்சு இல்லையாம்!

‘தாயே!’—துடியாய்த் துடித்தாள் சுமதி. ‘ராஜா, கண்ணே ராஜா! நீதாண்டா என்னோட தெய்வத்துக்கே ஜீவன்!’—ஓடிப் போய் ராஜாவை வாரியெடுத்துக் கொண்டாள். மயக்கம் தெளிந்து, நல்ல மூச்சு வந்து விடாதா?—தவித்தாள்.

நெஞ்சிலே இடி இடித்தமாதிரி இருந்தது சுந்தருக்கு. நெஞ்சைத் தடவிக் கொண்டான். ‘ராஜா, நீ ஒருவன் இருக்கக் கண்டு தானேடா நான் இங்கே இப்படி வந்து குந்திக் கிடக்கிறேன்!...நீ இல்லேன்னு, நான் செத்த இடத்தில்

என்றைக்கோ புல் பூண்டு மண்டிப் போயிருக்குமேடா! ராஜா!'...உள்ளத்தில் வெடித்த விம்மலைச் சாடிக் கிறுக்கியது மின்னல் கீற்று ஒன்று!—'என் தெய்வம் ராஜா தன் அம்மா மாதிரி கண்ணை மூடிக் கொண்டு விடுவானோ?—ஐயையோ!... அப்படி நடந்து விட்டால், நான் என்னுடைய இந்த இரண்டாவது மாப்பிள்ளை வேஷத்தைக் கலைத்துவிட்டு, என் சுமதியை—சுமதியை மிஸ்டர் குமாருக்கே அர்ப்பணம் செய்துவிட்டு விதிவழியே ஒரே ஓட்டமாக ஓடிவிட மாட்டேனா?'—சுசீலா, உன் ஆசைதான் என்ன? தாயே, உன் முடிவுதான் என்ன?

சாஸ்திரிகள் பரபரப்பு அடைந்தார். "குழந்தைக்கு எப்படி இருக்கு? மூச்சு வந்திடுத்தோன்னோ? நேரம் ஆகிண்டிருக்கே! முகூர்த்த வேளைக்குள்ளே திருப்பூட்டி ஆகணுமே!" நாலுகட்டைச் சுருதியில் பேசினார். அவர் கையில் மங்கலத் தாலி ஊசலாடுகிறது!...

தெய்வநாயகி அம்மாள் ஓடோடி வந்தாள்—குழந்தையுடன்.

ஆஹா! குழந்தை ராஜா எவ்வளவு குதூகலப் பொலிவுடன் சிரித்துக் கொண்டிருக்கிறான், இப்போது.

சுமதி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்!

சுந்தர் நல்லமூச்சை மீட்டுக் கொண்டிருக்கவேண்டும்!

"கெட்டிமேளம்...கெட்டிமேளம்!"

மங்கலம் நிறைந்த மஞ்சள்நிற அட்சதை மணிகள் நாற்புறமும் பூச்சொரிகின்றன.

சுமதிக்குத் திருப்பூட்டி, மூன்று முடிச்சுக்கள் இட்டான் சுந்தர்!

புதுமணத் தம்பதிக்கு அட்சதை தூவி, திருநீறு பூசி, வாழ்த்துகிறார்கள், வாழ்ந்து காட்டிக்கொண்டிருந்த பெரியவர்கள்.

புதுமனத் தம்பதிக்கு மஞ்சள் ஆரத்தி சுற்றுகிறது பெண்டிர் குழாம்.

சுமதி, இப்போது சுமதி சுந்தர்!...

அன்னை சுமதியின் இன்ப அரவணைப்பில் திக்குமுக்காடிக் கொண்டிருந்த ராஜாப்பயலுக்கு கொட்டி அளக்க முடியாத கொண்டாட்டம்தான்!—இருக்காதா, பின்னே?...

சுமதியின் அன்புப் பிடியில் கட்டுண்டிருந்த அருமைப் பிள்ளைக்கு—தவப்புதல்வனுக்கு அருமை பெருமையாக ஆயிரம் முத்தங்கள் ஈந்தான் சுந்தர்.

"அத்தான், ராஜாவைப் பிடிங்க கொஞ்சநாழி", என்று சொல்லிக் குழந்தையைச் சுந்தரிடம் கொடுத்தாள் சுமதி. நேரே குமாரை நாடி நடந்தாள். "குமார், என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க", என்று வேண்டினாள்.

குமார் சூறைக்காற்றில் அகப்பட்ட சோற்றுப்பனையாக அல்லாடித் தள்ளாடினான். "சுமதி...சுமதி! உன்னை ஆசீர்வதிச்சு வாழ்த்துறதுக்கு உண்டான அருகதை எனக்குக் கிடையாதே, சுமதி!...நான் அதிர்ஷ்டம் கெட்டவனாச்சே, சுமதி?..." என்று விம்மினான் குமார்.

குமாரை ஏறிட்டுப் பார்த்தாள் சுமதி. "குமார், என்னை மனப்பூர்வமாக வாழ்த்துறதுக்கு உண்டான அருகதை உங்களுக்குத் தாராளமாக உண்டு. ஊம், என்னை ஆசீர்வதியுங்க!" என்று கூறி, குமாரின் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டு எழுந்தாள் சுமதி.

கள்ளமில்லாத சுமதியின் அழகு முகத்தை அன்பு சுரக்க நோக்கினான் குமார். "சுமதி, செஞ்ச தவறுகளைப் பெரு மனம்வச்சு மன்னிச்சு அருள்பாலிக்கும் தனிக்குணம் படைச்ச தேவி கருமாரியின் கருணையினாலே, நீ எல்லா நலன்களும் சகல சௌபாக்யங்களும் பெற்று, நீடூழி காலம் மகராசியாக வாழவேணும், தாயே!" என்று வாழ்த்தினான் அவன்.

சுமதி மெய்ம்மறந்தாள்.

மணமாலை மெய்சிலிர்த்தது.

ராஜாப்பயல் ஏன் அப்படிச் சிரிக்கின்றான்?...

பதினெட்டு

# முதல் இரவு...

சுந்தர்—சுமதி ஜோடிக்கு இன்றைக்குத்தான் சாந்தி முகூர்த்தம்!

நீலவானத்தில் நட்சத்திரத் தோழிமார்களோடு சிருங்காரப் பண்பாடிச் 'சரசசல்லாபம்' நடத்தி மகிழ்ந்து கொண்டிருக்கின்றான் வளர்பிறைச் சந்திரன்.

குழல் விளக்கு பிறந்த மேனியாக ஒளி சிந்தியது!

சுந்தருக்கு இருப்புக்கொள்ளவில்லை; இருக்கை பிடிக்க வில்லை. கழுத்தில் இருந்த மாலையைக் கழற்றிப் பட்டு மெத்தையில் போட்டுவிட்டு எழுந்தான்; பள்ளியறையில் குறுக்கும் நெடுக்குமாக நடக்கத் தொடங்கினான். கைக்கடிகாரத்தைப் பார்த்தான். 'இன்னமும் பதிமூணு நிமிஷம் இருக்கே சாந்திமுகூர்த்த வேளைக்கு!...சே!...காலம் புள்ளிமான் அப்படின்னு யாரோ சொல்லியிருக்காங்களே? ஆனா, அனுபவபூர்வமாகப் பார்த்தால், காலம் 'சோப்ளாங்கி' ஆமையாக்கும்!' பருவமனம் துறுதுறுப்புடன் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தது. காதல் மனம் 'சுமதி...சுமதி' என்று பஜனை செய்து கொண்டேயிருந்தது. திறந்து கிடந்த நடுக்கூடத்தின் வாசற் கதவுகளிலேயே அவனுடைய விழிகள்

நிலைத்துவிட்டன. வெளித் தாழ்வாரத்தில் குட்டிபோட்ட பூனையாகச் சுற்றிக் கொண்டிருக்கும் ஆள் யார்?—கூரிய பார்வையைச் செலுத்தினான். குமாரை அவன் 'இனம்' கண்டுகொள்ள எத்தனை நாழிகை ஆகிவிடப் போகிறது?—'பாவம், குமார்!' குமார் நாளைத்தான் ஊருக்குப் புறப்படுவான்!...

அதீதமானதோர் அமைதி அனாயாசமாக ஆட்சி நடத்திக் கொண்டிருந்த நேரம்.

தனி வீடு என்றால், அதன் அமைதி அலாதிதானே?

பூமணத்தின் நெடி பூந்தென்றலில் தவழ்ந்து வருகிறது.

'சத்தியச் சோதனை' இடம் மாறியது!

சுந்தருக்குக் கொள்ளை கொள்ளையாக மகிழ்ச்சி ஏற்பட்டது. புதிய திருப்பத்தில் பூத்திருந்த இந்த இனிய நற்பொழுது, அவன்வரை கனவுபோலவேதான் தோன்றிக் கொண்டிருக்கிறது, இன்னமும்! நேற்று அம்மன் கோயிலில் தாலிகட்டும் தருணத்தில் ராஜா எப்படிப் பூச்சாண்டி காட்டி விட்டான்! 'சுசீ...தாயே!'—குழந்தையின் பாலமுதச் சிரிப்பு இன்னமும் அவன் இதயத்தில் பால் வார்த்துக் கொண்டிருக்கிறது! சுஜாதா சூழ, சுமதி வருகிறாள்!—பூவாக—பூவையாக!

பூவை வந்து நின்றாள், கூடத்திற்குள்!

"சு...ம...தி!..."

"............"

முதலிரவுச் சடங்குகள் நடந்தன; முடிந்தன.

கதவுகள் சாத்திக் கொள்கின்றன!...

"சுமதி!"

"............"

"சுமதி...சுமதி!"

“அ...த்...தான்!”

அன்பிற்கு அடைக்குந்தாழ் உண்டா, இல்லையா என்ற தத்துவ விசாரம் இப்போதைய நிலையில் அவனுக்கு—சுந்தருக்கு வேண்டாத சமாசாரம். சயனக் கூடத்திற்கு மட்டும் கட்டாயம் அடைக்கும் தாழ்ப்பாள் வேண்டுமென்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டது; ஆகவே, அவ்வாறு செய்தான். நேர் உச்சியில் பொக்கை வாய்ப் புன்னகையுடன் காட்சிதந்த காந்தி மகாத்மாவை ஏறிட்டுப் பார்க்கும் நேரமல்லவே இது!

மணி; எட்டு, பத்து.

காலம் புள்ளமான்தானோ?

பூக்கள் மணக்கின்றன.

பூவையும் மணக்கின்றாள்.

பாலும்கூட மணக்கிறது.

ஆனால், மௌனமும் மணக்குமா?—மணக்கலாமா?

கணங்கள் சில மோனத்தவம் இயற்றின.

அவன் அவளைப் பார்த்தான்.

அவள் அவனைப் பார்த்தாள்.

பேசாத மௌனத்தில்தான் பேசவேண்டிய அந்தரங்கங்கள் வாய்விட்டும் மனம் விட்டும் பேசும் போலும்!

அவள் வெள்ளித் தம்ளரில் இருந்த பசுவின் பாலை எடுத்து நிதானமாகவும் நளினத்தோடும் அத்தானிடம் நீட்டினாள்: “பால் குடியுங்க, அத்தான்!”

“ஓ!” என்று நமட்டுச் சிரிப்பைக் கக்கிக்கொண்டே, கன்னி மலர்ச் சுமதியின்மீது தாவினான் சுந்தர்.

சுமதிக்கு வேர்த்துக் கொட்டியது: வெட்கம் விரவிய நடுக்கம் ஏற்பட்டது; தடுமாறினாள்; தலை திடுதிப்பென்று

சுற்றுகிறமாதிரி இருந்தது. ''பசும்பால் இங்கே என் கையிலே இருக்குங்களே?'' என்று தாழ்குரலில் கூறினாள்.

''ஒஹோ!'' என்று நாசூக்காகத் துள்ளலுடன், துடிப்புடன், இன்பக் கிளர்ச்சியுடன் செப்பிவிட்டு, பால்தம்ளரைப் பூவிரல்களையும் சேர்த்துப் பற்றிக் கொண்டான் சுந்தர். பாலிலே—ஆமாம், பசுவின் பாலிலே குங்குமப்பூ மணத்தது; பாதாம் பருப்பு மணத்தது. சுமதியை இன்று விழுங்கிவிட்டுத் தான் மறுவேலை என்று திட்டமிட்டவன் போன்று அத்தனை ஆசையுடன்—ஆசையின் வெறியுடன் அவளைப் பார்த்தான்; பார்த்துக் கொண்டே, ''இந்தா, நீ குடி!'' என்று பூவிரல் களின் இனிய ஸ்பரிசத்தைச் சுகமாக அனுபவித்தவனாகக் கெஞ்சுதலுடன் கொஞ்சினான். ''ஊஹூம், நீங்க முதலிலே குடிக்கிறது தான் முறை!'' என்று உடையவள் சொன்னதன் பேரில், அவன் பாலில் ஒருவாய் குடித்தான்; சுவைத்துக் குடித்தான். பிறகு, எச்சில்பாலை தன்னுடைய இனிய அணைப்பில் கட்டுண்டு கிடந்த இன்னுயிர் மனைவி சுமதியின் வாயில் ஊற்றிவிட முனைந்தான். கைகள் பரபரத்தன. விளக்கை அணைத்துவிட வேண்டும்.

சுமதிக்கு வெட்கம் தாளவில்லை. பால் தம்ளரை அத்தானிடமிருந்து—அன்புக் கணவனிடமிருந்து வாங்கி, தன்போக்கில் அந்த எச்சில் பாலை வாயருகே கொண்டு போனாள். பாலின் வாடை அவளுக்கு ஒத்துவராதோ?—ஏன் ஒத்து வராது?—சுந்தருக்குக் கொடுத்தது போக மிஞ்சிய பாலை அவள் எத்தனையோ முறை குடித்திருக்கிறாளே!—இப்பொழுது அத்தான் கட்டளைப்படி பாலைக் குடித்து வைக்காவிட்டால், அத்தான் சும்மா விடமாட்டாரென்ற 'துப்பு' அவளுக்குத் தீரத் தெளியத் தெரிந்து விட்டதால், பாலை—மிச்சப்பாலை—எச்சில் பாலை 'மடக்'கென்று ஒரு வாய் குடித்தாள். மின்விசிறிக் காற்று தன் மேனியின் அங்கங் களில் நூதனமான சிலிர்ப்பை ஏற்படுத்திய புதிய அனுபவத்தை அழகாக ரசித்து அனுபவித்த வண்ணம் பாலை மறு வாய் குடிக்கத் தொடங்கியதுதான் தாமதம் அவள் 'குபீ'ரென்று வாந்தி எடுத்தாள்!...

ஆத்திரத்தோடு பற்றி எரியும் நெருப்புத் துண்டமொன்று இருந்திருந்தாற்போல தன்னுடைய இருதயத் துடிப்பில் பட்டுவிட்ட மாதிரி, வேதனையோடு—வேதனையின் நெட்டுயிர்ப் போடு துடிதுடித்தான் சுந்தர். "சுமதி!...சுமதி!" என்று வீரிட்டான்; அலறினன். அவளுடைய தலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, மாரகச் சேலையை இருந்த இடத்தில் சேர்ப்பித்தான் சுந்தர். அவனுக்கும் இப்போது தலைசுற்றியது.

தலைக்குமேலே மின்விசிறி சுற்றியது.

மீண்டும் வாயால் எடுத்தாள் சுமதி.

"சுமதி! சுமதி!" விம்மி வெடித்தான் சுந்தர்.

பேயறை பட்ட மாதிரி ஆகிவிட்டாள் சுமதி. தன் காலடியில் இருந்த பூமி பிளந்து, தான் அப்பிளவிலே அகப்பட்டுக் கொண்டது போல அவள் தவித்துத் தடுமாறினள்; மெதுவாக எழுந்து, கூஜாவிலிருந்த தண்ணீரை எடுத்து வாய் கொப்புளித்து, முகத்தையும் கழுவிக் கொண்டாள்.

"பால் பிடிக்காதா உனக்கு?"

"ஏன் பிடிக்காதுங்க?"

"பின், ஏன் இப்படி திடுதிப்னு வாந்தி பண்ணிட்டே?"

"அதுதானுங்க, எனக்குப் புரியவில்லை!"

"அதிசயமாயிருக்கே, சுமதி?"

"உங்களுக்கு மட்டுமில்லை, எனக்கும்தான் அதிசயமாக இருக்குதுங்க, அத்தான்!"

சுந்தர் விளக்குமாறு தேடி, அறையைச் சுத்தப்படுத்தத் தயாராளுன்.

சுமதி 'ஓ'வென்று கதறிவிட்டாள். "நான் ஒருத்தி இருக்கேனே, அத்தான்?—அதை மறந்திட்டீங்களா?" அம்மன் குங்குமம் நெற்றி மேட்டிலிருந்து கரைந்து விழி மூலைகளிலே ரத்தக் கண்ணீராக வழியத் தொடங்கியது.

வாழ்க்கைத் துணைவனிடமிருந்து கூட்டுமாற்றை வாங்கித் தரையைச் சுத்தம் செய்து முடித்துக் கொண்டிருக்கையில், அப்படியே தரையில் அலங்கோலமாகச் சாய்ந்து விட்டாள்!

"ஐயையோ, சுமதி!"

பேயறைபட்டவனாக உருகி, உருக்குலைந்த சுந்தர் செய்வகை புரியாமல் அரைக்கணம் செயலிழந்து நின்றான்; விழி வெள்ளத்தோடு மறுபடி அவளை—சுமதியை—அவனுடைய இரண்டாந்தாரம் சுமதியைப் பரிதாபத்தோடு பார்த்தான்; ஏக்கத்தோடு பார்வையிட்டான். விலகிக் கிடந்த மாரகச் சேலையைச் செம்மைப் படுத்தியபோது, நேற்று உதயத்தில் அம்மனைச் சாட்சி வைத்துக் கட்டிய திருமாங்கல்யம் தட்டுப் பட்டது. உடல் அங்கங்களின் ரத்தம் பூராவுமே மண்டைக்குப் பாய்ந்த மாதிரி உணர்ந்தான். "சுமதி! சுமதி!"—மூச்சுப் பேச்சு இல்லாமற் போகவே, தாழ்ப்பாள் போட்டதைக் கலவரத்துடன் விலக்கிக்கொண்டு வெளியேறினான் மாப்பிள்ளை சுந்தர்.

வெளியே நிலவைத் தழுவி அணைத்து சுகமாகவும் சுந்தரமாகவும் சல்லாபமாகவும் பூங்காற்று வீசிக் கொண்டுதான் இருக்கிறது.

உள்ளே மறுகியவன், பின்கட்டை அடைந்து "சுஜா!" என்று விளித்து அவளிடம் சேதியை காதும் காதும் வைத்துச் சொல்லிவிட்டுத் தாழ்வாரத்துக்கு வந்தான் சுந்தர். வழக்கம் போலவே சிந்தனைப் போதையில் மனம் லயித்துப் பின்னிப் பிணைந்து கிடந்த குமாரின் தோளைத் தொட்டு உலுக்கி, தெருக் கோடியிலிருந்த லேடி டாக்டர் பாலாமணியைக் கையோடு அழைத்து வரும்படி கேட்டுக் கொண்டான்.

பூங்காற்றைப் பூப்போல அனுபவிப்பதற்கும் ஒரு பாக்கியச் சக்கரம் சித்திக்க வேண்டும்.

சுந்தர், சித்தம் கலங்கிய நிலையிலே மீண்டும் உள்ளே பிரவேசித்தான்.

விதி தன்னுடைய விளையாட்டுக்கென்று பிரத்தியேக மானதோர் ஆடலரங்கை ஏகபோக உரிமை பாராட்டி, அங்கே அப்போது நிர்மாணித்துக் கொண்டு விட்டதா, என்ன?

எங்கெங்கு நோக்கினும் அமைதி!—பயம் செறிந்த அமைதி!—பயமூட்டும் அமைதி!

அன்புச் சுமதி யாதொரு வினையும் விக்கினமும் இல்லாமல் மயக்கம் தெளிந்து நல்லபடியாகப் பிழைத்து எழுந்துவிட வேண்டுமே என்னும் பிரார்த்தனையுடன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, முதலிரவுப் படுக்கையின் கூடத்தில் வந்து நின்றான் சுந்தர்!—தெய்வமே!...

என்ன ஆச்சர்யம்!

தனக்கு எதுவும் நேர்ந்து விடவில்லை என்பதைப் பிரகடனப் படுத்தும் பாவனையில் சுமதி சகஜமாகக் குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டிருக்கிறாள்! உடுத்துக் கொண்டிருந்த ரோஜா நிறப் பட்டில் திட்டுத் திட்டாக அங்கே ஈரம் ஊறியிருந்தது ஒளி வெள்ளத்திலே வெளிச்சம் போட்டமாதிரி பளிச்சென்று தெரிந்தது.

"சுமதி!" என்று ஆனந்தப் பரவசத்துடன் விளித்தான் சுந்தர். உணர்ச்சிகளின் நிலை தடுமாறிய கொந்தளிப்பில், இதழ்கள் துடித்தன. "உடம்புக்கு ஒண்ணும் இல்லையே. சுமதி?" என்று பரிவுடன் நலம் விசாரித்தான்.

கதிர் முத்தம் படப்பட, மடல்மடலாக விரிந்து மலரும் கமலமாக ஆனாள் சுமதி. பாங்கான முறுவல் பாங்காக நெளிந்தது. "பயப்பட்டுப் போயிட்டீங்களா, அத்தான்? என்னோட உடம்புக்கு அப்படி என்ன வந்திட முடியும்? என்னமோ ஒரு திடீர் மயக்கம் ஏற்பட்டு வாந்தி எடுத்திட்டேன்!" என்று சமாதானம் கூறினாள் அவள்.

"நல்லவேளை. நான் பிழைச்சிட்டேன்!"

"நானும்தானுங்க, அத்தான்!"

அப்போது, அங்கே, குமார் தோன்றினன்.

குமாரைக் கண்டதுதான் தாமதம், பாம்பினைக் கண்ட போக்கில் பயந்து போய் தெய்வநாயகி அம்மாள் அப்போதே ராஜாவுடன் ஒதுங்கி விட்டாள்; அவளைத் தொடர்ந்தாள் சுஜாதா.

"டாக்டரம்மா வந்தாச்சு; எல்லாரும் வெளியே வந்திடுங்க," என்ற உத்தரவைப் பிறப்பித்தான் குமார்; சுருட்டை முடிகள் தாறுமாருகப் பறந்தன. முகத்திரையிலே கலவரமும் கலக்கமும் பீதியுடன் கோடுகளைத் தடம் தப்பிக் கிறுக்கி விட்டிருந்தன.

லேடி டாக்டர் உள்ளே நுழைந்தாள்.

சுந்தர் நடப்பை விவரித்தான்.

"சரி; நீங்களும் சற்றுநேரம் வெளியே இருக்கவேணும்," என்று சொல்லி, கதவுகளை அடைத்துக் கொண்டாள் டாக்டர். அவள் வாயும் இரண்டொரு கேள்விகளுக்குப் பிறகு தன்னைப் போல அடைத்துவிட்டது.

சுமதி நிர்மலமாக நின்ருள்!

நாடிக் குழல் மௌனமான விதியை நினைவூட்டி விரிந்தது.

சோதனை நடந்தது; முடிந்தது.

டாக்டர் பாலாமணி கதவுகளைத் திறந்துவிட்டாள்.

சுந்தர் உள்ளே ஓடி வந்தான்.

"ஸார், உங்க சம்சாரத்துக்குப் பயப்படும்படியாக ஒண்ணும் இல்லே; எல்லாம் நல்ல, சந்தோஷமான சங்கதி தான்! உங்க மனைவி கருத்தரிச்சிருக்காங்க!...அநேகமா நாற்பது நாள் கருவாக இருக்கலாம்!" என்று நிதானமாக, ஆனல் அவசரத்துடன் செய்தி சொன்னுள் டாக்டரம்மா; பணத்துடன் பறந்து சென்ருள்!—அவள் கடமை அவ்வளவு தானே?

பத்தொன்பது

# விதியாம் விதி!...

சுமதி தரைமீனுகத் துடித்து வீரிட்டாள்: "ஐயையோ, தெய்வமே!"

சுந்தர் சிலையானுன்!...

"அத்தான்...அத்தான்!" என்று கதறிப் பதறிப் புலம்பிக் கொண்டு, வேர் அறுபட்ட ரோஜாப்பூச் செடியாக அப்படியே சுந்தரின் பாதங்களிலே சரண் அடைந்தாள் சுமதி. "அத்தான்......அத்தான்!......பேசுங்க அத்தான்! ஐயையோ!—பேசவே மாட்டீங்களா? பேசாமலேயே என்னைச் சாகடிக்கப் போறீகளா? தெய்வமே!...என் தெய்வமே!...மனசறிஞ்சு ஒரு பாவமும் செஞ்சறியாத எனக்கு இப்படிப்பட்ட கொடுமையான அவமானமும் களங்கமும் தலைக்குனிவும் ஏன் ஏற்பட்டுச்சு, என்ன மாயமாய் ஏற்பட்டுச்சுதின்னே மட்டுப்படலீங்களே?— ஐயையோ, இனி நான் என்ன செய்வேன்?......" ஐந்தருவியெனச் சுழித்தது ரத்தக் கண்ணீர்—ரத்தக் கறை படிந்த கண்ணீர். குனிந்து கிடந்த தலையை உயிர் ஒடுங்கி, உள்ளம் ஒடுங்க பையப்பைய நிமிர்த்த முயன்ருள். "என் தெய்வமே! பேசுங்க அத்தான்! ஏசுங்க அத்தான்! அடியுங்க! ஒரே மூச்சிலே என்னோட மூச்சை நிறுத்திப்

பிடுங்களேன்!...ஐயோ, பேசவே மாட்டீங்களாக்கும்!" கூப்பிய கரங்களோடு நான்கு சுவர்களும் ஆமாம், அந்தச் சாந்தி முகூர்த்தக் கூடத்தின் நான்கு சுவர்களும் எதிரொலிக்க ஓலமிட்டாள் சுமதி—சுந்தரின் சுமதி.

சுந்தர் அசையவேண்டுமே!—ஆடவேண்டுமே!—மூச்!

சுமதிக்குப் பித்து தலைக்கேறி விட்டதா?—கழுத்தில் 'ஜம்'மென்று கிடந்த கதம்ப மாலையைக் கழற்றிப்பட்டு மெத்தையில் வீசி எறிந்தாள். சிற்பி செதுக்காத பொற்சிலை கனவு கண்டு விழிப்பவளை ஒத்து, கண்களை மூடி மூடித் திறந்தாள்; திறந்து திறந்து மூடினாள். பாவம், கனவுக்கு எங்கே போவாளாம் பாவை?...ஆகவே, இமைப் பொழுது எதையோ நினைவு படுத்திப் பார்க்க முயன்றாள்!—'நாற்பது நாள்!...பச்சிலை மருந்து மாயம்!'—அடிபட்ட பெண்புலியென, பதுங்காமல் கொள்ளாமல், வெளியே பாய்ந்தாள் சுமதி.

அப்போது—

சுமதியை எதிர்கொண்டு வந்து நின்றான் குமார்—மிஸ்டர் குமார்!

தேடிப்போன மூலிகை காலில் சிக்கின கதைதான்!

நான்கு சுவர்கட்கு மத்தியில் உருவான—உருவாக்கப் பட்ட அந்த முதல் இரவுப் பள்ளி அறையின் கதவுகளுக்கு அடைக்கும் தாழ் வேண்டுமென்பதுதான் குமாரின் கருத்தும் போலும்!—தாழ் இட்டான்; திரும்பினான் குமார்.

இரவைப் பகலாக்க, வெள்ளமாக ஓடிக் கொண்டிருக் கிறது ஒளி.

ஓங்காரக் காளியாக உருக்கொண்டு—உருக்காட்டிக் கொண்டிருக்கிறாள் சுமதி!

"சுமதி!"

"குமார்!"

இரு துருவங்களின் குரல்களும் அந்த நான்கு சுவர்களுக்குள்ளே ஒலித்தும் எதிரொலித்தும், முட்டியும் மோதியும் அலைமோதி, ஒன்ருேடொன்ருக—ஒன்றில் ஒன்ருக இணைந்து பிணைந்து, அணைந்து கொண்டிருக்கின்றன. அப்படியென்ருல், எதிரெதிரான துருவங்களா அவை?

சுந்தர் சாபம் பெற்றவன் போலே, இன்னும் கற்சிலையாகவே காட்சியளிக்கின்ருன்!

சாபமென்ருல், அந்தச் சாபத்திற்கு விமோசனம் இல்லையா?

"சுந்தர்!"

"........."

"சுமதி!..."

"........."

"சுமதி! ஐயோ, சுமதி!"

சுமதியின் கழலடியிலே தனது உடலையும் உயிரையும் ஒன்ருக்கி அடைக்கலம் வைத்துவிட்டவனுக, நெடுஞ்சாண் கிடையாகச் சாய்ந்தான் குமார்.

காளிக்குச் சிரிக்கத்தான் தெரியும்!

குமார் அலறிக் கதறுகின்ருன்:

"சுமதி!...உன்னைப் பாவியாக்கிய பெரும் பாவி நான் தான்; உன்னைப் பழிகாரியாக்கிய பயங்கரப் பழிகாரனும் நானேதான்! என்னுடைய பாவத்துக்குக் கழுவாய் கிடையவே கிடையாது; ஆகையினலே, நீ என்னை மன்னிக்க மாட்டாய் மன்னிக்கவும் வேண்டாம்; மன்னிக்கவும் கூடாது! ஆனாலும், என்னுடைய நெஞ்சை உனக்குத் திறந்து காட்டத்தான் வேணும். ஏன், தெரியுமா?—உன்னுடைய நெஞ்சை—புனிதமான அந்த நெஞ்சைத்திறந்து பார்க்கும் 'பொசிப்பு' பெற்ற பாக்கியவன் நானே தாளுக்கும்!...

"சுமதி!...நீ என்றைக்கோ என் கனவுப் பொருளாக ஆனவள்; என் கனவுப் பொருளைக் காட்சிப் பொருளாகவும் கண்டு, பரிசுத்தமான அன்போடு அனுபவிக்கவும், அனுபவிச்சுப் பெருமைப் பட்டுப் பெருமிதம் அடையவும் கோட்டை கட்டினேன்; ஆனல்...ஆனல், விதி அந்தக் கோட்டையைத் தவிடுபொடியாக்கி இடித்துத் தரைமட்டமாக்கிடுச்சு; ஆனலும் கூட, என்னேட நிர்மலமான மனக் கனவைச் சிதைச்சுச் சிதிலமடையச் செய்யக் கூடிய அதிகாரத்தை நான் விதிக்கு வழங்கிவிடத் தயாராக இல்லையே!...

"சுமதி, நீ என்வரை கொம்புத்தேன் ஆகியிருக்கலாம்; ஆனல், நான் வெறும் முடவனுக விரும்பவில்லை!—நீ என் மட்டிலே எட்டாப்பழம் ஆனய்!...ஆனல், நானே அந்த எட்டாத பழத்தை 'சீ, சீ! இந்தப் பழம் புளிக்கும்'னு ஒதுக்கி, அப்பாவியாகிவிட என் பவித்திரமான அந்த மனசு இடம் கொடுக்க ஒப்பவில்லையே?—ஆகச்சே, எட்டாத மாங்கனியை—கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாமல் போய்விட்ட அந்த அதிசய மாங்கனியை எட்டிப் பறித்துச் சுவைக்கக் குறி வச்சேன்! என்னுடைய பள்ளிஅக்கிரகாரத்துக் குருவான சாமியார் ஒரு ரகசியப் பச்சிலையை—நினைவை மயக்கி, அந்த நினைவை மறக்கவும் மரக்கவும் செய்யவல்ல ஒரு பேரதிசயப் பச்சிலைப் பொடியை, அன்று நீ எனக்காகக் கொண்டாந்து தந்த செம்புத் தண்ணீரிலே நீ அறியாமலே தூவிக் கலந்திட்டேன். என் திட்டப்படியே, வழக்கமாக உனக்குவரும் இருமல் அப்போதும் வந்திடுச்சு; உனக்குப் பழக்கமாகத் தேவைப்படும் தண்ணீருக்கு, அந்தச் செம்புத் தண்ணீர்—பச்சிலைத் தண்ணீர் பயன்பட்டுச்சு; கைகொடுத்திச்சு உனக்கு! அந்த அற்புதத் தண்ணீரை நீயாகவே குடித்தாய்!...

"சுமதி!...நீயும் நானும் மாத்திரமே உலகமாக அமைஞ்சிட்ட ஒரு நல்ல நேரத்திலே, நீ அந்தப் பச்சிலைத் தண்ணீரைக் குடித்ததன் இன்ப விளைவாய், நான் எதிர்

பார்த்துத் தவமிருந்த நல்ல நேரமும் விளைந்தது; கை கூடியது!......நான் உன்னை அனுபவிச்சேன்!—எட்டாக் கனியான உன்னைச் சுவைத்துவிட்டேன்!...என்னுள்ளே சீறிச்சிட்டேயிருந்த பயங்கரமிருகத்தின் புனிதமான அந்த இச்சைவெறி ஒரு கணத்தில்—ஒரேயொரு கணத்திலே அடங்கினவுடன், நானும் ஒரு மனிதனாக வெளியேறிட்டேன்! சரியாக நாற்பது நாளைக்கு முந்தி அந்தரங்கமாக நடந்த பரிசுத்தமான—ஆனால், பயங்கரமான ஒரு நாடகம்—ஒரு கூத்து இன்னிக்கு அம்பலமாகிடுச்சு!...நான் போட்ட புதிரை நானே விடுவிக்க வேணும்னு தான், ஊருக்குத் திருடனாகவோ அல்லது பயந்தாங் கொள்ளியாகவோ புறப் பட ஆசைப்படாமல் இங்கேயே தங்கவும் துணிஞ்சேன்!...

"சுமதி! தேவலோகத்துப் பாரிஜாதப் பூவை கேவலம் ஒரு அற்ப மனிதன் அடைஞ்சிட்டது அபூர்வம்தான்!... ஆனாலும், அது தவறு!...மன்னிக்க முடியாத தவறு; மன்னிக்கக் கூடாத தவறும் கூட!...நான் செஞ்ச பாவத்தை நீ மன்னிக்க மாட்டாய்!—மன்னிக்கவும் வேண்டாம்! ஆனால்...ஆனால்...என்னைப் பரம உத்தமனாக—உத்தமமான நண்பனாகக் கொண்டிருக்கிற என் அருமை நண்பர் சுந்தர் என்னை மன்னிக்காவிட்டால், நான் நரகக் குழியிலே அல்லவா உழல வேண்டியதாக ஆகிடும்!...சுமதி...சுமதி!... குற்றவாளியான நான் நீதிபதியாகிய உன்னைத் தேடிச் சரண் அடைஞ்சிட்டேன்!...இனித் தீர்ப்பு வழங்க வேண்டியது உன்னோட பொறுப்புத்தான்...ஆமாம், சுமதி!...ஆமாம்!... குற்றவாளியான எனக்கு என்ன தண்டனை வேணும்னாலும் கொடு; ஏற்கச் சித்தமாயிருக்கேன்!...கண் மூடிக் கண் திறக்கிறதுக்குள்ளே, எனக்கு நானே தண்டனை கொடுத்துக் கிட்டு, எனக்கு நானே சாவைத் தேடிக்கிட உதவும் பச்சிலைச் சூரணமும் என் கை வசத்திலே இல்லாமல் இல்லே! என்னுடைய அந்தரங்க சுத்தமான காதலிலே நான் என்னைக்குத் தோல்வியடைய நேர்ந்திச்சோ, அன்றிலிருந்தே நான் சாகிறதுக்குத்தான் வேளையை எதிர்பார்த்துக்கிட்டு இருந்தேன்! என் வரையிலும் சாவு துச்சம்!—ஆனாலும்,

நான் ஒரு கோழையாகச் சாக விரும்பவே மாட்டேன்!—கோழை மிருகமாகச் சாவைத் தழுவவும் நான் ஆசைப்பட மாட்டேன்!...

"சுமதி!...இந்த ஒன்றை மாத்திரம் சொல்லிவிடுகிறேன்: என்னைப் பொறுத்த அளவிலே என் மனச்சாட்சி என்னை ஒரு நாளும்—ஒரு பொழுதும் குற்றவாளியாக ஆக்க முடியாது!—ஆனால் உன்வரை நான் குற்றவாளிதான்! அதனாலே தானே, குற்றவாளியாகிய நான் உன்னை நீதிபதியாக்கி, உன்னைத் தேடிச் சரண் அடைஞ்சிட்டேன்!...நீ எனக்குத் தண்டனை வழங்கிறதுக்குள்ளே, நான் உன்கையிலே இரண்டொரு வரத்தை யாசிக்கவும் துடிக்கிறேன்!...தாயே சுமதி! நீ எக்காரணத்தைக் கொண்டும் தற்கொலை...?"

குமார் பேச்சை இன்னும் நிறுத்தவில்லை; முடிக்கவில்லை!

அதற்குள்:

ஓங்காரக்காளி சிரிக்கிறாள்!

ஆனால்—

சுமதியோ அழுகிறாள்!

ஒளி வெள்ளம்.

கண்ணீர்த் துளிகள்.

விந்தைமிகு சங்கமம்.

விபரீதப் பரிணாமக் கோலம்!...

மறு இமைப்பிலே—:

நெருப்புக் கோளங்களாகச் சுட்டுப் பொசுக்கியகண்களை உருட்டி உருட்டி விழித்தாள்; பற்கள் 'நறநற'வென்று முழங்கின; உடலில் எரிமலை வெடித்தது; உள்ளத்தில் பூகம்பம் பொடித்தது; "குமார்!"...என்று வீரிட்டு, ஓங்காரக் குரலெடுத்துக் கூவிக்கொண்டே, காலடியில் சரணடைந் திருந்த குமாரின் தலைமுடியை மூர்த்தண்யமாகக் பற்றி

அலக்காகத் தூக்கி நிறுத்தினுள் சுமதி. விழிகள் புடைக்க, நெஞ்சம் துவள அவனை நோக்கினுள்; ஊடுருவி நோக்கினுள்; அவனை ஒரே விழுங்காக விழுங்கிவிடத் துடித்தவளாக அப்படி நோக்கினுள். சுடுநீர் மணிகள் குருதிச் சொட்டுக் களாக வடிந்தன; நெஞ்சிடை மையம் கணித்து, ஆரோ கணித்துக் கிடந்த திருமாங்கல்யத்திற்கு அவை 'ஆத்ம நிவேதனம்' ஆயின; எழிலார்ந்த இளம் மார்பகம் எம்பி எம்பித் தாழ்ந்தது; குமாரின் உஷ்ணக் காற்றை மேலும் நெருக்கமாக அனுபவித்தாள் அவள்; துடித்த உதடுகளை விலக்கிவிட்டாள்:

"மிஸ்டர் குமார்! ஒரு பொய்மான், ஒரு பொன்மான் ஆகி, சீதைக்கு விதியாச்சு!—அந்த விதியை அனுபவிக்க வேண்டிய தலைவிதி சீதாப்பிராட்டிக்கு ஏற்பட்டுச்சு!... ஆனுல், நீங்க ஒரு பொன்மானுக என்வரை விளங்கின பொற் காலம் ஒன்று இருக்கத்தான் இருந்திச்சு. பின்னுலே, என்னுடைய விதிக்கு என்னேட தெய்வம் சுசீ ஒரு ஆணை யாக ஆனதுக்கப்புறம், நீங்க எனக்குப் பொய்மானுகவும் ஆக நேர்ந்திடுச்சு. ஆகவே, எனக்கு நானே விதி ஆனேன்!... ஆனுல், கடைசியிலே, நீங்களே எனக்கு விதியாக ஆகிவிட் டீங்களே, குமார்?...ஐயையோ, பாழுந் தெய்வமே!..."

குமார் கல்லாக—வெறும் கல்லாகச் சமைந்துவிட்டான்!

கணங்கள் பேய்க் கணங்களாக உருண்டுகொண்டிருக் கின்றன.

சுமதி அழுகையை நிறுத்திவிட்டுச் சிரித்தாள்.

மறுபடி ஓங்காரக்காளி சிரிக்கத் தொடங்கிவிட்டாளா?

குமாரின் தலை முடியைப் பற்றியிருந்த பிடியை விலக் கினுள் சுமதி. அவளுடைய கண்களினின்றும் சுடர்தெறித்த தீ நாக்குகளை அவன்மீது வீசினுள். "குமார்! பேசுங்க இப்போது! ஊம், பேசுங்க!" என்று ஆணையிட்டாள் சுமதி.

குமார்தான் கல்லாகிவிட்டானே, பாவம்?

தலைவிரிகோலமானாள் சுமதி. துறுதுறுத்த கைகளைக் குமாரின் கழுத்திலே பதித்தாள்; பற்கள் இடி முழக்கம் செய்தன: "குமார், எனக்கு விதிவசமாக ஏற்பட்ட களங்கத்தை என்னோட அன்பு அத்தான் மன்னிக்கவே செய்வாங்க; அது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், என்னை நான் மன்னித்துக் கொள்ளப்போறதில்லை!—ஏன் தெரியுமா? எனக்கு நானேதான் விதி! ஆகவே, மகாத்மாவினாலேகூட மன்னிக்க முடியாத உங்கமாதிரிச் சமுதாயத் துரோகிகளை இந்தத் தமிழ் மண்ணிலே இனியும் விட்டு வைப்பது ரொம்பத் தப்பு!—பெரும் பாவம் அது!...நீங்க எனக்கு வாய்த்திட்ட முதல் புருஷன் இல்லையா குமார்?...ம் ...இப்ப பேசுங்க!...ஊம், பேசுங்க, குமார்!" என்று ஓலம் பரப்பிக் குமாரின் நடுங்கிக்கொண்டிருந்த கழுத்திலே பதிந்திருந்தகைகளை மூர்க்கத்தனமான ரத்த வெறியோடு பல்லைக் கடித்த வண்ணம் அழுத்திக் கொண்டிருந்தாள் சுமதி.

கல்லுக்குச் சாப விமோசனம் கிட்டியது போலும்!...

சுயப் பரிசோதனை நடந்து முடிந்து விட்டதா?

சுந்தர் திடுக்கிட்டுச் சிலிர்ப்படைந்தான். குறைகுடம் குளாகக் கண்கள் தளும்ப, "சுமதி!...குமாரைக் கொன்று விடாதே, சுமதி!" என்று கூக்குரலிட்டபடி, பதறித் துடித்துப் பாய்ந்து சுமதியைத் தடுத்து, குமாரை விலக்கி விட்டான்!

அங்கே:

விடுதலை அடைந்த குமார் மீண்டும் தனக்குத்தானே சிறைப்பட்டுவிட்டமாதிரி உருகிக் கரைந்துகொண்டிருக்கிறான்! கைகள் சட்டைப் பையைத் துழாவிக்கொண்டிருக்கின்றன! கழுத்தில் முத்திரை பதித்திருந்த நகக் கீறல்களிலிருந்து ரத்தத் துளிகள் சிந்திச் சிதறிக்கொண்டே இருக்கின்றன!

இங்கே :

சுமதி, சுமதியாக ஆனுள். உள்ளமும் உடலும்நடுநடுங்கி வெலவெலக்கச் சுந்தரை .அண்டினுள். மனமறிந்து செய்யாத குற்றத்திற்கு மனமறிந்த தண்டனையாகப் பயங்கரப் பழியைச் சுமக்க நேர்ந்த அவமானத்தால் கூனிக் குறுகிய கன்னி தன் தாயை பயத்தோடும் பரிதாபத்தோடும் பார்க்கிறமாதிரி, சுந்தரைப் பார்த்தாள் சுமதி. மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.

சுந்தர் தன் கண்ணீரை மறந்தான்; சுமதியின் விழிநீரை விலக்கினுன்; அவிழ்ந்திருந்த கூந்தலை அள்ளிக்கோதி முடிந்து விட்டான்; கருணை மண்டிய கண்களால் அவளை—தன் மனைவியை ஆதரவாகப் பார்த்தான் அவன். "சுமதி! குமாரை—மிஸ்டர் குமாரை நீயும் மன்னிச்சிடு, சுமதி!..." கெஞ்சுதலோடுதான் கேட்டுக்கொண்டான்.

மலைத்தாள் சுமதி; அவள் திகைப்பு மேலும் வளர்ந்தது; கூடியது. 'அப்படின்னு, குமாரை அத்தான் மன்னிச்சிட்டா ரென்று அர்த்தமா? குமார் பாவி!...பாவிகளை ரட்சிக்க ஏசுபிரான் சிலுவையைச் சுமக்கலாம். ஆனுல், பாவி குமாரினுல் பாவியாக்கப்பட்டுவிட்ட நான்—அபலையான நான் குமாரை எந்த நியாயத்தில்—எந்த உறவில்—எந்த உரிமையில் மன்னிக்க வேணுமாம்?... மன்னிக்க முடியுமாம்? மனசறிஞ்சு செஞ்ச அநியாயக் குற்றத்துக்கு உரிய தண்டனையைக் குமாருக்கு அளிக்காமல் தப்பவே மாட்டேன்!... மனசறிஞ்சு செஞ்ச அந்தப் பயங்கரப் பாவத்துக்கு உரித்தான தண்டனையை குமார் அடைஞ்சுதான் தீரணும்!... விட்டகுறை தொட்டகுறை யாரைத்தான் விட்டது?' தீப்பிழம்புகள் கண்களிலே மின்னின.

அப்போது—

"சுந்தர்!..."

விம்மிப் புடைத்தவண்ணம், சுந்தரிடம் சரண்புகுந்தான் குமார். அவன் வாயிலிருந்து வெள்ளை வெள்ளையாக நுரை கொப்புளித்துக்கொண்டேயிருந்தது. உதட்டுக் கரைகளில் அங்கங்கே பச்சைநிறத் துகள்கள் கரை சேர்ந்தன.

"குமார்!..." —ஒரே அலறலாக அலறிவிட்டான் சுந்தர்.

மின்னுமல் முழங்காமல் இடிதான் இடிக்குமாம்!

ஆனால், சொல்லாமல் கொள்ளாமல் ஒரு ஜீவனின் கண்களும் மூடிவிடுமா?

"ஐயோ, குமார்! ஐயையோ, குமார்!..." சுந்தர் புலம்பினன். நட்புக்காக, நட்பு அழுததோ?—கண்களை மூடிக் கொண்டு, நிரந்தரமான நித்திரை வசப்பட்டுக் கிடந்த குமாரை நீர் சோர, நெடுமூச்சு சீறப் பார்த்தான் சுந்தர். "என்ன காரியம் செஞ்சிட்டீங்க, குமார்? இப்படிப்பட்ட ஒரு பயங்கர முடிவுக்கு இன்று வரவேணும்னுதான், அன்று அப்படிப்பட்ட ஒரு பயங்கரப் பாவத்தைச் செய்யத் துணிஞ்சீங்களா?"—கதறினுன் சுந்தர். 'ஐயோ குமார்!...உங்களுக்கென்று காத்திருந்த சுமதியை நான் பறிச்சுக்கிட நேர்ந்த ஒரு பாவத்துக்கு—அல்ல, தவற்றுக்கு—ஊஹூம், விதியின் விளையாட்டுக்கு ஈடுகட்டிப் பரிகாரம் தேடிக்கிட, என்னேடை அன்புச்சுமதியைக் கலந்து ஆலோசிச்சு, என்னுடைய இந்தப் புதிய மணவாழ்க்கையை உங்களுக்கும் பகிர்ந்தளிக்க வேணும்னு நான் சிந்திச்சுக்கிட்டு இருந்தேனே, குமார்? கடைசியிலே, நீங்க உங்களுக்கும் விதியாக ஆகிட்டீங்களே?...'—அதீதமான உணர்வுகள் அவன் நெஞ்சைச் சில்லிட்டுப்போக வைத்தன!...

சுமதி பிரமை பிடித்தவளாக நின்றுள்; அவளுடைய அழகான கண்களினின்றும் உதிர்ந்த இரண்டு கண்ணீர்த் துளிகள் குமாரின் மூடிக்கிடந்த கண்களின் இமைகளில் பாகம் பிரிந்து சிதறின. 'விதி யாரை விட்டுச்சாம்?—ம்... என்னை முந்திக்கிடுச்சே விதி?'...பற்களை எரிச்சலுடன் கடித்துக் கொண்டாள் அவள்.

சாளரங்களின் வழியே, எரியும் நிலவு தெரிகிறது!

ஒரு ஜீவனின் சோகக் கதை காதும் காதும் வைத்த மாதிரி 'முற்றும்' பெற்றுவிட்டது!

இருபது

## முடிவு!—புதிர்தானோ?

காதல் இரவுப் பள்ளி அறைதானா?—இல்லை, விதியின் சோதனைக் கூடமா அது?

அந்தரங்கமான ஒரு ஜீவனின் கதை அந்தரங்கமாகவே முடிந்து விட்டதே?

வழிந்த வெள்ளத்தை வடிகால் மாற்றவும் சிந்தை இழந்து, சுமதியை—பாசமும் நேசமும் உருவான சுமதியை அன்போடும் ஆதரவோடும் பரிவு சூழ்ந்திட நெருங்கினான் சுந்தர். சுமதியிடம் "பாவம், குமார்!" என்று அனுதாபம் மேலிடக் கூறினான்.

வீறு கொண்டாள் சுமதி. சுமதி, சுமதியாக இருக்க வில்லை. "பாவி குமார்னு சொல்லுங்க, அத்தான்!......" ஓங்கார நாதம் பரப்பி, ஆணை பரப்பினாள் அவள்.

"சுமதி!"

"குமார் மாத்திரமே பாவி இல்லீங்க; நானும் கூடத் தான் பாவி! குமாரால் நான் பாவி ஆகிட்டேன்; பாவியாக ஆக்கப்பட்டு விட்டேனே, அத்தான்?" குமுறிக் குமுறி அழுது தீர்த்தாள் சுமதி.

"சுமதி, நீயா பாவி? ஊகூம், ஒரு நாளும் இல்லே; நீ பாவியே இல்லே; நீ பாவியாக ஆகவும் முடியாது!...... தெய்வத்துக்குப் பழி ஏது? பாவம்தான் ஏது?...நீ வெறும் சுமதி இல்லே!—என்னோட ஜீவனுக்கு ஜீவனாக வாய்ச்சிட்ட என் இல்லத்தரசி நீ!...அன்பே வடிவான நீ அபலே; மன்னிப்புக்குரிய நிரபராதி நீ!"—சுந்தரின் நா தழுதழுத்தது.

"ஆமாங்க; மஹாத்மாவினாலே மட்டிலுமே மன்னிக்கப் படக்கூடிய பேதை நான்!"

"சுமதி, நான் மகாத்மா இல்லேதான்! மகாத்மாவாக ஆகவும் முடியாதுதான்! ஆனாலும், நான் என்னுடைய அன்புச் சுமதியை—ஆருயிர்ச் சுமதியை—என் அருமை மனேவி சுமதியை நான் எப்போதோ மன்னிச்சிட்டேனே?"—செருமினான் சுந்தர்.

சுமதி சுடர் விளக்கானாள்!

"நிஜமாகவே நீங்க என்னே மன்னிச்சிட்டீங்களா அத்தான்?..."

"நிஜமாகவே, உன்னே நான் மன்னிச்சிட்டேன், சுமதி

"அப்படீன்னா, நீங்க கதையிலேயும் சினிமாவிலேயும் வரவேண்டிய உதாரணப் புருஷரேதானுங்க, அத்தான்.

"என்ன சொல்கிறாய், சுமதி?" குழப்பத்தின் சிக்கலே அறுத்துக் கொண்டு விடுபட முடியாமல் தவித்தான் சுந்தர் ஒளிப்புனலில் கண்கள் பளபளத்தன.

"உங்க கருணை மகத்தானதென்று சொல்கிறேன் அத்தான்; ஆனால்...?"

"ஆனால்...?"

"அந்தக் கருணையைப் பாத்திரம் அறிஞ்சேதான் நீங்க எனக்குப் பிச்சையாகப் போட்டிருக்கீங்களா என்கிற உண்மையைத்தான் என்னாலே புரிஞ்சுக்கிட முடியவில்லே அத்தான்!"

“இதிலே உனக்கு என்ன சந்தேகம் வந்தது, சுமதி?...... என்னை நம்பு, சுமதி!......நான் உன்னைச் சத்தியமாக மன்னிச்சிட்டேன், சுமதி!...” விம்மல் தொடர்ந்தது.

“ஆஹா! அப்படிங்களா, அத்தான்?—நீங்க என்னைச் சத்தியமாக மன்னிச்சிட்டவரை சந்தோஷமேதான்!...... ஆனல், நீங்க என்னை மன்னிக்கும்படியாக நான் செஞ்ச தவறு என்னவென்று தயவு பண்ணி உங்களாலே சொல்ல முடியுங்களா, அத்தான்?”

தூண்டிற் புழுவாகத் துடித்தான் சுந்தர்; துடி துடித்தான்!—“சுமதி!......சுமதி!...” மேற்கொண்டு சொற்கள் பிறந்தால்தானே?

சுமதி விரக்தியின் உச்சக்கட்டத்தில் நின்றவளாகச் சிரித்தாள்; ஆற்ற முடியாத வேதனையுடன் சிரித்தாள். கண்கள் நிர்மலாக விம்மின.

சுந்தர் உணர்ச்சி வசப்பட்டுச் சுமதியின் அன்புக் கரங்களை நடுங்கிக் கொண்டிருந்த தன்னுடைய கைகளால் பற்றித் தன் கண்களிலே ஒற்றிக் கொண்டு, “சுமதி! நீ குற்றமேதும் செய்யாதவள்; ஒரு பாவமும் அறியாத உத்தமி நீ!...நீதான் என்னை இப்போது மன்னிக்க வேணும், சுமதி!” என்று அழுது புலம்பிக் கரைந்தான்.

சுமதி மனத்தின் நிறைவுடன் சிரித்தாள்!

கணம் ஒன்று, ஒரு யுகமெனக் கழிகிறது.

கைக் கடிகாரத்தை விநயம் பூக்கப் பார்த்தபின் சுமதி பேசினுள்: “நேரம் ஆகிக்கிட்டு இருக்குது; எனக்கு விடை கொடுங்க, மிஸ்டர் சுந்தர்!”

கால் பாவி நின்ற மண் திடீரென்று தன்னைக் கபளீகரம் செய்து மண்ணுக்கிக் கொண்டதோ என்ற பயத்தில் திக்கு முக்காடிப் போனுன் சுந்தர்! ஒரு மாத்திரைப் பொழுதுக்குப் பின்னர், “நீ எங்கே போகப் போகிருய்?” என்று அதிர்ச்சியைத் தாளமாட்டாமல் கேட்டான் அவன்.

சுமதி நிதானமான அமைதியுடன், ஆனால், தீர்மான மான குரலில் பேசலானாள்: ''அளவுக்கு மீறின நல்லவரான உங்களோட அன்பு நிழலிலே நிம்மதியோடு தங்குறதுக்கு எனக்கு அருகதை இல்லேன்னு என் மனச்சாட்சி எனக்கு முடிவு சொல்லிடுச்சுங்க; நான் என் வழியே புறப்படப் போறேனுங்க!......என்னுடைய புனிதத்துக்கும் கற்புக்கும் மானத்துக்கும் பெண்மைக்கும் களங்கம் உண்டாக்கி, என்னோட வயிற்றிலே வளர்ந்துக்கிட்டிருக்கிற அந்த அவமானச் சின்னத்தைக் களைஞ்செறிஞ்சிட்டு, நான் என் விதி வழியே போயிடப் போறேனுங்க!...''; கழுத்திலே ஊசலாடிக் கொண்டேயிருந்த திருமாங்கல்யத்தை கை விரல்கள் நடுங்க நெருடி அழகு பார்த்துக் கொண்டிருக் கிருள் சுமதி.

மீண்டும் கல்லாய்ச் சமைந்தான் சுந்தர்!

முட்ட நனைந்த பின், குளிர் ஏது?

சுந்தருக்குச் சுயப்பிரக்ஞை மீண்டிருக்க வேண்டும்: ''இதுதான் உன் முடிவா, சுமதி?—இதுவேதான் உன்னோட கடைசி முடிவா, மிஸ் சுமதி?''

''ஆமாங்க...தயவு பண்ணி என்னை நீங்க மன்னிக்க வேணும்...!''—சுமதியின் கைகளிலே இப்போது அவளுடைய கழுத்துத் தாலி விதியாகக் கண் சிமிட்டிக் கொண்டி ருந்தது!......

''ஆல்ரைட்! நீங்க புறப்படலாம், மிஸ் சுமதி!''

சுமதியின் விம்மல் நான்கு சுவர்களுக்குள்ளே ஒலித்து, எதிரொலித்துக் கொண்டிருக்கிறது! சுந்தர் நின்ற திசை நோக்கிப் பூங்கரங்களைக் குவித்தாள்; சுமதியின் அழுகை ஒலம் வளர்ந்தது......''ஒரேயொரு வரம் மாத்திரம் நீங்க எனக்குத் தரவேணும்!...''

சுந்தர் அட்டகாசமாகச் சிரித்தான். ''வரம் கொடுக் கிறதுக்கு நான் ஒன்றும் தெய்வம் இல்லையே?'' என்று நிர்த் தாட்சண்யமான குரலில் வினாச்சரம் தொடுத்தான் அவன்.

"என்வரையிலும் நீங்க தெய்வமே தானுங்களே!" அழுகை நிற்கவில்லை.

"விஷயத்துக்கு வாங்க!"

"நம்ப ராஜாவையும் என் சுசீ அக்காளையும் கடைசித் தடவையாக ஒரு முறை பார்த்திட்டுப் போறதுக்கு மட்டும் நீங்க அனுமதி கொடுத்தால் போதுமுங்க!" மங்கலத் தாலியை விதியாகப் பற்றிருந்த பொற்கரங்கள் நடுங்கிக் கொண்டேயிருந்தன.

சுந்தர் இப்போதுதான் முதல் தடவையாக விதியாக மாறினன்!— "என்னுடைய தவமகன் ராஜாவையும் என் இஷ்ட தெய்வம் சுசீலாவையும் உனக்கு—மன்னிக்கணும்—உங்களுக்கு ஞாபகம் இருக்குதா, மிஸ் சுமதி?" நிதானமான அமைதியுடன் கேட்டான்.

"ஐயையோ, தெய்வமே!"

சுமதி விம்மினள்; அலறினள்: கதறினள்; மண்டையில் அடித்துக் கொண்டு 'ஓ' வென்று ஓலமிட்டாள்; கையிலிருந்த தாலி கை தவறி விட்டதை உணர்ந்ததும், திடுக்கிட்டுத் தாலியைக் கை மீட்டுக் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள். அவளுடைய திருமாங்கல்யம் இப்பொழுது அவளை மீண்டும் அலங்கரித்தது!

சுந்தரின் இதழ்க்கடையில் சலனம் கடந்த புன்னகை தெளிந்தது. "நம்ம ராஜாப் பயலையும் உன்னோட சுசீ தெய்வத்தையும் நீ எத்தனை தரம் வேணுமானலும் எத்தனை நேரம் வேணுமானலும் தாராளமாகப் பார்க்கலாம்; பார்த்துக்கிட்டே கூட இருக்கலாம். நான் உனக்குக் கொடுக்கிற இந்த அனுமதிக்கு ஈடாக நீ எனக்குக் கடைசியாக ஒரு வரம்—ஒரேயொரு வரம் கொடுப்பாயா, சுமதி?... நான் உனக்குக் கட்டின தாலியை நீயாகக் கழற்றிட்டு, திரும்பவும் அதை உன் கழுத்திலே நீ போட்டுக்கிட்டதாலே உண்டான புதுப்பிக்கப்பட்ட உறவின் பேரிலேதான் நான்

உன்கிட்டே இந்த வரத்தை யாசிக்கப் போறேன், சுமதி!” இருமல் முடியக் காணும். “என் மட்டிலே நீயும் சுசீ மாதிரி என்னோட இஷ்டம் தெய்வம் ஆனதாலேதான், நான் வரம் கேட்கவும் துணிஞ்சேனுக்கும்!...ஆமா, சுமதி, ஆமாம்!” சுந்தர் பேச்சைத்தான் நிறுத்தினன்.

நாணம் கலந்த அன்பின் ஒட்டுறவோடு, “என்னோட தெய்வமே என்னைத் தெய்வமாக்கி வரம் கேட்கும்போது, நான் கொடுக்காமல் தப்பிக்க முடியுமா?—அப்படித் தப்பித் தால், அது தர்மப் பண்பு ஆகுமா?... ஊம், வரத்தைக் கேளுங்க, அத்தான்!” என்று உரிமைகொண்டு—மறுமலர்ச்சி பெற்ற உரிமை கொண்டு தூண்டினுள் சுமதி.

சுமதியை நெஞ்சோடு நெஞ்சாகப் பார்த்தான் சுந்தர். அவன் முகம் சலனம் கண்டது; கண்கள் கலங்கி வந்தன.

“சுமதி, நீ என்னை விமர்சனம் செஞ்ச மாதிரி, நான் அளவுக்கு மீறி நல்லவனுக இருக்க நேர்ந்ததனுலோ, என்னமோ, குமாரை உன் மாதிரி என்னுலே மறந்திட முடிய வில்லே! குமார் உனக்காகவே தவம் இருந்தவன்; நடுவிலே, விதி எப்படியோ விளையாடிடுச்சு; முடிவிலே, அவனும் எப்படியோ விளையாடிட்டுப் போயிட்டான்!...ஆனுலும், தெரிஞ்சோ தெரியாமலோ, மிஸ்டர் குமாருக்கு நான் என்னமோ ஒரு வகையிலே, என்னமோ ஒரு துரோகம் செஞ்சிட்டதாகவே என்னோட உள்ளுணர்வு என்னைச் சதா நேரமும் சித்திரவதை செஞ்சுக்கிட்டே இருக்குது! அந்தச் சித்திரவதை இனியும் தொடர்ந்தால், அப்புறம், கொஞ்ச நாளைக்குத்தான் நீ மஞ்சளும் பொட்டுமாகச் சுமங்கலியாக வாழ முடியும்! அந்தப் பழி பாவத்துக்கு இரக்கப்பட்டாவது, உன் வயிற்றிலே விட்ட குறை—தொட்ட குறையாக உருவாகி வளர்ந்துக்கிட்டிருக்கிற என்னுடைய குமாரை— உன்னுடைய குமாரை நீ நல்லதனமாகக் காப்பாற்றி, பெற் றெடுத்து, என் கிட்டே நல்லபடியாகத் தந்திடு; உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு, சுமதி!... என் மனச்சாட்சியிலே நீ அக்கினிப் பிரவேசம் செஞ்சிட்டே! ஆகச்சே, என் மனச்

சாட்சிக்கு முன்னே ஊரும் உலகமும், சமுதாயமும் ஜனங் களும் துச்சம்!... எனக்கு வரம் கொடு, சுமதி!...ம், பேசு பெண்ணே!...பேசு, சுமதி, பேசு!...''

முந்தித் தவமிருந்து பெற்ற அன்னையிடம் ஒரு கைமுறுக்குக்காக அடம் பிடித்து அழுது தீர்க்கும் கள்ள மில்லாப்பாலகனுகக் காட்சியளித்தான் சுந்தர்.

''ஐயோ, அத்தான்:...கடைசியிலே, நீங்க என்னை இப்படியா சோதிக்க வேணும்?...அன்றைக்கு என் அக்கா வாயைத் திறக்காமல் இட்ட ஆணை எனக்கு வாழ்க்கை ஆச்சு!...இன்றைக்கு நீங்க வாயைத் திறந்து இடுகிற கட்டளை என் ஜீவனுக்கு விதி ஆயிடுச்சுங்களே, அத்தான்?...என் முடிவே புதிர்தானு?—என் வாழ்க்கையே ஒரு விடுகதை தானு? ஐயையோ, தெய்வமே!...ஐயையோ, அத்தான்!... என் தெய்வமே!...''

சுமதி, இப்போது அதே முதலிரவுப் பள்ளியறையிலேயே பேச்சு மூச்சின்றிக் கிடக்கிருள்!...

''சுமதி!...என் தெய்வமே!...''

அதோ, லேடி டாக்டர் பாலாமணி!...
தயவு செய்து யாரும் சத்தம் போடக் கூடாது!...

முடிகிறது

